AUM.

Nandivakya

STREE

Janana&Ruthu Jathakam.

(TAMIL)

PREPARED TO KNOW THE FORTUNE &ADVERSITY

OF

FEMALES

BY

R. Appoosawmy Pillay.

ASTROLOGER.

NATIVE OF PALAKODU

Dharmapuri Taluk Salem Dt.

EDITED BY

T. Venkatachalam Pillay

TRICHINOPOLY

1st Edition—1000 Copies.

PRINTED AT THE AMERICAN DIAMOND PRESS,

MADRAS.

1911.

Registered Copyright.

Price P 0 Postage Extra.

கடவுள்துணை.

ஸ்ரீநந்திகேசுவரர் பரிகூஷித்துமகிபதிக்குத்
திருவாய்மலர்ந்தருளிய
நந்திவாக்கிரமம்

ஸ்திரீகள் ஜனன ருது ஜாதகம்.

இஃது.

சேலம்ஜில்லா-திருச்செங்கோடு-தாலுகா-எளூர்-பெரும்பாளிபட்டி
ம-ரா-ரா-ஸ்ரீ, இராமசாமிபிள்ளையவர்கள் குமாரர்
தருமபுரிதாலுகா பாலக்கோடு ஜோதிஷம் ம-ரா-ரா-ஸ்ரீ,

ஆர். அப்புசாமிபிள்ளையவர்களால்

தம்மிடமிருந்த ஏட்டுப்பிரதிகளில் பலவாறாக சிதைவுற்றிருந்ததை
ஒருவாறு சீர்ப்படுத்தி அமைக்கப்பட்டதை,

சேலம் தாலுகா சிங்களாந்தபுரம், ரிஜல்ட்டு ஸ்கூல் மானேஜரும்
நெடுங்காலம் சோதிடபண்டிதருமாகிய
ம-ரா-ரா-ஸ்ரீ, வெ-வாசுதேவம்பிள்ளையவர்கள் ஏர்வையிட்டுத்தர
திருச்சிஞப்பள்ளிதாலுகா, உத்தமனூர், புதூர், ஜோதிஷம் ம-ரா-ரா-ஸ்ரீ,

நீலகண்டஐயரவர்களால்

பிழையற பரிசோதிக்கப்பட்டு,

திருச்சிஞப்பள்ளி புஸ்தகஷாப்பு

தி. வெங்கடாசலம்பிள்ளையால்

ஷை நூலாசிரியரிடம் காபிரைட் என்னும் சுதந்திரம்பெற்று,

சென்னை,
அமெரிக்கன் டைமெண்ட் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1911ஆவ

ரிஜிஸ்ட்டர்ட் காப்பி ரைட்.

விலை ரூபா 1 8 0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

க

கணபதி துணை.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல கல்விமான்கள் யாவருக்கும் அச்சுக்கூடத்திலிவர் களுக்கும் அறிவிப்பது யாதெனில், இந்த ஜோதிடசாஸ்திரமாகிய நந் திவாக்கிய ஸ்திரீ ஜனனம், 2-வது ருதுஜாதகம் ஆகிய இரண்டுபாகமு முள்ள நூலை அமைத்த ஆர். அப்புசாமிபிள்ளை யவர்களிடம் இன் நூலுக்குள்ள (எடிட்டர் பாத்தியத்தை எனும்.) சுதந்திரத்தை இத்து டன் சேர்த்திருக்கிற விக்கிறைய நகல் பிரகாரம் அடியில் கையொப்ப மிட்டு என்னால் கிறையத்துக்குவாங்கப்பட்டு அச்சிற் பதிப்பித்து ரிஜிஸ் டர் செய்திருப்பதால் இப்புத்தகத்தை என்னுடைய அனுமதி யன்னி யில் யாரேனும் அச்சிடுவாராகில் 1867-ஒருத்திய 25-வது ஆக்ட்டு 20-வதுபிரிவு 6-வது உட்பிரிவின்படி நான்கோறும் நஷ்டத்திற்கும் இன்டியன் பினல்கோர்ட்டு யெனும் ஆக்ட்டுப்படி குற்றத்திற்கும், உத்திரவாதிகளாக வேணுமென்பதைக் கவனிக்கக் கோருகிறேன்.

இப்படிக்கு,

தி. வெங்கடாசலம்பிள்ளை.

புஸ்தகஷாப்பு

திருச்சினாப்பள்ளி.



நூல் வரலாறு.

நீலகண்ட திரிநேத்திர சடாமகுடதாரியாகிய ஸ்ரீ சிவபெரு மானுராதியிற் கருணை யுற்றுமையவருக் குபதேசித்ததை யாங்குள்ள திருநந்தி தேவருஞ் செவியுற்றவராய்ப் பின்னோர் காலத்திற் றெக் கண் கைலையெனும் பொதிகைக்கெழுந்தருளி யாங்குறை புனிதமாத வர்களுக்குப்புகல வதனை மும்மலமற்ற முனிவராகிய சுகருங் கேழ்வி யுற் றுலகத்தின்கண் மன்னுயிரணைத்துந் தன்னுயிராமெனச் செங்கோ னடாத்திப் பன்னரும் புகழ்படைத்த பரிக்ஷித்து மகிபதிக் குரைத்தன ராக இன்நூல் ஸ்திரிகளின் ஜனனமுதல் அந்தியம் வரையில் பலன் கலறியக் கூடியவாறுளதை.

சிற்றறிவினையுடைய யான் அதை மேடாதி மீனுந்தம் 12 லக்கி னத்திற்கும், பிரிதி ஓரைக்கும் துவாதச பாவப்பலனரியவும், இதில் அசுவதியாதி பிரதி நக்ஷத்திரத்திற்கும் நான்கு கால்களாகப் பிரித்து ரேவதிவரை 108 - பாதங்களாக ஸ்திரிகள் ருதுபலன் சொல்லவும், சோதிடர்களுக்கு துணைவன்போலாகுமென்று ஆங்காங்குவதனை தெளிவாவெடுத்து வெளியிட லாயினேன். ஆர்-அ.

உ

சிவமயம்.

புத்தக விளம்பரம்.

இன்நூலிலுள்ள அதிக ஆச்சரியகரமான பலன்களேயே வேறு வசனம் கவிரூபமாகவியற்றி அச்சிட்டாலும், அல்லது தீங்குகாட்டிய வண்ணம் தொடர்ந்த எமது பேருள்ள ரப்பர் ஸ்டாம்பு முத்திரை பதித்திருக்கின்றபடியால் அஃதில்லாத புத்தகங்களை வைத்திருந்தாலும், **1869**-வருடத்திய **25**-வது சட்டப்படி நஷ்டத்திற்கு உத்திரவாதியாவார்களென்று இதினுல் சகலருக்கும் தெரிவிக்கலாயிற்று.

இங்ஙனம்,

இப்புத்தகம் வேண்டியவர்கள் திருச்சினாப்பள்ளி புஸ்தக ஷாப்பும் ஸ்ரீ மட்டுவார் குழலம்பாள் அச்சுக்கூடத் தலைவருமாகிய ம-ள-ள-ஸ்ரீ, தி-சபாபதிபிள்ளை யவர்களிடத்திலும், ஷி திருச்சினாப்பள்ளி தாலுகா லாலுகுடிவட்டம் உத்தமனூர் புதூர் சோதிடம் நீலகண்ட ஐயரவர்களிடத்திலும், மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்பும், அச்சாபீசுமுள்ள ம-ள-ள-ஸ்ரீ, இ-ரா-ம-குருசாமிக்கோனு ரவர்களிடத்திலும், ஷி புஸ்தகஷாப்பு S. முத்தையபிள்ளை யவர்களிடத்திலும், எட்டியாபுரம் ம-ள-ள-ஸ்ரீ, மகாராஜா அவர்களிட சமஸ்தானத்திலிருக்கும் ரிவினி இன்ஸ்பெக்ட்டர் ம-ள-ள-ஸ்ரீ, க-சிவசங்கரம்பிள்ளை யவர்களிடத்திலும், தஞ்சாவூர் புதுமார்க்கட்டில் புஸ்தகஷாப் கிஷ்ணப்பிள்ளையிடத்திலும், சென்னை வண்ணரப்பேட்டை அமெரிக்கென் டைமென்ட் பிரஸிலும் ஷி சிந்தாத்திரிப்பேட்டை சாமிநாயக்கன்வீதி 94-நெம்பர். வீட்டில் மாணிக்கவாசகம்பிரஸ் தி. மு. அருணாசல முதலியாரிடத்திலும், இதினடியில் கண்ட விலைபடிக்கி நேரிலாகிலும், வி-பி-மூலியமாக வாவது யெழுதி தருவித்துக்கொள்ளலாம்.

காலிக்கோ கட்டடம் சித்திரவேலை கிலிட்டுடன்

பிரதி **1**-க்கு ரூபா **1—8—0**

வி-பி-சார்சு பிரத்தியேகம் ஒரேதடவை **10**-பிரதி வாங்குவோர்க்கு **1**-பிரதி அதிகம் கொடுக்கப்படும்.

நந்திவாக்கிய ஸ்திரீகள் ஜனன ருது ஜாதகம் எடிட்டர் பாத்திய விக்கிரய நகல்.

1910ஆ நவம்பர்மீ 7க சென்னை சிந்தாத்திரிப்பேட்டை சாமிநாயக்கன் தெருவு 46-நெ. வீட்டிலிருக்கும் முருகப்பிள்ளை குமாரர் விஷ்ணுமதம் புஸ்தக வியாபாரம் அச்சாபீஸ் தி. வெங்கடாஜலம் பிள்ளை அவர்களுக்கு சேலம் ஜில்லா திருச்செங்கோடு தாலூக்கா எளூர் பெரும்பாளி பட்டியிலிருக்கும் ஸ்ரீகணக்கர் இராமசுவாமி பிள்ளை அவர்கள் குமாரர் ஷை ஜில்லா தருமபுரி தாலூக்கா பாலக் கோடு கிராமத்திலிருக்கும் ஜோசியம் ஆர். அப்புசாமிப்பிள்ளை எழுதிக்கொடுத்த உருதிமொழி சீட்டு என்னவென்றால், எம்மால் எட்டு பிரிதிகளைக்கொண்டு ஆராய்ந்து எழுதிக்கொடுக்கப்பட்ட நந்திவாக்கியமெனும் ஸ்திரீ ஜாதக ஜோதிடநூல் 12-லக்கினங்கொண்ட ஓரை 48-க்கு மொத்த செய்யுள் 494-ருது நக்ஷத்திரப் பலன் நக்ஷத்திரம் 27-க்கு கால், 108-க்கும் மொத்த செய்யுள், 961, ஆகமொத்த செய்யுள் (1455)ம் சில பொதுபலன்களும் சேர்ந்த வாலியம் 8-க்குக் கிரயம் ரூபாய் 80—0—0 அச்சரத்தில் என்பது ரூபாய்க்கு சம்மதப்பட்டு பெற்றுக்கொண்டு ஷை நூலை தங்களுக்கு சகல சுதந்தரத்துடன் கொடுத்துவிட்டபடியால், ஷை புஸ்தகத்தை அச்சிற் பதிப்பித்து விற்பனை செய்யும் பாத்தியதை முதலியதும் தங்களுக்கே கொடுத்துவிட்டபடியால் அதைப்பற்றி எனக்கு வேறே எவ்வித பாத்தியமுங் கிடையாது. தாங்களே அச்சிட்டு தங்கள் பெயரால் ரிஜிஸ்டர் செய்து ஷை புஸ்தகத்தை எப்போதும் அச்சிட்டு விற்பனை செய்து வரவும் ஷை நூலை நான் அச்சிடவுமில்லை எம்மால் பிறரை அச்சிடும்படி எவ்வித அநுமதியும் கொடுக்கப்படவில்லை. மற்றவர்களச்சிட்டால் அதனால் நேரிடும் சகல நஷ்டங்களையும் தாங்களே வாங்கவும் இவை முதலான சகல பாத்தியத்தையும் தாங்களே அனுபவித்துக்கொள்வீர்களாகவும் இதற்கு முந்தி இதன் பாத்தியத்தை தங்களுக்குத்தவிர வேறே யொருவருக்கும் அச்சிடும்படி எவ்வித அனுமதியும் கொடுக்கப்படவில்லை ஷை புஸ்தகத்தில் எப்போதும் புஸ்தகரூபமாய் விளங்கும்பொருட்டு எமது பெயரையும் ஷை நூலை பார்வையிட்ட சிங்களாந்தபுரம் வெ - வாசுதேவம் பிள்ளை அவர்கள் பெயரையும் பதிப்பித்துக்கொண்டு வரவும் ஷை நூலை எம்மால் பிறருக்கு அச்சிடும்படி கொடுத்து வெளியானால் அதனால் நேரிடும் நஷ்டத்திற்கு நான் பாத்தியப்படுவேனுகவும் இதன்படிக்கு என்மனோராஜியில் எழுதிக் கொடுத்த சுகஸ்த லிகித உருதிமொழிசீட்டு 3-வதுவரியில் ஷை என்பதை அடிக்கப்பட்டது. ஷை நூலை புரூப் முதலியவை பார்க்க எம்மிடம் அனுப்பினால் புரூப் பார்த்து அனுப்புகிறேன். ஷை நூல் அச்சிட்டு முடிந்ததும் புல்காலிக்கோ பயிண்டு செய்தது புத்தகம் இருபது அனுப்பிக் கொடுத்து அதற்கு எம்மால் நீங்கள் ரசீது பெற்றுக்கொள்ளவும்.

இப்படிக்கு:

சுகிஸ்தலிதம் - ஜோஸியம்

ஆர். அப்புசாமி பிள்ளை.

சாகஷி.

தர்மபுரி - எ. கிருஷ்ணசாமி அரிவேன்.

சென்னப்பட்டணம் தையப்பமுதலிவீதி 10-வது நெம்பர்.

கு. கிருஷ்ணப்பிள்ளை அரிவேன்.


பி. ஜே. சீரங்கம். முனுசாமி முதலியார் அரிவேன்.

சிந்தாத்திரிப்பேட்டை மளிகை. கா. லோகநாத முதலியார் அரிவேன்.

உ

சிவமயம்.

கடவுள் துணை.



ஸ்ரீதிருநந்தி தேசுவரர் திருவாய் மலர்ந்தருளிய

நந்திவாக்கிய ஸ்திரிகள் ஜாதகம்.

முதல்பாகம்.

விநாயகர் துதி.

கங்கையம் புலிதரித்த கடவுளின் தவத்தில் வந்த
துங்கமா தங்கமென்னுஞ் சோதியே நந்தியோதும்
அங்கணி ஜாதகத்தி னரும்பலன் றனையிப் பூவிற்
சங்கையற் றிடவேகூற தயைபுரி சுமுகத் தேவே.

சுப்பிரமண்யர் துதி.

ஓங்கிரு மூன்று திவ்ய முகமுடனீ ருருகையும்
பாங்குடன் மைபிலின்மீது பரிவிட னிருவரோடு
தீங்கறு நந்திவாக்ய ஸ்திரீ சாதகத்தைச் சொல்ல
வீங்கெனக் குதவியாய்வந் தின்னருள் செய்குவாயே.

நூன்முகம்

மேட முதலோரையின்

பலன்.



* மறியதனிலேயோரை பாதிநீக்க
வருமத்தியவோரையது தன்னில்சென்மம்
நெறியதுவாய் செனித்தோர்க்குக் கிழ்மேல்வீதி
நிலவடபால் மீனயாகும் நிருதிசந்தாம்
குறியதுவாய் அச்சந்தின்வழியேசென்றால்
குளங்கோயில் கன்னிதிசை கூரக்கேளாய்
முறிவதுகீழ் திசையிரண்டு பனீநீங்கிப்பின்னு
முற்றமீன பாழாகுமதிலோர்சந்தே. (1)

பாரினிலிப்பலன்கண்டு வரைப்பார் பாவி
பார்வையிலால் பலன்சொல்வோம் பலன்களீதே
தேரிவருமன்னீசுகம் சிறப்பொன்றில்லீ
சேர்ந்தவம்மானதிலேகன் திறமைகேளாய்
மீரிநின்ற தந்தைவர்க்கம் முன்னுல்செல்வம்
மிகுதந்தை காலத்தில் விரையமென்க
மாரிவரும் ஜாதகியோ பிறந்தபின்னும்
வளர்ச்சியதாம் குடும்பமது மகிழ்ச்சியன்றே. (2)

மகிழ்ச்சியதாம் திரேகமது சமனும் ரூபம்
வருஞ்சிகப்பு மனமகிழ்ச்சி வலுவுள்ளாள் காண்
இகழ்ச்சியிலாவார்த்தையதி லினியகுணமுடையாள்
இன்பசுகம் நீடித்திங்கிடரில்லாதிருப்பள்
புகழ்ச்சி புருடர்க்கு சுகம் புத்திர நலமுடையாள்
பொருந்துமனம் நல்விரையம் பூரணமாய்செய்வள்
உகழ்ச்சியுள்ளாளுண்மைமன முருதியுள்ளா
ளுற்றசுகம் சௌக்கியங்களுடையவளென்றுரையே. (3)

வேறு.

தனமதுவுடையாள் வாக்கினில் நன்மை
சஞ்சலமீலை மோகமுடையாள்
கனமுளான் குடும்பம் கதித்திடுஞ் செல்விக்
கருதிய சகோதர மூவர்

---

* மறி—ஆடு.

சினமுளான்பந்து நட்பினையுடையாள்
சீர்பிணி சஞ்சலமில்லை
மனமது நல்லோர் தமக்கு நல்விரையம்
வருவது மகிழ்ச்சியுள்ளவளே. (4)

வேறு.

வருவதுமேக ளதின் மகிழ்ச்சியெவ் விதங்கா ணைமோன்
வருமொன்பானிருவர்க்கும் வலுத்தபகையதனல்
பிருகுமன்ன னுகுமிவர் பதிக்கேளாமாதி
பெலமுடனே சராசி தனிலுறினுமன்னு
தருமிதனல் பலன்மேன்மை யொன்றிற் செல்வம்
தாழாதென்றுரைத்தீர் தன்மையோதும்
பெருகுகின்ற நிலகண்டு பத்தாதிதன்னல்
பெலயீனமில்லையதிற்கி பருமைகாணே. (5)

வேறு.

பெலமொடு தனத்துள் நல்வாக்குமேன்மை
பெருகிய குடும்பசெல்வீகம்
நலமுடன் மூன்றுள் தைரியகாமி
நான்கினில் அன்னை நற்சுகத்தாள்
விலகிய நாற்கால் விருத்தியுமுடையாள்
மிகுமைந்தில் புத்திரலாபம்
தலமதில் செல்வம் பூர்வவிர்த்தியுமாய்ச்
சஞ்சலமில்லையென்பதுதானே. (6)

ஆறினில்ரோக மில்லைகாணுரோன்
அதிகமன்னவனுடன் பார்வை
மீறியங்கிருக்க ரொணமில்லை சுகத்தாள்
மேதினிதனில் கலகியுமாவாள்
நேறினிலேழா மாதியின் பலன்கள்
நிபுணவித்தையன் புருடன்காண்
பாரினில் செல்வமோங்கியே நிற்பன்
பருவகாலத்தினிற்சுபமே, (7)

சுபமது முடிப்பரீரேழாமாண்டில்
சுபமுடிந்துடன் கர்மமொன்று
அபமதாம் வர்க்க மிரண்டினிற் முடிப்பன்
அதிகார மூவேழில் புருடன்

இபமதுபோலக் கீர்த்தியுள்ளவனு
யேகனும் சகோதர நிலைகாண்
கபமதுரோக மிருபத்தோரேழில்
காட்டிடுங்கண்டமென்றுரையே. (8)

கண்டமென்றுரைத்தோ முப்பத்தொன்றினிலோர்
கதித்திடுமாயுத நலியாம்
இண்டோரிருபான் மூன்றினில் தாக்க
விருந்து பின்னுந்தாண்டில் தீர்க்கம்
துண்டது கண்ட மாரகம்சுரத்தால்
தொல்புவிதனி லன்னியர் நிலையில்
கொண்டமாரகமே யிவ்விதமென்றுக்
கூறினர் கோதையர் பலனே. (9)

வடிவுடன் மொத்த பலனிது லர்க்கம்
வலுவென்றுல் வரும் வீதியெவ்வாறு
முடிவதிலோது மரசனே கேளாய்
முற்றிடும் வீதி கீழ்மேலாய்
கொடியதாமருகில் சந்தொன்றுகாணுங்
கூறுவர்கீழ்திசையென்று
அடியர்கள் போற்றுமாலையந்தென்கீழ்
அமர்ந்திடும் நிலையெனப்படுமே (10)

நிலையதாந்தந்தை வர்க்கமிரண்டுளது
நிலையொன்று பூர்வமாமென்க
பலனிலையொன்று அன்னியதேசம்
பகர்சகோதரக்களை பெண்ணும்
வீலையொடு பூமி சுயார்ச்சித நிலையாம்
வேந்தர்கள் நட்பிலுல் செல்வம்
துலையறுபூர்வ நிடபம்சுயார்ச்சித மிவ்வாறு
சொல்வர்காணிப்பலனென்றே (11)

வேறு.

நிலமகன்கா ணைட்டாதி திரத்திலுபை யத்தோர்
நேசமதாய்ப் பாவருடன் நிலைகந்திர மதனில்
தலமதிலே சுமங்கலியா மெண்ணுறு வயதில்
சஞ்சலமொன்றில்லாமை தாணிவிட்டுபோவாள்
குலமதிலே பேருடையாள் குறித்தபொருளுடையாள்
குறிப்புடையாள் பாக்யபலன் கூரக்கேளிம்மை

பெலமுடைய புத்திரபலன் அதிலாண்பால் மூன்று
பெண்ணிரண்டு நிலையென்று பேசுவரிப்பலனே. (12)

வேறு.

தீரமாம்பத்தில் லாபாதி நீலன்
சிறப்பொடு மன்னவன் பார்வை
மீரியே நிற்க பூமிவிர்த்தியினல்
மிகுசெல்வமுடையவளென்க
வீரியமுடையாள் புருடர்க்கு நன்மை
விளங்குவள் விரையம் நற்பலன்கள்
காரியமார்க்கம் கைப்பொருள் விரையம்
கதித்திடுமென்றுரைத்திடுமே. (13)

மேடமுதலோரையின் பலன்
முற்றிற்று.

மேடமிரண்டாமோரையின் பலன்.

மறிதனிலிரண்டாமோரை பிற்பாதி
மாதர்கள் ஜனன மாகிடிலோ
நெறியதாம்வீதி கீழ்மேலாம் தென்பால்
நிலையுளமீனபிரண்டுளதாம்
குறியுளமீனக்குக் கீழ்திசை சந்தாம்
குளம்வட கிழாலையங்கள்
தெரிவது வடமேற்காதின பேதம்
திரமிருநிலையெனச்சொல்லே. (1)

நலமுளசெல்வி நிறஞ்செகப்புள்ளாள்
நாடிய சகோதரமிருவர
குலமுள்ளுஞ்ஜூஷ்டி குடும்பவிர்த்தியுமாம்
கூடியவன்னியாள் சுகமாம்
தலமதைவிட்டு அன்னியதேச
சஞ்சாரப் பிரியமேயுள்ளாள்
நிலமையில் மூன்னுல் பெலமெனவுரைத்தீர்
நிலைபேத மெவ்விதஞ்சொல்லும். (2)

சொல்வ துவரசே யின்னமுங்கேளு
சுகமுள்ள மாதர்க்குப் பலன்கள்
வல்லபபுத்தி ரனில்லைகாணதனுல்
மாரியதீர்த்த யாத்திரைகாண்
செல்வமாம் புருடன் தன்னுடன்கூடி-
சேதுக்கே செல்லுவரென்க
தொல்லையொன்றில்லை காலாந்திர புத்திரன்
சொல்லுவரின்னிலைப்பலனே. (3)

திருந்தியவாக்குதனத்தா திதிரத்தில்
சேர்ந்துபயந்தனில் பார்வை
பொருந்தியே யிருக்கப் புருடர்க்குமேலாய்
போதனைபொய் கலகத்தால்
அருந்திய யறங்கள் செய்குவள்போல
அதிக வஞ்சகத்தினையுடையாள்
தருஞ்சுகம் புருடன் றனக்குமே செல்வம்
சார்ந்திடுமென்றுரைப்பதுவே. (4)

சிறந்த மூன்றிடத்தின் தைரியங்காமி
சிறப்பொடு மனம் அகங்காரி
அறந்தனிலிச்சையற்றவள்காமி
அன்னியர்பகையுள்ளாளென்க
நிறந்தனில் நன்மைபோலிருந்திடுவள்
நிலைமையுள் பொருளெலாமழிப்பள்
சுரந்தனுல் கண்டமிருபத்தேழாண்டில்
சொல்வது யின்னிலைப்பலனே. (5)

பாவிகாண் நான்கா மதிபதியுடனே
பற்றியாறெட்டு முன்னுன்கில்
மேவியே யிருக்கப் பால்பசுகன்று
விர்த்தியேயில்லை காணீனம்
தாவிய புத்திரி நிலையொன்றுபிறந்து
தனம் சுபம் பால் பசுக்கன்று
மூவிதப்பொருளால் மருமகன்றன்னுல்
முறுஞ்சுகந்திரமென்பருரையே. (6)

பற்றியப்பாவி கூடிடில் பலன்கள்
பகர்வதெவ் விதமிதற்கு

வெற்றியாமரசே தேளினுக்கொன்பான்
மிகுமதியானதால் நான்கோன்
அற்றிடாப்பலன்களதற்கு நான்காதி
யடைந்தபின் விர்த்தியாமென்றோம்
பெற்றிட லிவ்வாறு நிலையெலாமறிந்தால்
பேதகமதிலிஸ்லையரசே (7)
அன்புடனந்தா லதற்கைக் துக்கைகந்துக்
கதிபதி நிலமகனுகும்
மூன்திய கூர்மை புத்தியுமுள்ளாள்
முதிர்ந்திடும்வயதினில் புத்ராள்
சொந்தமாய் நின்ற நிலையெல்லாம்விட்டுச்
சுயார்ச்சித நிலைதனில் செல்வம்
மூன்திய பூர்வம் தத்து புத்திரற்கு
முற்றிலுமடைவதென்பதுவே. (8)
ஆறினில்ரோகந்தானில்லை சொணங்க
ளடைந்திடல் மன்னர்கள்பேட்டி
மீறியபுருடன் றனக்குமேயரசர்
மிகுத்திடும் செல்வமே யுளனும்
பாரினிலேழாமாதியின் பலன்கள்
பலமுள்ளப் புருடனுமென்க
வீரியமாக நிற்கினும் பெண்ணுள்
விர்த்தியாங் குடும்ப மென்றோதே. (9)

வேறு.

கண்டிடக்கேள் புருடர்க்குமீன தென்பாலாகக்
கதித்ததொரு வீதியது பிரிவு மூன்றும்
தண்டான சந்தினரு கிருமீனயா மொன்று
தொல்புவியி லடவிர்த்திசொல் தந்தை மூவர்
கொண்டவிர்த்தியதி லிருவர் சகோதரம தேதகன்
கூறுவர்காண் சுயார்ச்சியத்தில் குணமுடனேவாழ்வன்
தொண்டர் முதலடியார்கள் கூடும் நிலையொன்று
சொல்தந்தை காலத்தில் சொல்தர்ம நிலையே (10)

வேறு.

குறைவில்லையெட்டாமாதியின் பலன்கள்
கூறுவர் நாற்பதல்லாது
நிறையதாமாண்டு மூன்றின் மங்கலம்
நேர்ந்திடுங்காலத்தில் புத்திரன்

நரையுடன் கொப்பமாகுந் திங்கள்
நலமுடன் புருடனுமிறப்பான்
திரையிலாதாண்பால் பிறந்துடன் செல்வம்
சிறந்திடும் திரமை யிவ்விதமே. (11)

வேறு.

மேலாம் பாக்கியப் பலன்கேளாய்
வேந்தர் பொருளால் மிகு செல்வம்
மாலின்பார்வையடைந்திருக்கில்
வருமே புத்திரன் வாலிபத்தில்
கோலாய்க் கோணமதில் பிறப்பன்
குணவான் தர்மசிந்தையுள்ளன்
சாலாம் பிதுர்க்குமேல் செல்வம்
சாற்றும் பலன்கள் தலமதிலே. (12)

வேறு.

கடியகோள் கன்மத்தாதி கலிமதி தனக்குப்பத்தேதான்
படிதனில் பார்வையாகில் பாக்கிய மிகவுள்ளாளாம்
துடியதாம் வார்த்தையுள்ளாள் சுகமதுயிருந்தும் கர்மி
கொடியவளென்றே கீர்த்தி கொள்ளுவள் கொடியமாதே. (13)

வேறு.

பங்கமிலா லாபமது மேன்மையுண்டாம்
பத்தாவால் பாக்கியங்கள் பலன்கள் கூடும்
தங்கியநற் பொருளெல்லாம் பெண்மூலத்தால்
சார்ந்த விரையங்களெனத் தலத்திலோ தும்
இங்கிதமாய் விரையாதி பலன்கள் கேட்க்கில்
இருமனையாம் விர்த்தியொன்று யிடரோவில்லை
சங்கையிலா ஞானமதை யடைவான் புத்திரன்
சார்ந்தகுணவானுமாய் தரையில் வாழ்வன். (14)

மேட மிரண்டாமோரையின் பலன்.

மூற்றிற்று.

மேட மூன்றாமோரையின்
பலன்.

ஆடதனில் மூன்றுவதோரையதில் பாதி
யரசனை நீக்கி பிற்பாதியில் செனித்தால்
நீடியதோர் வீதியது தென்வடவாம் நேர்பால்
நிலையுள நன்மனையிரண்டு நிறைகடகஞ் சந்தாம்

தேடரியதென்றிசையில் தென்கீழ்பால் கங்கை
சிறந்த தென்மேற்றிசை கோவில் திரம் வடபால்வீதி
கூடரிய கீழ்மேலாயருகிலிருமனைகள்
குணமில்லை யதிலொன்று குணமென்பர்தானே. (1)

வேறு.

கதித்திடுஞ் சரத்தி லுபயமாய்ப்பிறக்கக்
கனயோகமுடையவளென்க
விதித்தநல்மாது பொது நிறமுடையாள்
மேனி காண்சமரூபமென்க
பதித்தனர் பாவி பார்வையங்கிருக்கப்
பார்வையில் பேதமாமென்க
விதித்தனரிவ்வாறு நிலையெலா மரசர்
வேந்தர்கள் பெண்ணைனவோதே. (2)

வேந்தர்கள்பெண்ணு மென்றதி லுரைக்கில்
மிகுந்தசத்தமத் ததிபன்காண்
சார்ந்திடுமன்ன னிருவர்க்கும் பகையால்
சாற்றியபலனதால் மேன்மை
சேர்ந்ததெவ்விதங்காண் சரத்தினிற் சரமாய்
திரமுபயந்தனி லுறுநாள்
ஆய்ந்தனரிவ்வாறு நிலைதனில்மேன்மை
யதிகாரமுள்ளதென் பதுவே. (3)

பாங்குளதனத்தோன் மதிக்கிரண்டாதி
பற்றியபாவர்கள் சகிதம்
ஓங்கியேயிருக்க வுருதிநல்வாக்கு
யோகிகள்கட்புள சிந்தை
தீங்குவொன்றில்லை குடும்பங்க ளிரண்டு
சிறப்பொடு விர்த்தியா மென்க
பாங்கியர்க்கூட்டம் நல்மனை விர்த்தி
பற்றிய வதிகாரச் செல்வி: (4)

செல்வமேயுள்ளாள் சகோதரமிருவர்
சிறப்பொடு வீரியகாமி
நல்லவளென்று நாட்டில்பேரெடுப்பள்
நயனரோகத்தினை யுள்ளாள்
அல்லலொன்றில்லை அதிகாரநட்பு
அதிகரூபந்தனை யுடையாள்

சல்லாபமுள்ளாள் சகிகொண்டுபலனீச்
சாற்றுவீர் தரணியின்மீதே. (5)

மின்னியவாடை பொன்னணிமிகுதி
மிகுபூஷணங்களே யுள்ளாள்
உன்னியநாற்கால் பசுகன்றுகாலி
யுள்ளவளுருதிநற் சிந்தை
பொன்னெடுபொருளும் சேர்க்கையுமுள்ளாள்
பூமியில்விர்த்தியு மதிகம்
சொன்னயிப்பலனே கிரகபார்வையினல்
சொல்வது மின்னமுங்கேளே. (6)

ஓதியவைந்தால் பலனறிந்திடுதல்
வொருபுத்திரன் நிலையாகும்
நீதியாய்ச்செல்வன் ஜாதகிதன்னல்
நிலையுள்ளபொரு ளடைந்திடுவன்
பாதிநாட்செல்வ மத்தியிற்றுழ்வு
பற்றியசெல்வம் பின்னுண்டாம்
வேதியன்பார்வை நின்றிடக்கீர்த்தி
மிகுசெல்வம் புத்திரர்க்கென்றே. (7)

கண்டவாறிடத்தால் ரோகமேயில்லை
கருதியரோணமிலை யென்க
தொண்டர்கள்தமக்கு விரையமே செய்வள்
தொல்புவிதனில் தர்மசிந்தை
மிண்டியபுருடன் றனக்குமேமநலத்தாள்
மிகுகாமிசெளரிய முள்ளாள்
துண்டெனும்வாக்கு சுதந்திரபூமி
சுயார்ச்சிதம் நிலையுள்ளாளென்னே. (8)

உரைத்திடும்புருடன் றனக்குமேவீதி
யுருங்கீழ்மேல் வடநிலமணையாம்
நிரைத்திடல்கீழ்பா லருகினில்சந்து
நேர்மனை யபவிர்த்தி யிவ்வாறு
குரித்திடும் புருடன் சகோதரமூன்றும்
குறைவிலாசெல்வ முள்ளவராம்
திரைபடாசிந்தை வித்தைநல்வாக்கு
திரமுளசெல்வீகமென்னே. (9)

நாரியர்க்கெட்டா மிடப்பலனறிதல்

நாற்பதாண் டல்லாதேழினிலே
நேரபமங்கலம் புத்திராள்தனக்கு
நேசமேயில்லை பின்பகையாம்
கூரியதொன்பா னுதிநற்பலன்கள்
குணம்பிதுர்ப்பல னடைவாள்
தேரியமனத்தாள் ஆலியந்தனக்குச்
சிறந்திடவிரையமே செய்வள். (10)

குறியுள்ளபத்தா மாதிநற்பலன்கள்
கூறுவன்பூமியால் விர்த்தி
நெரியுள்ளசிந்தை குடும்பத்துள்தலைவி
நேயமாயாத்திரை புரிவாள்
அறிவதாமடக்க முள்ளவள்குடும்ப
மதிகாரசெல்வமே மிகுதி
பிரியமாம்தர்ம விரையத்தில்தானே
பேசுவரின்னிலைப் பலனே. (11)

வேறு.

பேசியலாபந்தன்னில் பிதுர்வர்க்கமூலஞ் செல்வம்
காசினிபுகழவாழ்வள் கருதியவிரையம்கேளும்
தாசர்கள்புண்ணியமேகூத்திரத் தவமதிற்கருணைகொண்டு
நேசமாய்விரையஞ்செய்வ ளென்றுநீ நிகழ்த்திடாயே (12)

மேட மிரண்டாமோரையின் பலன்.

மூற்றிற்று.

மேட நான்கா மோரையின் பலன்.

பூவையர்கள்*மறிநான்கா மோரைபிற்பாதி
பொருந்தியதில் பிறந்திடிலோ பூரணமாய்வீதி
பாவையர்க்குப் பிரிவுமூன்றுள வீதியென்க
பற்றியதோர்மனைசந்தில் பலமூளதாமென்க
மேவிநிற்குமனைக்கருமேகேழ் திசைசந்துண்டா
மிக்கவெதிர்மனைபாழு மிகுதியாலரிட்டம்
ஏவியபூர்வீகமதி லில்லையிரண்டிடமா
மிருப்பர்தந்தை யெனச்சொல்வ ரிப்புவியிலீதே. (1)

* மறி—ஆடு.

வேறு.

சொல்வது ஆண்டொன்றிற்குள் சூழ்கண்டமரிட்டமுண்டாம்
அல்லலாமாந்தீதாஷம் அதிசாரரோகமுண்டாம்
செல்வியும்பிறந்தபின்னும் செல்வம்பாழ் குடும்பத்துள்ளும்
கல்லலாய்பிரிவுண்டாகி கலகமாயலைவரென்றே. (2)

நான்கு ஓரைக்கும் கூடிய செய்யுள்.—41.

மேடலக்கினபலன் முற்றிற்று.

ரிடபமுதலோரையின் பலன்.

சொல்வதுரிடபந் தனில்முதலோரை
சிறந்தபிற்பாதியில் பலன்கேள்
வெல்வதுபெண்பால் பிறப்பள்காண்வீதி
விரிவதுதென்வடலாகும்
தொல்லையொன்றில்லை கிழ்பக்கமனையாம்
சூழ்தென்கிழாலய முளதாம்
அல்லலேயில்லை யடர்கும்பதிசையில்
அந்தணர்மனையெனலாமே. (1)

அடுத்தகீழ்திசையின் பக்கத்திலாரல்
அருங்கங்கை விருக்ஷங்களுளதாம்
முடித்திடும்வடமேல் திசைதனில்பூர்வ
மூந்தியதந்தைகாலமென்க
தடுத்திடுந்தந்தை காலத்தில்செல்வம்
தலமதில்கீர்த்தியுமுளளாம்
நொடித்திடும்பூர்வஞ் சுகமில்லைதந்தை
நூதனதொழில்விர்த்தியுளளே. (2)

வேறு.

அரசேவெள்ளியாராந்
அதிலும்சரமாம் பின்றிரத்தோன்
நிரைசேய்கேந்திர மதில்பார்வை
நிலையாயிருக்க நேர்தந்தை
சிரசில்நோயை யுடையவனும்
சிறியதந்தை யிருவரென
உரைசெய்பூர்வந் தனைவிட்டு
உரும்யாழ்கன்னி திசையென்றே. (3)

வேறு.

சுகமதாந்திரேகம் பொதுநிறஞ்சமனும்
சொல்லுநல்வார்த்தை பொய்யுடையாள்
சகமதில்புருடன் றன்னேயேயடிப்பாள்
தனம்பூமி சொணத்தினுல் மாரும்
அகமதிலன்னிய தாரத்தையடைந்து
அன்னிய தேசமே செல்வன்
புகலுமிவ்விதமே பின்னமும்பலன்கள்
புகலுவேனரசேநீ கேளாய். (4)

தொடுத்தநற்கணிதம் தந்தையின்விர்த்தி
சூழிருவர்க்கமாம்பூமி
படுத்திடல்சுயார்ச்சிய நிலைதனில்செல்வம்
பற்றியபூமியால் விர்த்தி
வகுத்தனரன்னே வர்க்கத்திலேகன்
வருந்தலேபதமே சொல்வள்
மிகுத்திடப்பலன்க ளின்னமும்சொல்ல
விளங்கியசூத்திரம் சொல்லும். (5)

சொல்வதுதனத்தோன் அதற்குநான்காதி
சூழ்சத்தமந் தனக்கெட்டு
வெல்வதுலாபத் ததிபனுலிதற்கு
விரும்பியசூத்திர மிதுகாண்
வல்லபபுத்திரன் ஏகனேபிறந்து
வளர்ந்தாறு வயதினில் மரிப்பன்
தொல்லையாம்நான்கு புத்திரனிழந்து
சூழைந்தாம் விர்த்தியன்னிலையே. (6)

நிலையதாய்மொத்த புத்திரனுரைத்தாய்
நிலபத்தாவினிடம் சொல்வீர்காண்
மலிவுறுதேமகள் மன்னனே மதியின்
வருக்கமாம்புருடனுங் காணும்
இலாயுளான்பூர்வ சுயார்ச்சித மூடையோன்
கனசெல்வம் பூமியும்பொருளும்
துலதிசைபார்வை தன்னிலும்சுபமாம்
சூழ்புருடன் நிலையென்றே. (7)

வேறு.


அரியகேள்வீ தியது அறிதல் கீழ்மேல்
அதில்வடபால் தென்முகப்பு அரியில்கங்கை
புரிதல்கீழ்திசைசந்தாம் அப்பாலாரல்
புண்ணியர்தன் றலமொன்று பொருந்தி நிற்கும்
தெரிவதுகாண் வடமேற்கில் நதிதானொன்று
சிறந்துசெல்லு மிரண்டிடமாய் தீரம்பூர்வம்
உரியபிதுர்சகோதரங்க ளிருவராகும்
உடன்புருடன் சகோதரங்களுருதிமூன்றே. (8)

வேறு.

பெருகியசுபங்கள் முடிவதுதசமாம்
பெலனுண்டு மூன்றினில் தானே
தருவதுபுருடன் யோகமேமயுடையன்
தலமேத சஞ்சல மாகும்
பெருவதுநிர்ம புத்திலாபம்
பூரணமெவ்விதஞ் சொன்னீர்
அரிகுவதரசே ஆறுறுமாண்டு
ஆனபின் னன்னியதேசம். (9)
திரிவதுபுருடன் பின்பெண்பாலோடு
சிறப்பிலா தைந்தாண்டு மட்டும்
உரியவனல்லன் அன்னியபெண்ணே
வொருகர்ம முடித்துபின் நிலைப்புன்
பிரியமும்செல்வம் குடும்பத்தில் மேன்மை
பெலமுட னனுபவித் திடுவான்
சரிமன்னனுலும் ரோணத்திலுல் தனங்கள்
தந்தையி னுதீனம்மீபாமே. (10)
பொருந்தியவாயுள் மூன்றுறுபத்தில்
பூரண கெண்டம்மீபா லரிட்டம்
திருந்தியவாயு லோம்பதல்லாது
சேர்ந்திடு மூன்றில் கண்டம்
தருஞ்சுகமத்திய மல்லாதுஅந்தம்
சார்ந்திடுங் காலத்தில்வீரையம்
உருஞ்சுகம் நாற்பதல்லாது மூன்றி
லுரும்அமங் கலியெனவோதே. (11)

ரிடப முதலோரையின் பலன் முற்றிற்று.

ரிடபமிரண்டாமேமாரையின் பலன்.



சிறந்தரிடபந் தனிலிரண்டில்
சேர்ந்தபிற் பாதியில்பலன்கள்
பிறந்தசேய்க்கு வீதியது
பெலன்காண் வடதென் பெலனெண்க
திரங்காண்திரத்துள் தனிலுபையம்
சேர்ந்தமீனகள் தானற்பம்
உரங்காணைதிரி லுள்ளமீன
புருதியிரண்டா மெனவோதே. (1)

வேறு.

மதித்திடுமிடபந் தனிலிரண்டாங்கால்
வந்தஜாதகிக்குமே பலன்கள்
உதித்திடும்வீதி தென்வடல் மேல்பா
லுருமீனையதிரில் சந்தளதாம்
நிதிதனத்தாதி விரையாதி யிவர்கள்
நேசமாய் கேந்திரகோணம்
அதிதனக்கிவ்வாறு நிலைகண்டுமீனத்ய
வகுத்திட லாகுமிப்பலனே. (2)

பலனதில்பூர்வ மிரண்டிடம் தந்தை
பகருவன் தொழிலெல்லாங் கெடுதி
தலமதைவிட்டு அன்னியர் நிலையில்
சார்ந்துபெண் ணனுபவந்தன்னில்
தூலதனில்மீனியொன் றதற்கேழுமேடம்
சொல்திசை தனிலொருபூமி
பலம்தாயங்கு வனுபவித்திருப்பன்
பாரினிலிப்பலனென்னே. (3)

காரிபாக்யாதி யதற்கொன்பான் புந்தி
கலிமதி தனக்கொன்பானேடு
வீரியமுடனே சுபரொடுப்பார்வை
மிகுமாறில்வாலிபந் தன்னில்
தேரியசுபங்கள் புருஷரெவ்விதஞ்சொல்
திரமதிலன்னியின் வர்க்கம்

கூரினர்குடும்ப விர்த்தியுமுளனுய்
குணஞ்செல்வம் குறிப்புடனென்றே. (4)

கருதியரிடபந் தனிலிரண்டாங்கால்
கணிதம்பிற்பாதியில் பெண்காண்
தருமதில்நிறமோ சமனதாம்திரேகஞ்
சார்ந்திடுங் குறியகல்ரூபம்
பெருமைகாணுடை கர்ணபூஷணங்கள்
பெலமுட னனுபவித்திடுவாள்
குருகியவார்த்தை மனதினில்கபடம்
கோள்சொல்லுங் குணத்தினையுடையாள். (5)

வேறு.

சிறந்தநிலைகாண் சகோதரங்கள்
திரமாமிரண்டு ஆணுகும்
பிறந்தபெண்கள் மூன்றெனவே
பேசுமொன்று யினமதாம்
நிறைந்தஅம்மான் வர்க்கமதில்
நிலைமூன்றுளது விர்த்தியொன்று
குறைந்தசெல்வம் பின்மேன்மைக்
குணங்கள்விர்த்தி யடைவதென்றே. (6)

வேறு.

திருதியந்தனக்கு நான்கால் திரமொன்று சொல்வன்பாலா
பொருந்திப புத்ரரைந்து பூரணம்நிலையா னிரண்டு
வருமதில் பெண்பாலொன்று வருஞ்சுபமுடிந்த பின்பு
தருஞ்சாத கிக்குக்கெண்டம் சாற்றுவர் நிலைகளீதே. (7)

வேறு.

நிலைபதாம்புருடன் வீதிகீழ்மேலாம்
நிலைவடதிசை கனமனையாம்
துலைதனில்பிரிவு சந்துண்டாங் கோவில்
சூழுந்தேள் திசைதனிலென்க
கலைமதிப்பார்வை நிற்கினுங் கங்கை
கணிதமா மகரநற் றிசையாம்
நிலைபதாம்வடமேற் றிசைதனில்தந்தை
நிலைத்தமேதார் விடமெனவோதே. (8)

ஓதினர்புருடன் சகோதரமறித
ஆண்மையா னிரண்டெனவோ தும்
தீததிலில்லை பெண்ணுபையங்காண்
திரமொன்று விர்த்தியா மென்க
மாதுநற்பொருள்கள் கூடியேசெல்வம்
வாழ்வன்காண் தந்தையிப்பலனே
சாதுகள்நட்பாய் தர்மத்தால் விரையம்
தண்மையு முள்ளவளென்னே. (9)

வேறு.

குறிப்பது ஜாதகிக்குக் குணமாயுள் தன்னைப்பார்க்கில்
நெறிப்பதா முப்பதாண்டு நிலைமூன்றில் கண்டங்காட்டும்
விரிப்பது நாற்பத்தொன்றில் மிகுமாரகங்க ளென்க
தரிப்படும் செல்வமெல்லாம் தரும்புத்திராள் சமனுமென்றே.(10)

வேறு

செல்வியேபிறந்த நாள்முதல் செல்வம்
சிறப்பில்லை மூன்றுண்டுமட்டும்
வில்லினைக்கையில் பிடித்ததுபோல
மிகுகொடி தன்னையே பிடித்து
வல்லபமாக பிறந்திடுவன்காண்
வருமதில் கனிட்டனும் விர்த்தி
தொல்லையொன்றில்லை யதுமுதல்செல்வம்
தொடர்ச்சியாம் சுகமுளனென்னே. (11)

ரிடபமிரண்டாமோரையின் பலன் முற்றிற்று.

ரிடப மூன்று மோரையின் பலன்.

விடைதனில்மூன்று மோரையிற்பா தி
வேந்தனே பெண்பிறந்திடுவள்
நடைவரும்வீ திக் கீழ்மேலதாகும்
நாடியமனைவட முகப்பு
தேடியவடமேல் பாகமாம்பூர்வம்
திரமூளமனையது பாழாம்
நாடியவடபா லெதிரினில் சந்து
நன்மையாங் கங்கையங்குண்டே. (1)
காணலாம்தந்தை சகோதர மைந்துக்
கருதியநிலைரெண்டு விர்த்தி

பூணலாம்பெண்பா லதிலொன்றே நிலைக்கும்
பெலனிது வம்மான்கள் வர்க்கம்
தோணுமூன்றுளது முன்பூர்வஞ்சம்
சுகமெலா மில்லைப்பின் விர்த்தி
காணுதலேகன் விர்த்திகாண் குடும்பம்
கணிதத்தா லிப்பலனென்றே. (2)

சிறந்த ஜாதகிக்கு ஆண்டொன்றி லரிட்டம்
தீரமாமிரண்டினில் தீர்க்கம்
குறைந்தபூர்வீகத் தனமெலாம்விரையம்
குடும்பமே யன்னியதேசம்
நிறைந்திடும் பிதுர்கள் விவகாரமூலம்
நேசத்தால் பொருளது விரையம்
குறைந்திடுமனைகள் விட்டு அன்னியத்தில்
குடும்பவிர்த்திகளுமாமென்னே. (3)

ரிடபமூன்றுமோரையின் பலன் முற்றிற்று.

ரிடபம் நான்காமோரையின் பலன்.

ஓங்கியரிடபந் தனில்நான்கா மோரை
உதிக்கும்பிற்பா தியின் பலன்கேள்
நீங்குமவ்வீதி தென்வடலாகும்
நிலைமேல்பான் முகப்பென்லாகும்
ஆங்குமவ்வெதிரி லுளமனைதனிக்கும்
ஆரலுசந்துமங் குண்டாம்
பாங்கிருபக்கமிருமனை விர்த்தி
பலன்தென்பால் பாமெனவோதே. (1)

இன்பமாயிடர்ப்பா ழென்றுமே யுரைத்தீ
ரெவ்விதமினிய காரகங்கள்
துன்பமேகாரி தனத்தினைப்பாவி
சூழ்ந்திட யிருப்பதால் தானே
அன்பொடுவங்கு ஆலயஞ்செல்ல
லருகினில் சந்துண்டா மதனல்
தென்புடன்காலி பாமெனவுரைத்தோம்
திரமிதுவிர்த்தி பின்னுண்டே

அன்னியர்நிலையில் பிறந்தனள் பூர்வ
மதிலில்லை யாதீனமிரண்டு
உன்னியதான்று விர்த்தியா மொன்று
உருமன்னியர்க் காகுமென்றோது
பன்னியதந்தை வாக்தாதிமூவர்
பற்றியசுகமதி லிருவர்
அன்னியதேச மதிலொருவருக்கு
அருஞ்சுக மிலையெனப்படுமே. (3)

வேறு.

சொல்லுந்திரேகக் காந்தியுள்ளாள்
சோர்வொன்றில்லாள் சுகமுடையாள்
வெல்லும்ரூபஞ் சமனுகும்
மிக்ககல்வி யுள்ளவளாம்
அல்லல்தனையைத் தானெடுத்து
ஆள்வோன் றனக்குத் தானுரைப்பாள்
இல்லையென்றே பொருள்தேடி
யினிதாய்சேர்ப்பா ளெனவோதே. (4)
உள்ளவருட மோரைந்தில்
ஒருதிகண்ட மொன்றுளதாம்
தெள்ளும்பத்தும் பின்னுறில்
சிறந்தகண்ட முடனீங்கும்
துள்ளும்வயது யிருபதின்டோல்
சூழ்ந்த புத்திராள் தனில் கண்டம்
விள்ளுமுப்பான் குருவாண்டு
மிக்கக்கண்ட மாரகமே. (5)
தெரிந்தபுருடன் நிலைகேட்கில்
சிறந்தவரசே தந்தைவர்க்கம்
பிரிந்தவீதிக் கீழ்மேலாம்
பேசும்வடபால் மனையுளதாம்
வருந்தும்புருட வர்க்கத்தில்
வண்மைகுடும்ப மிரண்டுளதாம்
திரிந்தபுருடன் சகோதரங்கள்
சேய்ரெண்டுளதா மெனவோதோ. (6)
ஓதும்புருடன் வாலிபத்தில்
உணர்வாய்மாது பத்தாண்டில்

தீதொன்றில்லா சுபமுடிப்பன்
சிறந்தசெல்வ முளனுகும்
மாதுதனக்குப் பொருள்பூமி
வலிவெல்லாமுன் கொடுத்திடுவன்
பேதையிவனு மதிகாரம்
பெண்பால் நிலைக ளெனவோதே. (7)

பாரில்பெண்பா லதிகாரம்
பயந்துநிற்பன் புருடன்காண்
நாரிதனக்கு புத்திரபலன்
நன்மையேக ளுணுகும்
பேருங்கீர்த்தி யுளன் பெண்பால்
பெருமையிரண்டு புத்திரியாம்
நேரும்புத்திரன் வாலிபத்தில்
நீங்கச்செய்வான் ஜாதகியை. (8)

கயலார்விழியாள் தான்கலங்கிக்
கன்னிமனைக்குத் தான்செல்லல்
அயலார்போலே ஜீவிப்பாள்
அறிவுள்ளோன்கா ணரியதபம்
செயலார்தந்தை தனக்குநல்லன்
சிறந்தசெல்வன் சுபதர்மம்
பையலார் பலபேர் நட்புடனே
பாரிலிருப்ப னெனச்சொல்லே. (9)

பதியினில்பெண்பால் தனக்குமேசேர்ந்த
பற்றியசகோதர முரைக்கில்
துதியமாண்பாலாமேகமே பெண்பால்
சொல்வதுயதில்விர்த்தி யிதுகாண்
நிதனம்பிறந்த ஆண்டைந்திரசே
நிலைகேட காகியே பேதம்
விதியதாவன்னிய தேசங்கடனேய
விதித்தலைந்திடுவரென் றோதே. (10)

நான்கு ஓரைக்கும் கூடியசெய்யுள். 35

நிடபலக்கின பலன் முற்றிற்று.

மிதுன முதலோரையின் பலன்.

நாடியமிதுன முதலோரைபாதி
நலம்பிற்பாதியில் பலன்கேட்கில்
தேடியப்பெண்காண் வீதிகீழ்மேலாய்ச்
சிறந்திடும் வடமுகப்புளதாம்
கூடியதெதிரி லிருமனை தன்னில்
குணம்பெண்பா லோர்மனையென்க
நாடியப்பூர்வந் தானில்லை கீழ்பால்
நலமார வருகினிலென்னே. (1)
அரிதல்காண்மேல்பா லிருமனையொன்று
அனலதாய்க் கெடுதியா மென்க
தெரிதல்தென்மேற்கி லாலயமொன்று
சிறந்திடும் நதிசெல்லும் வடபால்
காரியின்பார்வை சத்தமந் தனக்குக்
கலந்துடன் மதிக்குக்கன் மமதாய்
நேரினிலிருக்கப் பிறந்திடமன்னை
நிலதத்துப் புத்திரியெனவே (2)

வேறு.

வரும்சென்மாதி வுபையமதில்
வலுவாம் சரத்தில் பிற்பாதி
தரும்நற்சுகங்கள் தந்தை வர்க்கம்
தழைத்து நிற்பா ரிருகுடும்பம்
பெரும்பலஞ மதிலம்மான்
பெருமைவர்க்கந் தானேகம்
உருஞ்செல்வீகம் பூர்வமெல்லா
மூடனேவிரைய மாமென்னே. (3)
வாழுமிதுனந் தனில் பிறந்தோர்
வண்மைதிரேகம் பொதுநிறமாம்
சூழுந்திரேகம் சமரூபம்
சொல்வர்கண்ட மூன்றுண்டில்
தோழும்பிறந்த வேழாண்டில்
சுரத்தால்பீடை ஜலகண்டம்
வீழுங்கயத்தி லோர்கண்டம்
மிக்கஆண்டு மேல்மூன்றே. (4)

வருங்காணிதற்குப் பதினென்றில்
வலியசுபங்கள் தான்முடிப்பார்
தருங்காண்புருடன் வித்தையுளன்
சார்ந்தசெல்வன் றனபதியாம்
நெருங்கும்வீதி தென்வடலாம்
நெடியமனைகாண் வடபக்கம்
அருங்காணருகி லோர்சந்து
அடர்ந்தசிம்மம் கோவிலென்னே. (5)

(வேறு.) கூர்வர்தந்தை சகோதரம் நான்கு
குணம்மெண்டு விர்த்தியி லோன்று
மாறிலைப்பூர்வ மிரண்டிடம் பேதம்
மன்னர்கள் வழக்கினுல் விரையம்
மீரியப்பென்பா லுபையவத் துள்ளும்
வேந்தரால் பகையுள னுகும்
பாரினில்செல்வி பிறந்தநாள் கொண்டு
பற்றியயோகமுள் ளவளே. (6)

யோகமாஞ்செல்வம் வயதேதழில்கண்ட
முற்றிடுமிருப தல்லாது
பாகமாமூன்றில் சுபந்தனைமுடிப்பள்
பற்றிய அன்னை வர்க்கத்தில்
சோகமாங்கர்ம முடன்முடிந்திடுங்காண்
சுயார்ச்சித நிலையொடு செல்வம்
விவேகவான்விர்த்தி சுயார்ச்சித மதனுல்
விரும்பியதொழில் விர்த்தி யிரண்டே. (7)

இன்பமாய்த்தொழில்க ளிருவிதமெவ்வர்
ரினியகோள் காரகமெவ்வாறு
துன்பமேமயில்லை அரசனை பத்தோன்
சூழ்சென்மத் தாதியா னதினுல்
இன்பமாய்புந்தி முன்னவர்க் காக
யினியகோ ளாகையால் செட்டு
வந்திடும்பூமி விர்த்தியால் செல்வம்
வருமெனக்காரக மோதே. (8)

வேறு.

அரசேபெண்பால் குணமுள்ளாள்
அதிகசெல்வக் குணமுடையாள்

நிரைசேர்கர்ண பூடணங்கள்
நிலையுமுள்ளாள் நெடுஞ்செல்வி
உரைசேர்குடும்பந் தனில்நன்மை
உருதிகுணமுள் ளவள் காண்க
விரைசேர்மதியால் தான்பார்க்க
விவேகி குணத்தாள் வெகுதர்மி. (9)

தர்மசிந்தை யுள்ளவளாம்
தலத்தில் புத்திராள் நான்குளதாம்
வர்மமில்லா ளதிலிருவர்
வலுவாமாண்பால் வருஞ்செல்வன்
மர்மமுள்ள புத்திரனுய்
வருவன்கலகி யன்னியமே
கன்மத்தபன் பார்வையினுல்
கணிதமிவ்வாறு பலனென்னே. (10)

வேறு.

நலந்தரும்நாற்ப தல்லாது மூன்றில்
நல்முள்ள புருடர்க்குக் கண்டம்
பலன்தரும் நாற்பத்தாறினில் புருடன்
பற்றிய மாரகமென்க
தலந்தனிலிரண்டு ஆண்டினி லிறப்பள்
சார்ந்தசெல்வீக புத்திரனும்
குலந்தனில்சிரேஷ்ட முள்ளவளென்று
கூறுவரிப்பலன்தானே. (11)

மிதுன மூததோரையின் பலன் முற்றிற்று.

மிதுன மிரண்டாமோரையின் பலன்

நாடிலிரண்டா மோரைதன்னில்
நலமொன்றில்லை பிற்பாதி
தேடும்வீதி தென்வடலாம்
திரமேல்பக்க மணையுளதாம்
கூடுமெதிரில் மணைபாழு
மூறித்தநிலமை யிருபக்கம்
வாடுமணைகாண் செல்வமில்லை
வருமிவ்விதமாய் பலனென்றே. (1)

பலனேதந்தை வர்க்காதி
பாரிலிருவர் விர்த்தியதாம்
நலமேயில்லை பூர்வீகம்
நாடும்நிலைக ளிரண்டுளதாம்
புலமேயன்னை வர்க்கமது
குடும்பம்அபமாம் நிலையில்லை
தலமேகன்னி யாழ்திசையில்
சார்ந்தங்கிருப்ப ரெனச்சொல்லை. (2)
சத்தமாதி பாக்கியாதி
சார்ந்தபார்வை யிதற்குண்டேல்
விர்த்தியாக நிலையில்லை
விரிவாமாத மொன்பானில்
உத்தகண்ட முடனரிட்ட
மோதுங்கதிர்மா லுடையமதில்
சித்தியாக மாரகமே
செப்யுமிவ்வாற் பலனென்னே. (3)
உடனேதந்தை அன்னியமா
யுரும் நல்மனையைத் தான்விட்டு
திடமாயன்னியர் மனைசெல்வன்
சிறந்தசெல்வம் பூஷணங்கள்
கடனுயிருந்த பூமியெல்லாம்
கருதிக்கூடு மெனச்சொல்லும்
மடமாஞ்சத்திர மாலையங்கள்
வரும்நற்சுபத்தால் விரையமென்னே. (4)

மிதுன மிரண்டா மோரையின் பலன் முற்றிற்று.

மிதுன மூன்று மோரையின் பலன்.

தண்டதில் மூன்றுமோரை
தழைத்தபிற் பாதியின்தான்
உண்டெனும் வீதிகீழ்மே
லுரும்தென்பா லுதிப்பள்பெண்பால்
மிண்டெனு மெதிரில் காற்கால்
மிகுமனை கட்டடங்கள்
தொண்டர்கள் பணியுங்கோவில்
சூழ்தெங்கை யருகிலென்னே. (1)

செல்விக்குத் தந்தைமூவர்
தீரமாம் செல்வமேகன்
கல்விவல்லவனுந் தந்தை
கணிதங்க ளறிய வல்லான்
அல்லலொன் றில்லான்பூர்வ
மாதீனத்தோடு வாழ்வான்
எல்லையுள் பூமிலாபம்
இடரிலா தனுபவிப்பன் (2)
நலந்தரும் தந்தைக்கேபின்
நாடியமுப்ப தாண்டுள்
பலன்றருசெல்வங் கீர்த்திப்
பலமுடனனுப விப்பான்
சலந்தன்னுல் கண்டமொன்று
சாற்றியமுப்பான் மூன்றில்
பெலன்றருஞ் சுபங்க ளெல்லாம்
பெலவீன மடைவ ரென்னே. (3)
தந்தைக்கு வயது முப்பான்
சார்ந்தானுக் கப்பால் நன்மை
விந்தையாங் கீர்த்திபூமி
மிகுநன்மை யடையவனென்க
முந்திய வாதீனத்துள்
மூவரால் வழக்குண்டாகும்
சந்ததி யில்லான்பூமி
தந்தைக்குச் சேருமென்னே. (4)

வேறு.

நேசமாய்தந்தை பலனெல்லாமூரைத்தீர்
நிலஜாதகிக்குமே பலன்கள்
பாசமாமாசே பத்தினுக் கதிபன்
பார்வையால் பலன்ரூப நிறமோ
வாசமாஞ்செம்மை ரூபமே சமனும்
வரும்வய தைந்தினிற் கண்டம்
வீசுவமேழு வொருபத்தா மாண்டில்
மிகுதுன்ப முடனிவர்த்தியுமே. (5)
பாகமாய்பத்தாண் டப்பாலோர் மூன்றில்
பற்றியசுபத்தினை முடிப்பர்

யோகவான் புருடன் அன்னையின் வர்க்க
முறுஞ்செல்வ முடையவனுகும்
சோகமில்லான்காண் சுயார்ச்சித நிலைகள்
சுதந்திர பூமியுள்ள வன்காண்
ஏகவான்தொழில்க ளரசரால் விர்த்தி
யின்பமே யடைவனென் றோதும். (6)
பாரினில் புருடன்வீ டெவ்வா றென்னில்
பற்றியவீடுதென் வடக்கால்
நேரினில்சந்து ஆக்கினைகோவில்
நிலைதென்பா லிருமனை பாழாம்.
கூரினர்வடபாலோர்மனை விட்டுக்
குடும்பமே யில்லைபாழ் வீடாம்
காரியின்பார்வை நின்றதாலிவ்வாறு
கணிதங்கள் கண்டிட வோதை. (7)
கண்டிடல்புருடன் தந்தையே மூவர்
கதித்திடும் வர்க்கமாம் விளக்கம்
தொண்டர்கள் நட்பர யதிலொருவன் காண்
சூழாலியங்களால் விரையம்
உன்டெனும் பொருள்கள் பூஸ்திதியெல்லர
முடன்தர்ம விஷயத்தால் விரையம்
உண்டெனும் புத்திர விர்த்தியால் செல்வ
முற்றிடும் பின்விர்த்தி யென்னே. (8)
கருதியகணக்க ணண்டினில் மதியைக்
கலந்துடன் றிருதியமிருக்கப்
பொருதுமாண்டினில்காண் புருடர்க்கு சுகமாம்
பூரண மதிப்பார்வை யதனால்
வரும்நிதிப்பூர்வம் சுயார்ச்சித மரசே
தருந்தலப்பூமிப் பொருள்களும் கூடும்
தனமுடன் செளக்கியமுடனே. (9)
உள்ளவன்றந்தை வர்க்கத்தில் பொருள்க
ளருமன்னை வழிதனில் பூமி
தெள்ளியபொருளும் சுயார்ச்சித மதனால்
தேடிய பொருளதில் கூடும்
கள்ளமேயில்லாள் ஜாதகிதன்னால்
கதித்திடும் பொருளதிலென்க

துள்ளியமனத்தன் சுகதர்ம்வழியில்
சூழ்ந்திடும் பொருள்விரையமுமேம. (10)

சிறப்பொடுசெல்வம் ஜாதகிதனக்கு
சிறந்தாண்டு ரெட்டாம் நிலையில்
குறிப்பதுபுத்திராள் சுபலாப வ்ருத்தி
கூறுவர் மனையிரண் டுளதாம்
நெறிப்படு மாண்டு நாற்பதல்லாது
நிலையேழில் புருடர்க்குக் கண்டம்
தறிப்படுமாண்டில் ஜாதகி யமங்கிலி
சார்ந்திடத்தரும் புத்திரபலனே. (11)

நாடியபுத்திரன் ஆணில்லை யிரண்டாம்
நலம்தரும் பெண்ணதி லொன்று
தேடியசெல்வ முடையவன் கீர்த்தி
சிறந்திட சௌக்கிய முளனும்
கூடிய மணமும் பெருள்சுக லாபம்
சுயார்ச்சித நிலையொடு தந்தை
கூடியபொருளுங் குலத்தில் கீர்த்தியனுங்
குணமுடைய செல்வனுமாமே. (12)

கண்டமேயுரைப்போம் ஜாதகிதனக்குக்
கதிர்மதியாண்டினுக் கப்பால்
மிண்டியசெல்வா யாண்டதில் பகுதி
விரைவுடன் கண்ட மொன்றுளது
தண்டெனுமைம்பான் மூன்றினில் கண்டம்
சுதனேகன் தத்து புத்திரனுப்
அண்டியே யன்னை வர்க்கத்தில் செல்வ
முகுவனிவ்விதமுரைப்பே. (13)

மிதுனம் மூன்றுமோரையின் பலன்.

முற்றிற்று.

மிதுனம் நான்காமோரையின் பலன்.

நலந்தருமிதுனம் நான்காவ தோரை
நலம்பிற பாதிக்குமே பலன்கள்

தலந்தரும்வீதி கீழ்மேலாம் வடபால்
சந்தருகினி லொருசந்தாம்
பெலந்தரும்தென்மேல் திசைதனில் கோவில்
பெலமில்லை யெதிர்மனையீனம்
வலந்தனிலிருபால் நதியரு கினிலே
வருமெனத் தரும்பல னுரையே. (1)

வேறு:

பிறந்தமனை யிருபிரிவா மனையொன்று பாழு
பெலமுள்ளப் பூர்வீகம் பெலயீனமாகும்
நிறைந்ததந்தை வர்க்கத்தில் நிலைநான்கு விர்த்தி
நிலையிரண்டாம் செல்வீகம் நிலையுள னுமென்க
குறைந்தமதி தனக்கேழு அதற்கைந்தா மாதி
கூடியகோள் பார்வையினல் குணமில்லை யம்மான்
அறைந்திடுவா யதிலேகன் அன்னியதேசம்
அதிகரொணத்தா லலைவா னவனிமீதே. (2)

கண்டிடக்கேள் சகோதரங்க ளீரைந்தாகும்
கணிதமுட னதில்விர்த்தி நான்காம்பின்னும்
துண்டாகு மதிலேகன் பெண்பாலாகும்
சுகமூன்று ஆணிலைகாண் துணைவரென்க
மிண்டியசெல்வீகமதை யடைந்து கீர்த்தி
மிகுமணமுஞ் சுயார்ச்சியம் விரிவாமென்று
மண்டலத்தி லுள்மாந்தர்க்காக நந்தி
வகுத்துரைத்த பல்னிதுவாம் வரைகுவாயே. (3)

வேறு.

தீரமேபெண்பால் செல்வீகமுடையாள்
சிறப்பொடுகாந்தியு முள்ளாள்
பார்தனில் குணத்தாள் ரூபமே பொதுவாம்
பற்றியநிறம் புருடனுக்கே
கோரமாம்வார்த்தை கலகமேயுரைப்பள்
கொடியவஞ்சகி மனதிலில்காண்
ஓரமேசொல்லும் விர்த்தியு முடையாள்
உரும்புத்திர தோஷமிவ் விதமே. (4)

சிறந்திடுமதிக்குச் சத்தமத்தாதி
திரமொன்பான் பார்வையினுடனே
தருந்தனத்தாதி சகிதமங்கிருக்கத்
தலந்தனில் வாலிபம் நீங்கி
பெருந்தனங் கூடும் புத்திரனேகன்
பெருமையாய் வித்தியு முடையான்
அருந்தவத்தாலே பிறந்தசேயென்று
அருந்தவ ருரைப்பர்களீதே. (5)

வேறு.

ஆருதியதற்குத் தனத்தாதியோடு
அடைந்த கர்மத்ததிப னிவர்லாபத்தாதி
நேராகவீட்சனிய சகிதனுலல்
நிலைபுருடன் வாலிபத்தில் நிறைந்தசுப மூடிப்பன்
வேறுகும்புருடர்க்கு மனையெவ்வா றென்னில்
விரிவுடைய தென்வடவாம் வீதிகீழ்பால்
கூராகுமனையிரண்டு வொன்று வித்தி
குணதிசையில் கோவிலுண்டாங் குறித்தங்கோதே. (6)

ஓதியதிவ்விதநிலையில் பிறந்தபாலன்
உருந்தந்தை திருதியமாம் வித்தியொன்றும்
தீதிதுகாண் பூர்வமது நிலையிரண்டாகும்
சிறப்பில்லை பூர்வீகந் தீதேயாகும்
பாதிநாள்செல்வீகம் வித்தி மேலாம்
பலன்பின்னும் சமனுகும் பாலாகேளும்
வாதியர்கள் மூலத்தால் விரையமென்று
வகுத்தனன்கா ணிவ்விதமாய் வலுவென்றோதே. (7)

வேறு.

கணிதமாமரசே ஜாதகிதனக்குக்
கண்டமே ழாண்டினிற் றீனே
துணிதல்காணெண்பா ணண்டினி லரிட்டம்
சொல்வது பதிமூன்றில் சுபமாம்
தணிதல்கா ணவ்வாறு நாள்முதல் செல்வம்
தழைத்திடா தென்றுரைப்பதுவே
பிணிதருங்கலகம் சத்துருவாலும்
பேதகம் நிலையிரண்டிடமே. (8)

வேறு.

குறிப்பொடு ஜாதகிக்குக்
கூறுவன் வயதுநாற்பான்
நெறிப்படு மைந்தில்தானே
கிரியாணம் புருடர்க்கோதும்
தரிப்படும் பின்னும் பத்துச்
சார்ந்தவாண்டில் ஜாதகிக்கு
தெரிப்படு மாரகங்கள்
தீர்க்காயுள் நிலையிவ்வாறே. (9)

நான்கு ஓரைக்கும் கூடிய செய்யுள்.—37.

மிதுன லக்கினபலன் முற்றிற்று.

கடக முதலோரையின் பலன்

பாலகா பரிசித்தேகேள் பகருவன் கடகராசி
மூலமா முதலோரைக்கே சொல்லும் பிற்பாதிதன்னில்
சாலவும் பெண்பாலங்கே தறிப்பள்காண் வீதிகேட்கில்
வாலமாம் தென்பால்திக்கில் வரும்பிரி வதனில்மூன்றே. (1)

இன்பமாம் வடபால்கெங்கை இந்திரன் திசையில்கோயில்
துன்பமேயில்லைதென்கீழ் சுதந்திரநிலபூர்வீகம்
அன்பொடுமனையோபாக மறிவதுநிலை மூன்றுகும்
தென்பொடு பிரிவிரண்டாம் திரம்பெண்பால் பாகமொன்றே. (2)

வேறு.

பெருகியசரத்தில் பிற்பாதிதனக்குப்
பெலமொடுதிரமதில் ஜனிக்கில்
குருகியரூபம் நிறஞ்செகப் புளதாம்
குறிப்பொடு அழகுமேன்மையுமாம்
தருமதில்வாக்குப் பொய்யினையுடையான்
சாடியேசொல்லுந் தூர்க்குணத்தாள்
அருமைமூன்றுவாண்டி லரிட்டகண்டத்தா
லங்கத்தி லடையாளமென்றே. (3)

அந்தணர்பார்வை மதிக்காரதி
அவர்கேந்திர கோணமேயுறினும்
வந்திடுமரிட்டம் ஆண்டதுமூன்றில்
வருமக்கினி பாதையாமென்க

தொந்தரவதனல் தலபேதமாகிச்
சுகமெனச்சொல்வ ரிப்பலன்கள்
புந்தியாண்டொடுவோ ராறினில்தானே
பொருந்திய கண்டமாம் நலமே (4)

நலமெனவுரைத்தோம் தந்தையின்விர்த்தி
நாடிய சகோதர மிருவர்
குலமதில் ஜேஷ்டன் விர்த்தியொன்றுளது
குறிப்பதுநில யம்மான்வர்க்கம்
பலமதாங்குடும்ப விர்த்தியில்மூன்றுப்
பெலன்ரெண்டு மேன்மைகாண் செல்வம்
உலகினிலிவ்வாறு பலனறிந்துரைத்தல்
உண்மைகாண் ஜென்மமிப்பலனே. (5)

பலமதாம்பெண்பால் தனக்குவாலிபத்தில்
பற்றிய சுபமதைமுடிக்க
நலமாதாயெண்ணம் கொள்ளுவள்முன்னம்
நாடியகர்ம மொன்றுளது
பெலனதில்கண்டம் ஜாதகிதனக்குப்
பெருகுமீ ரேழினில் காட்டும்
நிலையில்லைசுபங்கள் தடையதாமென்று
நிகழ்த்துவாய் தரணியோர்தமக்கே. (6)

குரித்தனர்புருடன் றனக்குமேவீ தி
கூறுவர் தென்வடலாகும்
பிரித்திடுஞ்சந்து அருகினிலுண்டாம்
பின்றென்பா லாரவொன்றுளது
தரிப்படும்வடபா லதில்கீழ்மேல்வீ தி
ஜலகெங்கை வடகீழ்பாலென்க
நெரிப்படுமீனயாம் பாதியேயீனம்
நிலைபிதுர் வர்க்கமி ரண்டுளீத. (7)

சத்தமத்ததிப ரோடுநான்காதி
சார்ந்தபாக் கியாதியும்பார்வை
உத்தமமாக நின்றிடில்பலன்கள்
உருதிகாண் புருடனுர்தனக்கு
சித்தமாய்விர்த்தி சகோதரமிருவர்
சிறப்பொடு பெண்ணொன்று நிலையாம்

பத்தியாமொருவன் அன்னியதேசம்
பற்றிபெண் ணனுபவித்திருப்பன். (8)

ஜாதகிதனக்கிங்காயுள் சாற்றுமேவாம் புந்திவெள்ளி
ஆதவன்சேய்பொன்னுண்டில் அரிட்டமேயாவாள் திண்ணம்
பாதகியாகாள்தெய்வ பக்தியுமுள்ள ளாகும்
மாதவர்புகழுமோகூ மடைவளென்றுரைப்பீர்தாமே. (9)

கடக முததோரையின் பலன் முற்றிற்று.

கடக மிரண்டாமோரையின் பலன்

நண்டதிலிரண்டா மோரையிற்பா தி
நாரியார் ஜனனித்திடில் பலன்மேகள்
தொண்டர்கள்சூழுங் கட்டடம்வடபால்
சூதன்வீடருகினி லுண்டாம்
தண்டகாரன்னிய வனமதுபோல
சார்ந்திடு மேல்திசை தன்னில்
கண்டிடும்வருணன் றிசையில்மயானம்
கருதிடு மிவ்விதப் பலனே. (1)

பலனிரண்டிடத்தின் பலனதைக்கேளும்
பற்றியவிருவித்தை யுடையாள்
குலமதின்மேன்மை சுகந்தவாக்குடையாள்
குணதனம் வெற்றியுமுடையாள்
பலமுடையவள்காண் பந்துமித்திரர்கள்
பகூழுமுள்ளவள் நேத்ரம்
நிலையிருநான்கா மாண்டினி லொன்று
நிச்சயம் தெரிப்படுமென்றே. (2)

வேறு.

தெறிவதுசோதரங்கள் சிறப்பினுடொன்பதாகும்
அரிவையர் நான்கதாகு மதிலொன்று விர்த்திதாழ்வாம்
குறியிலாவாண்களோந்தில் குணக்கேடரிருவர்பின்னும்
விறகுகள்விற்றுப்பார்மேல் வேதனையடைவர்தானே. (3)

அடைந்திடு மாதர்வர்க்கம் ஐந்தாமாண்பெண் பாலொன்றும்
கடந்திடுமிருமூன்றுண்டில் கன்னியின்திசையிலுள்ள
இடர்கெங்கை யதனில்வீழ்ந்து யேகிடுமொன்றுமற்றோர்
குடையோகமுடையராகக் குவலயமதனில்வாழ்வர். (4)

வேறு.

வாழ்வுரென்றுரைத்தோம் புத்திரபாகம்
வகையுடனிருவர்க்கு சூன்யம்
காழ்வதுவாகு மீரொன்பதாண்டில்
சலத்திலோர் கண்டந்தாய்க் குளதாம்
சூழிருபதின்மேல் புகராண்டுமுழுதும்
துலத்திடு மிடம்விட்டுத் தென்மேல்
வாழ்குவாரதன்மேல் செல்வமீன்மையதாய்
வருவதுவருட மோரறுபதினளவாம். (5)

அட்டமத்திபர் கேந்திரகோணம்
அடைந்து நல்லோர்களின்பார்வை
திட்டமாயிருக்கி லன்னியின்வாயுள்
செப்புவா யெழுபத்திரண்டாம்
நட்டமொன்றில்லை ஜாதகிதனக்கு
நயமுடன் புத்திராளுபயம்
கஷ்டமாம்பெண்பா லிரண்டதிலொன்று
காலதோன் றானமாயிருப்பாள் (6)

இருப்பள்காண்புத்திர ருபயத்திலொருவன்
ஏகளைப்பிரிந் திந்திரதிசையில்
நெருப்பினையுடைய நாரியைக்கூடி
நேசமாய்வாழ்வன் பொன்னுளைப்பக்
குறிப்பதுசெல்வி ஜாதகிதனக்குக்
குருகியறிணம் ரொணமில்லை
தறிப்பதுகடின வார்த்தையுள்ளவளாம்
சாற்றுவாய்நந்திசொற்பலனே. (7)

வேறு.

நந்திசொற்கெணிதமேழான் நயமுடன்புகரோன்வீட்டில்
குந்தியிருக்கில்கேளுங் குணதிசைபுருடன்வர்க்கம்
விந்தையாமுவராகும் மேற்றிசைருத்திரன் வாசம்
இந்திரன்றிக்கில்கோவிலை யிடிந்துமேகாட்டும்பாரே. (8)

காட்டிடுமதற்குத்தென்மேல் கரியவன்தங்கைவாசம்
நாட்டிடுமைவர்பாகம் நலமுடன்வடக்குதாகும்
பாட்டுடன் கணிதஞ்செய்யும் பாவலர்மனைதெற்காகும்
ஈட்டுமிக்குறிகளுள்ள விடமாதின்மணமாமென்றே. (9)

வேறு

ஜாதகிபுருடன் நிறஞ்சிகப்புளனும்
தரணியில் மன்னவர் நேயன்
பாதகமில்லான் சத்தியவசனன்
பாவைமீததிகநட் புடையன்
ஆதவன்செவ்வா யிவர்திசையாண்டில்
அதியழகுள மணமுடிப்பர்
மாதுதன்னெட்டா மிடப்பலன்றன்னை
வறைகுவ தறிந்திடு மரசே. (10)

வேறு.

அரசேயெட்டோன் சராசி யமர்ந்துநீலன்பார்வையுறில்
திரமாம்வெய்யோன் சனிபுகரோன் செப்புமிவர்கள் திசையாண்டில்
மரணமடைவாள் சுமங்கலியாய் மன்னன்பார்க்கில் மூவைந்தில்
மரமீதிருந்து கீழ்வீழ்ந்து வருத்தமடைவாள் பின்சுகமே. (11)

வேறு.

சுகமெனும்பாக்கியப் பலனதைக்கேளும்
சுக்கிரன்பார்வை யுண்டாகில்
அகமதில்மகிழ்ச்சி மிகுசெல்வமுள்ளாள்
அழகியவாடையாபரணம்
மிகுகனம்பொருள்கள் மென்மேலும்சுகமாய்
மேதினிதனில் வாழ்வள்தந்தை
விகரவேதனக்கு மேல்பெருந்தனத்தை
மேதைகா ணடைவளென்றுரையே. (12)

மேதைபத்தாதி கூடியேதிரத்தில்
வெய்யவன் பார்த்துமே யிருக்கில்
வாதுகள்செய்யாள் கருணைமெஞ்ஞானம்
மார்பினில்மோகமே யுடையாள்
நீதிகளுடையாள் யாத்திரைபுரிவாள்
நிலையுள்ளகாரியந் தனக்கு
மாதிவள்கனத்த பொருள்செலவிடுவாள்
மறவில்லை சுகமுன்மி யெனவே. (13)

வேறு.

ஜென்மித்தஜாதகிக்குச் செல்வந்தன்புருடனாலே
பன்புடன்வந்துகூடும் பாவையர்மூலம் செல்வம்

தன்கிடாவிரையபமாகும் சயனநற் சுகமுமுள்ளாள்
அன்புடன்நந்திசொன்ன அரும்பலனிதுவாம் பாரே. (14)

கடகமிரண்டாமோரையின் பலன் முற்றிற்று..

கடகமூன்றாமோரையின் பலன்.

நள்ளிதனில் மூன்றுவதோரை பிற்பாதி
நாரியவள் ஜனனமாகிடில் பலனைக்கேளும்
கள்ளமிலாவீதியது கீழ்மேலாம்தெற்குக்
கனமான சந்தோன்றும் வடகீழ்கங்கை
தெள்ளியதோர் வடபக்கம் பாகமைந்துத்
திரமாகவாஞ்சு மாமுமுண்டாம்
உள்ளியமேற்றிசைருத்திரி கோவிலாகும்
உண்மையிது ஜனித்தமனை புற்றுண்டாமே. (1)

வேறு.

உண்டாம்பெண்பால் நிறங்கருப்பாம் உருங்கைவிரல்களாறுதாம்
கண்டாய்தேகம் உருதியுளாள் காணும்பூர்வ நிலையாகும்
மிண்டாம்செல்வம் சற்குணத்தாள் மேன்மையுள்ளாள் நிலையுள்ளாள்
தெண்டமுண்டாம் பிதாவினுக்கு ஜனனகாலமென்றுரையே. (2)

வேறு.

கடகமதுமூன்றுவ தோரைதன்னில்
கருதுங்கால் பூர்வமதுமூன்றதாகும்.
திடமுடையாள் சுகவாக்கு தீர்க்கமுள்ளாள்
செல்வமுள்ளா ளிரண்டிடத்தைச் செவ்வாய்பார்க்கில்
கடனுண்டாம் கலகமுண்டாங் குடும்பத்தன்னில்
கன்னியவள் முன்கோபமுடையோளாகும்
மடமயிலா ளுடன்கூடி மகிழ்ச்சியோடு
மானிலத்தி லரசாளுமாதாவாளே. (3)

மாதாவாளுடன்பிறந்த வர்க்கங்கேளும்
வண்மையுடன் ஆணென்று பெண்ணென்றாகும்
பிதகன்செவ்வாயிருவர் கூடிபார்க்கில்
பெருகிவருங் கனிட்டர் விர்த்திபதினென்றாகும்
பேதகமாம் பெண்ணென்று ஆணைந்தாம்
பெலனில்லை யதிலெட்டு மரித்துப்போகும்

ஜாதகநல் வீரியமுங் காரியமுளாள்
தைரியசல்லாபமுள்ளாள் சாற்றுவாயே. (4)
சாற்றக்கேள் நான்காதி சரமாய் நான்கில்
சவுரியுடன் கூடிகுசன் தசமமேறில்
தோற்றக்கேள் தாய்மனைக்கு தென்பால்சந்து
சூரனுர்திசை நத்திர பூமியாகும்
போற்றுவார் வடபக்கம் பிரிவுமூன்று
பொல்லாததுஷ்டர் மனையெதிரேதோன்றும்
தேற்றியபூர் வீகமது வொன்றேயாகும்
செப்பரிய கனமனையாம் முகப்புதெற்கே. (5)

வேறு.

தெற்கதுமனையில் கேணியிரண்டுளது
செல்வமா மாதுரு வர்க்கம்
சற்குணமுள்ளாள் கல்வியிற் தேர்ச்சி
சாற்றுவர ராண்கமே யுண்டாம்
வர்க்கமூன்றுளது ஏழைந்தில் கண்டம்
வந்துபின்நிவர்த்தி தாய்தீர்க்கம்
தர்க்கமுள்ளவள்பொன் ஜனபந்து வுடையாள்
சாற்றும்வா கனமுமுள்ளவளே. (6)
புத்திராளிருவர் பெருந்தன முள்ளோர்
புவியெலா புகழதிகாரம்
ரத்தினபரண முடன்சுகமுடையோர்
நாரியர்தனக்குப் பெண்பால்கள்
மத்திபமூன்று வற்பவமிரண்டு
மத்திபமரண மற்றொன்று
புத்திரனின்றி அமங்கலியாகிப்
புவியினி லிரந்துண்பள்தானே. (7)
ஆறினில்ரோக முண்டுகா ணுருன்
ஆசூி யுச்சங்களாய் சுபர்கள்
பார்வையாய்க் கூடில் ரொணமதையில்லை
பாலனேகலகங்க ளில்லாள்
காரியேழிடத்தோன் கருமத்தில்நீச்சம்
கவியுச்சமாக நான்கிடத்தில்
ஆறிரண்டாண்டில் மணமுடிந்திடுங்கா
ணம்புலி திசைதனி லென்னே. (8)

வேறு.

எட்டினில்மதியும் பாவரிருந்திட சனியுங்கூடித்
திட்டமாம் குருவும்பார்க்க செப்புவாயிருபத்தாறில்
வட்டவென்ணன்குளட்டு வருமிவ்வாண் டதனிற்கண்டம்
முட்டவே னேழிவ்வாண்டில் முடிவதுதிண்ணந்தானே (9)

வேறு.

பாக்கியத்ததிபர் சரமுபயத்தில்
பரிவுட னிற்க சுங்கன்பார்க்க
தாக்கியதந்தை வர்க்கமூன்றுளது
தலமதுபூர்வந் தென்மேற்காம்
போக்கியே வடபான் திசைநிலையுளனுய்
பூமிபொன் மனைதனமிகுதி
பாக்கிய மென்மேலாம் கன்னியனித்தப்
பார்தனக் கரசனும்பகரே. (10)

வேறு.

குறியிதுவாம்பத்தாதி, பலனைக்கேளும்
குவலயத்தில் வியர்பாரமூலத்தாலும்
நெறியுடையாள் கிருஷிமூலத்தினுலும்
நிலையில்லா பொருள்படைப்பள், கருணையுள்ளாள்
பிரியமுடன் சுபகர்மவிரையஞ் செய்வள்
பூமிவையிவள் சாஸ்திர கேள்விகளுமுள்ளாள்
பரிவுடனேசுகபோகம் சயனசுகமுள்ளாள்
பத்தாவின் சொற்றவிராள் பதவியடைகுவளே. (11)

கடக மூன்றுமோரையின் பலன்
மூற்றிற்று.

கடக நான்கா மோரையின் பலன்.

தேரவன்நான்கா மோரைபிற்பாதி
தெரிவையர் ஜெனித்திடில்வீதி
கூரிடும்கீழ்மேல் வடமுகப்புளது
குணதிசை பாகமோ ரைந்தாம்
சீர்திசைவீம்சம் காஸ்தியுமாகும்
தெரிவையர் பாகமிரண்டுளதாம்

கார்நிறமாலின் ஆலயம் கிழக்காம்
கண்டுரைத்திடும் மிந்தவிதமே. (1)

வேறு.

காரிகைஜெனித்தவீடு கருதுவாய்பழைமையாகும்
கூரிடும்மனையில்கங்கை குப்பையும்முருங்கைமேற்காம்
சீரியதந்தைவர்க்கம் செப்புவாயிருமூன்றுகும்.
பேர்பெறஅதனிலேகன் பெலமில்லாரோகியாமே. (2)

தந்தையின்கனிட்டர்மெத்த தைரியர் அரசர்மூலம்
விந்தையாய்செல்வமேலாம் மிகுவிர்த்தியுடையோராகும்
சுந்தரிதனக்குமூத்தோர் சொல்லுவாய் ஆண்கள்மூன்று
சந்திரவதனமுள்ளத் தையலரிருவராமே. (3)

வேறு.

பாகுள்ளமாது ஜெனித்தநாள் முதலாய்
பாக்கியக் குறைவுறும் தாய்க்கு
சோகமாம்வியாதிப் பீடிதமுண்டாய்
சுகந்தப்பிச் சஞ்சலமடைவாள்
தாகமாந்திங்க ளொன்பதில்ஜெனித்த
ஜாதகிஅம்மையால் தானும்
வேகமாய்அரிட்ட மாகிடுமென்று
விளம்பினர் நந்திநற்றேவே (4)

கடகம்நான் காமோரையின் பலன் முற்றிற்று.

ஆகசெய்யுள் மொத்தம் 38

சிங்க முதலோரையின் பலன்.

சிங்கமெனும் ராசிமுத லோரைப்பிற்பாதி
ஜெனித்த கன்னிகைகளின் பலனேகளும்
பங்கமிலாமேல்முகப்பு யெதிரில்கூரை
பல்மானகட்டடமாம் ஜெனித்தவீடு
திங்கள்திசை தனிலோடை தோப்புமுண்டு
சேய்திசையில் வீதியதுபிரிவுமூன்றும்
மங்கலமாம் எதிர்வீட்டில் பாகம் நாங்கு
மாமரமும் அருகிலுண்டா மறிந்துக்கோள்ளே (1)

வேறு.

சொல்வதுநாரிநிறஞ் சமனுகும்
சுகமுள்ளாள் சிரசில்நோயுடையாள்
வெல்வதுபூர்வம் நாஸ்தியாம் தந்தை
விளம்புவாய் சுயார்ச்சியமுளனும்
கல்நெஞ்சு வுடையாள் சிந்தையில்பேதம்
கடினவாக் குடையவளாகும்
அல்லலொன்றில்லை நான்காருமாண்டி
லரும்விழி பின்னமென்றுரையே. (2)

உரைப்பதுமூன்றின் பலனெவ்வாறென்னி
லுறுஞ்சுகோ தரங்களோ ரேழாம்
குறைவதுமூன்று அபஸ்தி யடையும்
குணமில்லை பெண்ணதிலொன்று
நிரைபடுஞ்செல்வம் அதிகாமியளாய்
நிலைதவிர் பலருடன் சேர்வள்
மறையவர்தமக்கு மோகத்தா லவர்க்கு
வரும்பொரு ளழிப்பளென்றுரைக்கும். (3)

அழிப்பளென்றுரைத்தீர் அன்னையின்வர்க்கம்
அடியெனுக் குரைத்திடும்குருவே
செழிப்புள்ளவர்க்கம் திருதியமாகும்
செல்வர்க ளதிலிரண் டுளதாம்
பிழையில்லையன்னை தந்தையின்வர்க்கம்
பெலவீனம் சுகமில்லைநாசம்
தழைப்பதேயில்லை கஷ்டஜீவனமாஞ்
சாற்றுவாய்ப் படிமிசையரசே (4)

வேறு.

ஐந்தவன்சரமாய் ஏகனுய்நின்று
அந்தணன்பார் வையுண்டாகில்
வந்திடும்புத்திராள் வாலிபமதனில்
வரும்நில்லை யிரன்டெனலாகும்
சந்ததிதனக்கும் பேதமுண்டாகும்
தையலா ளில்லையென் றுரைக்கும்
சுந்தரிதனக்குத் திருதியகெர்ப்பம்
சுக்கிலமது தனில்பாழ் (5)

வேறு.

ஆறுதிபலன்கேளாண்டு அருமூன்றுநாலைந்தாறு
வேராகும்குடும்பம்விட்டு மெய்தனில்ரோகமுண்டாம்
தூராகும்தனங்கள்நாசம் தொல்லைகள்மிகவுண்டாகும்
சீராகும்நாற்பத்தைந்தில் செழித்திடும்பலன்கள்தானே. (6)

வேறு.

ஏழாதிசமாய் நான்கினுக் குடையோ
னிவருடன் மாலவன் கூடில்
தாழ்விலாபுருடன் கருநிறங்கிழவன்
சசிதிசை யேழையாங் குடும்பம்
வாழ்வதுபெருகும் ஜாதகிதனக்கு
மணமது முடிந்தநாள்முதலாய்
பாழதிலில்லை பூமிவிர்த்தியுமாம்
பலனிவ்வா றென்றுரைத் திடுமே. (7)

வேறு.

காதலன்வர்க்கங்கேளுங் கடினமாமுபயமாகும்
பாதகமுள்ளோராவர் பலதொழில்புரிவார்பெண்பால்
வாதிகளாகும்பின்னும் மாரகம்பதினெட்டாண்டில்
போதவேயிவ்வாறென்று புகழ்வதுநிசமிதாமே. (8)

வேறு.

விரும்புமெட்டாமாதிபதி மேவிசரமாய்விரையமதில்
வருமூன்றான்கு மூவொன்பான் வாநமோர்கண்டம் சுரநோய்காண்
திரும்புமிருபத் தொன்பதனில் ஜலத்தால்கண்டம் பின்பொன்பான்
குருதிமாலின் திசையாண்டில் கூறுமரணந் திண்ணமிதே. (9)

வேறு.

பாக்கியபலன்கேள் மால்திசையாண்டில்
பகருவாய்தந்தை துன்மரணம்
போக்கியவர்க்க மிரண்டென வுரைக்கும்
பெலமில்லை யாதீன மிரண்டாம்
பாக்கியம்பெருகும் நவமணியுடையாள்
பலர்தமக்குதவியு மாவாள்
நீக்கியகனிட்ட தந்தையுமொருவன்
நிலையிலா வாழ்வெனவுரையே. (10)

வேறு.

பலமுடனேபத்தாதி பலனைக்கேளும்
பற்றிய ஜீவனமறிதல் வியாபாரத்தால்
நிலபேதமுள தொழிலும் விர்த்தியுண்டாம்
நிலையுள்ளாள் குணமுள்ளாள் நிதியுமுள்ளாள்
கலைமதிபோல் தனவளர்ச்சி யுடையோளாகும்
கண்டிடுவாய் லாபம்வருந் திசைவடக்கேயாகும்
நலமில்லை வார்த்தீப காலந்தன்னில்
நாரியிவள் பலதுன்ப மடைவாள்காணே (11)

வேறு.

மதிசரமாகவந்து மாலவன் பார்வையாகில்
நிதியெலா மாசர்மூலம் நிகழ்த்துவாய் விரயமுண்டாம்
சுதன்தன்னுல் பகுதிதீங்கும் சொல்லிடும் மனம்வெருப்பாய்
விதியிதாந் தூக்குதன்னுல் விளம்புவாய் மரணந்தானே (12)

சிம்மமுதலோரை பலன் முற்றிற்று.

சிம்ம மிரண்டாமோரையின் பலன்.

அரிதனிலிரண்டா மோரை பிற்பாதி
அரிவையர் ஜனிக்கில் மேல்முகப்பு
தெரிவது பலத்த வீதிதென்வடலாம்
செப்புவா யெதிர்மனைப்பாழாம்
பரவியஆர லருகில்சந்துண்டாம்
பக்கத்தி லிருபுற மரமாம்
பிரிவதுயிரண்டாம் ஆராவதில்லம்
பேசுவ ரிவ்விதபலனே. (1)

கனத்திடுந்திரேக காந்தியுமுடையாள்
காணுவாய் ரூபமே சமனும்
இனத்தில் துன்மரணம் ஜனனகாலத்தில்
இருப்பது அன்னியர் நிலையாம்
மனத்தினில் நல்லாள் மெல்லிய திரேகி
வாக்குநல் வித்தையு முடையாள்
சினத்தினில் கொடியாள் சகோதரவர்க்கம்
செப்புவ தரிந்திடா யரசே. (2)

நீடியமூன்று மாதியின் பலன்கேள்
நிலைசகோதரமது மூன்றும்
ஓடிடுமொன்று விர்த்தியி லிரண்டு
உணர்வது பெண்ணிலை யென்பர்
நாடியசம்பத் துடையவளாகும்
நலமுள்ளாள் பதிவிரதையுமாம்
கூடியமதியும் பார்வையதாகில்
குணமிகுங் காமியாகுவளே. (3)

நான்காதிபலன்கேள் நன்மனையுண்டாம்
நாரிதான் கனதன முள்ளாள்
பங்குடன் பந்து ஜனம் புகழ்வாழ்வள்
பரவிய அன்னையின் பிறப்புத்
தீங்கதாம் வர்க்கம் தோஷமே யுண்டாம்
செப்புவா யேகனு, மம்மான்
மான்றலிகொண்ட திசைவருடத்தில்
மரணமா மாமனுந்தானே. (4)

குறைந்திடுமன்னை தந்தையின் வர்க்கம்
குணமில்லை திருதியமாகும்
மறைந்திடுமிருவர் சந்ததிபேதம்
மன்னையின் மனைகிழமுகப்பு
நிறைந்திடுந்தென்மே லாலயமிகுதி
நிலைமுப்ப தைந்தினுக் கப்பால்
சறிந்திடு மாயுள் மாதருக்கென்றே
சாற்றுவர் நந்திநற்றேவே. (5)

வேறு.

ஐந்திடப்பலன்கேள் புத்திராள் அறுவராம் பெண்பால்மூன்று
முந்திய திரண்டும்போகும் முற்றிலு மிரண்டேதீர்க்கம்
சந்ததி தனக்குபேதம் தனமற்ற புதல்வனென்று
சுந்தரநந்திதானும் சொல்லிய பலனிதாமே. (6)

வேறு.

கருதியவாறுன் பலனெவ்வா றென்னில்
கணவனுல் பிணியது வுண்டாம்
குருதியாறிடத்தை பார்த்திடில் வயிற்றில்
கொடிய ரோகங்களு மூடையாள்

வருமதுதன்னுல் தனவிரையங்கள்
மார்பினில் ரோகமுப் பதனில்
பிரிவது முப்பத் தைந்தினில் ருணத்தால்
பெரும்பொருள் விரையம் சஞ்சலமே. (7)
சஞ்சலமில்லை யேழாதிபலன்கேள்
ஜாதகி புருடன் வாலிபனும்
வஞ்சகமில்லான் அழகில்மன் மதன்காண்
மணமெத்தை கூடமோ கபரமாம்
கொஞ்சிடும் பெண்க ளனேகரைச் சேர்வன்
குணந்தனம் கனமுளனு தும்
தஞ்சமாம் பூர்வ நிதிவிர்த்தி யுளனும்
சகோதரம் நான்கென சாற்றும் (8)
சாற்றியவடகீழ் திசையது வாகும்
சலசரம் திசையில்நீ ரோடை
போற்றிய கிழக்கு முகப்பெனலாகும்
பூணியின் திசையில் பாழ்கிணராம்
ஏற்றமீதிருந்து விழுந்துகை யொடிந்த
விடும்பனு மெதிர்மனைக் குடையோன்
போற்றியதிவ்வாறு நிலைதனில் வாழும்
புண்ணிய வதியென புகலும். (9)
பொருந்தியதெட்டா மாதியின் பலன்கேள்
புலவன்பொன் னட்டம்த் திருக்கில்
வருந்துபத் தாண்டி லக்கினியம்மை
வந்துடன் நிவர்த்தியா மென்க
திருந்தியநாற்பத் தாறினில் ஜாரமாய்
சித்திரை திங்கள்நா ளதனில்
கருந்து தன்கணவன் றனக்குமுன்னுகக்
காலனூர் சேர்வ ளென் றுரையே (10)

வேறு.

சொன்ன பிதுர்வர்க்காதி யைவராகும்
துலக்கமில்லை சஞ்சரிபர் பலதசங்கள்
நன்னயமாந் தந்தைசுயார்ச் சிதனுய்மிக்க
நன்மனத்த னுகசுக மடைவான்பாரு
கன்னல்மொழி ஜாதகிபத் திடத்தால் மெத்தக்
கருணையுளாள் தொழிலிரண்டு பிரிவாம்செல்வி

சொன்னமொழி பிசகாள்காண் மிகுந்தரூபி
சுகமுள்ளாள் கணவன்றன் மொழிதப்பாளே. (11)
தப்பாதுலாபத்தின் பலனைக்கேளுந்
தனலாபம் வருந்திசைக்கீழ் வடக்கதாகும்
ஒப்பரிய கிருஷ்ணி மூலத்தினிலுமும்
உயர்ச்சிபெறு மித்திரர்களாலு முண்டாம்லாபம்
செப்பரிய விரையாதி பலன்கள் பார்க்கில்
செகம்புகழுங் கட்டடவிர்த் திகளுமுண்டாம்
தப்பாம லிப்பலன்க ளடைவாரென்றுஞ்
சாற்றிடுவாய் ஜாதகின் தன்மையாமே. (12)
சிம்மமிரண்டாமோரைப்பலன் முற்றிற்று.

சிம்ம மூன்று மோரையின் பலன்.

உற்றதோர்சிம்ம மூன்றுவீதாரை
உதிக்கப் பிற்பாதியின் பலன்கள்
நற்றவத்தாலே ஜெனித்த ஜாதகியர்ம்
ஞாயிறுதிசை முகப்பாகும்
பெற்றிடுமேற்கு சிவன்கோவிலாகும்
பெலமுள்ள ஆறதுவடக்காம்
சித்தர்கள் கோவில் தென்மேற்காங் குன்று
சிறந்திடு மென்றுரைத்திடுமே. (1)
உரைத்திடும்பெண்பால் ஜெனித்திடம் பாழாம்
உற்றதோ ரன்னியர் மனையாம்
குரித்திடுந்தந்தை வர்க்கங்க ளெட்டாம்
குணமதி லிரண்டென வோதும்
மரித்திடும் நான்கு மற்றதுதேச
மாரிடும் தாய்பிணி யுடையாள்
வருத்தமாய்ஜெனித்த ஜாதகியென்று
வழுத்துவர் நிறஞ்செம்மையாமே. (2)

வேறு.

ஆகுமே பரிகூஷித்தா மகிபாகேளும்
அன்னைவர்க்க மைந்தாகு மதில்பெண் மூன்று
பாகுடனே ஆணிரண்டி லொன்றுவிர்த்தி
பெலமில்லை பெண்ணிரண்டு செல்வமில்லை

சேகமுடன் ஜாதகிக்கு முன்னுன் மூன்று
தீர்க்கமுண்டாம் பின்னிரண்டு ஜனிக்கும்பாரு
நாகமதுதீண்டிவிடும் குடும்பந்தன்னில்
நாயகியால் ஜனனகாலத்திலென்னே. (3)

வேறு.

காலமாம்பெண்பால் ஜனனகாலத்தில்
காட்டிடுங் குடும்பத்தில் சோரம்
சீலமாயுதித்த மடந்தையுமிரவி
திசை மாதங்கண் முதலாக
கோலமாய்ஜல ரோகத்தினுல் கண்டம்
கொன்றிடு மாதமொன்பதனில்
ஆலமுண்டவனு ராலயங்கிழக்கு
அமர்ந்திடுங் குரியிதுவாமே. (4)

சிம்ம மூன்று மோரைபலன் முற்றிற்று.

சிங்க நான்கா மோரைபின் பலன்

தீரமாம்புலி நான்கா மோரைதன்னில்
ஜனித்திடுவள் பிற்பாதி பலனைக்கேளும்
பூர்வமாம் ஜனித்தவிடம் விர்த்தியில்லை
பூந்தோட்ட மருகிலுண்டாம் தெற்குவாசல்
சீருடனேவாழுமனை யருகிலுண்டாம்
தேசமாள் மன்னர்மனை தெற்கேயுண்டாம்
ஆறுண்டாம் திசைமேற்கில் வனமேயாகும்
ஆதித்தன் திசைகெங்கை பாட்டையாமே, (1)
பாட்டையாம் ஜாதகியும் கொற்ப்பகாலம்
பாட்டனுக் கரிட்டம்வரும் குடும்பமேபதம்
தோட்டமதில் களவுபோம் பெண்பால்மாலை
தோன்றியே ஜனிக்கு கைவிரம்களாறு
வாட்டமில்லை நிரங்கருப்புக் குரியரூபம்
மாமயிலாள் தலைசோமம் சுருண்டரூபி
தாட்டிக மூள்ளவளாகும் பொருமையுள்ளாள்
சாற்றிடுவோமினிலாண்டின் பலனைத்தானே. (2)
பலமுடனே மூன்றுதிப் பலனைக்கேளும்
பற்றிய கேந்திரகோணம் பலமாய்நிற்க

நலமுதினே நல்லோருங் கூடநோக்க
நாரியுடன் பிறந்தோர்க ளீரெட்டாகும்
தலைமையுளோர் பெண்மூன்று ஆண்பால்மூன்று
சாற்றிடுவாய் மற்றதெல்லாமரணமாகும்
குலமதனில் நாரியிவள் மேன்மைபெற்றுக்
குவலயமெலாந்துதிக் கவாழ்வள்பாரே. (3)

வாழ்குவாள்வீரிய விர்த்தியு மூண்டாம்
மகத்தான கர்ணபூஷணமு மூண்டாம்
தாழ்வில்லே யன்னைவர்க்கம் நவமேமயாகும்
தன்மையுடன் பெண்மூன்று ஆண்பாலாறு
பாழாகும் மத்திபத்தில் ஆண்பால்ரெண்டு
பலனில்லே சந்ததி பேதங்களாகும்
சூழிருபத்தேழாண்டி லன்னைதானும்
சுரமேநாயா லரிட்டமெனச் செல்வார்தாமே. (4)

சொல்வதுமேகள் ஜாதகியோ யூகசாலி
சுகபுத்திர ஜனனமீ ரெட்டிலுண்டாம்
வெல்வதுபுத்திரசங்கை யொன்பதாகும்
மேதினியில் நிலைப்பதுவு மூன்றேயாகும்
மெல்லியபெண் பாலில்லே கனிட்டபுத்திரன்
மிகதுஷ்டன் அரசர்களால் குற்றமாவாள்
புல்லியமற்றிருவர்களால் மேன்மைபெற்று
பூதலத்தில் சுகித்திருப்பள் புகலுவாயே. (5)

மேவறு.

உற்றிடுமாருமாதி உகந்துநட் பாட்சியுச்சம்
பெற்றுமே யிருக்கில்ரோகம் பெலமில்லே உந்திதன்னில்
சற்றுமேபுண்டாம் குய்யந் தன்னிலும் ரோகமுண்டாய்
மத்திமகாலந்தன்னில் மறைந்திடுமெனச்சொல்வாயே. (6)

வருவதுமியமாதி வருஞ்சசி தனக்கேழுள்ளோர்
பெருகியகேந்திரகோணம் பெற்றிடிலீரேழாண்டில்
நிருதியின் திசைதூரத்தில் நேர்ந்திடு மணங்களென்று
உருதியாய் முடியுமென்று உரைத்தனர் நந்திதானே. (7)

புருடனுமிளமையாகும் புத்திசா துரியனுகும்
அருமையார்ந் தவத்துதித்த அழகுகாமியனேயாகும்
தெரிவையர் லோலனுகும் தெய்வபக் தியனுமாகும்
குருகியசமனும்ரூபம் குறித்திடு மிவ்வாறுதாமே. (8)

சொல்வதுயின்னங்கேளும் சூட்சமா மின்னூல்தானும்
வெல்லது புருடன்வர்க்கம் விளங்குவ தாறேயாகும்
கல்லிநற்குழலாள் மூவர் கணிதமாம் விர்த்தியொன்று
பல்லதில் ரோகம் நாற்பான் பற்றிடும் குணங்காண்பின்னே. (9)

வேறு.

சிறந்திடும் மட்டமாதியின் பலன்கேள்
தீர்க்கமாம் வயதுமூவைந்தில்
நிறைந்திடும்ரோகம் நிவர்த்திபின் ஞென்பான்
நீரினுல் கண்ட மொன்றுளதாம்
பிறந்தபுத்திரனுல் பாக்கிய விர்த்திப்
பிரபலமாம் தந்தையேகன்
குறைந்திடாச் செல்வம் பெற்றுமேயிருப்பன்
கூறிடும் தந்தைநற் பலனே. (10)

பத்தாதி பலன்கேள் விர்த்திபூமியினுல்
பாக்கியம் பசுகன்றுகாலி
கித்தியாம் தெய்வ பக்தியுமுள்ள
சிறுமிகள் நட்பிணையுடையாள்
உத்தமகுணத்தி கற்புடையவளாம்
உதரநோய் கிஞ்சித்து வுடையாள்
அத்தனு ருளால் சித்தம்வைத்துரைத்த
அரும்பல னிதுவெனலாமே. (11)

லாபாதி பலன்கேள் நாரியர்த மக்கு
நவிலுமேவாம் பூமிவிர்த்தியினுல்
கோபுயல்திசை யில் விர்த்தியாம்லாபம்
கொடுத்திடும் நிறைந்த பாக்கியங்கள்
கூபத்தின்மூலம் சிலபொருள் விரையம்
குணமுடன் கட்டடமூலம்
பாபஞ்செய்யாள்காண் நாற்பதமடைவாள்
பகருவீர் புவியினோர் தமக்கே. (12)

சிம்மம் நான்காமோரைபலன் முற்றிற்று.

சிம்மம் நான்காரைக்குச் செய்யுள் 40.
முன்லக்கினம் 1-க்கு செய்யுள் 38. ஆக மொத்தம் 78.

சிம்மலக்கினபலன் முற்றிற்று.

கன்னிமுதலோரையின் பலன்.

கன்னிமுதலோரையின் பிற்பாதிதன்னில்
காரிகையா ளுதித்திடுவள் கீழ்மேல்வீதி
உன்னிதமாங் கீழ்முகப்பு எதிரில்மேடை
உயர்ச்சியுள்ள மாமொன்று மனையில் தோன்றும்
நன்னயமாந் தென்மேற்கு ருத்திரபூமி
நாடாளுமன்னர்மனை வடக்கதாகும்
கன்னியவள் ஜனித்தமனை புதியதாகும்
கண்டிடுவா யன்னைமனைக் கருதுவாயே. (1)

கருதுவாய் ஜாதகியின் நிறமோசெம்மை
கருங்கொடிதான் சுற்றிவரும் நெடியரூபம்
தெரியவே இருப்பிடத்தில் பருவொன்றாகும்
தேகமது வருதியுள்ளாள் செல்வமுள்ளாள்
அரியவே பிதுரா தனங்களுண்டாம்
அதிமதுர மானசுக வாக்குள்ளாள்காண்
உரியவேகுடும்பத்திற் குரியளாவள்
*உசனன் நிற்கும் நிலைகண்டு வுரைப்பீர்தானே. (2)

வேறு. கண்டுரைத்திடுதல் சகோதரப் பலன்கள்

கணிதமாம் நாலிரண்டாகும்
உண்டதில் மூன்று வீர்த்தியாம் பெண்ணில்
ஒதிடுமிரண் டெனலாகும்
நண்டதில்கனிட்டன் ஏகனுய்தனித்து
நாரியர் சுகமடைந் திருப்பன்
கொண்டபூர்வீகம் விட்டு மன்னிலையில்
குடியனு யிருந்துயர் மாய்வன். (3)

சிறந்தநான்காதி யுடன் குருகூடி
திருஷ்டியாய் கேந்திர கோணம்
வருந்திடா திருக்கில் நன்மனையுண்டாம்
வர்க்கமொன்பதில் பெண்களைந்து
திருந்தியவம்மா னிருவர்கள் வீர்த்தி
சிறப்பில்லை மற்றவ ரபமாம்
பெருந்தனமுள்ளா ளிருவித்தையுடையாள்
பெலமுள்ள ரோகியா மென்னே. (4)

* உசனன் - சுக்கிரன்.

என்னவேவய துமுப்பத்தொன் பதனில்
எடுத்திடுந் தாய்க்குமே யரிட்டம்
உன்னிய வைந்தா மாதியின் பலன்கள்
உரைத்திடும் மந்திய புத்ராள்
நன்னயம்பெண்பால் மூன்றெனலாகும்
நலமுடன் புத்திர னொன்றும்
அன்னியரோடு சேர்ந்தொரு பெண்பால்
அகன்றிடு மணையைவிட்டரசே. (5)

வேறு

அரசேஆரோன் சரதிரமா யமர்ந்தா றெட்டோர் பார்வையுற
சிரசில்ரோகந் தானுண்டாம் செப்பும் சத்துருஸ்தானமதாம்
அரசர்நட்புபேதகமா யதனுல்பொருள்கள் சோரமுண்டாம்
வருமேயிவ்வாறு பலனென்று வலுத்தும் கோள்கள் நிலையறிந்தே. (6)

வேறு.

காணவேயேழாதி பலனைக்கேளும்
கருத்துடனே கேந்திரமா யுபயத்தன்னில்
பூணவேநின்றிடிலோ புருடன்திக்குப்
புகலுவாரிந்திரனுர் திசையேயாகும்
தோணவே பொன்னிறமா மிகுந்தரூபன்
சுகமுள்ளான் வர்க்காதி ஓவராகும்
நாணயமுள்ள வன்வயது வீரேழாண்டில்
நாரியர்க்கு மணமுடியும் நலமாய்தானே. (7)

வேறு.

நலமுடன்புருடன் சமோதரவர்க்கம்
நவிலுவோம் பன்னிரண்டாகும்
பெலமுள்ளபெண்டால் மூன்றெனலாகும்
பிசகில்லை தீர்க்கமா னிரண்டாம்
தலமதிலொருபெண் விதவையுமாகித்
தயங்கியே மனிதனி லிருட்டாள்
நிலவுபொன்னிரவி சேய்திசை யாண்டில்
நிலைதப்பி கணவன் மாள்குவனே. (8)

இயம்பெரு மெட்டாமா தியின்பலன்க
ளியப்புவோம் நான்கி லக்கினியால்
பயம்பெரு முந்நான் கினில் விஷத்தாலே
பலமுள்ள கண்ட மொன்றுளது

தியம்பெர மிருபத் தேழிலோர் கண்டம்
செப்புவா யருபத்தொன் பதனில்
கயம்பெரவஷ்ண ரோகத்தா லரிட்டம்
கண்டுரைத்திடுவர் பெண்தலைக்கே (9)

வேறு.

கருதியதந்தைவர்க்கம் கலிமதிதிசையிற்பாதி
மருவியதந்தையேகன் மற்றுது நாஸ்த்தியாகும்
பெருகியசெல்வமாகும் பெலமுள்ளோர் தமக்குவஞ்சான்
குருகியரூபனுகும் குணந்தந்தை பலனிதாமே. (10)

வேறு.

அறமிகும்பத்தா மர்தியின் பலன்கள்
அறிவது புந்தியின் தொழிலால்
நிறைந்திடும் பொருள்கள் மன்னர்கள் மகிழ்ச்சி
நிலையோக மூடையவளாகும்
குறைந்திடாச் செல்வம் புண்ணியவதியாம்
குடதிசை தனில்செல்வ முள்ளாள்
கறைந்திடாதென்கீழ் திசைதனி லிருந்துங்
கனபொருள் சேருமென்றுரையே. (11)

வேறு.

வரமிகும்பனிரண்டா தி மதியுடன் கேந்திரகோணம்
திரமுடனிருக்க வீடு செப்புவா யைந்தேயாகும்
உரமிகும் பாவர்கூடில் உள்ளநாள் வழக்குத்தன்னால்
பெரும்பொருள் விரையமென்று பேசுவாய்நந்திவாக்கே. (12)

கன்னி முதலாமோரை முற்றிற்று.

கன்னியிரண்டா மோரையின் பலன்.

மாதுதனிலிரண்டாவ தோரை பிற்பாதி
மங்கையர்கள் ஜனனமா கிடிலோகேளும்
வீதியதுதென்வடலாந் தெர்க்குவாசல்
மேல்திசையில் கிணரிரண்டி லொன்றுபாழால்
நீதியுள்ளமன்னர்மனை யருகிலுண்டாம்
நீரோடுங் கால்வாய்கீழ் திசையிலுண்டாம்.
பாதிமனைபிரிந்திருக்கும் ஜனித்தவீடு
பாழ்வீடு அக்கினியின் திசையிலென்னே. (1)

மடந்தையவள் ஜனித்த காலத்தில் தந்தை
மகரகும்பந் திசைநோக்கிச் சென்றுனென்க
திடமான தந்தைசகோதரங்கள் நான்காம்
திரமில்லை ஆதீன பேதமுண்டாம்
மடமயிலா ளுபயமதி லொன்று விர்த்தி
மங்கையிவள் முன்பிறந்தோ ரேழதாகும்
கொடியவராம் பாட்டன்மார் மூன்றதாகும்
குறித்திடுமிவ் விதம்பாரில் குணமாய்தானே. (2)

வேறு.

பாரினிலன்னைவர்க்கம் பரிவுடனிரண்ட தாகும்
தேரியமாமனைகன் திரமுனன் விர்த்தியுண்டாம்
கூரியவன்னைதந்தை கொடுமையாம் வர்க்கமேழு
சீரியதெல்லாநாசஞ் சிறந்தவை யிரண்டாஞ்செப்பே. (3)
செப்புவாய்மாதாவுக்குத் திரமில்லை ரோகதேகம்
கப்பியஜனித்தபெண்பால் கவிதிசை மாதந்தன்னில்
ஒப்பியமிருகத்தாலே ஊனமாம் காயம்பட்டு
தப்பியே போகுமென்று சாற்றுவாய் திண்ணந்தானே.

கன்னியிரண்டா மோரை பலன் முற்றிற்று.

கன்னி மூன்றுமோரையின் பலன்.

கன்னியில்மூன்றுமோரை கருதும்பிற்பாதிதன்னில்
நன்னயமாகவந்த நாரியர்க்கிழ்மேல்வீதி
உன்னியமுகப்புதெற்கு வுறுதிகாணைதிரில்சந்து
பன்னியகங்கைகோவில் பகர்ந்திடும்வடக்கில்தானே. (1)
இருபக்கமனையும்பாழாம் எதிரினிலாரலுண்டாம்.
உருதிகாண்பிறந்தவீடு வுரைத்திடும்சிறப்பொன்றில்லை
குருதியின்பார்வையாகில் குமரியும்சிகப்பதாகும்
நிருதியின்திசையில்வீட்டில் நிகழ்த்துவாய் கிணறுபாழே. (2)

வேறு.

ஓதியபெண்பால் ஸ்தூலதேகியுமாம்
உரைத்திடுஞ் சோரமுள்ளவள்காண்
நீதியில்லாள்காண் தரித்திரமுடையாள்
நிகழ்த்துவாய் புருஷனையடிப்பாள்

காதினில்மருவு கடினவாக் குள்ளாள்
கண்டிடும் குடும்பத்தில் கலகி
சேதிதுசெல்வ மத்திபப்பலனும்
செப்புவாய் பெண்களிள் பலனே. (3)

வந்தமூன்றிடத்தின் சோதரப்பலன்கள்
வகுத்திடும் நான்கதி லிரண்டு
முந்தியதாகும் பிந்திய திரண்டில்
முற்றிலு மபவிர்த்தி யடையும்
சுந்தரியதிகக் காமியாம் பலரைச்
சுகம்பெறக்கூடியே யணைவாள்
அந்தமாம்வயதோ ரைந்தினில் ஜூஷ்டன்
அன்னிய தேசமாகுவலென்னே. (4)

பாலனேகேளாய் அன்னையின் பலன்கள்
பகருவோம் அம்மான்கள் மூவர்
கோலமொன் றன்னியத் தென்வடல்வீதி
குறித்திடும் முன்பூர்வ மிரண்டாம்
சீலமாயன்னை தந்தையின் தந்தை
சிறப்புடு நான்கென் வோதும்
வாலிபந்தன்னி லன்னையின்சவிகள்
மத்திபமாகுமென் றுரையே. (5)

உரைத்தநான்காண்டில் மிருகத்தால்யமாம்
உற்றதோரிருபத்தி னிரண்டில்
விரித்திடுங்கண்டம் நாற்பதிலன்னை
விளம்புவா யிடியினால் மரணம்
குரித்தஜாதகியாள் தனக்குமேசுகங்கள்
குறைவதாம் வாகனவீனம்
சிரித்திடுங்குலங்கள் வயதுநாற் பதின்மேல்
சிறக்கவே வாழ்வலென் றுரையே. (6)

ஐந்திடப்பலன்கேள் புத்திரபாகம்
ஆன்கலேயில்லை பெண்ணிரண்டாம்
முந்தியகெர்ப்ப மிரண்டதாஞ் சனனம்
முதல்பிறந்தது வுடன்மரணம்
சிந்தையில் பேதம் சந்ததிகவலை
சிறப்பில்லை பெண்ணதிலொன்று

குந்திபோனேகே ளவமங்கலியாகிக்
கொடுமையாய் வாழ்வளென்பதுவே. (7)

வேறு.

நாடியவாருமாதி நல்லவர் பார்வையாகில்
கூடியசத்ருஞசங் கோடியரோகங்களில்லை
நீடியபாவக்கோள்கள் நின்றிடப்பார்வையாகில்
வாடியேபோகத்தாலே மங்கையுந் துடிப்பாள்காணே. (8)

வேறு.

துணிவதாமேழா மிடப்பலன் றன்னை
சோதித்துப் பார்க்கிலோ புருடன்
பிணியுளனுரும் வித்தைபுத்தியிலான்
பேதையன் வடதிசையார்கும்
குணமிலான்வீதி தென்வடல்முகம்புக்
குணதிசை யாதீனமில்லை
மணமதிருபத் திரண்டினின்முடியும்
மார்க்கமி தாகுமென்பதுவே. (9)

வேறு.

செய்யபுருடன் சந்திகாதாங்கள் தீர்க்கமாண்களிரண்டாகும்
உய்யபெண்பா லுபயமதி லொன்றுவித்வை வாலிபத்தில்
மெய்யாம்வடக்கு முகப்பாகும் வீதிகிழ்மே லெதிர்மனைபாழ்
அய்யாவிந்த நிலையதனி லமர்வாளென்றுமொழிந்திடுமே. (10)

வேறு.

அட்டமத்ததிபன் சரந்திரமாக
அமர்ந்திடில் வயதுவோராறில்
திட்டமாய்கண்ட மதுகடந்தப்பால்
தீர்க்கமாம் நாற்பத்தைந்தளவும்
தொட்டபாக்யாதி பலனெவ்வாறென்னில்
சொல்லுவா யேகனுந்தந்தை
திட்டமாய் சொனைத்தால் பூமிகள்விரையம்
செய்யற்பத் தொழிலுள்ள னென்றே. (11)

என்றபத்திடத்தின் பலனெவ்வாறென்னில்
இயம்புவோம் கைத்தொழிற்மூலம்
கன்றுகாலிகளும் அற்பமாயுண்டாம்
கருதும் லாபத்தினுன் சரமாய்

நின்றிடில் தென்கீழ் திசைதனில்லாபம்
நேர்ந்திடு மரவர்க்கத்தாலும்
என்றுரைத்திடுவீர் விரையத்தின்பலனே
யில்லமொன் றிரண்டெனலாமே. (12)

கன்னி மூன்றுமோரையின் பலன் முற்றிற்று.

கன்னி நான்கா மோரையின் பலன்.

மாதுவெனுங் கன்னிதனில் நான்காமோரை
மன்னும் பிற்பாதியதன் பலனைக்கேளும்
ஓதுமனையிரண்டு பிரி வாகத்தோன்றும்
உரித்தாகுந் தென்மூகப்பி னெதிரில்பாழாம்
தீதாகும் வடதிக்கில் துஷ்டன்வீடாம்
சிறப்பில்லை மேற்பக்கம் பாகமைந்தாம்
சோதிவுமை யாள்கோவில் நிருதிமூலை
தோன்றிடு மிக்குறிகாண் துனிவாயோதே. (13)

வேறு.

துலங்கிடுஞ் செல்வி நிறஞ்சொகப்பாகுஞ்
சொகுசுள்ளாள் நீடியவாழ்வி
விளங்கிடும்போக வதிதந்தைதாய்க்கு
வெகுபகூர முடையாள்
கலங்கமில்லாள்பொன் பூஷணமுடையாள்
கணவனுக் கிசைந்தசற் குணத்தி
குலங்களில் மேன்மை மெய்பலமுடையாள்
கூறுவா ரிவ்விதக்குறியே. (2)

குறியிதாமிரண்டிண் பலன்தனமுள்ளாள்
குடும்பநற் சுகம்பிணி யில்லாள்
நெறியுளாள் வித்தை யிருவிதமுண்டாம்
நேத்திர மிரவினிற் குருடாம்
குறைவிலாபாக்கியம் ஜனவனுகூலிக்
குறித்திடு மூன்றிடத்தாதி
இறையுடன்கூடி கேந்திரகோண
மிருந்திடிற் பலனைப்புகல்வோம். (3)

கணிதமாம்ஜேஷ்ட சகோதரமிருவர்
கன்னியு மொண்றென லாகும்

அஜனயுள கனிட்டர் பின்றசமுண்டாம்
சொல்லதில் தீர்க்கமுமைந்தாம்
மணியெனவொருவன் வார்த்தைவல்லபன்காண்
மனவிமா ரிருவரா மவற்க்குக்
கணகனின் பார்வை யிருந்திடிலிவ்வாறு
கருதலாம் சகோதரபலனே. (4)

வேறு.

பேசுவோமன்னை வர்க்கம் பெலமில்லைவர்க்க மேழு
நாசமாமைந்து தீர்க்கம் நலமுடனிரண்டேயாகும்
பாசமாரம்மானேகம் பலன்பெருந்தனமூன்ளோன்காண்
காசினியறியநான்கு களத்திரமிவனுக் குண்மேட. (5)

உண்டாகு மம்மான்முனும் ஊர்தனக் கரசனுகும்
மிண்டியதாயாருக்கு வெதுப்பிலு லிருபத்தைந்தில்
கண்டமுமொன்றுண்டாகும் கடுகவேமுப்பத்தேழில்
சண்டனுக் காளாய்மாதா தானுயிர்விடுவாளென்றே. (6)

விடுவதுவைந்தாமாதி மிக்கசோள் பார்வையாகில்
கடுகவேபுத்ரனுண்டாம் கன்னியுமிரண்டேயாகும்
திடமுள்ள ஆண்கள்மூன்று செப்புவாயதி லொன்றீனம்
கடனிலாவாழ்வேயாகும் கருத்துள்ள புதல்வாமே. (7)

ஆகுமே ஆருமாதி யவர்திர ராசியாகில்
சோகமே யுண்டாம் புந்தி சுக்கிரன்பார்வையாகில்
தாகிய ரொணங்களில்லை சஞ்சலபிணியுமில்லை
வாகியசத்ருநாசம் வருங்குண மென்றுகூறே. (8)

வேறு.

கூறிடுமேழான் கேந்திரகோணம்
குணமுட னுச்சம் நட்பாட்சி
பேர்பெறவிருந்து சுபருடன்கூடில்
பிரைதிசை தூரமாம் புருடன்
சீர்குணமுள்ளான் வித்தையில் நிபுணன்
செல்வத்தில் குபேரனும் சூரன்
வீரிய முள்ளான் நிறஞ்செகப்பாகும்
விளம்புவாய் சகோதரங் கேட்கில். (9)
மொத்தமீராரும் நிலைத்திருப்பதுசோள்
முன்னவர் நான்கென மொழிவார்

சித்தமாங் கனிட்ட நீருவருமாகும்
சேடியர் விர்த்தியி லிரண்டாம்
பித்தனுந் தந்தை புத்திபேதகனுய்
புவியெங்கு மலைந்துமே திரிவான்
அத்தியும்ஆதி மனைக்குத் தென்கிழக்கில்
அமர்ந்திடு மென்றறைந் திடுமே. (10)

வேறு.

நலமுள்ளயெட்டாமாதி நயம்பெற நின்றுராகில்
பெலமுண்டா மாயுள்தீர்க்கம் பேசுவா ரெழுபத்தேழு
ஜலமதா லிருபத்தொன்பான் சார்ந்திடுங் கண்டமொன்று
பலனிதாம் பெண்களுக்குப் பகர்வதிவ்வாறதாமே. (11)

பேசியவொன்பானுதி பெலன்சரந் திரமதாகில்
வாசமாந்தங்கையோடு வர்க்கமும் நான்கதாகும்
தேசசஞ்சாரனுகும் செப்பிய கனிட்டான்றந்தை
பாசமாம் பூமிதன்னுல் பாக்கியமுடையனுமே. (12)

வேறு—தெள்ளியபத்தா மிடத்ததி பதியால்
ஜீவனம் பூமிவர்த்தகத்தால்
உள்ளியபூர்வ நிதியினுல் பொருள்க
ளுபரியாங் கெங்கையாத்திரைகள்
உள்ளமுங்குளிர செய்குவா ரிரக்க
முள்ள மெஞ்ஞானமு முள்ளாள்
கள்ளமோ மனதி லெண்ணிடாள் தர்மி
கணிதமிஃ தறிந்துரைப்பீரே. (13)

வேறு.

வரும்லாப மிடபத்தின் திசையேயாகும்
வாணிபத்தால் பலதிசையும் வருதலாகும்
பெரும்லாப முண்டாம் பூமியினுல்தெற்கு
பேசிடுவோமினி விரையும் தெய்வமூலம்
குருமூலம் அந்தணரால் யாத்திரை மூலம்
குறித்திடுவாய் கட்டடத்தின் மூலத்தாலும்
கருங்கன்னி நான்கோரை பிற்பாகத்தின்
தானுதித்த மங்கையரின் பலன்யீதாமே. (14)

கன்னி நான்காமோரை பலன் முற்றிற்று.

கன்னிநான்கோரைக்கும் செய்யுள் 42

கன்னியாலக்ன பலன் முற்றிற்று.

துலா முதலோரையின் பலன்

கட்டளையின் முதலோரை பிற்பாகத்தில்
கன்னியவள் பிறந்திடிலோ வீதிகளுந்
திட்டமுடன் றென்கிழக்காங் கீழ்முகப்புச்
சீருடைய தகரத்தின் றிசையில்தோப்பு
குட்டையுடன் பெரும்பிணியன் வீடுமேற்காம
குமரியவள் ஜெனித்தமனை பாகமைந்து
எட்டுடனே முவ்வாறு முழந்தூரத்தில்
ஈசனுர் கோவிலுண்டா நிருதிகாணை. (1)

காணுவாய் ஜாதகியோ நிறங்கருப்புக்
கன்னத்தில் மச்சமுண்டாங் குறியருபம்
காணுவது ஜாதகியே தலச்சனுகும்
கன்னியிவள் ஜெனிக்குங் காலத்தில்தந்தை
பாணுதிசை சென்றிடுவன் பெண்ணின்மூலம்
பாவையிவள் ஜெனித்தமனை சித்ரவீடாம்
தாணுமந்த மனையில்மேல் புறமாயிரண்டு
தடாகமுண்டாம் நிலையறிந்து சாற்றுவாயே. (2)

வேறு.

தனபலனுண்டாங் கடினவார்த்தை யுள்ளாள்
தாரதம்மியங்களு மில்லாள்
குணமதில் சமனும் பலருடன் சேர்வள்
குடும்பத்தில் கலகியாங்காமி
இனமதில் பொல்லாள் மத்திபவயதி
லிடுக்கணு நேத்திர மூனம்
பிணியிலாள் தந்தைக் கினியவளாகும்
பேசுவர்க் கோதையின் பலனே. (3)

கோதையின்றுணைவர் நான்கதி லிரண்டு
கொஞ்சிடும் பெண்ணதி லொன்று
பாதையாங்கொடிய வியாதியால் மெலிந்து
பன்னிரண் டாண்டினின் மரணம்
சாதுவா னிரண்டில் யேகனுக் கிரண்டு
தாரமாஞ் சந்ததி யின்றி
மாதவர்புகழுந் திருப்பணி செய்து
மரணமு மாவனென் றறையே. (4)

அன்னையின் பலன்கள் நான்கினுக்குடையோன்
ஆஷி யுச்சங்களாய் கேந்திரம்
திண்ணமில்லாம லிருந்திடிற் மாதா
பிறப்பது பதினொன்றுங் கொடியோர்
மன்னனே கேளும் கூடியேயிருக்கில்
மரித்திடு முபையந்தா னிலமை
உன்னியமாதா தந்தையின் றந்தை
உரைப்பர்காண் மூன்றென வோதே. (5)

வேறு.

சிறந்திடு மைந்தின் சேதி செப்புவோம் புத்திரபாகம்
குறைந்திடும் பெண்பாலொன்று கொடுமைகா ணண்பால்லிரண்டு
பறந்திடும் அம்மான்வர்க்கம் பலமில்லை விர்த்தியில்லை
பிறந்தபுத்திரனிலொன்று பெலமில்லை யொன்றுபாழ். (6)

வேறு.

உற்றிடுமாறின் பலனெவ்வா றென்னில்
உச்சியில் ரோகம துண்டாம்
பற்றியவிருபத் தாறினில் ரொணத்தின்
பாதையுங் சிறிது மங்குண்டாம்
வெற்றியசத்துரு ஜெயமது வுண்டாம்
மேவிய விருபத்தொன் பதனில்
முற்றிடுந்திணத்தால் சஞ்சல முண்டாம்
மொழிந்திடும் பின்சுக முண்டே. (7)

சுகமதுயேழின் பலனெவ் வாறென்னில்
சுந்தரி தனக்குமே புருடன்
புகரது திசையாம் கிழக்குமேல் வீதிப்
பூமகன் றிசைமனை முகப்பாம்
அகமது கூரை பிரிவது மூன்றும்
ஆதின மேதமாம் விருத்தன்
மகவில்லையென்று தேடியிம் மாதை
மணமது முடிப்பன்காண்கூறே, (8)

கூரிடும்பொருள்கள் சுயார்ச்சிய முண்டாங்
குணமுளான் சமிகாதர வர்க்கம்
தேரிடுநான்கு பெண்ணதி லொன்று
சிறக்கவே வாழுமென் றுரைக்கும்

பாரினி லட்ட மாதியின் பலன்கள்
பகர்வது வயது பூரணமாஞ்
சீரியேயெழுபத் தாறினில் மரணஞ்
செப்பிடும் பசியினுலென்றே. (9)

பாக்கியப்பலன்கேள் தந்தையின் வர்க்கம்
பரிவுடன் நவமது வுண்டாம்
நீக்கியதீர்க்க மிரண்டென லாகும்
நிகழ்த்துவாய் பெண்ணதி லொன்று
யோக்கியமுள்ளான் களத்திரபாகம்
ஓதுவாய் திருதியமாகும்
வாக்கதுதவரான் ராஜசன்மானன்
மளவிலாப் பொருள்படைத்திடுவன். (10)

படைப்பது பத்தாமாதியின் பலன்கள்
பகருவோம் பத்தினுக்குடையோன்
தடைப்பிலா கேந்திர கோணமேயேறிக்
தருஞ்சுபர் பார்வையங் கிருக்கில்
கிடைப்பதுபொருள்கள் கிருஷியின்மூலம்
கிடைத்திடும் வியாபாரத்தாலும்
நடப்பதுபதினே ழாண்டினுக் கப்பால்
நலமென வுரைப்பர்காணரசே. (11)

பாரினில்லாபப் பலனெவ்வா றென்னில்
பற்றியலாப மேற்றிசையாம்
மீரியதிரண்டு விதத்தொழிலாளு
மிகுத்திடும் லாபமாமென்க
கூரியவிரையத் தாதியின் பலன்கள்
கோவிலாலயமதுமூலம்
தேரியமான கட்டடமது வாலும்
செய்குவள் சுபவிரையமுமே. (12)

துலாமுதலோரையின் பலன் முற்றிற்று.

துலாமிரண்டாமோரையின் பலன்.

துலையிரண்டா மோரைபிற் பாதிதன்னில்
சுந்தரியாள் ஜனித்திடுவள் கீழ்மேல்வீதி

கலைதிசையில் நீரோடுங் காவ்வாயொன்று
கன்னிதிசை கார்மேக வண்ணன்கோவில்
கலைபெருத்து வுதித்திடுவாள் தெற்குவாசல்
ஜலமுள்ள கிணறுண்டாம் ஜனித்தவீட்டில்
மலைமேற்கு திசையுண்டா மெதிர்த்தவீடு
வாழ்வில்லை தென்பக்க மெதிரில்சந்தே. (1)

சுத்தண்டாம் ஜாதகியாள் ஜெனனகாலம்
தாய்வர்க்கந் தனிலம்மா னரிட்டமாவன்
விந்தையிது தந்தைக்குத் தெண்டங்காட்டும்
மிக்கசுகம் தான்குறையும் விரலாறுண்டாஞ்
சுந்தரியாள் நிறஞ்செகப்பு சமனும்ரூபம்
சுகம்பெருவாள் நிறைமிக தூஷிப்பாள்காண்
பந்தமிகும் போகவதி பதிவிரதை யாவள்
பலமுடையா ளாயுள்வரை பாக்கியவதிகாணே. (2)

வேறு.

கண்டறிந்திடுவாய் குடும்பத்திற் செல்வி
கணவன்சொற் றவரிடாள்நாரி
கெண்டைபோல்விழியாள் நயவாக்குள்ளாள்
கேள்வியென் மூன்றிடப் பல்லோ
நண்டதில்மூன்றுன் காரகன் சரத்தில்
நலமுடனிருந்திடி லந்தாம்
உண்டெனுமூன்று தீர்க்கமற்றிரண்டும்
ஓதிடுமரிட்டமா மென்றே. (3)

வேறு.

மூன்றதி லாண்பா லிரண்டெனலாகும்
மொழிந்திடுங் கன்னியேவொன்றும்
தோன்றதிலாருவன் றனக்குமேதாரம்
சொல்லுவா ரைந்தெனலாகும்
ஊன்றதில்பெண்பால் ஆளடிமைகளு
முதையவள் தைரியசாலி
ஆன்றமோரிருபத் தொன்பதில்வீர்யம்
அகன்றிடும் பெண்தனக்கென்றே. (4)
என்றநான்காதி பலன்றனைக்கேளும்
யியல்புடன் நான்கினுக்குடையோன்

நன்றுக்கேந்திர கோணத்தில் சரமாய்
நலமுடன் திரத்தினிலிருக்க
கன்றுடன்காலி வாகனம்தாய்க்குக்
கதித்திடுமாயுள் தீர்க்கமதாம்
பண்டென்பொன்னு பரணமுங்கிரக
பாக்கியமும் பொருந்திடு மென்னே. (5)

வேறு.

புத்திரப்பலனைக்கேளும் பொருந்துபத் தெட்டாமாண்டில்
சித்தியாமுபயபுத்திராள் ஜனித்திடு மொன்றுபாழாம்
புத்தியும்ஞானமுண்டாம் பொருந்திய கன்னிமூவர்
மித்திரப் பேதமுள்ளாள் மெல்லியா ளெனச்சொல்வாறே. (6)

சொல்லுவதொன்றுகேளாய் சுகமுள்ள அம்மான்வர்க்கம்
வெல்லுவ திரண்டேயாகும் மிக்கதோ ராருமாதி
தொல்லையாம்பகை நீசத்தில் சூழ்ந்திடிற் றொணங்களுண்டாம்
எல்லையில்களவுபோகு மெனவுரைத்திடுவீதாமே. (7)

களத்திரத்தானத்தாதி கவியிவர் பலமாய்நின்று
துலக்கமாய் நல்லோர்கூடத் தோன்றியே யிருக்குமாகில்
கலக்கமில்லாதோராறில் கனமண முடியுந்தென்கீழ்
இலக்கணங் கற்றோனுகு மியல்புளப் புருடன்றானே, (8)

புருடனுநிறங்கருப்புப் புத்திமான்செல்வனுகும்
பெருகியவர்க்கமாகும் பேசிடிற் பதினேழாகும்
கருவிழிமாதரெட்டாம் காளையுமோராருகும்
மருவியமற்றமூன்றும் மரணமென் றுரைக்கலாமே. (9)

வேறு.

மரணமென்றுரைத்தோ மடந்தையின்புருடன்
மர்மமாமணமது முடிந்த
காணமாறெட்டா மாண்டினிலிரவில்
கள்ளரா லடிபட்டு மரிப்பன்
தருணமாமெட்டா மிடப்பலன்றன்னைச்
சாற்றுவோம் ஜாதகிதனக்கு
அரணவனுயு ளறுபதோரைந்தி
ராறினிலரிட்டமா மென்றே. (10)

வேறு.

மின்னியபத்தாமாதி மிகுசரந்திரமாய்நிற்கில்
நன்னியமதியினுலே நாடிடுந் தொழில்கள் விர்த்தி

உன்னியதென்கீழ்திக்கில் உண்டாகும் பொருள்கள்சேர்க்கைக்
கன்னியாள்தெய்வபக்தி கருணையுள்ளா ளென்பாரே. (11)
பங்கமில்லாபத்தாதி பலனெவ்வா றெண்ணில்கேளுந்
திங்களின்றிசையில்லாபம் சிறந்திடும் பூமிதன்னுல்
மங்களம்விரையத்தாதி மாபலன்மனையீரைந்தாம்
சங்கரன்சுபங்கள்மூலந் தான்பொருள் விரையமென்றே. (12)

துலா மிரண்டாமோரைபலன் முற்றிற்று.

துலா மூன்று மோரையின் பலன்

வணிகனில்மூன்று மோரைபிற்பாதி
மங்கையர் ஜெனனமாகிடிலோ
பணிதரும்வீதி தென்வடலாகும்
பார்க்கவன் திசைமனைமுகப்பாம்
கணிதருந்தென்மேற் காலியமுளதாங்
கவினுலாமிருபுறம் சிறப்பாம்
அணியுளான்றென்கீ ழுதற்கெதிரினிலோ
ராரலங்குண்டதா மென்றே (1)
நீரமாம்ஜெனித்த வீடதுபூர்வஞ்
சிறப்பில்லை கிணறுமொன்றுளதாம்
நாரியர்ஜெனித்த மனையதுபாகம்
நவிலுவோ மிரண்டெனலாகும்
சீரியபெண்பால் நிறஞ்சமனுகும்
செல்வியாஞ் சிறந்திடும்ரூபி
பாரினிலிடப்பின் மேல்மச்ச ரேகைப்
பாவையர்ஜெனனந் தாய்வீடே. (2)

வேறு.

வீடதுவாஞ் சௌபாக்கியமுள்ளாளாகும்
வெகுகாமி வாயிடரி பேசவல்லாள்
பாடில்லாள் குடும்பத்தில் கலகியாகும்
பக்ஷமில்லாள் புத்திரரைப் பயின்றிழப்பாள்
கூடியதன் னுடன்பிறந்தா ரிருவராகும்
குணமில்லை யதிலொருவன் றேசம்போவான்
நாடியபின் னீரைந்தா மாண்டிற்கப்பால்
நவிலுவாய் சோதரமாண் ஜெனிக்குமென்றே. (3)

வேறு.

குந்தியின்பேராகேண்மோ குணமிலா நான்காமாதி
வந்துவீ ராறெட்டாறில் வாழ்வது முபயமாகில்
சிந்தியதிரமுமாகில் சிதரிடுந் தாயார்வர்க்கம்
பந்தியாம்பதினொன்றுகும் பாழெல்லாந் தீர்க்கமிரண்டே. (4)

இரண்டதில் வாழ்வொன்றில்லை நிலைசுக மில்லைபாரில்
கண்டமீராறிலுண்டாங் கருதியமுப்பா னீரண்டில்
கெண்டைவா ழிடத்திலொன்றுங் கனமறுபதுமேலொன்றில்
கொன்றிடுந் தவிரிடாது கூறிடும் துணிவாமீதே. (5)

ஐந்திடத் தம்மான்வர்க்கம் அறிகுவ தேகனுகும்
விந்தையாம் புத்ரவர்க்கம் விரையமாம் ஜனித்தபோதே
சிந்தையிற் கவலையுண்டாஞ் சிறந்தபெண் பாலுமில்லை
நந்தியுமொழிந்ததிவ்வா றுகுமென்றறையலாமே. (6)

வருகுவதாறுமாதி வளம்பெற சரமுபயம்
தருஞ்சுபர் பார்வையுண்டேல் சத்குரு நாசமுண்டாம்
பருவமங்கையர்க்கு ரோகம் பற்றிடா தொணைங்களில்லை
அருமம்பல னிதுவாமென்று அறைந்தனர் நந்திதேவ (7)

வீரியமேழாமாதி விளங்கிட கேந்திரகோணம்
பாரதில்சரமாயாகுஷி பகருச்ச மாகநல்லோர்
சேர்ந்திடில் புருடன்ராஜ சேவையுள் ளவன்றயாளன்
தீரவீரியனும்சூரன் செப்பலாந் தனவானென்றே. (8)

சாற்றிய வெட்டாமாதி சாதிர மாகநிற்க
மாற்றியவீரெட்டாண்டில் வாதனைகண்டமொன்றும்
போற்றிய விருபத்தேழில் புணர்ச்சியால் நிவர்த்தியுண்டாய்
நீற்றியவிரு பத்தெட்டில் நீரிலுல்மரணம் தானே. (9)

வேறு.

நிதிதருமொன்பா னுதியின்பலன்மேகள்
நிலைசுயார்ச்சிதந் தந்தைக் குண்டாம்
பதிதனில் நாற்கால் வாகன சுகங்கள்
பலமுண்டாம் தந்தையோ டிருவர்
கதியதிலொருவன் பிணியுள னுகும்
கன்னியர் நான்கென சொல்லும்
பிதுர்தனம் பொருள்க ளாசர் கள்ளர்களால்
பேதமாய் விரையமாகுமே. (10)

படிதனில்பத்தா மாதியின்பலன்கள்
பகருவோம் பூமியின்றொழிலாம்
இடதுகைதன்னில் விரலதொன்றானம்
இமகரனுலும் பொன்னுண்டாம்
முடவன்மேசியிவர்கள் கூடியங்கிருக்கில்
முறிந்திடு மற்ப ஜீவனமாம்
மடமயிலாள் துர்க்கமேபுரிவாள்
மார்க்கமி தென்றுரைத்திடுமே. (11)

செய்யலாபாதி பலன்றனைக்கேளும்
செங்கதிர் திசைதனில் லாபம்
வையகமதனில் பூமிதந்தையினுல்
வந்திடும் பலபொருள் லாபம்
உய்யவே களவு சூதுகள்கபட
முடையவளாகும் பிற்காலம்
மெய்யனேயிந்த விதமடந்தையற்கு
விளம்பலாம் லாபத்தின் பலனே. (12)

பலன்விரையத்தின் பலனெவ்வா றென்னில்
பண்டிதன் சரந்திரமாக
பெலமுடன் சுபர்கள் சகிதமங் கிருக்கில்
பிறப்புதன் கனிட்டரின் மூலம்
நலமிலை பூமிகட்டட மூலம்
நாரிபொன் பொருளழித் திடுவாள்
தலமதிலிவ்வாறு பலனெனக்கண்டு
சாற்றுவீர் தரணியோர் தமக்கே. (13)

துலா மூன்றுமோரையின் பலன் முற்றிற்று.

துலாம் நான்காமோரையின் பலன்

சீரதில்நான்காமோரை பிற்பாதத்தில்
சேடியர்கள் ஜெனித்திடிலோ கீழ்மேல்வீதி
பாரதில்தென் முகப்பாகும் கனமாம்தெற்குப்
பாட்டையதற் கருகேயோர் தோப்புமுண்டாம்
பேரில்லை ஜெனித்தமனே சுத்தப்பாழாம்
பேசிடுவா யிருபக்கமிடிந்தே காட்டும்

மோகமென்ப ரெதிர்மணியி லனேகதுன்பம்
குறியிதுவாம் ஜனனமிருட் டறையிலென்னே. (1)
ஜனனமது அன்னியரின் மனையாகும்
சேடியிவள் கொடிசுற்றி பிறப்பாள்காணும்
இனமான சகோதரங்கள் மூன்றுலிரண்டு
யினியசுத மில்லேயதி லொன்றுதீர்க்கம்
கனமானதந்தையுடன் பிறந்தோர் நான்கு
கன்னி யிரண்டாகும தில் விர்த்திமூன்று
தனமுண்டா மாதனம் பேதமுண்டாய்
சந்திரர்க்கு வுச்சதிசை தயங்கிநிற்பர் (2)
நிற்பர்காண் மாதாவின் வர்க்கங்கேளு
நிலையுள்ளப் பெண்மூன்று ஆண்களைந்து
கற்பில்லை பெண்ணொன்று வேசியாகும்
காளையொன்று கண்ணிழந்து தேசம்போவான்
தப்பில்லை மற்றவர்கள் சமனுய்வாழ்வர்
தாய்தனக்கு அடிவயற்றில் ரோகமுண்டாம்
இப்பலன்கள் பொருந்திருக்கில் துலைநான்கோரை
யென்றறிவாய் பிற்பாக மென்றுதானே (3)

வேறு.

பேதமாம் ஜனித்தமாது பெலமில்லை ஆயுள்தானும்
தீதுகாணீரைந்தொன்று திங்களி லசுரமந்திரி
வாதுகாரகத்தின் நோயால் வருஞ்சல ரோகந்தன்னல்
ஓதுவாய் திண்ணமாக உயிர்விடு மென்றுதானே. (4)

துலாம் நான்கா மோரையின் பலன் முற்றிற்று.

துலாம் நான்கோரைக்கும் செய்யுள் 41

துலாலக்கினபலன் முற்றிற்று

விருச்சிக முதலோரையின் பலன்.

தேளதுமுதலா மோரைபிற்பாதி
ஜனித்தமா தருக்கினி பலன்கேள்
வாழ்வதுவீ தி கிழக்குமேற்காகும்
மகரத்தின் திசைஅம்மன் கோவில்

கோள்மதியுச்ச மீனதிசை முகப்புக்
தொண்டையின் திசையில் நீரோடை
தாழ்விலா மீனகளிருபுர முண்டாம்
சாற்றுவாய் மீனையில் கெங்குளதே (1)

கெங்கையுமுண்டாம் மேல்திசையீசன்
கீழ்மகன்றிசை ருத்திரபூமி
பங்கதுமூன்றும் வடதிசைமீனையில்
பாவையர் ஜெனித்திடும் வீடு
அங்கதுநான்கு திசையுங் கட்டடமாம்
அரிவையின் நிறஞ்செகப்பாகும்
துங்கமாம் நீதி யுடையவள் ரூபி
சுகம்பொருள் கனமூளாள்காணே. (2)

வேறு.

இன்பமிரண்டா மிடப்பலன்கே ளினியமொழியா ளிருவித்தை
அன்புங்குணமு மிகவுடையா ளன்னைக்குறியாள் கற்புடையாள்
துன்பமில்லா ளென்னலும் சுகபோகவதி கிளிமொழியாள்
தன்போலெவர்க ளுயுமெண்ணுந் தாஷ்டிகமூளாள்காணீரே. (3)

வேறு.

கண்டமூன்றுதி செவ்வாய்க் கனசரமுபயமேறில்
மிண்டிய சகோதரங்கள் மேவிடுங் கனிட்டர்மூவர்
துண்டெனு முபயமூத்தோர் சுகமில்லை கொடியோராகும்
கொண்ட மந்தனுமேநோக்கில் கொடுமையாம் விர்த்திபாழே. (4)

வேறு.

தக்கதோ ரன்னை பலனெவ்வா றென்னில்
தனமுள்ளாள் சௌக்கிய முள்ளாள்
மிக்கதோ ரிடக்கண் ணுனமே யுள்ளாள்
மேவிய கண்டங்க ளறிதல்
திக்கென விருபத் தொன்பதில் தீதாந்
தெய்வமந்திரிசுகம் பார்க்கில்
விக்கலால் நாற்பத் தொன்பதி லரிட்ட
மேவிடு மென்றுரைத் திடுமே. (5)

விடுவது ஐந்தா மாதியும் நிரத்தில்
மேவியே சுபர்களின் பார்வை

கடகவேயிருக்கில் ஜாதகி தனக்குக்
காலாயு மைந்தென லாகும்
கொடியவரிருவர் மற்றவர் குணமாம்
கோதையர் மூவரென்றுரைக்கும்
படிதனிலொருபெண் விதவையுமாகி
பாவியா யிருப்பனென்றாயே. (6)

உரைத்திடு மம்மான் மூன்றதி லொருவன்
உலகெல்லாம் சஞ்சரித்திடுவன்
விருத்தியாமிருவர் சுயார்ச்சித நிலையில்
விளங்குவர் சந்ததியுளராய்
சிரித்திடு முகமாம் செகட்புளன் குறியன்
செப்பிய மாமனி லொருவன்
திருத்தமுள்ளவனுங் கணிதநூல் வல்லன்
ஜெகத்தினிலிசை பெறவாழ்வன். (7)

வேறு.

துயரமாம் ஆருமாதி சுக்கிரன் மீனயிலேனும்
பயமுள்ள கலியிலேனும் பற்றிடில் பிணிபால்துன்பம்
நயமுடன் சோரமுண்டாம் நாடியே கேந்திரகோணம்
பயமில்லை பேறிநல்லோர் பார்த்திடில் சுகமாமென்றே (8)

வேறு

உன்னிய வேழின்பலனெவ்வா றென்னில்
உக்கிரன் திசைதனில் புருடன்
நன்னிய செகப்பு நிறஞ்ச மரூபம்
நாடியநற்குண முள்ளான்
அன்னைசொல் தவரான் வித்தைபுத்தியுனன்
அவனிட சகோதர மூசைக்கில்
கன்னியர் மூன்றுமாணதி லிரண்டாங்
கருதிடுமிது நிலையாமே. (9)

கலக்கமொன்றில்லை அட்டமப்பலன்கேள்
கவிதிசைபகுதியாண்டதனில்
நலக்கமொன்றுண்டா மதுகடந் தப்பால்
நலமுண்டாமறுபதோ டிரண்டில்
துலக்கமா யெடுத்து வுரைப்பதைக்கேளுஞ்
சோதிபொன் கவிசனி யாண்டில்

சலக்கரையோராம் வருத்தமாய்மாது
தன்றுயர் மாய்ப்ப ளென்றுரையே. (10)

கனமெனவொன்பானுதியின் பலன்கேள்
கதித்திடுந் தந்தையின் வர்க்கம்
தனமுளோராகும் சகோதர மிருவர்
சாற்றிடு மதில்கனிட்ட னுக்கு
இனமதிலீரண்டு தாரமாம் பூர்வம்
இந்திரன் திசையது வாகும்
சினமதில்கொடியன் செல்வனுந் தந்தை
தீர்க்கவா னென்றுரைத்திடுமே. (11)

கருதிடும்பத்தாமாதியின் பலன்கள்
கதிரவன்சரந்திரமமர்ந்து
பெருகியே வுச்ச மாகுமிபெற்றிருக்கில்
பேசுவ ரரசர்கள் மூலம்
மருவியபூமிமூலத்தினாலும்
வரும்தொழி லிருபிரிவாகும்
உரியமெய்ஞானம் தேவதாபக்தி
யுள்ளநற் கருமஞ்செய் பவளே. (12)

மின்னியலாபத் ததிபதிவுபயம்
மேவிடிற் பரிகூடித்தாகளும்
உன்னியலாபம் வருந்திசை வடக்கு
முயர் சகோதரமது நாஸ்தி
கன்னியாளறிவு கபடமென் றெண்ணுள்
கருதுவர் காதில்நோயுடையாள்
பொன்னது மூவிவட் டாண்டினிற் புதையல்
பொருந்திடு மெனப்புகல் வாயே. (13)

வேறு.

வியம்தின் பலனைக்கேளும் விளங்கிடு மனைகள் நான்காம்
நயமுளயோகிமூலம் நாட்டில் வேள்விகளின் மூலம்
மயமென வியாச்சியமூல மரசர்களதிகாரமூலம்
ஜயம்பெற வோருள்களிவ்வாறு செய்குவாள் விரையந்தானே.

விருக்ஷக முதலோரையின் பலன் முற்றிற்று.

விருஷக மிரண்டா மோரையின் பலன்.

மருவியதே ரிரண்டாவ தோரை பிற்பாதி
மங்கையவள் ஜனித்திடுவாள் கீழ்மேல்வீதி
பெருகியமேல் முகப்பாகுமெதிர்த்தவீடு
பெலமில்லை சுதனில்லை பெருவாழ்வில்லை
குருகியதோர் சந்துண்டாம் வடக்கு திக்கில்
குணமில்லை கீழ்புறத்தில் பாகம் நான்காம்
நிருதியின் மூலையில் விஷ்ணு கோவிலுண்டாம்
நிச்சயமாம் பலவிருஷ மீனயிலுண்டே. (1)

உண்டாகும் ஜனித்தமணி யன்னவீடாம்
உறுதியிது நிறங்கருப்பு நெடியரூபம்
கண்டுமொழி ஆசாரக்குறையுள் ளாள்காண்
கருதரியா முன்னமேதன் கணவனிழந் திடுவாள்
கொண்டவிழி சிறிதுள்ளாள் மேடைநெற்றி யுடையாள்
குடும்பத்தில் சுகமுள்ளாள் குறித்ததன முடையாள்
விண்டிடமெய் நாற்றமுள்ளாள் பற்களழுக் குள்ளாள்
வித்தையிலாள் போகமில்லாள் விளம்புவாமே. (2)

வேறு.

ஆகுமேமூன்றில் சகோதரப் பலன்கள்
ஆணிரண் டாகும் பெண்மூன்றும்
பாகுடனொருவன் அபவிர்த்தி யுள்ளான்
பாவையர் களிலொன்று விதவை
மோகமா யினக்குலத்துடன் கலந்து
மொழிகுவாய் தேசமே போவாள்
யோகமாமற்றோர் மேன்மைக ளுளராம்
ஓதிடும் புவியிலோர் தமக்கே. (3)

ஓதிடும் நான்கிண் பலனெவ்வா றென்னில்
உற்றிடசரந்திர நான்கோன்
வேதனையில்லை தீர்க்கமாமா தா
விளங்கிடுஞ் சகோதர மூரைக்கில்
மாதர்களுபயம் ஆணதுவேகம்
வலுவில்லை பேதமாம் பூர்வம்

காதினில்ரோகம் வேதனை யுண்டாங்
கருதிடுமாதுரு தனக்கே. (4)
கருதுமுவேழிற் கண்டமொன் றுளதாங்
கணிதமா மன்னையின் றந்தை
திருதியமாருந் தெரிவையர் நான்கு
செப்புவ ரைந்திடப் பலன்கேள்
பருவ துயில்லை வம்மிசநாசம்
பேதமாம் அன்னிய புத்திரன்
தருவது அம்மா னைகளும் செல்வன்
சாற்றிடும் பலனிவ்வாறுமே. (5)

வேறு.

ஆறுதிபலனக்கேளும் அழிந்திடும் ரோகமில்லை
மாரான ரொணங்களில்லை யாயுதப் பீடையில்லை
தேறுதுசத்துருபயம் சிந்தனைத் துயரமுண்டாம்
தூரான வார்த்தையென்றிந் தோகையர்க் கில்லைசாற்றே. (6)

வேறு.

சாற்றிய வேழோன் நீச்சனுய்வுபயம்
சார்ந்துதீ யோர்களால்சூழ
மேற்றிசை புருடன் நிறம்பொதுசமனு
மேதையர்க் கிசைந்த திபோகன்
நாற்றிசை புகழுங் கீர்த்திமானுகும்
நான்கிரு வேழினிற் மணமாம்
போற்றிடுமீசன் ஆலயங் கிழக்காம்
பொருந்திடும் வீதிதென் வடக்கே. (7)
வடக்கினில் பாகம் திருதிய மாகும்
வம்பனு மதிறொரு வன்காண்
ஓடுக்கமுமன தி லிரக்கமு முடைய
னுத்தமன் மனைகிழக்காகும்
மூடக்கமாமெதிரி யுளமனைநாஸ்தி
முருதியா மிவ்விதநிலையில்
கொடுக்கநல் மணமும் நடந்திடுங்காலம்
கூற்றனுர்க் காளனுகுவனே. (8)

வேறு.

நிச்சயமிதுவா மெட்டோன் நீள்சரந் திரமாய் நிற்க
அச்சமொன்றில்லைதிர்க்க வாயுள்காணட்டமத்தான்

உச்சனுயிருக்கில்மாது உயிரதுவுள்ள மட்டுங்
கச்சையாம் பகைவிரோதம் கண்டமொன்றில்லாள்காணே (9)

காணுவாயொன்பானுதி கடும்பலன்றன்னைக் கேள்க்கில்
பூணுவாபரணமுண்டாம் புகழ்பெரும் நிதியுமுண்டாம்.
தோணுந்தந்தையின்வர்க்கங்கேள்தோகையிரண்டாண்பால்மூன்று
வீணதாங்குடும்பந்தானும் வெளிப்பட்டுச் சிதருந்தானே. (10)

வெளிப்படும்பத்தீதான்றன்னுல் விளங்கிடும் பலனைக்கேளும்
தொழிலதுபூமிமூலம் தோகைபெருஞ் செல்வமுண்டாம்
பழியிலாள் தெய்வபக்தி பகருமெஞ் ஞானமுண்டாம்
நளியநற் கருமமுண்டாம் நாரியின் பலனிதாமே. (11)

வேறு.

பலனுகும்லாபாதிப் பலனைக்கேளும்
பார்க்கவன்சேய் திசைலாபம் பகரலாகும்
நலமாகுங்ருஷி மூலத்தினுலு
நாடிவரும் தனலாபம் பல்நோயுள்ளாள்
தலமதில்கேளீராறின் பலன்கள்தன்னை
சாற்றிடுவோம் பூமிகட்டடத்தின்மூலம்
குலமதில்நற் கருமத்தின் மூலத்தாலுங்
குமரியிவள் பொருள்விரையம் செய்வாளென்றே. (12)

விருஷக மிரண்டாம் மோரையின் பலன் முற்றிற்று.

விருஷிக மூன்ரு மோரையின் பலன்.

படிதனில்தேளின் மூன்ரவதோரைப்
பகரும்பிற்பாதியின் பலன்கேள்
நடையது கிழக்காம் வீதிதென்வடக்கு
நாடியமேற்கு லாலயமாம்
தொடைதனில்மறுவாம் யெதிர்மீனபாழ்
சூட்சமாம் கீழ்புரம்பொய்கை
கடகமாந்திசையில் ருத்திரபூமிக்
கலைதிசைவன மெனக்கருதே. (1)

கருதிடுமங்கை ஜனித்தது பூர்வம்
கருநிறம் தலைபெருத் திருக்கும்

அருமையாம் தந்தை வர்க்கமதிருவர்
ஆதீனநீலயதங் குண்டாம்
பெருமையாம் பெண்பா லேகமா மிரண்டு
பெண்பிறந் தூடன் மரித்திடுவள்
உருவதுவலது கைவிர லொன்று
ஊனமாம் தந்தையர்க்கென்றே. (2)
மேவியவம்மான் வர்க்கம திரண்டில்
விளம்பிடு மொன்றுபா லொன்று
தீவிரமாகக் கட்டடவிர்த்திச்
சிறந்திடும் செல்வமுள்ளவனும்
தாவியதந்தை தத்துபுத்திரனுஞ்
சாற்றிய வன்னநற் குணத்தாள்
பூவினிலிவ்வாறு ஜனிக்கும் மங்கையர்க்குப்
பொருந்திடும் பலனிதுவாமே. (3)
பலனிதுவாகும் ஜனித்த ஜாதகியாள்
பகர்ந்திடு மாதமீராறில்
நவமிலையரிட்டம் பின்சகோ தரங்கள்
நாரியிரண்டாகு மாண்மூன்று
குலமதில் ஜேஷ்ட சகோதரவர்க்கங்
குணமில்லை யடுத்தது பெண்பால்
தலையதுண்டு வடிவிலா ஜனிக்குஞ்
சாற்றிடும் தரணியோர் தமக்கே. (4)

விருக்ஷக மூன்று மோரையின் பலன் முற்றிற்று

விருக்ஷக நான்கா மோரையின் பலன்.

நிறையதாந்தேளின் நான்காவமீதாரை
நீளும்பிற் பாதியின் பலன்தேள்
குறைவிலா மீனகளிருபுற முண்டாம்
கொறிதிசை மீனமுகப்பாகும்
அறமுளகுணவான் வீடுமேற்காகும்
அந்தணன் திசையிற் மாவிருக்ஷம்
உறைந்திடுமெதிர்த்த வீடுபாழ்நிருதி
வோதுமரலைய மிருத்திடுமே. (1)

மாதிவள்ஜெனித்த மீனியிருபிரிவாம்
மங்கலன் நோக்கிடி லனலால்
ஓதுவர்வெந்த மீனியெனலாகும்
உற்றகீழ் புறம்கிணறுளதாம்
நீதியுள்ளவளாம் நிறஞ்செகப்பாகும்
நெடியரூபத்தினை யுடையாள்
சேதிகளறிவாள் வுறத்தசொல் லுடையாள்
தீர்க்கமுள்ளவளெனச்செப்பும். (2)

செப்புவாய்புருடன் பயந்துமேயிருப்பன்
சீரியக் குடும்பத்தில் கலகி
தப்புளாளிடக்கை பின்னமீம யுடையாள்
தனமற்ப மூடையவளாகு
நட்புடையவளா மன்னைதந்தை யர்மேல்
நற்சுகம் புத்திராள் சமனும்
இப்புவிதன்னி லிருபத்தொன் பதின்மே
லிடருண்டாங் குடும்பத்தி லென்னே. (3)

என்னமேவமூன்றின் பலனெவ்வா றென்னில்
இடுப்பினில் வலுவில்லாள் தைரீ
உன்னியா ளடிமை கன்றுகாலியுளா
ளருருஞ்சகோ தரங்களீ ரைந்தா
நன்னியதீர்க்க மூவிரண் டாகும்
நாடிய பெண்ணைதி லிரண்டாம்
கன்னியாளொருத்தி யிரண்டுசேயுடனே
கிணற்றில்வீழ்ந் திறப்பளென் றறையே. (4)

கொஞ்சியவன்னைப் பலனெவ்வா றென்னில்
குறித்திடில் யேகமேயாகும்
தஞ்சமா மன்னை தந்தையின் வர்க்கம்
சாற்றிடு மைந்தென லாகும்
வஞ்சியரிருவர் பாக்சிய முடையார்
வருத்தமாய் பிரிந்து மேயிருப்பார்
அஞ்சிடாளன்னை குணவதியாயுள்
அறைந்திடும் தீர்க்கமாமென்றே, (5)

ஐந்திடப்பலண்கேளிந்தினுக்குடையோன்
அவர் சரதிரத்தினி லமர்ந்து

நொந்துமே யிருக்கில் புத்திரனுசம்
நுலனுவோம் தத்துபுத்திரனும்
வெந்துமே போகுமம்மான்கள் வர்க்கம்
வீர்த்தியே யில்லையென் றுரைக்கும்
சிந்தையில் பேதஞ்சின்னமாம் கர்ப்பம்
செப்புவாய் ஜாதகிப்பலனே. (6)

வேறு. வின்னமொன் றில்லையாமூரன் மேவிடில்கர்ப்பராசி
நன்னியசுபர்கள் கூடநயம்பட பார்ப்பாராகில்
உன்னியரொணங்க ளில்லை ஒதிடும்பிணியுமில்லாள்
வன்னமாம்பாவர்கூடில் வழுத்தலாந் தீதென்றென்னே. (7)
தீதுவொன் றில்லையேமோன் றிரஞ்சராசி யேறில்
ஒதிடும்வடக்குத்திக்கு உருதியாம் புருடன்வர்ணம்
ஆதியாஞ்செகப்புரூபம் அழகுள்ள செவந்தகண்ணன்
சாதியில்பேதனுகும் சாற்றிய தறிந்திடாயே. (8)
அறிவதுசரிதான்கோவே அவனிடவர்க்கஞ் சொல்லும்
புரிவது ஆண்பாலிரண்டு புகழ்பெரும்பெண்பா லொன்று
நெறியிலாமேனகன்கள்வன் நிலையிலான்மனைகளில்லான்
தெறிகுவாய் பதினேழாண்டில் சீர்பெறமணமுண்டாமே. (9)
பொருந்திடு மெட்டாமாதி புண்ணியரோடுகேந்திரம்
வருந்திடாதிருக்கிலாயுள் வலிவுண்டா மீரெட்டாண்டில்
தெரிந்திடுமம்மைகாணுந் தேருமின் னிருபத்தெட்டில்
பெரும்பிணி யுண்டாய்நீங்கும் பேசுவீரிவ்வாரூமே. (10)
பலமுறும்பாக்கியாதி பலன்றனைப் பகரக்கேளும்
நலமுறுந்தந்தையோடு நாடியவர்க்க மேழாஞ்
சலந்தனில் மரணமிரண்டு சாற்றியதீர்க்க மைந்தில்
தலந்தனி லாண்பால்மூன்று சாற்றியப் பெண்பாலிரண்டே. (11)
ரண்டதில் வீர்த்தியொன்று நீடியதந்தைக் காயுள்
கொண்டதோ ரெழுபதாகும் குறைவிலா சுகவானுகும்
கண்டபத் திடத்தால்செல்வம் கருதுவோம் பூமிமூலம்
விண்டிடும் ஜீவனங்கள் வியாபாரத் தாலுமென்றே. (12)
லாபத்தின் பலனைக்கேளு நலமில்லை யற்பமாகும்
தாபமாம்பூமிமூலம் தரும்பலனதிகம்காணுள்
பாபமொன்றில்லைபீராறு பலன்பொரு ளழிலொன்றில்லை
சோபித மலைகள்தானும் சொல்லுவ ரிரண்டாமென்றே, (13)

விருச்சிகலக்கினபலன் முற்றிற்று.

தனுசுமுதலோனையின் பலன்.

சிலதனில்முதலா மோரைபிற்பாதி
தெரிவையர் ஜனித்திடிற் பலன்கேள்
கலதனிலோடை மூகப்பது கிழக்கு
கருதுவாய்வீதிதென் வடக்காம்
தலமதிலெதிர்த்த மனையிரு பிரிவு
சாற்றியகிழக்கி லாலயமாங்
குலமதி லுயர்ந்த மறையவன் வீடு
கூரலாம் வடகிழக்கென்றே. (1)

தையவாள் ஜனித்த மனையதுபூர்வஞ்
சாற்றுவாய் பெலத்த கட்டடமாம்
பொய்கையுமனையி லிரண்டென வுரைக்கும்
பூவையின் நிறமது செகப்பு
மெய்யதாமுகத்தில் மருவுமேபுண்டா
மிகுத்திடும் வெகுபுத்தி ருடையாள்
வையகமதில்சௌ பாக்கிய முடையாள்
மங்கைதீர்க்காயு சென்றறையே (2)

பிரபல மூன்றுமாதி யின்பலன்கள்
பேசிடில் பெண்ணதுமூன்று
உரமிகுமாண்பா லைந்தெனலாகு
முற்றிலுப் விர்த்தியிலிரண்டு
கரமிகுங்கர்ண பூஷணமுண்டாம்
கடினசொல் பொய்தனையுரைப்பாள்
திரமதில்மூன்றேறன் பற்றிடிலிவ்வாறு
செப்பலாமுறுதி யிதாமே, (3)

ஆகுமோநான்கோன் மதிக்குநான்காதி
யவர்திரிகோண கேந்திரத்தில்
பாகுநட்பாகூடி பெற்றுமே யிருக்கில்
பகருவரன்னை யோடைவர்
தோகையிருவ ராகுந்தந்தையர்க்குத்
தொடர்ந்திடு மகோதரவியாதி
சோகமொன்றில்லை தாய்க்கு தீர்க்காயுள்
சொல்லுவ ரின்னிலேப்பலனை, (4)

பலனிதாமைந்தா வாதியின்பலன்கள்
பாசமுள்ளவ ளம்மான்மூவர்
நலமில்லையிரண்டு மைந்தராணைந்து
நாரிய ரிரண்டென வோதுங்
குலமதிலொருவன் ஞானிபின் னொருவன்
குவலய மெலாம்புகழ் நிபுணன்
நிலையதுவாகு மைந்திடப் பலன்கள்
நிகழ்த்தும் ஜாதகியவள்தனக்கே. (5)

வேறு.

ஜாதகிதனக்குஆரோன் சாற்றிய மதிக்குவாறில்
போதமேவுபயந்தன்னில் பொருந்திடிற் பிணியொன்றில்லை
வேதனொணைத்தின்பாதை விரும்பிய முப்பத்தொன்றில்
ஆதவன்திசையில்மெத்த அவதிகளுண்டா மென்றே. (6)

உண்டதாமேழாமாதி லுபயமாய்க் கேந்திரகோணம்
நண்டதற்குடையனோடு நாடியங் கிருப்பானுகில்
கண்டிடும் புருடன்திக்கு கரியவன் திசையதாகும்
கொண்டதோர் நிறஞ்செகப்பு குறித்திடும் சமனும்ரூபம். (7)

மணமதுமுடியுங்காலம் மங்கலன் பருதியாண்டில்
குணமுள்ள புருடன்வீட்டில் கூறுவாய் சுபமாமேற்கு
பணமுள்ள மனையாந்தெற்குப் பாட்டையும் குளமுமுண்டாம்
துணைவர்க ளாண்பால் மூன்று தோகையரிரண்டாம்சொல்லே. (8)

வேறு.

சொல்லுவாய் புருடன் சத்தியவந்தன்
சுகமுளன் அதிககாமியனும்
மெல்லியமனைவி பகையுளனாகும்
விளங்கிடும் பொன்பொருளுடையான்
வல்லமையுள்ள ராஜசன்மானன்
வயதுநாற் பத்திரண்டாண்டில்
வில்லிருங் கொடியாள் மூலமன்னியரால்
விதுதிசை யடிப்பட்டு மாள்வன். (9)
மாள்வனென் றுரைத்தீ ரட்டமப்பலனைப்
வலுத்துவீ ரடியவன் றனக்கு
கோளிருநான்கு குடையவன் திறத்தில்
குணமுட னுரையாய் சரத்தில்

தாழ்விலா திருக்கில் வயதுநூறுகும்
சனிகுரு திசையிவ ராண்டில்
சூழ்ந்திடுங்கொடுமை பெருந்துயர் மனையில்
சொல்லிடும் பின்சுக மென்றே. (10)

சுகமெனுமொன்பா னுதியின் பலன்கேள்
சுயார்ச்சியப் பதிதனில்தந்தை
ஜெகம்புகழ்வாழ்வன் றந்தையோடிருவர்
செழிப்பிலை தரித்திரமடைவார்
அகமகிழ்வாழ்வாள் மாளிகை யுடையாள்
அந்தணர் குருபக்தி யுடையாள்
தொகைபெறுஞ் செல்வ முடையபுத்துணத்தி
சுகமுளா ளென்றுரைப் பதுவே. (11)

வேறு.

பார்தனில்பத்தாமாதிப் பலன்றனைப் பகரக்கேளுஞ்
சீர்பெரும்பூமிமூலம் சிறந்தசெல் வங்களுண்டாம்
நாரணிகிருபையுண்டாம் நாடிடும் புண்ணியதீர்த்த
நீரிடைதன்னிலமச்ச ரோகையு முண்டாம்சாற்றே. (12)

வேறு.

சாற்றியதோர் லாபாதிப் பலனைக்கேளுஞ்
சந்திரனுர் திசையாகும் பூமிமூலம்
போற்றியசெங் கதிர்திசையு மாகும்ஜூஷ்டப்
புத்திரனு லம்லாபம் பொருந்தும்சொல்லு
தேற்றியதோர் முன்னுன்கின் பலனைகேட்க்கில்
சிறந்த கட்டடமுண்டாம் கனிட்டசேயால்
மாற்றரியாப் பொருள்விரைய மாகுமென்று
வழுத்திடுவாய் ஜாதகியின் வண்மையீதாமே. (13)

தனுசுமுதலோரையின் பலன் முற்றிற்று.

தனுசுமிரண்டாமோரையின் பலன்.

கொடுமரத்தி னிரண்டாவ தோரைபிற்பாதிக்
கோதையவள் ஜனித்திடுவாள் கீழ்மேல்வீதி
நெடுந்தூரம் தென்திசையில் மனைகளில்லை
நிச்சயமாம் தென்கிழக்கில் விஷ்ணுகோவில்

குடங்கர்திசை தனில்ருத்திர பூமியாகும்
குறித்திடுவா யெதிர்மீனபாழ் முகப்புத்தெற்கு
விடையேறு மீசனதுகோவிலுத்தரம்
விளங்கிநிற்கு மெனவுரைப்பாய் மேன்மைகாணே. (1)

வேறு. காணுவாய் பெண்பால் ஜெனித்திடும்வீடு
கட்டட முருதியாம் பொய்கை
தோணிடும் பாகமூன்றெனலாகும்
சூக்ஷமாம் விருக்ஷமு முண்டாம்
ஊணுமெய்செகப்பு மெலிந்திடு மெய்யான்
உருங்கொடி தோன்றியே யிறப்பாள்
பூணுருந்தந்தை வர்க்கமூ விரண்டில்
பொருந்திடுந் தீர்க்கம்நான்கென்றே. (2)

வேறு. நான்கதிற்பெண்பா லொன்று நலமில்லை யன்னைவர்க்கம்
பாங்குடன் மூன்றதாகும் பக்ஷமூள்ளம்மானேகம்
தீங்கதிலில்லைதீர்க்கஞ் செல்வமும் கல்வியுண்டாம்
ஈன்றதோர் தந்தைதாய்க்கு மினியனு யிருப்பனன்றே. (2)

பிறந்திடும் பெண்பாலுக்குப் பேலமுட னுயுள்பாகம்
குறைந்திடும் வருடமிரண்டில் கொடியரோகத்தினுலே
இறந்திடுஞ் சகோதரங்க ளின்பமாய்ப் பின்னுலுண்டாம்
அறிந்திடும் பெண்பால்மூன்று ஆணதுவொன்றுங்கூறே
கூரிடும்பெண்பால்மூன்றில் குணமில்லை யொன்றுபாழ்
சீரியதாண்பாலொன்றில் சிறப்பில்லை குடியனுகும்
சேருமற்றவன்பால் பாக்கியஞ் செல்வமுமிகுதியுண்டாய்
பேர்பெறவாழ்வானென்று பேசுவாய்நந்திவாக்கே. (5)

தனுசுஇரண்டாமோரையின் பலன் முற்றிற்று.

தனுசு மூன்றாமோரையின் பலன்

வில்லதுமூன்று மோரைபிற்பாதி
மெல்லியர் ஜெனிப்பர்காண்வீதி
சொல்லியகீழ்மேல் முகப்பதுவடக்கு
சுரகுருதிசை கெங்கையுளதாந்
தொல்லையாம்தெற்குப் பாழ்மீனயாகும்
சுதனில்லை மேல்புற மீனயில்
வல்லவன்வீடு யெதிர்மீனயாகும்
மதிதிசைகிரியென மொழியே. (1)

வஞ்சியாள்ஜெனித்த மணையதுகேளும்
மன்னர்கள் மணையினேரமதாம்
பஞ்சையாங்குடிசை தந்தையினிடமாம்
பகருவா யாதீனமில்லை
தஞ்சமாம் தந்தைசுயார்ச்சிய மூளனுய்
சமசுக முடையவனுகும்
கொஞ்சியமடந்தை நிறஞ்செகப்பாகும்
குறியதோர் ரூபமாங்காணே. (2)
கற்பிலாள்பலரை ப்புணர்ந்திடும் நீலி
கணவனைக் கருதியேப்பாராள்
நற்பிலாள் குடும்ப கலகியுமாகும்
நாரிபல் லழுக்குள்ளாள் மலடி
முற்பிறப்பதனில் சிசுவைகொர்ப் பழித்த
மூர்க்கியாம் சுகமிலாள் தரித்திரி
தற்பிலாள் வார்த்தை யிடரியேபேசும்
தையலா லென்றுரைத்திடுமே. (3)
உரைத்திடுமூன்றேறன் சரந்திரந் தன்னில்
உற்றபூமக னுடன்கூடில்
பெருத்திடுமொன்பான் பெண்திருதியமாம்
பெலமில்லை ஆண்களின் விர்த்தி
தெரித்திடு மிரண்டு செல்வமாம் பின்னுல்
சிதரிடுங் குணமதொன்றில்லை
விரித்தஜாதகியாள் தனக்குப்பின் ஜெனிப்போன்
விளம்புவர் பேடியாமரசே (4)
குறிப்பதுகேளாய் அண்ணையின் வர்க்கங்
குணமில்லை யாதீனபேதம்
விருப்பமாய் தந்தை சகோதரவர்க்கம்
விளங்கிடுந் தீர்க்கமாயைந்து
நெருப்பினையுடைய மங்கையரிருவர்
நிலைதப்பு வாரதிலறுபெண்
திருத்தமா மன்னைக் காயுள்நாற்பதின்மேல்
செப்புவா ரைந்தெனத்தானே. (5)

வேறு.

கண்டிடுமைந்தாமாதி கணையினன் மணையில்நீச்சங்
கொண்டிடில் மகப்பேரில்லை குலாவியப் பெண்ணுமில்லை

கொண்டியா மாமனேகன் நோயினுலவஸ்தைப்பட்டுப்
பண்டிதன் சனிசேயாண்டி பகர்கயிறு தூக்கால்சாவன். (6)
சாகுவானுருமாதி சதிருடன் கேந்திரகோணம்
பாகுடனுபயந் தன்னில் பற்றிடில்திரத்தி லேனும்
ரோகமொன்றில்லைகெட்ட ரொணங்களு மில்லைபங்கம்
சோகமே யடைந்தால் பீடை சூழ்ந்திடும் ரொணமூந்தானே (7)

வேறு.

சத்தமப்பலன்கேள் ஜாதகிபுருடன்
சவுரியின் திசை நிறங்கருப்பு
மித்திரனெவர்க்குங் குன்மரோயுடையன்
வீதிகிழ்மேல் மண்முகப்புச்
சித்திரைபானு திசையதாந் தென்கீழ்
சிறந்தவாலியங் கெங்கையுளதாம்
இத்தகையடையா ளத்திடமணமா
மியம்பும்பத் தொன்பதி லென்னே. (8)
என்னவேபுருடன் சகோதரவர்க்க
மெடுத்துரைத் திடுதல்கேளரசே
நன்னயமாக ஆணதுமூன்று
நலமில்லை யதிலொன்று பாழாம்
உன்னியபெண்பா லேகமாமிருகண்
ஞெளியிலா வந்தகன் றனக்கு
கன்னியாள் மனைவியாகி நற்சுகங்கள்
கனபொரு ளணிபடைத்திடுவள். (9)

வேறு.

கருதியவெட்டாமாதி கனசரந்திரந்திரத்தில்நிற்க
குருதியுஞ்சரத்தினுச்சம் குணமுடண்நோக்குமாகில்
தெரிவையர் தனக்குவாயுள் செப்புவா யறுபதாகும்
பெருகியபலனிதாகும் பேசுவா னந்திவாக்கே. (10)
நந்திவாக்கின்னங்கேளும் நலமுடனுன்பானுதி
பந்தியாம்பலம்பீமோடு பலமதாய்க் கூடிநிற்கில்
தந்தையின்வர்க்கநான்கு சதிருடன் பெண்கள்மூன்று
சிந்துவதிரண்டாமற்றோர் தீர்க்கமாமென்று செப்பே. (11)
செப்புவாய் பத்தாமாதித் திரமொடுசரத்தில்நிற்க
அப்பதிக்குடையோன்எட்டி லமர்ந்திடில் ஜீவனங்கள்
தப்பிலாதடுமையாகும் சாற்றிய தொழிலால்செல்வம்
அற்பமா மென்றுமாதர்க் கறைவது திண்ணந்தானே. (12)

வேறு.

திண்ணமாம் லாபப்பலனெவ்வா றென்னில்
சிறப்பில்லை பூமியின்மூலம்

பண்ணுகைத்தொழிலால் வடதிசைலாபம்
பகர்தெய்வ பக்தியொன்றில்லாள்
மண்ணினில்விரையோன் சரத்திரமாகில்
மனையிரண் டெளதொன்று பாழாங்
கண்ணினிற் புள்ளி மந்திரமூலம்
கருதுபொன் விரையமாஞ் சிறிதே. (13)

தனுசு மூன்றுமோரையின்பலன் முற்றிற்று.

தனுசு நான்கா மோரையின் பலன்

மொழிந்திடும் தனுசுநான்கா மோரைபிற் பாதிதன்னில்
பொழிந்த மங்கையர்கள்தோன்றில் புகலுவாய்மதற்குவாசல்
அழிந்திடுமனையேமேற்காம் அக்கினி திசையில்பொய்கை
யெழிந்திடுமெதிர்த்தவீடு வீதியுங்கீழ்மேலென்னே. (1)

என்னவேகிழக்கிலாறு பேகமாம் ஜெனித்தவீடு
மன்னியகதவுமான்றும் வாழ்வதுபெருகுஞ்செல்வம்
கன்னியாள் நிறம்செகப்பு கருதுவாய்சமனும்ரூபம்
உன்னியமாலையோடு வுதிப்பளென்றுரைத்திடாயே. (2)

உதிப்பதுதந்தைவீடு வுற்றபூர் வீகமுண்டாம்
மதியுள்ளசெவ்வியாகும் மாமயிலதிகாமி
நிதியுளாளாயுள்தீர்க்கம் நீடியவாழ்வு முள்ளாள்
பதியைவிட்டகலாள்மெத்த பாக்கியமுள் ளவளாம்சாற்றே. (3)

சாற்றியமூன்றுமாதி சதிருடன்கொப்பராசி
மேற்றிட சகோதரங்கள் புகழ்பெரும் வர்க்கஞ்சொல்வோர்
தோற்றமாணிரண்டாம் பெண்பால் தொகைபொரு நான்கதாகும்
பார்த்திடுமதிலாணென்று பாவையர் மூன்றுந்தீர்க்கம். (4)

தீர்க்கவா ளடிமையுண்டாஞ் செல்வ பூஷணமுமுண்டாம்
பார்க்கநல் லன்னவர்க்கம் பகரலாமேகமாகும்
கார்க்குந்தன் னினங்களொல்லாம் கடும்பகை யாகுமாயுள்
பார்க்கவன் சனிபொன்றுண்டில் பகருவா யிரிட்டந்தானே. (5)

தாயவளரிட்டமாவாள் சாற்றிய வைந்தாமாதி
நேயமாய்க் கேந்திரகோணம் நின்றிடில்புத்திரேழாம்
காயமாம் பெண்பால்மூன்று கருதியவாண்பால் நான்கு
மாயமாங்கனிட்டனேகன் வாழ்விலாதலிவன்றானே. (6)

அலைவதுமெய்தான்கோவே அவன்றலை விதிதானென்ன
கொலையது செய்து பின்னுல் கொடுமையாய் விஷத்தால்சாவான்
கலைமதிக் காறுக்காரூன் கனசரமுபயம்நிற்கப்
பலபலபிணி ரோகங்கள்பற்றிடுங் குணமாம்பின்னே. (7)

குணமதாம் பெண்பாலுக்குக் குறித்திடும் புருடன்றிக்கு
பிணியவன் றிசையாஞ்செம்மை பெருங்குலம் சமனும்ரூபம்
குணமுளன் செல்வமுண்டாங் குறித்திடு மீரேழாண்டில்
மணமுண்டாம் பெண்பால்மெத்த மகிழ்ச்சியாய்வாழ்வதாமே. (8)

வாழ்வது வுண்டாம் பெண்பால் வளம்பெற அட்டமாதி
தாழ்விலா சரத்திலேனுஞ் சாற்றியதி ரத்திலேனும்
பாழிலா திருக்கில் தீர்க்கம் பகரலாமருபத்தெட்டாம்
ஆழிணை மடந்தையார்க்கு அரிவதிவ் வாரும்பாரே. (9)

வேறு.

பார்தனிலொன்பான் சரமுபயத்தில்
பற்றிடில் சுபருடன்குணமாய்
காரிபுத்திரரால் பாக்யமடைவாள்
நவமணியுடன் பொன்னுபரணம்
வீரியத்தந்தை சகோதரமிருவர்
மேன்மையாம் சுயார்ச்சிதமதனுல்
நாரணிகிருபை யுளன்வித்தையுடையான்
நாற்பதி லரிட்டமாம் காணே. (10)

அரிட்டமாம் பத்தாமாதியுஞ் சரத்தி
லல்லதுவுபயத்தி லிருக்க
பிரட்டுகளில்லாள் வித்தையுமுடையாள்
பெலமுள்ள தொழிலிருவிதமாந்
திருட்டதுவெண்ணுள் காரியசித்தி
செழித்திடும் பூமிகளுடையாள்
மிரட்டிடா ளெவர்க்கும் நயமொழியுரைக்கும்
மெல்லியாளெனப் புகல்வாயே. (11)

புகல்வதுலாபப் பலனெவ்வாறென்னில்
புகர்சரந்திரத்தினிலமர
துகையதுலாபம்வருந்திசைவடக்காஞ்
சொல்லுவாய் பூமியின்மூலம்
பகையுளோர்பார்க்கின் பகையுளோர்பொருளும்
பண்புடன் வந்துமேகூடும்

நிகரிலாச்செல்வம் படைத்துவாழ்செல்வி
நேசமென்னுளமுண்டென்னை, (12)
உண்டது விரையோன் சரத்தினிலாட்சி
உச்சமாய் நல்லவர்க்கூட
கண்டிடவிரையம் கட்டடமூலங்
கருதுநல்லாலய மூலம்
தொண்டர்கள் கூடும் கட்டடமூலஞ்
சூடும்நற் கருமத்தின் மூலம்
வண்டனி குழலாளிவ் விதமவனில்
வழுத்திடும் விரையஞ்செய்குவளே. (13)

தனுசு லக்கின பலன் முற்றிற்று.

மகர முதலோரைபின் பலன்

மானதில்முதலா மோரைபிற்பாதி
மங்கையர் ஜனித்திடில்வீதி
பானுமேற்காகு முகப்பது கிழக்குப்
பாரிழந் தவன்மனையருகாம்
வானுறவோங்குங் கட்டடந் தென்கீழ்
மாலவன் திசையில் நீரோடை
தேனகன்றிசையிற் பொய்கையாமேற்குச்
சிறந்திடுஞ் சிவன்கோவி லென்றே. (1)
கோவிலாம்பெண்பால் ஜனித்திடும்வீடு
குறைவில்லை தந்தையினிடமாந்
தாவுபூர்வீகம்வலுத்தகட்டடமாம்
ஜலமுள்ள கிணறதி லிரண்டாங்
கோவதுமூன்றில் பாலுள்ள திரண்டாங்
குறித்திடும் சாதகநிறங்கேள்
மேவியகருட்பு குறுகியரூபம்
விளங்கிடு மெய்யது தடித்தேதை. (2)
மெய்யதுதடித்துப் பிறந்திடும்நாரி
விதவையாமத்திப வயதில்
துய்யமேனி சோரமுடையவள் காமித்
துணைவரைப் பிரிந்தன்னிய மாவள்
வையகமதனில் நயமிலாள் பலரை

வலியபோர் தனக்கழைத்திடுவாள்
கைதனில் விரலொன் றீனமாங்கபடி
கணவனைக் கருதிடாள்காமே. (3)
கருதிடாள்குடும்பக் கலகியாமூன்றோன்
கனமுடன் சரத்தினி லுபயம்
பெருகியேயிருக்கில் சகோதரமெட்டாம்
பேசுவாய் பாவர்கள்சகிதம்
பருதியும்நோக்க நிலைப்பதுமூன்று
பராக்ரம முள்ளவராகும்
நிருதியின் திசையில் பெண்ணினுபவத்தால்
நிலைத்திடுவான் கனிட்டனுமே. (4)
குலவியவன்னி சகோதரமூன்றும்
குணமில்லை யொன்றுபாழ் பூர்வம்
நிலையில்லை கடனுல் முறிந்திடுஞ் சுயார்ச்சிய
நிலையுண்டாங் கன்றுகா லிகளுங்
குலமதில்மிஜஸ்டன் குடும்பத்தில் கலகன்
கோதையரிருவரா மவர்க்குத்
தலைமையா மன்னி தீர்க்க நற்சுகங்கள்
சாற்றிடு மன்னியின்பலனே. (5)

வேறு.

புத்திரத் தானத்தாதிப் பொருந்தியே கெர்ப்பராசி
மத்திபக்கோள்களோடு மருவியே நிற்குமாகில்
சத்துரு மகவென்றுகுஞ் சரிவர வாழ்வதில்லை
கத்தியாமிரண்டுமூன்று கெர்ப்பங்கள் நஷ்டமாமே. (6)
ஆகுமேயிருமூன்றுதி அன்புடன் சரத்தில்நிற்கப்
பாகுடன்சுபர்கள் நோக்கப் பற்றிடில் பிணியொன்றில்லாள்
தாகமாய்ச் சத்துருவீட்டில் தயங்கிடில் குடும்பந்தன்னில்
சோகமோ தரனேயகன் றுயரமாம் நஷ்டந்தானே. (7)
நஷ்டமா மரசேகளும் நலமுடனேழாமாதி
இஷ்டர்கள்வீட்டில்நட்பா யிருந்திடில் புருடன்வீதி
அஷ்டமிக் கதனில்லந்தா மவர்மீன முகப்புத்தெற்கு
கஷ்டமொன்றில்லைக் கீழ்மேல் கருதிய வீதியாமே. (8)
வீதியாம் புருடன்வர்க்கம் விளம்புவா யிருவராகுஞ்
சாதியில் மேன்மையாகுந் தந்தையின் வர்க்கம்நான்கு

சோதியாஞ் செகப்புவர்ணஞ் சுகமுளன்நெடியரூபன்
வாதியா மீனமீரெட்டில் மணமுமே யாகுமன்றே. (9)

மணமதுமுடிந்த வாரமாண்டினில் புருடன்ரூனும்
பிணியினு லரிட்டமாவான் பேசியவெட்டாமாதி
குணமுட னுட்சியுச்சம் குறைவிலா திருக்கவாயுள்
உணர்ந்திடும் வருபத்தைந்து வயதென வுரைக்கலாமே. (10)

உரைக்கலா மொன்பானுதி வுற்றதோ ருபயந்தன்னில்
பெருக்கவே பாவர்பார்க்கப் பெலமில்லை தந்தைவர்க்கம்
உருக்கிடு மீமகனுகும் வுற்றபூர் வீகமுண்டாம்
பொருக்கிடா ரோகனுகும் பொருளது மிகவுண்டென்றே. (11)

என்றதோர்பத்தாமாதி யேகனுய் திரத்தில்நிற்கில்
கன்றுகாலிகளிஞுனுங் கருதியப் பூமியானுங்
கண்டுரை சோத்தானும் கனபொருள்சேர்க்கை யுண்டாய்
நன்றதாய் வாழ்வாள்மங்கை நலம்பெறப் புவியில்தானே. (12)

வேறு.

இச்சையாம் லாபப் பலனெவ்வாறென்னி
லியம்பும் லாபத்திஞு திபனும்
உச்சமாய் ஜென்ம லக்கினமேறி
உத்தமர் பார்த்துமே யிருக்கில்
மச்சமாமிட-து துடைதனில் லாபம்
வரும்திசை கிழக்கு தென்மேற்காம்
அச்சமில்லாள்காண் ரூபியாம் லாபம்
அடைகுவாள் கலகனு மென்னே. (13)

கலக்கமாம் விரையோன் மூவிரண்டெட்டுக்
கருதுமுன்னுன் கினிலமர்ந்து
நலக்கமாய்ப்பாவர் பார்த்துமே யிருக்கில்
ந விவோம் நாரியின் பலன்கள்
உலக்கையா லடிபட் டிரண்டதாய் விரல்க
ளொடிந்திடும் பூமியால் வியாச்சியம்
குலுக்கவே பொருள்கள் சேதமாமீனகள்
குறித்திடு மிரண்டெனலாமே. (14)

மகரமுதலோரையின் பலன் முற்றிற்று.

மகர மிரண்டாமோரையின் பலன்.

மகரமதிலிரண்டாவ தோரைபிற்பாதி
மங்கையர்கள் ஜெனித்திடுவர் வீதிகேளும்
பகரலாந் தென்வடக்கு முகப்புதெற்குப்
பலமில்லை யிருபக்க மணையும்பாழாம்
நிகரில்லா தைரியவான் மணையாந்தெற்கு
நீரில்லாப் பொய்கையது கிழக்கேயுண்டாம்
நகரெல்லாம் துதித்திடுங் கணேசன் கோவில்
நாரியிவள் ஜெனித்தமணைக் கருகிலுண்டே. (1)

அரிவையருந் ஜெனித்தமணைப் பிதுராதீன
மாகுமதில் பிரிவதுவு மூன்றதாகும்
பிரியமுடன் தவத்துதித்த மடந்தை யாகும்
பேதமில்லை நிறஞ்செகப்புக் குறியரூபம்
தரணியில்பேர் விளங்கிடுவாள் தீர்க்கமுள்ளாள்
சற்குண முள்ளவள் தர்மசிந்தை யுள்ளாள்
கருதுமொழி தவரிநடாள் காமமுள்ளாள்
கன்னியதி ரூபமுள்ளாள் கற்புள்ளாளே. (2)

உள்ளபிதா வன்னியர்மேல் பக்ஷமுள்ளாள்
ஒருநாளுஞ்செய்நன்றி மறக்காச்செல்வி
கள்ளமொடு பொய்சூது மோசம்வாது
கனவிலிவை யொருநாளுங் கருதாள்பாரு
வெள்ளிபாத் திரங்களுள்ளாள் விவேகமுள்ளாள்
வித்தையுள்ளாள் நயவார்த்தைகளுமேயுள்ளாள்
ஒள்ளியசெள பாக்கியமுள்ளா ளொழுக்கமுள்ளாள்
வுரைத்திடுவீர் பெருங்குடும்ப முடையாளென்றே. (3)

வேறு.

முடையவளாகும் சகோதரப் பலன்கள்
மொழிந்திடும் திருதிய மாகும்
கடையினிற் பிறக்குங் சகோதரனேகன்
கருதிடும் பிறவியே குருடாம்
அடவுடன் மிகுந்த பூஷணமுண்டாம்
ஆளடிமை களுமே புண்டாம்
திடமுள்ள வர்க்கந் தேருவ திரண்டு
செப்புமெய் பெலன்வீர்த்தி யுளரே. (4)

காரிகையன்னைப் பலனெவ்வா றென்னில்
கலைமதி தனக்குநான் குடையோன்
பாரினிலாகூ யுச்சமாய் க்கேந்திரம்
பற்றிடில் தீர்க்கமோ ரேழாம்
சீர்பெற விருப்பர் பெண்ணது யிரண்டு
செழித்திடு மன்னை தீர்க்காயுள்
ஆருமூவெட்டு மூப்பதோ டிரண்டி
லரிட்டடம்போல் பெருங்கண்டமூளதே. (5)
கண்டங்கள்வந்து நிவர்த்தியுமாகும்
கல்விவாகனம் பந்துவுண்டாம்
நண்டதின் றிசையிலுயர்ந்தகட்டடமாம்
நற்சுகம் பூமிக ளுண்டாம்
கொண்டவைந்தா தி பலன்றனைக்கேளும்
குணமுள்ள மாமன்மாருபயம்
மண்டிடும் புத்திராள் தீர்க்கமா ணிரண்டு
மங்கையர் மூன்றென மொழியும். (6)
மொழிந்திடு மாரேழன் மதிதனக் காரேழன்
முப்பயகேந்திர திரிகோணம்
தொழிசராராசி சுபருடன் சகிதம்
சோரமங்கில்லை சத்துருக்கள்
பழியில்லை பொணத்தின் பாதையுமில்லை
பற்றிடும் பிணிகளுமில்லை
இழிவதா மவஸ்தை அவமிருத்துகளு
மில்லையென்றியம் பிடும்பல்லோ. (7)
பலமுடனேழோன் சரமுடன் றிறத்தில்
பற்றிடில் சுபருடன் பெலமாய்
நலமுளபுருடன் திக்கது கிழக்கு
நடையெமன் வீதிதென்வடக்கு
குலமதில்மேன்மையுடையவன் ரூபம்
குறித்திடில் நிறஞ்செகப்பழகன்
நிலமதி லீரைந் தொன்றினில் சுபமாம்
நிகழ்த்திடும் தாணியா ளரசே. (8)
வஞ்சகமில்லான் சகோதரவர்க்கம்
வனிதையர் மூன் றிரண்டாணு

நெஞ்சினில் நினைத்தகாரியமுடிப்பன்
நிலையுள்ள மாதின மிரண்டாம்
அஞ்சிடாவனெவர்க்கும் சகோதரனெகன்
அன்னிய மாதரோடடுத்துக்
கொஞ்சியேபொருள்கள் பாக்கியமெல்லாம்
குறைத்திடு மோகனென் றுரையே. (9)

வேறு.

எட்டினுக் கெட்டாமாதி யிருப்பது சரமேயாகில்
திட்டமாய் வயதுபெண்பத் திரண்டென மொழியலாகும்
கட்டுடன்நாற்பத்தைந்தில் கன்னியாள் தனக்கோர்கண்டம்.
தூட்டெனக்கண்டுபின்பு சுகமுண்டாங் குரைத்திடாயே, (10)

நன்னியபாக்கியாதி நலமுடன்கொர்ப்பராசி
பன்னியதந்தைவர்க்கம் பகருவாயிரண்டதாகும்
கன்னியாளொன்றும்தந்தை கென்னியமுள்ள செல்வன்
அன்னியதேசந்தன்னி லரிட்டமாம்தந்தைநாற்பான். (11)

கணிதமாம்பத்தாமாதி கலீமதிதனக்குப்பத்தோன்
ஆணிவுடன்பெலமாய்நிற்க தொழிலுத்தியோகத்தாலும்
குணமிகும்பூமியாலும் குறைவிலாபாக்கியமுண்டாம்
மணமகிழ்கீர்த்தியோடு மாமயில்வாழ்வதாமே. (12)

மாமயில்தனக்குலாபம் வருந்திசைவுரைக்கக்கேளும்
பூமகனமச்சன்திக்கில் பொருந்திடும்பூமியாலும்
ஆமிகுமன்னராலும் அதிகலாபங்களுண்டாம்
பூமகளருள்மெஞ்ஞானப் புண்ணியமுமிகவுண்டென்னே (13)

வேறு.

உண்டதுவியத்தோன் மதிக்குமுன்னன்கோ
ணுறுஞ்சர கேந்திரமுபயம்
கண்டிடநலலோர் சகிதமங்கிருக்கில்
கருதுவாய்மனைபது நான்காம்
தெண்டமொன்றில்லை பூமியின்மூலம்
சிறிதுபொன் விரையமங்குண்டாம்
துண்டதுற்செய்கை செலவிலாள்சயன
சுகமுளாள் பதவிவீடடைவள், (14)

மகரமிரண்டாமோரையின்பலன் முற்றிற்று.

மகர மூன்று மோரையின் பலன்.

காசினிமீ துமூன்று மோரைபிற்பாதி
கன்னியர்க ளுதித்திடுவர் கருதக்கேளும்
வாசமுள்ள மணிமுகப்பு வடக்குவீதி
வழுத்தலாந் தென்வடக்கு வெதிரிலாரல்
தோஷமுண்டாந் தலையில்லா வீடாமேற்குச்
சுந்திரனு ராலையங்காண் நிருதிதிக்கில்
பாசமுள்ள தென்பக்கஞ் சித்திரவீடாம்
பாகமதில் நான்கென்று பகரலாமே, (1)

பகரலாந் தென்கிழக்கில் கணேசன்கோவில்
பெலமுள்ளக் குளமுண்டாந் தோப்புமுண்டாம்
அகம்பாழா மக்கினியா ல்ழிந்தவில்லம்
ஆண்டளப்பான் றிசைதோ ணும் பிறந்தநாரி
செகமறிய பிறந்தவிடந் தந்தைவீடாம்
செழிப்பான புதுமனையாங் கிணறுமுண்டாஞ்
சுகமுடையாள் நிறங்கருப்பு நெடியரூபம்
துர்க்குணமுள் ளவள்சோர ஸ்திரீயுமாமே. (2)

அறமில்லாள் சொற்பவித்தை யுடையாள்காமி
அழகுள்ள புருடரின்மே லிச்சையுள்ளாள்
திறமில்லாள் வுயர்நெற்றிப் பூணைக்கண்ணுள்
செப்புமொழி தப்பிடுவள் செல்வமுள்ளாள்
உறவுள்ளாள் கூந்தலதி நீளமுள்ளா
ளுள்ளன்பில்லாள் பகராய்ப் பேசவல்லாள்
பிறந்திடுங்கா லந்தன்னி லன்னைக்கன்னைப்
பேதகமாய்க் கிணற்றினில் வீழ்ந்திறப்பாள்காணே. (3)

வேறு.

ஆணதுமூன்று சகோதரவர்க்கம்
அரிவைய ரைந்ததில் தீர்க்கம்
தோணுமாணிரண்டு பெண்ணதில் மூன்று
சுகமுண்டாங் கனிட்டபெண்றனக்கு
ஊணமாமிடக்கண் பாக்கியமுள்ளாள்
வுற்றவாளடிமைபு முள்ளாள்
பூணுவாள்நல்ல பூஷணம் பொருள்கள்
பொருந்தியே வாழ்வளென் றுரைக்கும். (4)

வந்தநான்கிடத்தின் பலன்றனைக்கேளும்
மதியவன் றனக்கு நான்காதி
சுந்தரமாகக் கேந்திர கோணம்
சூழ்ந்திட சுபருடன் பெல்மாய்
பந்துகளுண்டா மன்னீதீர்க்காயுள்
பால்பசுக்கள பூமிபுளதாம்
விந்தையாம்வர்க்கம் பெண்களோரைந்து
விளங்கிடுமாண் பதிமூன்றே. (5)

வேறு.

சித்தமென்ற வைந்திடத்திற் குடையோன் கேந்திரம்
சிறந்திடப்பால் மதிதனக்கு ஐந்தாமாதி
மித்திரர்களுடன் கூடிவுச்சம் பெற்று
விளங்கிடுவா ரம்மான்கள் நிதியுள்ளோராய்
புத்திரர்க ளிருவருண்டாம் பெண்பாலொன்று
பேதமில்லை வித்தியுடன் தீர்க்கமுண்டாம்
புத்தியுளன் கவிவல்லோ னுகும்ஜேஷ்டன்
புகழுண்டாம் புவியெங்கும் மொழிவர்தாமே. (6)

வேறு.

பசியெனவாரோன் மதிதனக் காரோன்
பற்றிய விடம் சரமாகில்
வசமிலாக்காரி திசைதொகை யாண்டில்
வரும்பிணி சோபஞ் சத்துருவால்
நிசமூட னுபய ராசியில் வலுவாய்
நின்றிடில் குணமதாம் பலன்கள்
சசிதிசைநாற்பான் வயதில் சத்துருவின்
தனங்கிடைத் திடுமெனச் சாற்றும். (7)

சாற்றிடுமேழா மாதியுஞ் சரத்தில்
சார்ந்திட சுபர்களோ டடுத்து
போற்றிடும் புருடன் திசைவடகிழக்கு
பொருந்திய நிறங்கருப்பாகுங்
காற்றடிமம் வீழ்ந்தொரு காரணங்
கனமணிப்பெரும் பொருளுடையான்
தேற்றமால் திசையி னுண்டினிற் சுபங்கள்
சிறப்புடன் நடந்திடு மிரண்டே, (8)

வேறு.

தக்கவெட்டிடத்தோன் கேந்திரஞ் சரத்தினி லுச்சம்பெற்றுப்
பக்குவமாகநல்லோர் பார்த்துமே நிற்பாராகில்
திக்கெனவாயுள்தீர்க்கம் செங்கதிர் நீசமாகில்
துக்கமாய்முப்பத்தெட்டில் தூண்டினுல் மரிப்பாளென்றே. (9)

வேறு.

மாலவனுன வொன்பதாமாதி
மதிதனக் கொன்பதாமாதி
மேலவரோடு கேந்திரகோணம்
விரும்பியே நின்றிடிற் பலன்கேள்
ஞாலமீதன்பர்க் கினியனும் தந்தை
நலமுடன் சிறந்த பாக்கியனும்
சீலமாய்வித்தை தீர்க்கநல்லாயுள்
திரள்மணி ஞானவானென்றே. (10)

ஞானவானறிவிற் சிறந்த நற்குணவான்
நரைமணிக் கேழிடத் திபன்
தானமாமுபயஞ் சரத்தினில் வலுவாய்
சல்லியனுடன் கலந்திருக்கில்
வானுதத்தொழில்கள் பூமியால் செல்வம்
வரும்வியா பாரத்தினுலும்
ஈனமேயுடையா ளறமதை மனதி
லெண்ணிடா ளென்று மிப்பலனே. (11)

வேறு.

சொல்லியலாபத்தாதி சுபருடன் திரத்தில்நிற்க
மெல்லியாள் தனக்குலாபம் வரும்திசை விளம்பக்கேளும்
புல்லியவுதிரன்றிக்கில் பூமியால் பெருகுஞ்செல்வம்
நல்லுமன்னியர்களாலும் நாடிடும் செல்வமென்றே. (12)

நாடியவிரையத்தாதி நலம்பெற வுபயராசி
தேடும்பூமியினுல்செல்வம் சேதமாம் வழக்குதன்னுல்
வாடிடுமுகங்கள்சத்துரு வண்டராள் விரையம்பாவர்
கூடியங்கிருக்கி லிவ்வாறு கூறுவ தருதியாமே. (13)

மகர மூன்ரு மோரையின் பலன் முற்றிற்று.

மகரம் நான்காமோரையின் பலன்

வந்திடுமகரம் நான்காமோரை
வழுத்தும் பிற்பாதி யின்பலன்கள்
சுந்தரமீனாம் வீதிகீழ் மேற்குச்
சூரியன் றிசைமுகப் பெதிரில்
அந்தரிக் கோவிலாலய மாகும்
அதற்கருகினி லொருபொய்கை
சந்ததியற்ற மனையது வடக்கில்
தனித்துதானிருக்கு மென்றுரையே. (1)

நிருதியின்மூலை கனத்திடிந் தோப்பு
நிசாகரன் திசையில் நீரோடை
பருதியினீச்ச மனதிசை தன்னில்
பகருமேவாம் பிசாசுசூழ் மாய்கை
கருதியேவுதித்த மடந்தையின் ரூபம்
கறப்புமெய் கொடிசுற்றி வுதிப்பள்
திருகியகரமாம் விரலது ஆறு
செப்புவா யின்னிலைப் பலனே. (2)

தந்தையின்வர்க்கம் சாற்றுவோமிருவர்
தனித்ததி லொருவ னன்னியமாம்
முந்தியப்பூர்வம் விர்த்தியோன் றில்லை
மொழிந்திடு மிந்திரன் திசையாஞ்
சிந்தையிற் கவலையுடையன் சுயார்ச்சியஞ்
சிறந்திடும் செல்வமுள் ளவனும்
விந்தையா மம்மான் வர்க்கமு மிரண்டு
விளங்கிடுந் தீர்க்கமா மென்மேற. (3)

வேறு.

இவ்விதக்குறிகளோடு யின்பமா யுதித்த மாது
கவ்வியவாண்டிரண்டில் கடுகிய ஜலரோகத்தால்
அவ்விடமம்மான்வீட்டி லரிட்டமாந் துணைவர்பின்னும்
இவ்வுல கதனி லெழுட் டியம் பலாம் நந்திவாக்கே. (4)

மகரம் நான்காமோரை லக்கின பலன் முற்றிற்று.

கும்பமு தலோரையின் பலன்

சாடியில் முதவாமோரை பிற்பாதி
தையலர் பிறந்திடில் வீதி
கூடுமுக்கட்டுக் கிழக்குமேல் வடக்குக்
குறித்திடு முகப்பது வடக்கு
மாடதின்றிசையில் ஈசனுலயமாம்
மருவிடு மெதிரினில் பொய்கை
வாடிடுமேற்கு மனையது பாழாம்
வம்மிசம் நாஸ்தியா மென்றே. (1)

என்னவேதெற்குப் பாழ்கிணறுண்டா
மிறையவன் றிசையில் நீரோடை
கன்னியாள் ஜெனித்த மனையது பூர்வங்
கருதிடுந் தந்தையி னிடமாம்
அன்னியர்மூவ ரருகினிலிருப்பா
ரரிவையும் ஜெனித்திடுங் கால
பன்னிய செகப்பு நிறம்சமரூபம்
பகர்ந்திடு மிடப்பினில் மருவே. (2)

மருவதுண்டாகும் நாரிபின் குணங்கள்
வழுத்துவோம் வஞ்சக மில்லாள்
திருவதுவாச முடையநற் குணத்தாள்
செல்வியா நன்றியை மறக்காள்
பெருகுசௌபாக்கிய வதிகற்பு வுடையாள்
பேதமில்லா ளறமுடையாள்
கருவதோரேழில் மணந்த காதலனைக்
கருதுவீ ரிழந்திடு வாள்காண். (3)

வித்தையிலற்பம் பெருங்குடும்ப மூள்ளாள்
மெல்லிய குரலினுல் நெற்றி
சித்தினிமூன்றும் பிரையது போலாம்
சீருடை யவளழ குள்ளாள்
புத்திரருள்ளா ளதிகாம மூள்ளாள்
புண்ணியவதி புருடனுக்கு
சித்தம்மேலால் மிகுந்த பயபக்தி யுடனே
செய்வள்காண். பணிவிடையென்றே. (4)

அங்கது மூன்றின் சகோதரப் பலன்கள்
அறிவது மூன்றிடத்தாதி
திங்களின் றனக்குத் திரிதியத்தாதி
சேர்ந்திவர் சரந்திரமாகில்
மங்கையர் நான்கு மூவிரண்டாண்கள்
வழுத்தலாம் தீர்க்கமென்றவனில்
பங்கமொன்றில்லை ஆடையா பரணம்
பாக்கியமுள்ள தென்றுரையே. (5)

உறைந்த நான் காதிமதிக்கு நான்காதி
உற்றகேந்திர திரிகோணம்
நிறைத்திடிற் செல்வமிகுதியாஞ் சுகங்கள்
நிலமனை பந்துக கணங்கள்
குறைந்திடா பிரைபோல் வளர்ச்சியா மிவைகள்
கூரிய வன்னியோ டைவர்
மறைந்திடு மொருபெண் ணன்யரோ டடுத்து
மற்றது தீர்க்கவிர்த்தி யென்னே. (6)

ஐந்திடத்திபன் பெலமதாய்க் கெர்ப்ப
மமர்ந்திடில் புண்ணிய ருடனே
வந்திடுமம்மா னேகமாஞ் செல்வன்
வரும்பக்தி புத்தியு முள்ளான்
சுந்திதி தனக்குத் திருதியம் பெண்பால்
சாற்றிடு முபயமாங் கெர்ப்பம்
சிந்திடும் புத்திராள் தீர்க்கம் நல்லாயுள்
சிறந்தசன் மார்க்க முள்ளவரே. (7)

உள்ளதோ ராறுக் குடையவனோடு
உடுபதிதனக்குமே யாரோன்
கள்ளமில்லாம லிவர்கள் கேந்திரத்தில்
கனமுட னிருந்திடில் பலன்கள்
தெள்ளிய சோரம் ரொணமுடன் பிணிகள்
சிதரிடு மணுகிட சுபமாம்
உள்ளநாள் வரையில் மெய்பிணி யில்லா
ளுருஞ் சத்து ந ஞசமாமென்றே. (8)

சுகந்தருமேமோன் சரந்திரந் தன்னில்
சூழ்ந்திட சுபருடன் பெலமாய்

அகமனமகிட்சி மணமுன்னன் கிரண்டி
லசுரமந் திரிதிசைப் புருடன்
செகந்தனில் வடக்கு முகப்பு தென்வடக்கு
செப்புவர் வீதியா மருகில்
பகையுளோர் மனையாம் புருடனின் வர்க்கம்
பகருமா னிரண்டு பெண்மூன்றே. (9)
கனமனை யுள்ளோன் நிறஞ்செகப்பாகுந்
கருதுவன் வித்தைமென் மேலும்
இனமுள னுகும் தக்கசெல் வீகன்
இந்திர திசைப்பூர்வ நிதியாஞ்
சினமிலா னுரோன் பலனெவ்வா றென்னில்
செழுமதி தனக்கிரு னன்கோன்
மனமுடன் நல்லோருடன் வலுவாகில்
வழுத்தலாந் தீர்க்கமொன்பதுவே. (10)
ஒன்பதமா தி சரமுட னுபயம்
உத்தம ருடன்பெலத் திருக்கில்
அன்புடன் தந்தை பாக்கியமுடைய
னருங்குரு சிவபக்தி யுளனுந்
தென்பதாம் வர்க்கந் தந்தையோடிருவர்
தெரிவை மூன்றென்னவு மாகும்
இன்பமாந் தீர்க்க வயதறு பதின்மே
லெட்டி ரண்டிது நிலையாமே. (11)
ஆகும்பத் ததிபன் சரதிராசி
யமர்ந்திட மதிக்குப் பத்தாதி
வேகமாய்க்கேந்திர கோணத்தில் பெலமாய்
விளங்கிடப் பூமியின் மூலம்
பாகுசேர் மொழியாள் தனக்குமே செல்வம்
பலத்திடுந் கன்றுகாலிகளும்
தோகையர்க்கூட்ட மிரக்கமெஞ்ஞானம்
சொலித்திடும் தெய்வபக்தியுமே. (12)

வேறு.

என்னவே லாபத்தாதி யிடரிலா வுபயராசி
தன்னிலே சுபர்களோடு சார்ந்திட வாக்கியாக
கன்னிமை திசையில்லாபம் கதித்திடுஞ்செல்வமுண்டாங்
கென்னியமாகநாரி கேடிலா வாழ்வதாமே. (13)

வாழ்வதுவினிரெண்டாதி வருந்திர முபயமேறில்
தாழ்வதொன்றில்லைவீடு சாற்றுமைந்தாரதாகும்
பாழதொன்றில்லைசெல்வம் பகருநற்செலவேயாகும்
ஆழிசூழுலகின்மீது அரிவையர் பலனிதாமே. (14)

கும்ப முதலோரையின் பலன் முற்றிற்று.

கும்பமிரண்டாமோரையின் பலன்.

பாசமுள்ளக் குடமிரண்டா மோரைபிற்பாதி
பாவையர்க ளுதித்திடுவப் பலனைக்கேளும்
நேசமுட னிருபக்க மனையுஞ் செல்வம்
நிபுணன்திசை மனைமுகப்புக் கீழ்மேல்வீதி
வாசமுள்ள தென்கிழக்கில் மாந்தோப்பாகும்
வடதிக்கில் ருத்திரனர் பூமியாகும்
நாசமுள்ள மனையாகு மெதிர்த்தவீடு
நலமில்லைப் பின்புறத்தில் காலியாமே. (1)
ஆலுண்டாம் ஜனித்தமனைக் கருகேபொய்கை
அகம்தந்தைக் காதின மாகும்நாரி
தாலமதில் நிறஞ்செகப்புக் குறியரூபம்
சாற்றிடுவாய்க் கொடிமாலை சுற்றிதோன்றும்
தூலசரீர முடையாள் குளிர்ந்த சொல்லாள்
சுறுசுறுப் பில்லாள் கணவன் மொழியைத்தள்ளாள்
சீலமுடன் பொருமையுள்ளாள் தீர்க்கமுள்ளாள்
செங்கண்ணுள் பதிவிரதைத் தெரிவிப்பாமே. (2)
தெரிவதுகே ளிரண்டிடத்தின் பலன்கள்பெண்டோன்
திராசி வுபயத்தில் தோர்ந்துநிற்க
புருவமது வுயர்ந்திருக்கும் புண்ணியசாலி
புராண காவியமறிவாள் குடும்பநல்லாள்
அரிவையிவ ளழகுள்ளாள் நெறியுமுள்ளா
ளன்னியர்மேல் பக்ஷமுள்ளா ளறமுமுள்ளாள்
புருடனேய தெய்வமெனத் துதித்துவாழும்
பூவையிவ ளாகுமென்பர் புவியின்மீதே. (3)

வேறு.

திட்டமாய்மூன்றுக் குடையவன் பெலமாய்
திரமுடன் சரத்தினில் நல்லோர்

ஓட்டியேயிருக்கில் சகோதரவர்க்க
மூரைப்பது நவமதே யாகும்
கட்டமாய் தீர்க்க மானது மூன்றுக்
கன்னியர் நான்கென வோதும்
குட்டையா மொருவன் களத்திர மிரண்டுக்
குணமில்லா னென்றுரைத் திடுமே. (4)

மாதருவர்க்க மறிவதைக் கேளும்
மதிக்குநான்காதியும் திரத்தில்
தீவினையின்றி சுபருடன் கூடிச்
செழித்திடிற் சகோதர மூன்றும்
மேவிடும் செல்வம் கனத்த மண்மனையாம்
மிகுசுகம் நிறைந்த பாக்கியமாம்
நோவிலாளன்னை தீர்க்கமா மிருபான்
நுவல்ஜல கண்டமா மென்றே. (5)

கண்டமென் றுரைத்தோம் நிவர்த்தியா மைந்தோன்
கனதிரி கோணமாய் சரத்தில்
மிண்டிய வுபயராசியி லிருக்கில்
விளங்கிடும் புத்திரா ஸிரண்டாம்
வண்டனிமாத ரைந்தென விளங்கும்
மறைந்திடு மதிலொரு பெண்காண்
பெண்டனை விட்டுத் தனியனு யம்மான்
பேதமா யிலவனென் றோதே. (6)

ஓதுவதாரு மாதியும் திரத்தில்
வுபயராசி களினில்மருவ
பேதமொன்றில்லை நோய்நொடி யில்லாள்
பேசிய ரொணங்களு மில்லாள்
சூதகமான மவஸ்தையு மில்லாள்
சோரமு மில்லை பாவர்களும்
ஆதவன்காரி யிவர்களி லொருவர்
அணுகிடில் பெலன்குறைத் திடுமே. (7)

போகமாமேழோன் மறையவன் வீட்டில்
பொருந்திட சுபருடன் பெலமாய்
வரகுள புருடன் வடதிசை தனவான்
மனமுகப் பருதியின் றிசையாம்

சோகமொன்றில்லை வீதிகீழ் மேற்குச்
சுயார்ச்சிதப் பொருள்மிக வுண்டாம்
பாகமாணிருவர் குருதிசை யாண்டில்
பகருவீர் மணமெனக் காணே. (8)

பெருந்துயரென்ற வெட்டினுக் குடையோன்
பேதமில்லா சுபர்மனையில்
வருந்திரசரத்தி லமர்ந்திடி லாயுள்
வழுத்துவ தருபதோ டேழாம்
கருந்துமுப்பதின்மே லிரண்டில் ரணத்தால்
கண்ட மொன்றுளதுபின் ஞற்பான்
அருந்தவமுனிவர் குருவின்காரகநோய்
அணுகிபின் குணமெனப் படுமே. (9)

தந்தையின்பலனை சாற்றிடக் கேளுந்
தவமெனும் பாக்கியாதிபதி
விந்தையாஞ் சரத்தி லுபயத்தி லேனும்
விளங்கிட சுபருடன் பெலமாய்
சுந்தரமுள்ள மனைபொரு ளுடையான்
சுகமுளன் றந்தையை டைவர்
சுந்தரியில்லை வர்க்கங்கள் பெலமாஞ்
சோதிடனுமதி லொருவன். (10)

உத்தியோகமெனும் பத்தினுக் குடையோ
னுயர்பெரும் சரந்திரம் தன்னில்
சித்தியாய் வலுத்து சுபர்கள் கண்டிருக்க
சேர்ந்திடும் பூமியால் தனங்கள்
உத்தரத்திசையில் கன்றுகாலிகளு
முறுதியாந் தெய்வபக்தி யுளாள்
நித்தமு மிரக்கமுடன் றர்மம் புரியும்
நெறியுள்ள நாரியென் றுரைக்கும். (11)

குந்தியின்போ பதிஞென்றுக் குடையோன்
குணமுடன் திரத்தினி லுபயம்
வந்தவனிருக்கில் நாரியர் தனக்கு
வக்கிரன் விண்மணி திசையில்
விந்தையாம்பூமி யரசர்கள் மூல
மிகுத்திடும் பெரும்பொருள் லாபம்

சுந்தரிதனக்கு யிடது பாரிசத்தில்
தோன்றிடு மச்சமொன் றென்னே. (12)
ஜாதகிதனக்கு விரையத்தின் பலன்கேள்
தரைமிசை பனிரண்டுக் குடையோன்
போதமேவ நல்லோருடன் கெர்ப்பராசி
பொருந்திடில் கட்டட மூலம்
வாதனையில்லை சுபகர்ம மூலம்
வரும்பொருள் விரையமா மென்க
ஓதுவதிவ்வாருகுஞ் சாடிரண்டா
மோரைபிற்பாதியின் பலனே. (13)

கும்பமிரண்டாமோரையின் பலன் முற்றிற்று.

கும்ப மூன்றுமோரையின் பலன்.

கும்பத்தின் மூன்றுமோரை பிற்பாதிக்
கோதையர் பிறந்திடில் வீதி
அம்புவிமீது கிழக்குடன் மேற்கு
அகமுகப் பதுரவி நிலையாம்
வம்புக ளுள்ளப் பகையுளோர்வீடு
வழுத்திடு மேற்கெதி ராரல்
நம்புமன்னவர்கள் மனையது தெற்கு
நாடிடு மேற்கி லாலயமே. (1)
ஆலயமுண்டாம் ஜனித்திடும் வீடு
அம்மான்க ளிடம்பூர்வ மாகும்
சிலமாமனையில் பொய்கையு முண்டாம்
சிறந்த கட்டடமது வாகும்
சாலவுமனையின் கீழ்புறந் தன்னில்
சார்ந்திடுங் குப்பைமா விருகூடம்
மேலொரு கோவிலு லுண்டது வரசே
விளங்கிடா தெனவுரைத் திடுமே (2)
உரைத்திடுந் தந்தை நிலையது பூர்வம்
உதயனுர் திசை பொருளுண்டாம்
விருத்தனும் தந்தை சகோதர மூவர்
விளங்கிடா வதிலொரு பெண்ணுள்

குரித்திடும் தந்தை நிலையுள னுகுந்
குணமுளன் மடந்தையி நிறங்கேள்
கருத்திடு மெய்யாள் முகந்தினில் மருவு
கண்ணதொன் றீனமாம் பிறக்கில் (3)

வேறு.

குடமது மூன்றுமோரைக் குறித்த பிற் பாதிதன்னில்
திடமிட னுதித்தமாது திறமில்லை வாயுளற்பம்
படமுடன் வயிறு போக்கால் பகர்ந்திடு மாண்டிரண்டில்
மடமலரிட்ட மென்று வழுத்திடு நந்திவாக்கே (4)

கும்பமூன்று மோரையின்பலன் முற்றிற்று.

கும்பம் நான்காமோரையின் பலன்

நாடியக்கும்ப நான்காவ தோரை
நவிலும் பிற்பாதிபின் பலமேகள்
தேடியவீதி தென்வடக் காகுஞ்
செப்பிய முகப்பது மேற்காம்
வோடையுங் கிழக்கு யெதிர்மனைப் பாழு
வுரையுமா லாலயம் வடக்காம்
மேடையாம் வடக்கு நான்காவ தில்லம்
வேந்தனுர் திசைருத்திர மனையே (1)

மனையதாம் பெண்பால் ஜனித்திடும் வீட்டில்
வளமிலாக் கன்னிகை யொன்றும்
வனமெனவிருக்ஷ மனைதனி லுண்டாம்
மங்கலன் திசைதனில் தந்தை
தனிமையாய் நாற்கால் தேடியே சென்ற
சமயத்தில் ஜனனமாம் நாரி
பெனிதமெய் செகப்பு வயிற்றினில் மருவு
பிரித்திடு நெடியரூப மென்னை (2)

ரூபமாந் தெரிவை ஜனித்திடும் வீடு
நுவலும்வோர் தந்தையி னிடமாம்
தாபித மிரண்டால் பல்லழுக் குள்ளாள்
தரைமிசை வித்தையொன் றில்லாள்

கோபமுன் னுண்டாங் கடினசொல் லுள்ளாள்
குருகிடு மூக்கி கண்ணுள்ளாள்
ஆபத்தி லுதவாள் குடும்பத்தி லழிவு
அதிர்ச்சியாய் நடக்குமா டவளே. (3)

வீரியமெனு மூன்றுதியும் திரத்தில்
விளங்கிட சகோதர வர்க்கம்
பார்தனில் மூன்றுண் விர்த்தியி லிரண்டு
பற்றிய பெண்ணது நான்கு
நாரியரொன்றில் மத்திப வயதில்
கலமிலா வமங்கலி யாவள்
தேரியகர்ண பூஷணம் பொருள்கள்
சிறப்பில்லை ஜாதகிக் கென்றே. (4)

என்றநான்காதி மதிக்கு நான்காதி
யிடரிலாச் சரத்தினில் திரங்கள்
நின்றிடிலன்னை வர்க்கமோ ரிரண்டா
நிலையதி லேகம்மாந் தீர்க்கம்
கன்றுடன்பூமி சுகமது வுடையாள்
கண்டமீ ரொன்பதிற் கனலால்
துன்னுசெய் மால்பொன் திசைதொகை யாண்டில்
சொல்லு மாரகமன்னை தனக்கே. (5)

மாரகமூண்டா மைந்தினுக் குடையோன்
மதிதனக் கைந்தினுக் குடையோன்
தாரணிலுபயம் சரத்தினில் வலுவாய்
சார்ந்திடில் சுபர்களோ டடுத்து
சீரதாய் மூன்று மைந்தர்க ளுண்டாஞ்
சிறந்திடும் பாக்கிய மூளராய்
கோரிய வம்மான் வர்க்கமொன் றில்லைக்
குறித்திடும் பலனிது வாமே. (6)

சுலபமாம் விருமூன்றுதியு முபயம்
செழித்திடில் ஜாதகி தனக்கு
கலகமொன்றில்லை சத்துரு ஞசங்
கருதியே பாவர்கள் பார்க்கில்
குலமுளோர் பகையாஞ்சோர சஞ்சலங்கள்
குணமில்லை பிணியினுல் துன்பம்

நலமுடன் நிரத்தில் நின்றிடில் சுகமாம்
நாரியர்க் குறைத்திடும் பலனே. (7)
நன்னயமாக வேழினுக் குடையோன்
நயம்பெற சரந்திரந்தன்னில்
பொன்னவன் பார்வை யிருந்திடில் புருடன்
பூமகன் திசை நிறங் கருப்பு
முன்னவரிருவர் பின்னவர் மூவர்
மொழிந்திடும் வர்க்க மிதாகும்
இன்னவன் றனக்கு மணமது வண்டா
மியம்பிடும் பிரை திசை யாண்டில். (8)
திசையென வெட்டோன் வுபயராசி களில்
செழிப்புள்ளோ ருடன் கலந்திருக்கில்
விசனமொன்றில்லை யாயுள் தீர்க்கமுண்டாம்
விண்மணி பிரைகுஜ ணண்டில்
அசவுடன் மரவீழ்ந் தடிரணக்காய
மாகும் பின்குணமுண்டா மதன்மேல்
உசனவன் திசையின்பகுதியின் விஷத்தா
லொருகண்ட முண்டெனு முரைப்பர். (9)
குருபக்தியெனு மொன்பா தியுந் திரத்தில்
குணமுடன் கெர்ப்ப ராசிகளில்
பெருமையா யிருக்கில் பெலன்பூமி தந்தை
பிதுர்களு மிரண்டென வுரைக்கும்
அருமையாம் தந்தை யாதீனம் தென்கீ
ழாகுமாம் சகோதர வர்க்கம்
தெரிவையர்மூன்று மூவிரண் டாண்கள்
செப்புமொன்றீனமா மொன்றே. (10)
தந்தைக்குவயது பார்க்கவன் பொன்சேய்
சனிதிசை தொகையில் மாரகமாம்
வந்தமீரைந்துக் குடையவன் கேந்திரம்
வலுத்திடில் பூமியின் மூலம்
சிந்தனையில்லை பொருள்மிக வுண்டாஞ்
செழித்திடும் வயதிருபதின்மேல்
புந்தியெட்டிடத்தில் நண்டதி லேனும்
பொருந்திடி லீனமாம் பலனே. (11)

பதினோராமிடத்தின் பலன்றனைக்கேளும்
பார்க்கவன் னரிதிசை லாபம்
நதிக்கரையோரம் பூமியின் மூலம்
நவில்கன்று காலிகள் மூலம்
நிதிமிகப்பெருகு நாரியர் தனக்கு
நீலன் சேயாண்டினுக் கப்பால்
மதிவளர்ச்சி யைப்போல் பொருள் விர்த்தி யுண்டாம்
வழுத்திடு மாதர்கள் தனக்கே. (12)

சயனமென்விவர யாதிபதியுஞ் சரத்தில்
தக்கநல்லோ ருடனிருக்கில்
பயமதொன்றில்லை சத்கர்ம விரையம்
பல்முள்ளக் கட்டட விரையம்
தயவுடனரசர் பேட்டியா மனைகள்
தலமதில் திருத்தியமாகுஞ்
சுயவினத்தாரால் செலவு மங்குண்டாம்
சொல்லுவ ரின்னிலைப் பலனே. (13)

கும்பம் நான்காமோரையின்பலன் முற்றிற்று.

மீன முதலோரையின் பலன்

மீனத்தின் முதலாமோரை பிற்பாதி
விளம்பிடு மாதர்கள் ஜனனம்
பானுவின் திக்கு மனைமுகப் பெதிரில்
பாழ்மனை யாரவங் குண்டாம்
ஈனமாம் தென்கீ ழாலயமொன்று
இடிந்துமே காட்டுமேல் கெங்கை
நானிலமீது தென்வடல் வீதி
நாசமா மெமன்திசை மனையே. (1)

பூவையர் ஜனித்த மனையது தந்தைப்
பூர்வமா மனைதனிற் பொய்கை
நாவிரண்டிடத்தி லிடிந்துமே காட்டும்
நலமில்லை மனையதுப் பாழாம்
தாவினில் மடந்தை நிறம்செகப்பாகும்
சாற்றிடுங் கொடியதுத் தோன்றும்

மேவிடும் சிரசில் மருவதொன் றுகும்
மெய்யது தடித்துளா னெனவே. (2)

அற்பமாம் வித்தை திடமுள்ள வாக்கு
அழகுள்ளாள் குடும்பத்திற் கழகி
கற்புடையவளாம் னதில் சஞ்சலத்தாள்
காமிமெய் பளபளப் புள்ளாள்
துற்குணமுள்ளாள் கேள்வியி லினிமை
துணைவர்மே லதிபிரீதி யுளாள்
சொற்பிசகில்லாள் தவமதி னுதித்தத்
தோகையா னெனசொல்லு வாரே. (3)

சோதரத்தாகி திரத்தினி லுபயம்
சார்ந்திடில் சுபருடன் பெலமாய்
மேதினிலேந்துத் திருகிய மாண்கள்
விளங்கும் பெண்ணிரண்டென நலமாய்
போதமேவியொருவன் பண்டித னுகும்
பொருளுள்ளான் சந்ததி யினம்
ஜாதகிதனக்கு சகோதரப் பலன்கள்
சாற்றுவ திவ்வித மாமே. (4)

பூமிகளுண்டாம் நான்கினுக் குடையோன்
புண்ணிய முடன்மித்ரு வீட்டில்
நேமியில் பிறந்த சாதகி தனக்கு
நிலையன்னை வர்க்கமோ ரைந்தாம்
காமத்தில்கொடியா ளாகுமோர்ப் பெண்பால்
கணவனைப் பிரிந்தன்னிய மாவள்
சோமனுர் திசையாண்டாறு காலம்வரை
சுகமுடன் தீர்க்கமா மென்னே. (5)

புத்திரப் பலன்க ளெவ்வித மென்னில்
புகலுமேவா மைந்திடத் தாதி
மித்திரர் வீட்டில் சுபருடன் கூடில்
விளங்குவ தேகபுத்திரனும்
சித்திரமுள்ள சப்தமப் பெண்கள்
செழித்திடும் செல்வம் தீர்க்கமுமாய்
வத்திடா செல்வ முடைய ரம்மான்கள்
வழுத்திடு முபயமே னென்னே. (6)

வேறு.

என்னவே யாருமாதி யிராக்கதிர் தனக்கா றுள்ளோன்
வன்னமாய்க் கேந்திரகோணம் வருஞ்சுப ரோடுநிற்கில்
கன்னியால் தனக்குரோகங் கடன்சத்துரு பாதையில்லாள்
அன்னுகோள் களுமீனங்க ளாகிடில் குறைவுபேசே. (7)

பேசிடுமேழாமாதிப் பெலமுட னுபயராசி
நேசமாய் நற்கோளோடு நின்றிடில் புருடன்றிக்கு
வாசமா மேற்குவாசல் வருவது கிழக்குவாயுவு
ஈசனுர்க் கோவில்வீதி யிருப்பது கீழ்மேலாமே. (8)

வேறு.

நிறமதுப் புருடன் கருத்திடு மெய்யன்
நிலையுள்ளன் சத்திய வசனன்
அறமுளன் பூர்வநிதியுளன் குணவா
னுகுஞ்சொல் மெலினமா யுரைப்பன்
திறமையொன்றில்லை தந்தையின் வர்க்கந்
தியங்கியே பலதிசைப் பிரிவார்
குரியதுவாகும் பனிரெண்டில் மணமாங்
குறித்திடு மேழிடப் பலனே. (9)

அட்டமாதிபதி சத்தினி னுபய
மமர்ந்திடில் வயதுமூ வேழில்
தொட்டிடும் விழியில் ரோகமே யுண்டாங்
தொடர்ந்த மூப்பத்திரண் டாண்டில்
கட்டுரோகங்கள் மெய்யது வுலருங்
கண்டம் வந்துடன்குண மறுபான்
கெட்டியா மாயுள் ஜாதகிக் கிவ்வாறு
கெணித்திடும் பலனிது வாமெ. (10)

பலமுடனுன்பா னுதியும் பெலமாய்ப்
பற்றிடச் சரந் திராசி
கலகனுந்தந்தை சகோதர மேழு
கன்னியர் துதிகையென் றுரைக்குங்
குலமதில்மேன்மை பூமியால் செல்வங்
குறைவிலான் பிணியுள னுகும்
நலமிலான் கனிட்டன் துஷ்டனுந் தந்தை
நாற்பதி நைந்தில் மாரகமே. (11)

மாரகமீரைந் தாதியின் பலன்கேள்
மகிழுடன் சரத்தினி லுபயம்
பார்தனில் பூமி வியாபார மூலம்
பலபொருள் சேர்க்கையா மென்க
நாரணிகிருபை யுடையமெஞ்ஞானி
நலம்புண்ணிய தீர்த்தங்க ளுடையாள்
கூர்விழிமாது அன்னிய கர்மம்
குணமுடன் புரிவளென் றுரைக்கும். (12)

வேறு.

பதிஞென்றுக் குடையோன்ரூனும் பன்புடன் சரத்திலேனும்
மதியுடன் றிரத்திலேனும் வந்தவ னிருக்கில்லாபம்
விதகுஜன் திசையில்செல்வ மிகுத்திடும் பூமிமூலம்
சுதன்வியாபாரத்தாலுஞ் சொலித்திடும் லாபமென்றே. (13)
மங்கையர் தனக்கீராறேன் மகிழுடன் கெர்ப்பந்தன்னில்
தங்கிடில் சுபர்களோடு தலமதில் மீனகளாரும்
இங்கிவரோடுபாவ ரிணங்கியே சேர்வராகில்
பங்கென வியாச்சியமூலம் பகர்பொருள் விரையமென்றே. (14)

மீனமுதலோரையின் பலன் முற்றிற்று.

மீனமிரண்டாமோரையின் பலன்.

சலசரத்தி லிரண்டாவ தோரைபிற்பாதி
தையலர்கள் ஜெனித்திடுவர் கீழ்மேல்வீதி
கலிமதியின் சுதன்முகப்பு யெதிரில் கங்கை
கன்னிதிசை நீரோடுங் கால்வாயாகும்
பெலனில்லா மீனகிழக்கு வப்சம் நாஸ்திப்
பேசிடுவா யக்கினியின் திசையில்தோப்பு
தலமெல்லாம் போற்றிடுஞ்சங் கரனார்க்கோவில்
சலசலத்தின் றிசைவிளங்குஞ் சாற்றுவாயே. (1)

சாற்றுவாய் ஜெனித்தவிடந் தந்தையில்லம்
தனமுண்டாஞ் சுயார்ச்சிதமாம் பூர்வமில்லை
மேற்றிசையில் கிணறுண்டாம் புதியவீடு
மெய்செகப்பு யிருப்பிடத்தில் மருவுண்டாகும்

தோற்றிடும்பெண் பால்தனக்கு முன்னேரில்லை
துணைவருண்டாம் பின்தசமந் தீர்க்கமேழு
நாற்றமுண்டா மன்னிமிக வசுகியுமுள்ளாள்
நலமில்லா வம்மான்க ளிருவரென்றே. (2)

வேறு.

தந்தையின் வர்க்கமைந்தில் தலமதில் வித்திமூன்று
முந்தியஜேஷ்ட னேகன் முறையிலா தங்கையோடு
விந்தையாய் போகம்செய்வான் விதமுடனுதித்தசேய்க்கு
பந்தமா மாயுள்பாகம் பகருவோம் கேட்டிடாமேய. (3)

கேட்டிடு நந்திகூறும் கெணிதமி தாகுந்திங்கள்
நாட்டமாந் நாலைந்தோடு நான்கினி லுதித்தமாது
மேட்டின்மீ திருந்துகீழ விழுந்திமெய் யடிகள்பட்டு
வாட்டமா யிருத்துபின்பு மாண்டிடு மெனச்சொல்வாயே. (4)

மீனமிரண்டா மோரையின் பலன் முற்றிற்று

மீனமூன்று மோரையின் பலன்.

உண்டெனுமீன மூன்றுவமேதாரை
வுதிக்கும்பிற் பாதியின் பலன்கேள்
கண்டிடும் கீழ்மேல் வீதிதென்முகப்புக்
கருதிடு மெதிர்மனைச் செல்வம்
நண்டதின் திசையில் நுத்திரபூமி
நாடியமேற்கி லாலயமாம்
சண்டனுர் திசையில் மாபலவிருகூம்
ஜலமிலா போய்கை மாதெனவே. (1)

எனவிருபக்க மிருந்திடும் வீடு
மீனமாம் நாஸ்தியு மாகும்
இனமுடன் ஜெனித்த மனையதுமுன்னுள்
ஈனர்க்கு சொந்தமதாகும்
கனமனையாகும் தந்தையின்காலங்
கருதுவாய் சுயார்ச்சிதமாகும்
மனையதுபுதிய கட்டட மென்பர்
வழுத்துமா னிலந்துதிகனமே. (2)

துதிபெருஞ்செல்வி நிறம்செகப் பாகுந்
தொடைமரு குறுகிய ரூபம்
மதியுளாள் மெலிந்த மெய்யினையுடையாள்
வாக்கெனு மிரண்டிடப் பலன்கேள்
நிதியுளாள் தீர்க்க வயதுளாள்நாரி
நீடிய வாழ்வையு முடையாள்
பதிவிரதையாவாள் நிறைகல்வி குடும்பப்
பாக்கியவதி யெனப்பகரே. (3)

பகருவர்மூன்றுல் சகோதர வர்க்கம்
பார்க்கவன் கொர்ப்ப ராசிகளில்
மிகுபரோடு வனுத்தூமே யிருக்கில்
விளம்புவர் வர்க்கமீ ராறும்
அகமகிழ்ச்சியுடன் வாழ்பவ ளிரண்டு
அரிவையர் களில்திரு தியமாம்
செகமதில்நான்கு வரிட்டமா மற்றோர்
சிறப்பில்லை யென்றுரைத் திடுமே. (4)

இடுவதுநான்கின் பலனெவ்வா றென்னி
லிமகான் றனக்குனன் காதி
அடவுடனுபயங் கேந்திரந் தன்னி
லமர்ந்திடி லன்னைதீர்க் காயுள்
திடமுடன் வர்க்க நான்கதாமிரண்டு
சிறப்பில்லை மற்றதுசுகமாம்
படிதனிலன்னை சுகமுடன் பொருள்கள்
படைத்துவா மென்றுரைத்திடுமே. (5)

வாழ்குவதைந்தோன் பதிசரமுபய
மாகிநிசாபதிக் கைந்தோன்
தாழ்விலா துபய கேந்திரந் தன்னில்
தங்கிடில்மைந்தர்க ளுபயஞ்
சூழும்பெண்ணிரண்டு தீர்க்கமாஞ்செல்வஞ்
சுகமுண்டாம் திருதியவம்மான்
பாழதாமேகன் விர்த்திதீர்க்கமில்லான்
பைங்கிளியாளுமொன்றெனவே. (6)

வேறு.

பாவையர்க்காருமாதிப் பலன்றனைச் சொல்லக்கேளும்
தாவியேவுச்சமாகுஞ் சரந்திரந்தன்னிலாறோன்

மேவிடில் சத்துருநாசம் விளங்குவள் பிணியில்லாமல்
கூவிதரோணமுமில்லாள் குறித்திடும் பலனிதாமே. (7)

பலமதாம் பெலியீனங்க ளாகிடில் பாதையுண்டாம்
நலமுடனேழாமாதி நல்லவருடன் சரத்தில்
நிலவின்றிக் காகும்தூர நெறியுளன் புருடன்செம்மை
குலமதி லுயர்ந்தோன்வீதிக் குறித்திடும் வடதெற்கென்றே. (8)

என்றவீ ராறதொன்றில் யின்பமாய் மணமுண்டாகும்
குன்றென வெட்டாமாதிக் குணமுடன் சரந்திரத்தில்
நின்றிடிலாயுள்விர்த்தி நிலையறுபதின் மேலொன்று
அன்றய னெழுதின் னுயுள் ளாமிது புவியோர்க்கோதே. (9)

ஓதியபாக்கியாதி யுறுஞ்சரந் திரத்தில்நிற்க
நீதியாய் நல்லோர்நோக்க நின்றிடில் தந்தைவர்க்கம்
சோதியின் றிசையில்பாதி சுகமுளோ ராகுந்தந்தை
வாதியாமென்னுளுங்கேள் வழக்குகளுள்ளா னென்றே. !10)

என்னவே பத்தாமாதி யிடரிலா சரத்திலேறி
வன்னமாம் சுபர்கள்நோக்கில் வரும்பொருள் மெத்தவுண்டாம்
பொன்னெடு பூமிமாடு பொருந்தியே வாழுஞ்செல்வி
கன்னிய முண்டாம்நந்தி கணிதமு மிதுவாம்கூறே. (11)

கூரியலாபத்தாதி குணமுடன் றிரத்தில்நிற்க
நாரியர்தனக்குலாபம் நாடிடுந்திசையைக் கேளும்
சீர்தனக் குடையோன்திக்கில் சேர்ந்திடுங் கனலாபங்கள்
பேர்பெறவாழ்வா னென்று பேசலாங் கோதையார்க்கே. (12)

வேறு.

பேசுமுன்னுன்குக் குடையவன் றிரத்தில்
பெலமுடன் சரத்தினி லேனும்
நேசமுள்ளோர்க ளோடவன் கூடி
நின்றிடில் விரையங் கட்டடத்தால்
மோசமொன்றில்லை சுபகர்ம விரையம்
மொழிந்திடுந் திருதிய மீனாம்
தோஷமாம் கொடிய பாவர்கள் பார்க்கில்
சொல்நில தவருமென் றுரைக்கும். (13)

மீனமூன்றுங்கால் பலன் முற்றிற்று.

மீனம் நான்காமோரையின் பலன்.

கருதியமீன நான்காவ தோரைக்
கணிக்கும் பிற்பாதியின் பலன்கள்
பெருகியவீதி தென்வடலாகும்
பேசியமீன வடமுகப்பு
அருகினில்சந்து யெதிர்மீனப்பாழு
அக்கினி திசையில் நீரோடை.
குருகியமீனக்குப் பின்புறங்காலி
கோவிலாலைய மூளதென்றே. (1)
காரியின்றிசையில் தனமுள்ளோர் மீனயாங்
கணவீன யிழந்தொருமாது
பாரினில்விதவை யாகியே திரிவாள்
பயின்றவன் றனக்குமே தாரம்
கூரிடுமைந்து மரணமா மிரண்டு
குணமில்லை யொன்றன்னிய தேசம்
சீரதுவில்லை சிதரிடுங் குடும்பம்
செப்புவ ரிவ்விதக் குறியே. (2)
தலமதுத்தந்தை யிடமது பூர்வம்
தையலர் ஜனித்திடுங்காலம்
குலமதில்நீதி பேசிடமேற்குப்
போயினன் ஜாதகநிறங்கேள்
நிலமதில்செகப்புக் குருகியரூபம்
நிலையிரண் டிடப்பலன்கேளும்
பெலமுள்ளகுடும்பி கற்பினை யுடையாள்
பெரும்விழி கடுஞ்சொல்லாளென்றே. (3)

வேறு.

இவளிடசகோதரங்க ளியற்றுவோம் பதினொன்றுகும்
நவமதில் ஆண்களாகும் நாரியர்நான்கு விர்த்தி
அவனிமீ தொன்பான்மற்றே ரிலவர்காண் குணமொன்றில்லை
புகளும்வா ளடிமைநல்ல பூஷண முடையளாமே. (2)
அன்னையின் பலன்க ளறிவதைக்கேளும்
அம்புலிதனக்கு நான்காதி
நன்னயமாக கேந்திர கோணம்
நாடிநட்பாஷி யோடுச்சம்

பொன்னெடுபொருள்க ளுடையவள் தீர்க்கம்
பொருந்திய சகோதரவர்க்கம்
மன்னியவிருமூன் றுகுமோர் பெண்பால்
வாழ்விலா வமங்கலியாமே. (5)

தோன்றிய வைந்தோன் மதிதனக்கைந்தோன்
சூழ்ந்திடு மிடஞ்சர மாகில்
நீன்றபுத்திரர்கள் வளமிலா ரொன்பான்
நிலைப்பது நான்கென லாகும்
தான்ற பெண்ணிரண்டில் நொண்டியாமொன்று
தரைமிசை வம்மான்க ளுபயம்
மீன்றிடும் செல்வம் புகழுடன் வாழ்வர்
விழியொன்று யினமேகனுக்கே. (6)

ஈனமில்லாமல் சரத்தினிலுபய
மிருந்திட வாறிடத்தாகி
தானிடர்சோரம் பிணிரொணப்பாதை
சஞ்சல மொன்றிலாள்நாரி
மானுளோரறியக் கொடியரோடடுத்து
வாழ்வது திரமேதயாலல்
தானிடமாரா லாகுஞ் சத்துருவின்
சஞ்சலத் தாலெனமொழியே. (7)

வேறு.

போகத்துக் குடையோன்ரு னும் புண்ணியரோடுக் கேந்திரம்
வேகமாய் வலுத்துநிற்கில் விளம்புவர்ப் புருடன்றிக்கு
பாகமாந்தெற்குவாசல் பண்டிதன் கீழ்மேல்வீதி
போகமாம் வாலிபத்தில் முடிமணம் பதினெட்டாண்டே. (8)

எட்டினுக்குடையோன்ரு னு மிருப்பது வுபயராசி
கட்டுடன் வயது நூறும் கலைமதிதனக்கு யெட்டோன்
திட்டமாய் சரத்திலேனும் திரமதிலேனும் நிற்கில்
பட்டெனு முப்பத்தெட்டில் பகரலா மரிட்டமென்றே. (9)

அரிவையர் தனக்குவான்பா னருட்பலன் றன்னைக்கேளும்
பெருமையாய் சரத்திலேனும் பெலமுடன் திரத்திலேனும்
பரவியே யிருக்கில்தந்தைப் பாக்கியமுடையோன் வர்க்கம்
தெரிவைய ருபயம்மாண்கள் திருதியந் தீர்க்கந்தானே. (10)

தீர்க்கமாம் பத்தாமாதித் திரமொடு சரத்தில்நிற்க
பார்க்கவன் நோக்கமாகில் பலித்திடும் பூமிமூலம்
சேர்க்கையாம் பொருள்கள் தெற்கு திசையதாமிரக்கமுள்ளாள்
மார்க்கமிவ் வாறதென்று வழுத்துவர் நந்திவாக்கே. (11)

நந்தியு மருள்வரின்னம் நலமுடன் லாபத்தாகி
வந்துகேந் திரத்தில்நிற்க வன்மையாய் நல்லோர்க்காண
விந்தையா மழைக்கோள் திக்கில் மிகுத்திடும் லாபமென்று
சுந்தரமிகுந்தநல்ல தோகையர்க் குரைப்பதீதே. (12)

வேறு.

பனிரெண்டுக் குடையோன் சரம்திரந் தன்னில்
பற்றிடிலாட்சி யுச்சமுமாய்
இனமுடன்நல்லோர் கூடியேபார்க்கி
லிடதுகண் ஞானமாம் விரையம்
கனமீனமூல நவமீன புளது
கருதிய வியாச்சியமூலம்
மனக்கவலையிலாள் மேலதாமோகூ
மடைவள்பெண் களின்பல னீமே. (13)

மீனம் நான்காமோரையின்பலன் முற்றிற்று.

ஆக லெக்கணம் – பனிரண்டுக்கும் செய்யுள் 520.

நந்திவாக்கிய ஸ்திரீகள் ஜாதகம்.

முற்றிற்று.

பெண்கள் ஜாதகப் பொதுப்பலன்.

திருவணைய மடவார்க ளம்புவியின் மீது
செனித்தபல ஜாதகத்தின் றிறமைகூறும்
கருவுதய காலலக்கினஞ் சசியின்லக்கினங்
கண்டுவடி வுடனிறமுங் கருதியிட வேண்டும்
மருவிய சத்தம ராசியா ளவடன் குணமும்
மகிழ்நன்றன் குணந்தெரிந்து வழுத்தலுமே வேண்டும்
உருவுதய லக்கினத்தின் றிருக்கிலழ குள்ளாள்
உச்சிதமாய் மேனிதனி லுச்சமுள் ளவளே. (1)

உள்ளபிரை லக்கினமுஞ் சன்மலக் கினமும்
உறுமிரட்டை யாகில்வடி வுடைய மயிலாகும்
தெள்ளியவம் மீனயிரண்டு நல்லோர்கள் காணில்
திரளாகப் பணியணிவள் செகத்ததி ரூபியுமாம்
கொள்ளுமிரு மீனையொற்றை யாகிலாண் சொரூபி
கூறுநல்லோர் கண்டிடினற் குலஞ்செல்வங் குலவும்
கள்ளமுறும் பாரவந்த ராசியிரண் டினிலே
கலந்திருக்கில் கண்டிடிற்பொல் லாப்பாவக் கன்னி. (2)

கன்னிகேள் ஜன்மத்திற் பிரைசுங்க னிருக்கில்
கமழ்பெருமை யுடன்சுகியாய்க் காசினியில் வாழ்வள்
உன்னு முதயத்தி லிந்து புதனுமே கூடில்
உணர்வள்பல கலியோகி யோதியநற் குணத்தாள்
இன்னஞ் ஜென்மந் தன்னில்புதனுஞ் சுக்கிரனும்
இருந்தக்கால் ஞானியதி ரூபியினி துரைப்பாள்
மின்னுமொரு மூன்றகத்திற் சுபக்கோள்க ணிற்கின்
வெடிதனநற் குணந்தயவு விரவுசுக முள்ளாள். (3)

உள்ளபல பாவரெட்டி லிருந்தக்கால் விதவை
உளதாவ தென்றெண்ணி லோரெட்டா மதிபன்
தெள்ளியவங் கிசைக்கிறைவ னஷ்டகவர்க் கத்தில்
சேர்வருட மெத்தனையோ வத்தனையாண் டதனில்
மெள்ள விதவையுமாவ னிரண்டினில்நல் லோர்கள்
மேவலவள் கணவனைத்தான் விட்டுமுன்போய் விடுவாள்
கள்ளமுறுந் தேளிடபங் கன்னியெனு மூன்றில்
கலமதிமே விற்புத்தி ரற்பந்தான் காணும். (4)

காணியாஞ் சனியுமே பலத்திருக்க வேதான்
கணக்கன் மதி பிருகினக் காரகத்தி ருக்க
ஆணியந்த ராசியொற்றை யாகவுமே ஜென்மம்
அடுக்கமற்றோ ரோற்றைகளி லன்புடனே யிருக்க

நீணிலத்திற் பிறந்தாடன் புருடனுக்கோ ராசாய்
நிரூபதியாய்ச் சுவாமியாய் நேசமுட னிருப்பள்
பேணியதோ ரேழிற்கீக் கோளுமும் மூன்றிற்
பெருமை யுள்ளோ ருறச்சங்கி யாசிப்பெண் ணுவன். (5)

ஆகரெட்டை ராசிதனிற் குருசெவ்வாய் புந்தி
அதிபலமா யிருந்தக்கா லவணியின் மேற்குலம்
வாகுடனே பலகலைக ளறிந்திடுநற் குணமும்
மாதருக்குண் முக்கியமா மயிலுமா குவளை
சேகரமாம் பருதிமதி கூடியே நிற்கிற்
தெரிந்துபல விதத்தொழிலே செய்து ஜீவிப்பள்
மோகமுடன் கதிர்செவ்வாய் கூடியுமே நிற்கில்
முழுப்பாவி யாவளென்றே மொழிந்திடுவர் பலரும். (6)

வேறு.

பலரும்பணி கதிர்புந்திகண் மருவும்பொழு தெழில்சேர்
பலர்சிந்தனை யரிவாள்புகழ் பரவுஞ்சுக சரீரி
அலருங்கதிர் குருவொன்றிடி லதிவஞ்சனை யாண்முன்
அணுகுந்தொழி லறியாள்பிற கறிவாள் வருகருமம்
மலரம்புய வதிபன்பிரு குடன்வந்து றின்மறபோர்
வனையுங்கொடி யவளரய்தவ வகையானிதி தேடும்
சலமுண்டிடு கதிர்மந்தனை யணுகும்பொழு துலகிற்
தகுபித்தளை செப்போடுத ராவிற்றுயிர் வாழ்வள். (7)

உய்யுமெரு தொடுகோலிவை யுதயமதின் மதியம்
உறையக்குச னிறையத்திசை யுறுமங்கிசை யாகில்
மையுந்திய குவளைச்செழி மலர்போலிரு வுடையாள்
வகையுந்தொகை யறிவாள்சில வழிசால வுரைப்பாள்
எய்யுஞ்சனி திரையக்தச மெனுமங்கிசை யென்னில்
இருவீரர்கண வோர்தாமுள ரென்னும்மட வார்க்கே
மெய்யஞ்சிலை டிரண்டாமிரு வீட்டுக்கிறை யிருவர்
மிளிர்கேந்திர லாபத்துற வேவாகன முண்டாம். (8)

உண்டாகிய வைந்தாமிறை வுச்சக்குரு வாகி
உணர்வாலிப யவ்வன்ன வுருவும்முள னுவன்
நண்டாகிய மனையுற்றிடு நாரிக்கிசை கணவன்
நரவாகன முளனுகுவ னவில்சுக்கிர னுகில்
மிண்டாகிய வெள்ளிக்கிசை பல்லக்குள வேந்தன்
விரவுஞ்சனி யாகிற்பரி வெண்சத்திர முள்ளான்
கொண்டாடிய கன்மாதிபர் குருசுக்கிர னுகில்
கூறைந்தினி மேனின்றுற கொழுநன் சதசீவி. (9)

சீவித்திடுங் குருசுக்கிர னுமனை சேரில்
தெரிவைக்கிசை கணவன் பிணி செறிமெய்யின னுவன்

பூவைக்குமுக் நான்கிற்குரு புரிசுக்கிரன் மேஷில்
பேர்ந்தேஷிடு மற்பாயசு புல்லாடன்மெம் யாவன்
பாவைக்குறு மைந்தாமிரை பாவாயினி யவராய்ப்
பண்பாகிய வொன்பான்மனை பற்றப்பயி லொன்பான்
ஏவுற்றவம் மனைக்காதிப லாபத்துறி னீன்ரோன்
எய்தும்பொரு ளுண்டாமவை யெல்லாமிவ ளுக்காம். (10)

ஆமெட்டா திபன்காரி யொட்டணுகிப் பதிஞென்றெட்
டமரிச்சத வயதரமவ ரத்தங்கத மாயின்
போமற்பம தாயாயுளுயொன்றும் வியமன்னன்
புரிகேந்திர லாபத்திரி கோணப்பதி புக்கே
தாமெத்தனை பேரோடிறி லாமத்தனை வனையாள்
தரிலற்றிடு வியநற்பதி சரமேலச லாரில்
நீமத்திர மாகிற்றம தூரத்தக மனமே
நிறைவாமுப யந்தன்னிலோ நீமெதி தூரம். (11)

வேறு.

தூரமுறும் பனிரெண்டா மதிபன்ரு னும்
சுபக்கோளாய்ப் பலவாளாய்ச் சுகவானுயின்
பாரமனை மேன்மெத்தை மாடங் கூடம்
பரிவுடனே யுண்டாமப் பதியினிலே வாழ்வள்
சேருமுப யந்திரமா யேழைந்தாம் வீட்டில்
சேர்ந்தவரெத் தனையுண்டத் தனைசெயுண்டாம்
பாரறியச் சென்மம்தா மியமாகின் மூன்ரும்
பதியுற்ரு ரெத்தனையப் பாலரு ளதாகும். (12)

தாகமுட னேழைந்தா மூன்றதிப ருடனே
கதிர்கூடி லோகுழவி தனக்கற்ப வயதாம்
ஆகமகி ழொன்பதா மதிபதியா ரெட்டில்
அமரிற் சூத்திரர்தமக்குற் பவித்தசே யாகும்
ஏகும்வியத் தினிலிருக்கில் விப்பார்சே யாகும்
எழிலொன் பான்மனைக் கதிபனிரவியுடன் கூடில்
பாகவிய மெட்டாரைப் பற்றிலொன்பான் மனையோன்
பரிந்திருந்த வீட்டோனப் படியிருக்கில் விதவை. (13)

வையக மெண்மான்பதா மாதிபமின நல்லோர்
மனையிலுற பத்திமையிலே விதவையாவள்
செய்யவொன்டா னுதியுச்ச னுகிப்பா வனுமாய்த்
தெரிவைசுமங் கலியாசித் தீர்க்கவய துள்ளாள்
துய்யசென்ம மொன்பதா மாதியிவ ரிருவர்
தொடர்ந்துமா ருகநிற்கிற் ரேன்ற லுட னிற்பள்
வெய்யதோ ரெட்டினிற்சந் திரபகவா னிருக்கில்
விதவையெனப் பேர்படைத்து மேதினியிற் றிரிவள். (14)

திரிசெவ்வா யிருமஞ்னையுஞ் சென்மமதா யதனில்
திங்களுற வேசெவ்வாய் திரியங்கிசாங் கிசமாம்
பரிவில்லாப் பாவிசனித் திரியங்கிசாங் கிசமாய்ப்
பாலரிலா ளவளடிமைப் படுவளெனச் சொல்லும்
குருதிரியாங் கிசமாகிற் பதிவிரதை யாகும்
குளிமேதை யங்கிசமா சாரமுள கோதை
விரிவெள்ளி யங்கிசைக்கு மெய்யதிரு பியுமா
வெகுவபதாய்ப் பரயோகம் விரும்புமினி யவளாம். (15)

இனியவெள்ளி யிருமஞ்னையுஞ் சென்மமதா யதனில்
இருந்திருக்கச் செவ்வாயங் கிசமாயிற் கோடியாள்
சனியினங் கிசமாகிற் கணவஞ்னையும் விட்டே
சஞ்சலமாய் வேறொருவன் றனக்கும்பா ரியுமாம்
நனிகுருவங் கிசமாகி னற்குணமே யுள்ளாள்
நாடுவுபுத னங்கிசத்தி னுல்வகைஞா னியுமாம்
கனிமொழியாள் சுக்கிரனங் கிசமாகிற் றன்சொல்
கருத்தினிய ளாயிருப்பள் காசினியோர் போற்ற. (16)

போற்றுபுத னிருமஞ்னையுஞ் சென்மமதா யதனில்
புனிதமதி யேயிருக்கப் பூசுதனங் கிசமால்
ஏற்றமதாய் வேலைசெய்வள் சனிதனங்கி சையாய்
இருப்பளலி வடிவாகக் குருவாகி லினியாள்
நாற்றிரை யெண்ணும்புத னங்கிசைதவக்கே ஞானி
நாடுசுங்க னங்கிசைக்கு நற்குணமு முள்ளாள்
தேற்றுகட கஞ்சென்ம மாய்த்திங்க ளிருக்கச்
செவ்வாயங் கிசையாகிற் சேர்வள்பல ருடனும். (17)

உடன்கடகஞ் சென்மமதா யதிலிந்து மிருக்க
உயர்சனியங் கிசையாயி னுறுகணவன் றனையே
திடமுடனே கொல்வதற்குச் சினமாகி யிருப்பள்
சேர்புதனங் கிசந்தனக்கே கிற்பதொழில் செய்வள்
அடல்குருவங் கிசையாகிற் குணமினியாள் வெள்ளி
அங்கிசையா கிற்சாது வாகியுமே யிருப்பள்
மடமயிலே யங்கிசையென் றுரைத்த தெல்லாம்
வருந்திரியாங் கிசையாக மனதிற்கண் டுணர்வாய். (18)

உணர்சிங்கஞ் சென்மமதா யதிலிந்து மிருக்க
உயர்செவ்வா யங்கிசையா யிருக்கிலுஞ் சாரி
பிணிசனிசிங் கனிருவரங் கிசமே யாயின்
பிறர்முகம்பார்ப் பாளரசன் பின்னுறமங் கிசைக்கு
தனியரசர்க் கேதேவி தானுகி யிருப்பள்
தக்கபுத னங்கிசைக்கே சரீரவருத் தமுமாய்ப்
பணிபலவுஞ் செய்தொருவர்க் கேயடிமை யாகிப்
பரதவித்தே யிருப்பளெனப் பகருவர்தக் கோரே. (19)

தக்கதனு மீனமிவை யேசென்ம மாகிச்
சந்திரனப் பதியிலுறத் தான்குருசெவ் வாயின்
மிக்கதிரி யாங்கிசமே யாகிடினற் குணத்தாள்
வீறுசனி யங்கிசவேல் வெகுகாமி யாவள்
சுக்கிரனங் கிசையாகில் ரோகிகமாம் புருடன்
தோளணிவன் சோமனுர் சுதனுமங் கிசைத்கு
பக்குவமெய்ஞ் ஞானியாச் சுபகர் மங்கள்
பண்ணுவளென் றேயுரைப்பர் பாரினி னல்லோரே. (20)

நல்லசனி வீடிரண்டும் லக்கினமா யதனில்
நாடுபுதன் றந்தையுறக்கு சனரங்கியேல்
அல்லலுறுந் தாதியாங் காரியினங்கிசமாய்
அவனியின்கீழ் சாதியரோ டணுகிமணக் திடுவள்
வல்லகுரு வங்கிசைக்கே பதிவிரதை யாவள்
மகிழ்வெள்ளி யங்கிசைக்கே மலடியுமே யாவள்
சொல்லவரி சைப்புதனு ரங்கிசமா யெப்போதும்
சுகமுடனே கணவனுடன் மேருயுமணப் பரிவாள். (21)

பரிவாக சனிபுதனே ழாமிடத்தி னிற்கப்
பயில் குருவுக் கேழ்வீடு பரமவுச்ச மாயின்
திரிவனவள் பத்தாவெங் காளும்வழி நடந்தே
திராசிக் கூரைவிட்டுச் செல்லாம லிருப்பன்
வருராசி வுபயமாய்ச் சிலநாளு ரினிலும்
வழிந்டையிற் சிலநாளும் வருந்தியுமே திரிவன்
அரியேழா மிடமிருக்கப் பாபருமே பார்க்கில்
அவன்மீதில் கொழுநனுக்கன் பன்றிகழ்ந் திடுவன். (22)

இடுசெவ்வாய் கதிர்கூடி யெங்கேகின் ருனும்
இவளுமவ் வாபத்தன்னி லமங்கலியே யாவாள்
வடுவாகுஞ் சனிகதிரைக் கூடிநிற்கில் பார்க்கில்
மன்னியதீக் கோல்பார்க்க வாலிபத்தி னரைக்கும்
கொடுமையுளோர் பலரேழா மிடத்திருக்கில் பார்க்கில்
கொழுநன்வா லிபத்திறப்பன் கொடியநல்லோர் கூடில்
சடுதியின்மீண் டொருவனுக்கே பாரியுமேயாகித்
தானிருக்க வேண்டுமென சாற்றிடயில் வேண்டும். (23)

வேண்டும்பா வக்கிரகப் பலன்களுமே யின்றி
விரும்புமே ழிடத்திருக்க வவரைமே னல்லோர்
ஈண்டியே தான்பார்க்கி லக்கணவன் வேண்டா
திகழ்ந்தோட்டி விட்டிவ னேயின்னஞ் சொல்வாம்
நீண்டகுஜன் வெள்ளியுந்தன் னங்கிசத்தி நிற்க
நிகழ்ந்துமிவர் மாறுகி நிற்கிலுமவ் வீடு
பூண்டிடுமே ழாமிடமே யாகிலவள் வேறூர்
புருடனையே யிச்சித்துப் போய்விடுவ ளென்றூர். (24)

என்றுமே ழாமிடத்தில் சனிசெவ்வாய் சோமன்
இந்தழு வருங்கூடி யிருக்கிலவம் போவள்
வென்றசனி செவ்வாயின் வீடேலக் கினமாய்
விரவுகுஜ னங்கிசமாகச் சென்மந் தன்னில்
துன்றுமிரு ளகற்றுமதி சுக்கிரனுமிருக்கச்
சூழ்ந்ததீக் கோள்பலருந் தொடர்ந்துமே நோக்க
நின்றிடிலோ மலடியா மவளுமல டாயும்
நேமிதனிற் பலபேரை நேசித்தே சேர்வாள். (25)

சேருதய லக்கின்வங் கிசத்திற்சோ றேழில்
செவ்வாயுஞ் சனியிருவர் சேர்ந்துமே நிற்க
நாரியகந் தனிற்பிணிகொண் டிருந்துபர தவிப்பாள்
நாடுமிவர் நல்லோர்க ளங்கிசையி னன்றும்
பாரியதே ரிடைதொடைகள் சோபனமுள் ளவளாய்ப்
பத்தாவி னிதயத்திற் பட்சமுற விருப்பள்
சாருதயந் தனக்கேழு சனிவீட தாகில்
தாலிதரிப் பவன்கிழவன் சற்குணமில் லானே. (26)

சற்குணசேர் லக்கினத்திற் கேழாகும் ராசி
தரைசுதன்வீ டாகிலவன் றன்னுடையங் கிசையேல்
சிற்குணமா யவள்கணவன் ஸ்திரீலோல னுவன்
செறிபிருகு ராசியாயங் கிசமே சேரில்
நற்குணஞ்சேர் சீமாஞ யழகுடைய னுவன்
நாடுபுத னங்கிசையாய் ராசியுமே யாகில்
சொற்கலை ஞானியுமாவன் சோமனுமே யாஞல்
தோகைபல ருடன்கூடிச் சுகித்துவாழ்ந் திருப்பள். (27)

வேறு. இந்துவசுர குருவுடனே
யேழிலிருக்கக் கிழப் புருடன்
வந்தேபொல்லா ரேழிலுற
விதவை யாவள் வாலிபத்தில்
நொந்தே கும்பந் தேண்மேட
நுவலுஞ் சுறுமீன் லக்கினமாய்
பந்தமதியும் புகர்கூடிப்
பாவர் பார்க்கில் விபசாரி. (28)

சார வெட்டிற் பாவர்களுந்
தானுமிருக்க விரண்ட தனில்
ஊருஞ்சுபர்க ளிருந் திடவே
யோங்கு மரணஞ் சுமங்கலியாய்
நேருமேமா மிடந்தானும்
நிறைந்த புகரின் மனையாயின்
பாரோரறிய வனுகூலப்
பாவையாகுங் கண்டீரே. (29)

கண்டமேவுமா மனையுரைக்கு
கதிரோன் வீடா யிருந்திடவே
மிண்டே சொல்வா னவள்கணவன்
வினவும் பருதி யதிலிருக்கில்
கொண்டா னேட்டி விடுவனெனக்
கூறும் புதனின் மனையாயின்
பண்டே புலவ ராவர்விரு
பண்பா மனையிற் குணவானே. (30)

குணமா மேழிற் பாவர்களும்
கூடிப்பலன்க ளெற்றிடமேவ
மணமார் நோக்க முற்றதனன்
மகிழ னழகில் லாதவனே
இனமாரேழா சரமனையா
யிருக்கவதிபன் சரத்திலுற
சினமே சாராங் கிசயாத் திலையாங்
திரமேமயாகிற் பீர்க்குமுளன் (31)

தீர்க்கமேழில் சனிசெவ்வாய்
செறிந்தால் விதவை வாலிபத்தில்
நீர்க்கவேழிற் சுபர்பாபர்
நின்றுல் கெமனம் பரப்புருடன்
ஊர்க்கலக் கினமுப்பாக
முரைத்தாற் றிரியங் கிசாதிபதி
ஏர்க்க பலன்கள் ஸ்திரீகளுக்கே
யியல்பா யறிந்து வுரைத்திடுமே. (32)

உரைக்குங் கதிர்மதியங் கிசையா
வோங்குந் தன்னிற் விபசாரி
கிரைக்குஞ் செவ்வாய் தானுகி
நீண்ட லக்கினமவ் வீடாய்
மரிக்கும் பிள்ளே யுள்ளதெல்லாம்
வாழும் புந்தி யங்கிசையில்
நரைத்த கிழவி யாளுமும்
நாடுங் கமனம் பரபுருடன். (33)

புருடக் கிரகங் குருவங்கிசை
பிறந்தான் மகவுந் தனமுண்டாம்
குருடப் புகரி னங்கிசையாற்
கூறும் போகந் தனமுளதே
வருடங்காரி மங்கிசையில்
வளருஞ் சனிவீடி லக்கினமாய்
திருடிக் கமனம் பரபுருடன்
சிந்தைமோக்க வரும் பலனே. (34)

பல்ன்க ளுரைக்கும் ஸ்திரீகளுக்குப்
பகரு மெட்டா மிடம்விதவை
துலங்கு மேழா மிடந்தன்னுற்
சுகமு மகிழ்நன் பலமறியப்
பிலங்கொள் லக்கின மறிந்து
பேசு மொன்பான் புத்திரரும்
தலங்க ளறிந்தே மிகவுரைப்பர்
தாமுங் கணித வல்லோரே. (35)

வல்லமதிய மிவள் சென்மம்
வருமே ஸ்திரீகள் மணியாயின்
நல்ல சுபரு நோக்கமுற
நாடும் வடிவு மாபரணம்
சொல்லு மிவ்வீ ரடிரண்டு மொற்றை
தோன்றப் புருடக் கிரகமிதை
வெல்லம் பார்க்கப் புருடவகு
வற்றே யிருக்கு மினைடக்கே. (36)

தனமார் குருசுக் கிரார்சென்மர்
தணிச்சீசர் சந்திர லக்கினத்தை
முனமே நோக்க வாலிபத்தின்
முற்றும் போக நன்மணமும்
தனிசூழ் மதிய லக்கினத்தைச்
சனிசேய் பாவர்நோக் கமுற
மனமே சலிக்கத் தலை நரைத்து
வாழ்கப் படாளிம் மானிலத்தை. (37)

மானே சுங்கன் செவ்வாயின்
மணியி லிருக்க மதிதானும்
ஊனச் சனியன் வீட்டி லுற
வோங்கும் பாவர் மிகநோக்கித்
தானே யிவர்கள் லக்கினத்திற்
றரித்தா லிவளும் விபசாரி
தேனேர் மொழியாய் சுரிகுழலாய்
சிந்தை யறிந்து சொலலுகவே. (38)

சொல்லு நவாங்சைக் கேழ்மணியுந்
தொடருஞ் செவ்வாய் மணியுளதாய்
வல்ல சனியு மிருந்திடவே
வருமே யோனிட ராகமுடன்
நல்லகதியுஞ் சுக்கிரனும்
நயந்தே கூட லக்கினத்தில்
அல்லலறவே யிருந்தினு
லழகுஞ் சுகமு முண்டாமே. (39)

உண்டாமதியும் புலவனிவ
ருற்றசென்மத் திருந்திடவே
கண்டே வித்வத் தன்மையுள்ளா
ளென்றும் பகர்வர் மறைவல்லோர்
பண்டேபுதனுஞ் சுக்கிரனுங்
காணிம் லக்கன முற்றதனுல்
கொண்ட மகிழ்நன் பிரியமெனக்
கூறுஞ் சௌரிய முள்ளவளே. (40)

உள்ளசுபர் கண்மூன்று
யுற்றசென்ம முதற்கொண்டு
மெள்ளவிருக்கத் தனலாபம்
விரும்புஞ் சுகமு மழகுள்ளாம்
துள்ளும்பாவ மெட்டி லுறச்
சூழ்ந்தே விதவை யாயிருப்பாள்
கள்ள விழியின் முதலிஷயங்
கருதிநோக்குங் கண்ணுளே. (41)

கண்ணுரெட்டி னதிபதியுங்
காணுமொருவ னங்கிசத்தில்
நண்ணியிருக்க வவ்வீடோ
னயந்தே யெட்டி லிருந்ததினுல்
எண்ணுஞ் சுமங்கலி மரணமென
வினிதாங் கன்னி தேவிடபம்
ஒண்ணுஞ் சிங்க மதின்மதியு
மூற்ற லற்ப புத்திரனே. (42)

சில பொது வாகிக்யம்.

உதயமும், பிரைராசியும், ஸ்திரீராசியாயிருக்க ஜெனித்தவள், பெண் சுபாவமுடையவளா யிருப்பாள், அன்றியும். அந்த ஜென்மலக்கினத்தையாவது, சந்திராலக்கினத்தை யாவது மதிமகன், அமைச்சன், பளிங்கு, இவர்களிலொருவர் நோக்க செனித்தவள். சற்குணத்தை யுடையவளாயும், மிக்க ரூபவதியாயு மிருப்பளென்பர். (1)

வருடை, தண்டு, ஆளி, சீர், சிலை, சாடி, இந்த ராசிகளிலொன்று லக்கினமாம், அதில் சந்திரனிருக்கப் பிறந்த, ஸ்திரீ புருடசரீர முள்ளவளா யிருப்பளென்பர். (2)

மேஷம், விருஷபம் இந்த ராசிகள், உதயம், அல்லது சந்திரலக்கினமாவ திருந்து சேய், திரிம் சாம்சையில் செனித்த ஸ்திரீ மணம் செய்யுமுன் புருட சங்கம் செய்வளென்பர். (3)

பௌமன் க்ஷேத்திரமாகிய, மேஷம் தெருக்கால் இந்த ராசிகள் சென்மலக்கினமாவது, அல்லது சந்திர லக்கினமாகவாவது, இருந்து மந்தன் திரிம் சாமிசையில் பிறந்த, மாது, விபசாரி யாவளென்பர். (4)

உதயமாவது, சந்திரலக்கினமாவது தகர், விருஷகமாயிருந்து மன்னவன் திரிம் சாம்சையில் ஜனித்த தெரிவை சற்குண முள்ள வளாயும் பந்துமித்திரர்களை ஆதரிப்பவளாயும், பதிவிரதையாயு மிருப்பளென்பர். (5)

குஜக்ஷேத்திர மிரண்டும் ஜென்மலக்கினமாவது, அல்லது, தாராபதி லக்கினமாலதிருந்து அசுரகுருதிரிம் சாம்சையில் பிறந்தசுந்தரி புவியோ ரிகழுங்குணங்களை யுடையவளாயிருப்பளென்பர். (6)

சுக்கிரன் வீடாகிய, ரிடபம், துலாமிவை, உதயலக்கினமாவது, அல்லது சந்திரலக்கினமாவதிருந்து பூமகன் திரிம் சாம்சையில், ஜனித்த அரிவை கீர்த்தியின்றி அபகீர்த்தியுடையவளாய் பலரும் தூஷிக்க யிருப்பளென்பர். (7)

கவிக்ஷேத்திரமிரண்டும் உதய ராசியாக அல்லது பிரைராசியாகவு மிருக்கப் பிறந்த, சேடிமேன்மையுடன், மணஞ்செய்து சுகித்து, பின்பு வேறுகணவனுடன் கூடிவாழ்வளென்பர். (8)

ரிஷபம் துலாம்இவைகள் உதயமாகவாவது, அல்லது, சந்திரலக்கினமாகவாவதிருந்து, அந்தணன் திரிம்சாம் சையில், பிறந்த ஜாதகி, பொருமை அடக்க முதலிய சற்குணமுள்ளவளாக யிருப்பளென்பர்.

புகர் க்ஷேத்திரமிரண்டும், ஜனனம், அல்லது, சந்திரலக்கினமாயிருந்து, புலவன், திரும் சாம்சையில் பிறந்த, நாரி, கல்வியில், தேர்ச்சியடைந்து கீர்த்தியுடையவளா யிருப்பவளென்பர். (10)

எருது, துலை, உதயராசியாகவாகிலும் அல்லது பிறைலக்கினமாகவாகிலு மிருந்து பார்க்கவன், திரிம் சாம்சையில் பிறந்த மடந்தை ஆசாரமுடையவளாயும் சற்குணம் கீர்த்தி பிரபல முடையவளாகவுமிருப்பளென்பர். (11)

மாலவன், க்ஷேத்திரமாகிய மிதுனம், கன்னி, ஜென்மலக்கினமாகவாகிலும், அல்லது, களங்கன், லக்கினமாகவாகிலுமிருந்து, குருகியின் திரிம்சாம்சையில் பிறந்த, ஸ்ரீ பொய், கபட முதலாகிய தற்குணமுள்ளவளாக யிருப்பளென்பர். (12)

பண்டிதன் இரகமிரண்டும், ஜென்மலக்கினம், அல்லது, அம்புலி லக்கினமாக விருந்து, கீழ்மகன் திரும்சாம் சையில், பிறந்த ஜாதகி அலியாக விருப்பளென்பர். (13)

மிதுனங்கன்னி சென்மலக்கினமாக அல்லது, சசிலக்கினமாக விருந்து, நற்கோள் திரிம்சாம்சையில் பிறந்த ஜாதகி, கற்பு. நாணம், அச்சம், பயிர்ப்பு முதலிய சற்குணமுள்ள பதிவிரதையாக யிருப்ப ளென்பர். (14)

பாடவை, மாது, உதயலக்கின மாகிலும், அல்லது, நிலவுலக்கின மாகிலுமிருந்து, புதன் திரிம் சாம்சையில், பிறந்த, ஜாதகி, நற்குண முடையவளாக விருப்பளென்பர். (15)

மதிமகன், வீடிரண்டும், ஜென்மலக்கினமாகிலும், அல்லது, சந் திர லக்கினமாகிலு மிருந்து சல்லியன் திரிம்சாம்சையில், உதித்த காரிகை, அதிக காமமுடையவளாயும், தன் புருஷனை மதிபாமல் ப ருஷர்களை சேர்பவளாயு மிருப்பளென்பர். (16)

கடகம், ஜென்மலக்கினமாகிலும், அல்லது, சந்திரலக்கினம கிலுமிருந்து, அரக்கன் திரிம் சாம்சையில் ஜெனித்த ஜாதகி, தைரிய சாலியாயும் கடின வார்த்தை பேசுபவளாயுமிருப்ப ளென்பர். (17)

கடகம், உதயலக்கினமாவது, அல்லது, தண்ணவன் லக்கினமா வதிருந்து தமனியன் திரும் சாம்சையில் பிறந்த ஜாதகி கணவனுக்கு வஞ்சகமுடையவளா யிருப்பளென்பர். (18)

அலவன் ஜென்ம ராசியாவது, அல்லது சந்திரராசியாவதிருந்து சுரகுரு திரும் சாம்சையில் பிறந்த மடந்தை,பதி விஸ்வாசமும் அனே க புத்திரருடையவளாயு மிருப்பளென்பர். (19)

கள்வன் உதயலக்கினமாவது, அல்லது சீதன், லக்கினமாவது மிருந்து, பண்டிதன் திரும சாம்சையில் செனித்த கன்னிகை, சிற்ப சாஸ்திர முணர்ந்தவளாயும், விசித்திரமான வேலைகள் செய்பவளாயு மிருப்பளென்பர். (20)

கண்டு ஜென்மலக்கினமாவது, அல்லது சந்திரலக்கினமாவது மிருந்து, பிரசுரன் திரும சாம்சையில் பிறந்த ஸ்திரீ பல புருடர்களைச் சேர்ந்து வேசியென்றுப் பெயரெடுப்ப ளென்பர். (21)

அரிமா, ஜென்மலக்கினமாகிலும், அல்லது, சந்திரலக்கின மா கிலுமிருந்து, வக்கிரன் திரும்சாம்சையில் உதித்த, ஜாதகி, புருடர் சரீரமும், அதிக பேச்சு பேசு பவளாயுமிருப்பளென்பர். (22)

சிம்மம், உதயராசியாகிலும், அல்லது, திங்கள், லக்கினமாகிலு மிருந்து, அமச்சன் திரும் சாம்சையில் ஜெனித்த, மடந்தை, கொற் றவனுக்குப் பாரியாளாவளென்பர். (23)

ஆளி, உயிர்லக்கினமாகிலும், அல்லது, தண்சுடர், லக்கினமா கிலுமிருந்து, நீலன் திரும் சாம்சையில் பிறந்த ஸ்திரீ, வேசியாகி பல புருஷ சங்கம் செய்பவளென்பர். (24)

சிங்கமே, சென்மலக்கினமாகிலும், அல்லது, சந்திரா லக்கினமா கிலுமிருந்து, மாலவன் திரும் சாம்சையில் ஜெனித்ததையல், புருட சுபாவமும், புருடர்களைப்போலத் தொழில் செய்பவளாயு மிருப்ப ளென்பர். (25)

புலி, ஜென்மலக்கினமாகிலும், அல்லது, உடல்லக்கினமாகிலு மிருந்து, தயித்திய மதி, திரும் சாம்சையில் ஜெனித்த, ஸ்திரீ, காம வி, தகாதப்பல புருடர்களையும் சேர்வளென்பர். (26)

தனுசு, மீனம், [இந்த ராசிகள், உதயலக்கின மாகிலும், ல்லது, இமகரன், லக்கினமாகிலுமிருந்து, அங்காரகன், திரும் சாம் சயில், பிறந்த, நாரி, மிகவும் சற்குணமுள்ளவளாயும், அனேக புரு டர்களை யிச்சிக்கும் காமமுடையவளாயு மிருப்பளென்பர். (27)

கொடுமரம், சலசலம், ஜென்மலக்கினமாகிலும், குரங்கி, லக்கின மாகிலுமிருந்து, முடவன் திரும்சாம்சையில் ஜெனித்த காரிகை, அற் பகாமக்கிறீடையுள்ளவளாக, யிருப்பளென்பர். (28)

துலாரணம், சலசரம் இந்த ராசிகள் உதய ராசியாகிலும், அல் லது, மானேந்திராசியாகிலுமிருந்து, பொன், திரும்சாம்சையில், பிற ந்த, ஜாதகி, வெகு சற்குணவதியாயிருப்பளென்பர். (29)

பிரகஸ்பதி கேஷத்திரமிரண்டும், உதய லக்கினமாகிலும், அல் லது, சந்திரலக்கினமாகிலுமிருந்து, சௌமியன், திரும் சாம்சையில் உதித்த, தையல், வேதசாஸ்திரம், காவியங்களிலக் ஞானங்கள், பலதும் உணர்ந்தவளாகுமென்பர். (30)

வேதன், கேஷத்திரமாகிய, தனுசு, மீனம், ஜென்மலக்கினமாகி லும், இந்து, லக்கினமாகிலுமிருந்து, சுக்கிரன் திரும் சாம்சையில் பிறந்த ஸ்திரீ விபசாரியாகி பிரசித்த முள்ளவளாயிருப்பளென்பர்(31)

கரியன் கேஷத்திரமாகிய மகரம், கும்பம், இந்த ராசிகள், உதய லக்கினமாகிலும், அல்லது, சந்திரலக்கினமாகிலுமிருந்து, செவ்வா யின், திரும் சாம்சையில் பிறந்த, மடந்தை, அதிக, காமமுடையவ ளாய், பல புருஷர்களைச் சேர்வளென்பர். (32)

மகரம், கும்பம், ஜென்மலக்கினமாகிலும், அல்லது, சந்திராலக்கினமாகிலுமிருந்து, முதுமகன் திரும்சாம்சையில், பிறந்த ஸ்திரீ, விபசாரமுடையவளாயிருப்பாளென்பர். (33)

கூலி, சாடி; இந்த ராசிகள், உதயலக்கினமாகிலும், அல்லது, சந்திராலக்கின மாகிலுமிருந்து, பீதகன், திரும் சாம்சையில் ஜெனித்த, மடந்தை, புருடனிடத்தில், அதிக, அன்புள்ளவளாயிருப்பமென்பர். ()

இரவியின் புதல்வன் கேஷத்திர மிரண்டு, ஜென்மலக்கினமாகிலும் அல்லது, வெண்கதிரோன், லக்கினமாகிலுமிருந்து, மதிமகன், திரும் சாம்சையில், பிறந்த, ஸ்திரீ, துன்மார்க்கமுள்ளவளா யிருப்பளென்பர்.

மான், குடம், இந்த ராசிகள், உயிர், லக்கினமாகிலும், அல்லது, உடல் லக்கினமாகிலுமிருந்து, சுக்கிரன், திரும் சாம்சையில், பிறந்த, ஜாதகி, மலடியாகபிருப்பளென்பர். (36)

பெண்கள், ஜென்மலக்கினத்திற்கு, சப்தமஸ்தானம், சராசியாகில், புருடன், எப்போதும், வெளியூர் பலதேசம், நாடுகளிலும், ஸ்திர ராசியாகில், புருடன், சுயதேசத்திலும், உபயராசியாகில், புருடன், சிலகாலம், சுயதேசத்திலும், சிலகாலம், பரதேசங்களிலும், சஞ்சரித்திருப்பனென்பர். (37)

பெண்கள், உதயலக்கினத்திற்கு, சப்தமகேந்திரத்தில், விண்மணியிருந்தால், ஜெனித்த மடந்தையை, மணஞ்செய்தவன், தன்பாரியை, விலக்கிவிடுவனென்பர், (38)

பெண்கள், உதயலக்கினத்திற்கு, ஏழாமிடத்தில், பூமகனிருந்து, பானு கரியன், பாம்பு முதலான பாவர்கள் யாராகிலும், நோக்க உதித்த, நாரி, வாலிபத்தில் தானே அமங்கலியாவ ளென்பர், (39)

பெண்கள் உதயலக்கினத்திற்கு, சப்தமகேந்திரம் பெற்ற, இரவியின் புதல்வனே, ரவி, குஜன், பாம்பு, முதலான பாவர்களில் யாராகிலு மொருவர் பார்க்கப் பிறந்த, மாது, மணமில்லாமல் விர்த்தாப்பியம், வரையில், கன்னியாஸ்திரீயாகவே யிருப்பளென்பர். (40)

பெண்கள் உதயலக்கினத்திற்கு, சப்தமகேந்திரத்தில், சுபர்களும், பாபர்களும் கூடியிருந்தால், ஜாதகி, கணவனைவிட்டு நீங்கி, மனதுக்கிசற்ற புருடர்களுடன் கலந்து, மனஞ் சந்தோஷித்து, யிருப்பளென்பர். (41)

ஏழாமிடத்தில், பகை நீசம் பெற்ற பாபர்களே, சுபர்களால் பார்க்கப்பட்டிருந்தால், ஜாதகியை மணஞ்செய்த புருடன் விலக்கிவிட்டு

விசனமும், அவமானமு மடைந்திருப்பான் ஜாதகியுட். கணவனைவிட்டு நீங்கியிருப்பாளென்பர். (42)

குஜன், சுக்கிரனிவர்கள், ராசியில், எங்கிருந்தாலும், ஈவாம்சையில், பௌமன், புகரங்கி சத்திலும், புகர், பௌமனங்கிசத்திலும், ஏறியிருந்தால், ஜாதகி, தன் சுய, இச்சையினுலே, அனேகம் பேர்களோ சம்போகம்செய்து, மனக்களிப்புடனிருப்பளென்பர். (43)

பெண்கள், உதயலக்கினத்திற்கு சப்தம ஸ்தானத்தில் மதி குஜன், பளிங்கு, இம்மூவரும், கூடியிருந்தால், ஜாதகி, புருடனுடைய உத்திரவுகேட்டு, பகலிரவென்று பேதகமில்லாமல், பொருள் சேகரிக்க, மனசந்தோஷத்திற்காகவே, பலபேர்களோச்சேர்ந்து, சுகித்து யிருப்பளென்பர். (44)

குஜன், சனி, இவர்களுடைய க்ஷேத்திரங்களிலொன்று, ஜெண்மலக்கினமாகி, சந்திரன் புகர்கூடி, பாபர்களால், பார்க்கப்பட்டால், ஜாதகி விபசாரியாதும், ஜாதகியைப்பெற்ற மாதாவும், விபசாரியாயிருப்பளென்பர். (45)

பெண்கள், ஜெண்மலக்கினத்தை, சப்தமகேந்திரம், பெற்ற, குஜ ஈவாங்கிசையடைந்த காரியால் நோக்கப்பட்டால், ஜாதகி பிணிகளுள்ள, கடிதடத்தையுள்ளவளாக, யிருப்பளென்பர். (46)

பெண்கள், ஜெண்மலக்கினத்திற்கு, ஏழாமிட மேறிய, சுபர்கள், அம்சையில், தன் சுயஈவாம்சையடைந்திருந்தால், ஜாதகி, அழகுள்ள கணவனுக்குப் பாரியாயும், நோயில்லா சரீரமுடையவளாயு மிருப்பளென்பர். (47)

பெண்கள் ஜெண்மலக்கினத்திற்கு சப்த மகேந்திரம், மகரம், கும்பமாயிருந்தால் ஜாதகியின் கணவன் விர்த்தாப்பியமும் மூர்க்கமும் உள்ளவனு யிருப்பனென்பர். (48)

குஜ க்ஷேத்திரமான மேஷம், விருச்சிகமிவை ஏழாமிடமாகவரில் ஜாதகியின் கணவன் கோபியாயும், கலங்காத நெஞ்சும், சரீரபிலமும், பொருந்தி கீர்த்தியுட னிருப்பனென்பர். (49)

பெண்களுக்கு, ஏழாமிடம் ரிஷபமாகிலும், துலாமாகிலும், வருமாகில் அந்த ஸ்திரீயின் கணவன் சவுந்திரிய முள்ளவனுயும், செல்வம் சற்குண சவுபாக்கியங்களும் பொருந்தினவனுயு மிருப்பனென்பர். (50)

பெண்கள் உதயலக்கினத்திற்கு, ஏழாமிடம், மிதுனம், கன்னியாகவந்தால் ஜாதகியின், கணவன், சற்குணவந்தனுயும் புத்தியுகமு முள்ளவனுகவு மிருப்பனென்பர். (51)

பெண்கள் ஜென்மலக்கினத்திற்கு ஏழாமிடம் கடகமாகவந்தால், ஜாதகியின் கணவன் விடயசுகமென்ன காமாதுரனுகியும், சாந்தம் தயைமுதலான சற்குணவந்தனுகியு மிருப்பனென்பர். (52)

தனுசு, மீனம், சப்த மகேந்திரமாகவந்த ஜாதகியின் கணவன் சமகுண வந்தனுகியும், சமர்த்துள்ளவனுகியும், ராஜயோகத்தை பொருந்தினவனுகியு மிருப்பனென்பர். (53)

சிங்கராசி, ஏழாமிடமாகவந்த ஜாதகியின் கணவன். மிகுந்த மிருது சுபாவமும். மாதர்களின்மேல் அதிக பிரியமும், வியாபாரத்தில் சமர்த்துள்ளவனுகியு மிருப்பனென்பர். (54)

உதயலக்கினத்தில் அம்புலி மாலவன் அசுரகுரு இவர்கள் மூவரும் கூடியிருந்தால் ஜாதகியின்குணம் ஈரிஷை மாச்சர்யம் நிந்தைமுதலான துற்குண முள்ளவள், சுகமில்லாதவள், எப்போதும் சஞ்சலமும் துக்கமும், உடையவளாக யிருப்பளென்பர். (55)

பெண்கள் லக்கினகேந்திரத்தில், இராக்கதர், பண்டிதன், இவர்களிருவரும், கூடியிருந்தால். ஜாதகி சாஸ்திரமுணர்ந்தவள், கீதகளாவாத்தியம் தெரிந்தவள், நல்ல சற்குணமும், புத்தியும், யூகமும், உடையவளாக யிருப்பளென்பர். (56)

பெண்கள் உதயலக்கினத்தில், மழைக்கோளும், புலவனுங்கூடியிருந்தால் ஜாதகி ரூபசவுந்தரிய முள்ளவள். சங்கீதம்களாவாத்தியத்தில் தேர்ந்தவள் சமர்த்துள்ளவள் சௌபாக்கியவதி சுகமுட னிருப்பவளாகு மென்பர். (57)

பெண்கள் ஜென்மலக்கினத்தில், சசி, மதிமகன், புகர், மூவருங்கூடியிருந்தால், ஜாதகி, சுகமும், செல்வமும், சம்பத்தும், முதலிய நற்குணத்துடனு மிருப்பாளென்பர். (58)

பெண்கள் லக்கின கேந்திரத்திற்கு, சப்தம ஸ்தானத்தில், பாபக்கிரக மிருந்தால் அஷ்டமாதிபதி யேறிய, நவாமிசாதிபதியினுடைய, வயது, திசை, புக்தி, சித்திரங்களில், ஜாதகியின், கணவன், மரணமாவனென்பர். (59)

பெண்கள் ஜென்மலக்கினத்திற்கு, த்விதிய ஸ்தானத்தில் சுபக்கோளும். ஆயுருஸ்தான்த்தில் பாபக்கோளு மேறியிருந்தால் ஜாதகியின் புருடன். உயிருடனிருக்க தான் சுமங்கலியாய் மரித்து மோக்ஷவீடாகிய சுவர்க்கநாடு சேர்வாளென்பர். (60)


ரிஷபம், சிம்மம், கன்னி, விருசூகம், இந்த ராசிகளில் சந்திரனிருந்து ஜென்மலக்கினம் யெதுவானாலும் பிறந்த ஜாதகி அல்ப்ப புத்திரருடையவளாக விருப்பளென்பர். (61)

இரட்டை ராசியாகிய ரிடபம், கடகம், கன்னி, விருசூகம், மகரம், மீனம், இவைகளிலொன்று ஜென்மலக்கினமாகி, குஜன், புதன், குரு, சுக்கிரன், இவர்கள் எந்தராசியி லிருந்தாலும் பலவந்தனு யிருக்கப்பிறந்த ஜாதகி, புவியில், கியாதி, பிரசித்தம், கீர்த்தியுடனே, அனேகசாஸ்திர முணர்ந்த சமர்த்துள்ளவளாயும் மோகூஷவீடடைய வழியாகிய பிர்ம்மக்யான முணர்ந்தவளாகவு மிருப்பளென்பர். (62)

சப்தம ஸ்தானத்தில் பாபரிருக்க மற்றொருபாபி ஒன்பதிலிருக்க ஒன்பதாமிடத்திலிருந்த பாபர்களுக்குச் சொல்லப்பட்ட சன்னியாசதை ஜெனித்த, ஜாதகி, நிச்சயமாக, அடைகுவ ளென்பர். (63)

பெண்கள் லக்கின மேந்திரத்திற்கு எட்டாமிடத்தில் ரவி, குஜன், காரி, பாம்பு, இவர்களிலொருவர் நிச்சயமாக விருந்தால் பாலியத்தில் கணவனிறந்து ஜாதகி அமங்கலி யாகுவளென்பர். (64)

பெண்கள் ஜாதகப் பொதுப் பலன்கள் முற்றிற்று.





ருது நக்ஷத்திரப் பலன்.

அசுவதி முதற்கால்.

விநாயகர் காப்பு.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நந்தியெனும் பெருமானு ருலகுய்ய நமக்களித்த நங்கை மாரின்
முந்துருது நன்னூலைத் தமிழ்மொழியி னியம்புதற்கு மொய்ப்பார்வெ
சந்தமலி மீதிருந்தே யடியவர்க்கட் கரனென்னு மரனீந்த [ள்ளிச்
தந்திமுகத் தெந்தைபத மெப்பதமு முற்பெறவே தலையிற்கொள்வாம்.

குரித்திடல் குதிரை முதற்காலின் பலன்கள்
கூறுவர் பெண்களின் ருதுக்க
தரித்திடு மாடை சிகப்பினில் கருமை
தரும்பழ மைக்குள தென்க
எரிப்பது சூளை யோரங்காண் செங்க
லிடர்மேடை யோரமே யாகும்
முரிப்பது மரங்கள் கட்டைகள் கையில்
முதிர்ந்தபெண் கண்டன ளென்னே. (1)

கண்ட பெண்ணுடை கலங்கிய வெள்ளை
கருமையாம் நிறத்தினை யுடையாள்
துண்டதாம் வீதி கீழ்மேலாம் தென்பால்
சூழ்மனைக் கீழ்திசை சந்தாம்

அண்டிய மனைக ளபவிர்த்தி யாகும்
ஆலயம் வடகிழக் குளதாம்
கொண்டதோ ரிவ்வாற் நிலைதனி லிருது
கூறுவோம் பெண்களுக் காமே. (2)

இருதுவின் பெண்ணின் சகோதரம் நான்கு
யிரண்டதி லாணைன வோதும்
தருமதில் தந்தை சகோதர மூன்று
தலத்தைவிட் டொருவனே வேரும்
வருமதிலன்னை சகோதர மிரண்டு
வருமொன்று விர்த்தியா மென்க
பெருகியப் புருடன் வர்க்கத்தில் விர்த்தி
பெலன்சகோ தரமைந்தா மென்னே. (3)

கூரினர் புருடன் அரிதிசை யாகும்
குணமுள்ள செல்வனு மென்க
தேரினர் சுபங்கள் காலத்திற் நினை
திரம்வா லிபத்தினை யுடையாள்
பாரினி லன்னை வழிதனில் செல்வள்
பாக்கிய முள்ளவ ளென்க
நேரினில் புருடன் தனக்கெதி ராக
நெரியுள்ள வார்த்தையே யுரைப்பாள். (4)

உரைப்பள் காண்புத்திரான் மூன்றினிலொருபெண்
ஊனமே கண்ணினி லுள்ளாள்
நிறைப்படுங் குணமே புத்திரான் பின்னும்
நேசமாம் விர்த்தியிலுள்ளாள்
குறைபடா செல்வி மனதினில் கலகி
கோள்பகை யுள்ளவளாகும்
தரைமிசை தலங்கள் நிலையிரண்டிடமே
சாற்றுவரிவ் விதப்பலனே. (5)

பலனிதில் வயது பதினைந்தில் கண்டம்
பாக்கிய மிருபதில் விரையம்
தலமதி லிரண்டு நிலைதனில் வீடாம்
தையல ராலய மோரம்
பெலமுள்ள மனையி லிருபிரி வாகப்
பேதமா மன்னில யிருப்பார்
புலமதில்தானே அதிகார செல்வி
கூறுவ ரைம்பதி லரிட்டம். (6)

அசுவதி யிரண்டாங்கால் பலன்.

அசுபதி யிரண்டாங் காலில்
அமர்ந்திடும் பெண்களுக்கு
பசுகிற்கும் நீலயிற் ரூனை
பற்றிய குறிகள் காணும்
பிசகில்லை சுமங்கலி காணல்
பேதமாம் பெண்ணைருத்தி
திசைதனில கிழ்பால் சென்ருள்
திரமுடன் சொல்லுவாரே. (1)

பெருத்திடல் கிழ்மேல் வீதி
பெலமுள்ள மனிதன் பக்கம்
தரித்திடும் கிழ்பால் சந்து
சார்ந்ததென் கிழக்கில் கெங்கை
உரைத்திடல் மேல்பா லீனம்
உருயப்பால் மனிகாண் விர்த்தி
பரித்தகோள் கிழ்பால் வீடு
பாழாப்ப விர்த்தி யென்றே. (2)

வெண்மதிக் கேழாமாதி
மிக்ககோள் பார்வையாகில்
வண்மையாம் செகப்பு வெண்மை
வனுவுள்ள ஆடையென்க
தண்மைகாண் தந்தை வர்க்கம்
சார்ந்திடும் பாட்டன் மூவர்
உண்மையே யிரண்டு விர்த்தி
உடன் தந்தை யுபயமென்மீன. (3)

பகருவ ரன்னைவர்க்கம்
பற்றிய தந்தை மூவர்
புகர்மதி சகிதம் பார்வை
பொருந்தியங் கிருக்கில் காணும்
சகமதில் தந்தை யேகன்
தனித்துட னிருப்ப னென்க
தகமன்னை வர்க்கந் தன்னில்
சார்ந்தகர் மங்க ளென்னே. (4)

சிறப்பொடு செல்விக்கேகேள்
திரம்ருது ஆண்டி ரண்டில்
குறிப்பது புத்திர லாபம்
கூடிய செல்வ மேன்மை
தறிப்படா வாழ்வள் கீர்த்தி
சஞ்சல மொன்று மில்லாள்
நிறைப்படும் புருடன் கீர்த்தி
நிலையுள்ளா ளென்று கூறே. (5)

வேறு.

அரிதல் புருடன் பலன்கேள்க்கில்
அறியும் வீதிக் கிழ்மேலாம்
பிரிதல் மேல்பா னதில்சந்து
பின்னல் கோவி லுண் டாகும்
நெரிதல் கன்னி மூலதன்னில்
நேராய் கெங்கை யுண்டாகும்
குரியமணிக்கு யிருபக்கம்
கோதைபணியா மென்றோதே. (6)

நவிலு மிவ்வாற் பெண்களுருக்கு
நாட்டில் விர்த்தி சகோதரங்கள்
தவரு மிரண்டு நிலைமூன்று
தனித்த ஆண்க ளொன்றாகும்
புகர் புந்தியுமாய் பார்வையதில்
பொருந்தி நிற்கில் பூங்கொடியாள்
சுகமெய் யுடமை தான்பூனல்
சுகித்தே யிருப்பா ளெனச்சொல்லும். (7)

சொல்லும் வயது ஜாதகிக்கு
சூழுமைம்பத் தொன்றாகும்
வெல்லும் பத்து மேழுக்கு
மிகுந்த புத்திரா லுண்டாகும்
நில்லும் விர்த்தி யிரண்டாண்கள்
நிலையாம் பெண்பா லொன்றாகும்
வெல்லும் படிக்கு சுயபூமி
மிக்க விலைவால் ஜீவனமே. (8)

அசுபதி மூன்றுங்கால் பலன்.

மூன்றுழின் மூன்றுங் காலில்
மூரியப் பெண்களுதக்கு
அன்னளின் பலன்கள் கேட்கில்
ஆடையே யழுக்கு வெள்ளை
கன்னியைக் கண்டபேர்கள்
கருதுவன் சுமங்கலி யாகும்
மின்னியக் கொடியாள் வீடு
வீதிதென் வடலா மென்னே. (1)

வீதிதென் வடசேல யாகும்
வீடது வடக்கு வாசல்
பாதியம் மனையி லீனம்
பகருவேன் தந்தை யில்லம்
வேதியர் மனைதென் பக்கம்
வீதிக்கு மேல்பான் கோவில்
தீததி லில்லை யென்று
தேர்ந்தெடுத் துரைத்ததீதை. (2)

தந்தையின் சகோதரங்கள்
சாற்றக்கேள் தலத்தில் மூவர்
விந்தையா யிருப்ப னேகன்
வேரொரு தலத்தைநாடி
முந்தியப் பூமிபொன்னும்
முற்றிலும் விரையமென்க
சந்ததி யேகர்க் கில்லை
தத்து புத்திரனு மென்னே. (3)

நிறைந்தபெண் அம்மான் வர்க்கம்
நேயமாம் வித்தி மூன்று
குறைந்திடா செல்வ முண்டு
குறைவது மத்தி யத்தில்
அறைந்தன ரண்ணி யோடு
ஆணொன்று பெண்ணைட் டாகும்
மறைந்திடும் பூர்வம் விட்டு
மாரியே யிருப்பர்தாமே. (4)

இருப்பனென் றுரைத்தீர் மெய்தான்
யிருதுவின் பலன்கள் தன்னை

விருப்பமாய் ஜாதகத்தின்
விபரங்கள் தன்னை சொல்லும்
குரிப்பதா மசே கேளாய்
கூடிய சகோதரங்கள்
குரிப்பிடல் மூன்று விர்த்தி
குணநிலை யாண்பால் பெண்டே. (5)

ஆணதி லொன்று மேன்மை
அதிகார செயலுண்டாகும்
தோணுதல் தந்தை செல்வம்
சுகமது விர்த்தி மேலாம்
பூணுத லாடை பொன்னும்
பொருளது சுகமே யுண்டாம்
வாணிபம் பூமிதன்னில்
வரும்பொருள் விர்த்தியாமே. (6)

குணமுள்ளாள் வயது ஐந்தில்
குரித்திடும் கண்ட மொன்று
மணமுள்ளாள் வயது பத்தில்
வாலிப சுபங்கள் கூடும்
துணையுள்ளாள் புருடன் வீடு
சொல்வது கடகதிக்காம்
இணையுளாள் வீதி கிழ்மேல்
யிருபக்கஞ் சந்து வீடாம். (7)

மே வ று.

இனிய புருடன் தந்தையொடு
யிருவர் விர்த்தியென வோதும்
தனியாம் புருடன் பெண்ணிரண்டு
தலமேபதத்தில் தானிருப்பார்
வனிதை தனமேய சுபமுடித்து
வந்தகாலம் செல்வமென
புனிதமுடனே யிவ்விதமாய்
புகலும் பலன்கள் தானறிந்தே. (8)

மதித்திட செல்வ முள்ளாள்
மருவியப் புருடன் தன்னை
பதிதனில் நிலைக்க வைப்பாள்
பாரில் புத்திரனை வைந்தில்

விதித்திடு மாண்பால் ரெண்டு
மேதினில் பெண் ணெனன்றுகும்
துதிக்கவே தெய்வ சிந்தை
துடர்விரை யங்களென்னே. (9)

கருதிய தின்னங் கேளாய்
கன்னிக்கோ வயது ஐம்பான்
பொருதிய தொன்று தீர்க்கம்
புருடர்க்கு நாற்பான் றன்னில்
குருகிய செல்வம் பின்னல்
கோள்பகை வழக்குண் டாகும்
கருமதில் புத்திரா ள் தன்னல்
தழைத்த செல்வீக மென்னே. (10)

அசுவதி நாலாங்கால் பலன்.

புரவியின் நாலாங் காலில்
பூரண ருதுகாலங்கள்
தரைமிசை சிகப்பு வெண்மை
தரித்திடு மாடையென்க
திரவியே கண்ட பேர்கள்
நெரியிலா வமங்கலியாகும்
பரவிய கெங்கை யோரம்
பார்தனில் மரங்களென்னே. (1)

விலக்குநா ளதனில் யாத்திரை
விதித்தன ளன்னை பின்னும்
கலக்கமாய் கன்னியோடு
கர்மத்தைக் கேட்டுத் துக்கம்
பெலக்கவும் பிரயாணங்கள்
பேதமே யாகிநின்றால்
துலக்கமா யிருதுவென்று
சொல்கேட்டா ளன்னை காணே. (2)

காரியும் பிருகு வெய்யோன்
கலந்துடன் பார்வையாகில்
மீரிய ததனல் வீதி
விளங்கிய பிரிவு மூன்றும்

தேரிய தெற்குவாசல்
சிங்கத்தின் திசையில் கோவில்
ஏரிய தனல் துன்பம்
யிடராகும் பலன்க ளென்னே. (3)

வேறு.

இனமதா மென்னில் தந்தைக ளிரண்டில்
யினியதாம் விர்த்தியி லொன்று
தனமுள்ள அன்னவர்க்க மூன்றுள தி
தனிபையி லொருவரே விர்த்தி
கனமுள்ள கன்னி சகோதர மிரண்டு
காளையா வொருவனு மென்க
மனமுடன் செல்வமோங்கி யேவாழும்
மகிழ்ச்சியை யடைவளென் றோதே. (4)

வேறு.

காணுதல் கன்னிக்குப் புருடன்திக்கு
கருதக்கேள் அரிதிசையில் காணலாகும்
பூணுதல்கேள் கீழ்மேலாம் வீதியாகும்
புகலுவது வடமுகப்பு குடும்பமூன்று
தோணமதில் பெண்குடும்பம் விர்த்தி யொன்றும்
சுகமுடைய பூமியுடன் சுயார்ச்சிய முண்டாம்
வாணிபமு மிகவுண்டாம் சகோதரங்கள்
வலுவிரண்டா மெனவுரைப்பர் வண்மையோதே. (5)

சாதகியாள் குணமுடையாள் தர்மசிந்தை
தையலர்க்கு சகோதரங்கள் சாற்றுமேகன்
மாதருக்கு வயதுபத்து மூன்றில் மீமன்மை
வரும்புருடன் மங்கலமாய் வளர்ச்சியுண்டாம்
வாதையது யிருபத்தியொன்றில் கண்டம்
வந்தவுடன் வாதமான்று வலியகண்டம்
கோதையர்க்கு யிருபதல்லால் மேன்மையாகம்
கூறுவது புருடர்க்குக் குறிப்பதோதே. (6)

அசுவதி நக்ஷத்திரம் நான்கு பாதங்களுக்கும் கூடிய செய்யுள். 30

அசுவதி நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.



பெண்களின் ருதுபலன்

பரணி.

விநாயகர் துதி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கண்களுங் களிக்கக் கைலமால் வரையைக் கனிவுட னடைந்துவிண்ணவர்கள்
பண்களு மினிதாய்ப் பாடிகொண் டாடிப் பயமதை யகற்றென வேண்டப்
புண்புரி கயமா முகன்றனைக் கொன்ற புங்கமார் கணபதி பணிவாஞ்
தண்முக நந்தி பெண்ருது வாக்ய ஜாதகஞ் சாற்றுதற் கென்றே.

(*)

பரணியின் முதற்பாதத்தில் பாவையர் ருதுவேயானால்
கரணிமீதாடை வெண்மை சரீரமுங் கருப்பதாகும்
கரணமாமனைக்குத் தென்கீழ் கானமாங் கண்டபேர்கள்
முரணமெய் மெலிந்தமாது மூர்க்கமாய் பார்த்தா லென்றே. (1)

வேறு.

கண்டபெண்ணுடை வெண்மையில் கருப்பு
கருநிறம் வியாதியை யுடையாள்
கொண்டிடும்வீதி வடக்குத் தெற்காகுங்
கோபுரம் கெங்கை தென்மேற்காம்

வண்டனின் மாதுமனை நிலையிதுவாம்
வாசலிந்திரன் றிசையாகும்
துண்டெனும் வார்த்தை மொழிவள் தூர்க்குணத்தி
தூணவர்நான் கைந்தெனச் சொல்லும். (2)

சொல்லிடுந் தந்தை சகோதர நான்கு
சுகமில்லை யொன்றன்னியதேசம்
மெல்லியவன்னை சகோதர மிரண்டு
விர்த்தியொன் றினமாம் புருடன்
வில்லதின் றிசையாம் சகோதர மிருவர்
விளங்குபெண் ணொன்றெனலாகும்
எல்லையிலீசன் கோவிலுங் கிழக்கில்
இருக்குமென் றுரைத்திடலாமே. (3)

கன்னியாள்தனக்குச் சேய்ரவியாண்டில்
கலக்கமில்லா மணமுடிப்பர்
உன்னியகுடும்ப விர்த்தியுள்ளவளா
முள்ளத்தில் வஞ்சனை யுடையாள்
பொன்னெடு பூமிப்பொருள்மிகப் படைப்பள்
புத்திர விர்த்திநான் கதனில்
மின்னிய பெண்பா லிரண்டதி லொன்று
விளங்கிடா வமங்கலியாமே. (4)

ஆகும்பத் தீரேழாண்டினிற் கண்டம்
அம்மையால் பாதையா மிருபான்
வேகமாய் வடக்கு திசைநடை கிணற்றில்
மெல்லியாள் ஜலமருந் திடுங்கால்
சாகிடாள் தவரி மீளுவள்புருடன்
றனக்குமுன் சுமங்கலியாக
சோகமாய்நாற்பத் தைந்தினில்மரணம்
சொல்பரணியின் முதற்காலே. (5)

பரணி இரண்டாங் கால்பலன்.

தாசியி லிரண்டாங் கால்ருதுவாகில்
தரிப்பது கிழிந்திடு மாடை
வீசியகிழக்கு நதிக்கரை யோரம்
விருப்பமாய்க் குளித்திடுங் காலை

நேசமுள்ளுபய சுமங்கலி காணல்
நிலையிவர்க் குறிகளே வினவில்
நாசியதினஞ் செகப்பு மெய்யாடை
நாலுவர்ணங்களாம் விருத்தை (1)

மற்றொருபெண்ணை நிறத்தினில் கருப்பு
வாலிப முடித்திடுமாடை
உற்றிடுமிரண்டு வர்ணமாம்நாரி
வுயர்ந்திடுங் குலந்தனி லுதித்தாள்
வெற்றியருதுவின் பெண்சகோ தரங்கள்
விர்த்தியா மைந்தென வுரைக்கும்
குற்றமாம் ஜேஷ்டன் கள்ளனுங் கொடியன்
குறித்திடு மணமில்லா னென்றே. (2)

வேறு.

நாரியின்மாதாவர்க்கம் நலமில்லை மூன்றதாகும்
சீருடன்வாழ்வர்தந்தை செப்பிய வர்க்கமாரும்
பாரினில் பெண்கள்மூன்றும் பலமில்லை யொன்றுபாழு
கூரிய கனிட்டர்தந்தைக் குடியனு மிலவன்றுமே. (3)

தந்தையின் பூர்வாதீனஞ் சாற்றுவோம் வடக்கதாகும்
விந்தையாஞ் தந்தைகாலம் விரையமே செய்துபின்னல்
இந்தநல் நிலையைத்தேடி யியல்புடன் வாழ்வதாகும்
மந்திர வல்லனுகும் மாநிலம் போற்றதாமே. (4)

தெரிவதுப் புருடன்றக்கு செப்புவோங் கிழக்கதாகும்
அறிவினில் சிறந்தோனுகும் அவனிட சகோர்தரங்கள்
பெருமையா மிரைந்தாகும் பெருஞ்செல்வம் புருடன்ரூபம்
குருகிடு மெய்யன் செம்மை குலந்தனில் பெரியோனுமே. (5)

வேறு.

புவிதனில் பெண்பால் தனக்குமே மணங்கள்
பொருந்திடுங் காலம்மேளரசே
விதமுடனிரு பத் திரண்டினில் மணமாம்
மேன்மையாம் செல்வமங்குளதாம்
சிதைவிலாப் புருடன் சகோதர மைந்து
சிறப்பில்லைப் பெண்ணதி லொன்று
சுதனிலாதொருவன் பெண்கள் நாலிந்து
சூட்டுவான் மணமெனச் சொல்லே. (6)

சொல்லியப் பெண்பால் தனக்குப்பொன் பொருள்கள்
சொலித்திடும் புத்திராள் மூன்று
அல்லலுந்துன்ப முற்றுமோர்ப் புதல்வன்
அன்னியம் போய்சுக மடைவன்
நல்லியாளொருத்தி மத்திப வயதில்
நலமில்லை வமங்கிலியாகும்
மெல்லிருங்கொடியாள் தனக்குக் காலாந்தரம்
விளக்கிடும் தலையேகனென்றே. (7)

வேறு.

பொருந்துவ தின்னங்கேளுப் பூவையர் தனக்குவாயுள்
திருந்திய நாற்பதோடு சேர்க்கையா மெட்டுதீர்க்கம்
வருந்திடும் புருடனுக்கு வகையதுப் பின்னல்செல்வம்
குறைந்திடு மென்பர்சோறின் கூறுங்கா லிரண்டினுக்கே. (8)

பரணி மூன்றுங் கால்பலன்.

தருமநாள் மூன்றுங்காலில் சாற்றியப் பெண்களுக்கு
கருமைவெண் டுகிலாந்தம்மைக் கண்டவ ளன்னையாகும்
இருள்விழி யுதயகாலம் இல்லமா மிடம்மைதிக்கு
திருமொழிப் பெண்பாலங்குத் தியங்கியே நின்றுலென்னே. (1)
என்னவே பெண்பால்வீட்டிற் கெதிர்மனை பாழதாகும்
உன்னியக் கீழ்மேல்வீதி யுருமனைத் தெற்குவாசல்
நன்னிய தந்தையில்லம் நாரியர்க் கெதிரிலாரல்
அன்னியர் மனைதெற்காகு மதில்நான்கு பாகமென்றே. (2)
பாகமாம் வடக்கிலீசன் பசுநிலைப் பொய்கையுண்டாம்
தாகும்வேதியர்கள்வீடுத் தரைமிசை நிருதிதான்றும்
சோகமொன் றில்லைப்பெண்பால் தூணைவர்க விருனன்காகும்
நீகருவிழியாள்நான்கு நிலையதி லிரண்டாங்கூரே. (3)
கனிட்டரின் வித்தியில்லை காணுவா யன்னைவர்க்கம்
தனித்திடும் வித்தியில்லை சகோதரந் தீர்க்கமெட்டாம்
இனத்தினில் கூடிவாழார் ஏகமாய்ப் பிரிந்துநிற்பார்
கனிமொழிப் பெண்கள்மூன்றில் கருதுமொன் றீனமாமே. (4)
ஈனமாம் தந்தைவர்க்க மிடரதா மைந்துண்டாகும்
பூனிதப் பெண்களிரண்டுப் புகழிலா வாண்கள்மூன்று

ஈனுதப் பெண்களிரண்டு மிளமையில் மரித்துப்போகும்
ஊனுரத் தந்தைவித்தை வுயர்பெருந் தனமுள்ளானே. (5)

வேறு.

உள்ளபெண் கணவன் மதிதிசை செகப்பு
வுயர்பெருங் கல்விமான் குறியன்
தெள்ளியவர்க்க மூன்றதி லொன்றுச்
சிறப்பில்லைப் பூமிகளுண்டாம்
துள்ளியவிளமை மணம்வப தேழில்
சுகம்பெருஞ் செல்வமாங் குடும்பி
புள்ளிய யோகம் பதினேந்திற் கப்பால்
பொருந்திடுங் கனகவமணியே. (6)

கனகவமணிகள் பொருந்தியேவாழுங்
கன்னியாங் கற்பினை யில்லாள்
இனமுளோர் பகையாள் பத்துடனேழி
லுடுக்கமாங் கண்டமொன் றுளது
கனமணியுண்டா மூப்பதோ டென்பான்
கர்ப்பவே தனையினல் பெண்பால்
வினையெனவருத்த முற்றுடன் மரணம்
விளம்புவர்க் காரிகைதனக்கே. (7)

வேறு.

பின்புமேள் புருடன் ருனும் பேதையோர் கன்னிதன்னை
அன்புடன் மணம்செய்வன்கா ணதுமுதல் குடும்பமேதம்
தென்புடன் செல்வஞசஞ் செய்வினை யொணங்கள்பாதை
துன்பமென் மேலுண்டாகித் துயரமெத் தடைவன்ருனே. (8)

துயரமெத் தடைவானென்றீர் சுகமதிலுண்டோபின்னும்
தயவுடன் நாற்பத்தெட்டில் சமயோக முடையோனாகி
நயமதுப்பெறுவன் றீர்க்க நாற்பதோ டிருபதாகும்
கயவெனக் கிழவன்மூன்றுங் காலிலுள்பலனிதாமே. (9)

பரணி நாலாங்கால் பலன்.

(*)

பகலவன் நாலாங் கால்ருதுப் பெண்கள்
பழமையாஞ் சேலுமெய்செகப்பு
முகமதிற்றழும்பு மூக்குமேல் திசையில்
முயர்கனிக் காய்களைப் பறிக்க

அகமதைவிட்டுத் தன்னின மாதோ
டடுத்துபோகையில் வழிதன்னில்
நகமிலாப் பெண்பா லமங்கலிக்காண
நாடினள் மணைக்கெனக் கருதி, (1)
கருதிடுங்கூடச் சென்றவருபயக்
கன்னிகள் மணமிலாரென்ப
தெருவழிதன்னில் கண்டிடு மங்கை
சேலைகாரியின் நிறம்பழமை
தெரிதைகீழ்ஜாதி மத்திப வயது
தெரிந்திடும் ருதுபெண்ணின் மனைகள்
பரவிடுங் கீழ்மேல் வீதிதென் முகப்புப்
பற்றிடு மெதிரி லாலையமே. (2)
ஆலையமாகுங் கீழ்புற மனைபாழ்
அகந்தந்தை சுயார்ச்சித மாகும்
சாலவும்பெண்ணின் சகோதர மெட்டுத்
தழைத்திடு மூன்று மற்றதுபாழ்
மேலதா மன்னை சகோதர மாறு
விர்த்திபெண் மூன்றுமா லொன்று
சீலமாமன்னை பொருள்சுக முள்ளாள்
தீர்க்கமாந் தந்தையோடிருவர். (3)
தந்தையோடிருவர் மாதர்க ளில்லை
தலமதுப் பூர்வமூன் றிடமாம்
விந்தையாய்ப் பூமிமூலம் ஜீவனமா
மிகுத்திடுஞ் செல்வமுமிகுதி
அந்தமாம் பெண்பால் தனக்குப் புத்திரர்கள்
அறிவது தீர்க்கமா னிரண்டு
சுந்தரிமூன்று மாணதி லொன்று
துலக்கமொன் றில்லையென் றென்னே. (4)

வேறு.

மங்கையின் புருடன்றிக்கு மாலவன் றிசையாம்வீதி
பொங்கமாங் கீழ்மேலா தும் பொருந்திடும் வடக்குவாசல்
சங்கையாம் வர்க்கம்பத்துத் தலமதில் தீர்க்கமேழு
நங்கையவ் விதநிலையில் நாடிடு மணமென் றெண்ணே. (5)
மணமது யிளமையாண்டு மங்கலன் றிசையின்மொத்தம்
குணமுளாள் செல்வமுள்ளாள் குடித்தனங் கார்க்கவல்லாள்

தொணிக்குறை வள்ளாள்முப்பான் தொகைவரு டத்தில்மாதின்
கணவன் சத்துருக்கள்தன்னுல் காலனுக் கிறையாவானே, (6)

ஆகுமெட் டிரெட்டாண்டில் அறிவையர்க் கண்டமூண்டாம்
போகுமுப்பத்தி யொன்றில் பொருந்திடும் சர்ப்பகண்டம்
சாகிடாள் நாற்பத்தெட்டுத் தருமொன்பான் றீர்க்கந்தாழி
பாகுடன் நாலாங்காலின் பலனிது வாகுமென்றே. (7)

கால் 4-க்கும் செய்யுள் 29.
பரணிநக்ஷத்திரப் பலன் முற்றிற்று.

கிர்த்திகை முதற் கால்பலன்.

அங்கியில் முதற்கால்தன்னில் அரிவையர் ருதுவேயானுல்
மங்கிய வழுக்குசேலை மானிறங் கண்டபேர்கள்
சுங்கனுர் திசையாற்றேரம் சூழ்மர மடர்ந்தகாப்பில்
நங்கையாள் தனைக்கண்டோர்கள் நாடுவ ரன்னியமாதர். (1)

மாதர்களிருவராகும் மத்திப வயதுசேலை
நீதிபொன் னிறமாமஞ்சள் நிகழ்த்திடுங் கருப்புமெய்யாள்
சாதியி லுயர்ந்தகண்ணி சாற்றிடுஞ் சுமங்கலியாகும்
ஓதிடுமற்றோர்ப் பெண்பால் வுயர்பெரும் விருத்தையாமே. (2)

விருத்தையாம் புதியவாடை விளங்கிடு மூபயவர்ணம்
கருத்திடு மெய்யாள்ரூபம் கருதிடுங் குள்ளமாவள்
குரித்திடும் புருடருக்குக் குணமுடன் சாதங்கொண்டு
சிரித்திடு மொழிகள்பேசி சென்றவர் பார்த்ததென்றே. (3)

ருதுவின்பெண் சோதரங்கள் நுவலுமேவா மிரண்டதாகும்
கதியென வாண்பாலொன்று கதித்திடும் விர்த்தியுண்டாம்
துதிபெறு வாழ்வன்மாதா துணைவர்கள் நால்வராகும்
மதியுளோ ராகுமாந்தர் மதிக்கவாழ் வாறென்றேதே. (4)

ஓதியதந்தை வர்க்கம் வுரைக்குமீராறு வொன்று
சேதிகே ளாறுபோகச் செப்புமற் றேழும்நாசம்
மாதர்க ளிருவராகும் வலிவுடன் வாழ்வர்தீர்க்கம்.
ஆதிபூர் வங்களில்லை அலைந்திடுந் தொழிலாமென்றே. (5)

அலைந்திடும் புத்ராளாகும் அரிவையர் தனக்குக்கேளுங்
கலைமதிதனக்கு வைம்தான் கருத்துடன் வளுத்துநின்றுல்
துலைதூர மதிலிருந்து சொல்வர் ஜீவனங்களாகும்
பெலனில்லா புத்திரனென்றுப் பெண்ணது விரண்டாங்கூரே. (6)

கூரிய புருடன்றிக்குக் குறித்திடு நிருதியாகும்
சீரியசெவந்த கண்ணன் செகப்புமெய் கிழக்குவாசல்
தாரணில் வீதிக்கீழ்மேல் தனிடையாம் பெண்ணுமில்லை
நாரியர் தனக்கிரெட்டில் நலமதா மணமென்றோதே. (7)

பத்துட னிருபத்தாறில் பகர்ந்திடுங் கெண்டமுண்டாம்
கொத்துடன் மூப்பதோடுக் குறிக்குமோர் ஞன்குதன்னில்
வித்தகப் புருடன்றனும் விதித்திடுங் குன்மநோயால்
சத்தியே மரணமென்று சாற்றுவை யறிந்திடாயே. (8)

அரிவையர் தனக்குவப்பால் அவஸ்தைகள் மெத்தவுண்டாம்
பரியதாமீனகள்போகும் பற்றிய சொணத்திற்காக
சரிவரவாழ்வதில்லை சாற்றறு பதிலொன்றீர்க்கம்
எரிநாளின் மூதற்காலுக் கியம்பிடும் பலனிதாமே. (9)

கிர்த்திகையிரண்டாங்கால் பலன்.

நாவித னிரண்டாங்கால் துகில் வெள்ளை
நாரியின் நிறம்செகப் பாகும்
மேவியேதாது மூலவர்க் கங்கள்
வீதியில் மேற்குதிக் கதனில்
பூவிளங்கொடியாள் கரத்திலில் தாங்கி
புறப்படுங் காலையில் கண்டோர்
பாவியாமுயர்ந்த ஜாதியா முகங்கள்
பழுதுள்ளாள் மத்திபவயதே. (1)

வயதுமெய்கருப்பு துகில்கருன் செம்மை
வழகிலாக் கிழிந்ததேயாகும்
நயமதாய்க் கண்டவிடமெதிர் கெங்கை
நாடியமேற்கில் கோபுரமாம்
உயரமாய் வளர்ந்த மரமுமொன்றுளதாம்
உச்சியின் றிசைகனமாடி
பயமதாமிவ்வாறு நிலையைவிட் டரிவை
பற்றினள் மீனயது வென்றோர். (2)

வேறு. மீனயதுவருகுங்காலம் மன்னியா ளன்னியோரோடு
கனபெருஞ் சண்டைசெய்து கலகமாயிருந்த வென்பர்
தனமுளாள் ருதுபெண்வர்க்கஞ் சாற்றியப் பெண்களாறு
இனமுட னுண்பாலொன்று மியம்புமிப் பலனுமென்றோர். (3)

பெண்ணது நான்குவிர்த்தி பெலமில்லை யிரண்டுபாழாங்
கண்ணினில் ரோகமுண்டாங் கதித்தமூத் தாள்தனக்கு
திண்ணமாம் மற்றோர்பெண்காண் திடமிலாள் குடும்பஞ்நிதி
வண்ணமா யிவ்வாறுகும் வழுத்திடும் ருதுபெண்ணுக்கே. (4)

கேசுமாமன்னவர்க்கம் கிளையிரண் டாண்பாலாகும்
பாசமாம் பெண்பால்மூன்று பலமில்லை யொன்றுபாழு
தோஷமாம் பூர்வமில்லை சுயார்ச்சிதப் பொருள்களுண்டாம்
மோசமொன் றில்லைஜஷ்டன் மொழிவித்து வாணுமாமே. (5)

வித்தைக ளுண்டாந்தந்தை விளங்குவ னரசர்மூலம்
பத்தியாம் பொருள்களுண்டாம் பால்பசு பூமியுள்ளாள்
முத்தியே யடைவான் வர்க்கம் மொழிகுவ ரேழெட்டாகும்
சித்தியா மாண்பால்மூன்று தீர்க்கம்பெண்பால் மூன்றென்னே.()

ஐந்துடனேழாமாண்டி லழகுடன் மணமுண்டாகும்
விந்தையாங் கிழக்குத்திக்கு விளங்குவன் புருடன்ரூபம்
சுந்தரம் செகபுவீரன் சுகமுளன் நெடியரூபன்
அந்தமாம் வியாபாரத்தா லீலந்துமே பிழைப்பனுமே. (7)

பிழைப்பது பூமியுண்டாம் பெலமில்லை யற்பமாகுந்
தழைப்பதீ ரிரண்டதாகுந் சாற்றதிற் பெண்கள்ரெண்டாம்
பழமையாம் பூர்வமில்லை பாவையர் விர்த்தியுண்டாம்
கிழக்குதிக் கதனிலேக சகோதரர்க் கிவரைக்கொள்வர். (8)

கொள்வது விருதுவானக் கோதையர் தனக்குப்புத்திரர்
கள்விதமடவார்நான்கு காளைமூன் றுகுந்தீர்க்க
முள்ளதி லிரக்கமில்லா னொருவன்பெண் ணிரண்டதாகும்
மிள்குறுஞ் செல்வமாகும் விளம்பிடு மடந்தையார்க்கே, (9)

விளம்பிடும் ருதுவானப்பெண் வேசிபோல் பலரைச்சேர்வள்
களங்கவே சுங்கனுண்டில் கண்டமொன் றுண்டாம்பின்னுந்
திளங்கியோ செட்டில்தீர்க்கம் செப்புவ தறுபத்தேழாம்
உளங்கறு மீன்காலிரண்டிற் குரைப்பது பலனிதாமே. (10)

கிர்த்திகை மூன்றுங் கால்பலன்.

நாடதில் மூன்றுங்காலில் நாரியர் ருதுவேயானால்
வீடதின் பக்கம்தெற்கு விளங்கிடு மனையினோரம்
பாடகம் சிலம்பணிந்தப் பாவையர்க் கண்டதாகும்
மேடையு மருகிலுண்டாம் விளம்பக்கேள் குறிகளின்னம். (1)

குறியது ருதுபெண்ணுடைக் கோடியா மூன்றுவர்ணம்
நிறங் கருப்பாகும்பெண்பால் நேசமாங் கண்டகன்னி
அறிவுளாள் தனவான்புத்ரி அழகுபட் டாடையாகும்
நெறியுளாள் நிறஞ்செகப்பு நீடிவாழ் சுமங்கலியுமாமே. (2)

ஆகுமே ருதுவின்பெண்பா லன்னவீ டருகில்சந்து
சாகுமே வருடமொன்று சதிசெய்பு மணமேலாகும்
பாகுள முகப்புதெற்குப் பகரும்பின் னிடிந்துகாட்டும்
நோவினுல் மெலிந்தான்வீடு நோய்முகன் றிசையிலென்னே. (3)

வேறு.

என்னவே பெண்ணின் சுகாதார வர்க்க
மிருமூன்று பேர்களு மாகும்
அன்னிய மொருபெண்ணுகு மற்றைவ
ரழகுளார் நிலைதனில் வாழ்வர்
மின்னிய கொடியாளிருவர்கள் மிகுந்த
மேன்மைகாண் புருடரால் சுகிப்பர்
பின்னிய கனிட்ட தந்தைக்கு மூன்றுன்
பேசலாந் தத்துபுத்திரனே. (4)

புத்திரனுகு மன்னியின் வர்க்கம்
புகலுவர் பேகமே யாகும்
மத்திபமாகும் வர்க்கமொன் றில்லை
வன்னநற் சுகமுளாள் காமி
சத்துருவாகுந் தந்தையின் வர்க்கம்
தனமிளா ரிரண்டுபே ராகும்
சுத்தமாய்ப் பூர்வந் தானிலை சுயார்ச்சிதம்
சுகம்பொருள் பூமியுண் டென்னே. (5)

வேறு.

உண்டுகாண் ருதுபெண் ணுக்கு வையெரும் புத்திரனேகன்
வண்டணி மாதர்மூன்று வகுக்கலாம் தீர்க்கமென்று
அண்டிய கொப்பம்நான்கு அழிந்துபோம் புருடன்றிக்கு
சண்டனுர் திசையாம்வர்க்கஞ் சாற்றுவர் நான்கதாமே, (6)

காரியின் திசையினுண்டில் கதிக்கநல் மணமுண்டாகும்
வீரிய முடையாள்தர்மி மேன்மைக ளுண்டாஞ் செல்வம்
காரியசித்தியுள்ளாள் கற்பது வுடையாள்காலில்
கூரிய விரலொன்றீனங் குதிப்பிதா மொழிவர் தாமே. (7)

மூவொன்பதாண்டிற் கண்ட மொழியது குணம்பின்னெட்டு
நாவுமுவ் வாறில்கண்டந் தவரிடா சுமங்கலியாக
மேவிடு மாவிதானும் விளங்கிடும் புவியின்மீது
நாவிதன் மூன்றுங்காலின் நற்பல னிதுவாமோதே. (8)

கிரீத்திகை நாலாங்கால் பலன்

ஆரலின் நாலாங்காலில் அரிவையர் ருதுவேயானால்
பூரணின் கீற்றுப்போலக் கிழிந்திடும் புடவையாகும்
காரமுள் ளவளாம்வர்ணங் கருதிடுஞ் செகப்பதாகும்
நாரிதன் கணவன்வீட்டில் நரைதிசைக் கொல்லைதன்னில். (1)

கண்டவன் புருடனாகும் காலைநேரத்திலென்க
துண்டனுங் கொடியரோகித் துணைவர்நா லைந்தாகும்
குண்டையின் திசையில்பூர்வக் குளமுடன் பூமியுண்டாம்
உண்டுபூர் வாதீனங்க ளுருதியா மற்பமென்னே. (2)

கல்வியி லற்பமாகுங் கருத்தமெய் யழுக்குவாடை
நல்ருது விடத்திற்பொய்கை நலமில்லை மணிகீழாரல்
சொல்லினுல் குடும்பம் கெட்ட மனைதுலை பாகமூன்றும்
இல்லது முகப்புமேற்கு யிருபுறம் சந்ததாமே. (3)

ஓதிய தொன்பானுண்டி லுருமண முடிந்ததாகும்
நீதியி லன்னைவர்க்கம் நிலையிரண் டாணதாகும்
மாதவள் தனக்குரோகம் வரும்பொருள் மெத்தவுண்டாஞ்
சாதுவாந் தீர்க்கவாயுள் சாற்றிடுந் தலமீதென்னே. (4)

தலமதி லம்மானேகன் சந்ததியில்லா தோஷம்
நலமுடன் பெண்பாலுந்து நாடியே மணங்கள்செய்வன்
பெலமுடன் தந்தைவர்க்கம் பேசலா மேகனுகும்
கலைமதி போலச்செல்வம் கருதிடும் வளர்ச்சியுண்டே. (5)

கருதியப் பெண்பாலுக்குக் கவிரவி திசையாண்டிற்குள்
மருவிய கெர்ப்பமேழு மனத்துய ரழிந்து போகும்
குருதியின் திசையாண் டப்பால் குறித்திடு மாண்பாலொன்று
பெருகிய பூமிசெல்வம் பெருத்திடும் யோகவானே. (6)

யோகவான் றீர்க்கமுண்டாம் யோக்கியன் கல்வியுள்ளான்
போகவான் மனைவிரண்டு பொருந்திடும் புவியையாள்வன்

பாகுட னன்னீ தீர்க்கம் பகர்ந்திடு மெழுபதாகும்
காகமா மெரிநாள்நாலாங் கால்பல னிதுவாங்கூறே. (7)

கிர்த்திகை நக்ஷத்திரபலன் முற்றிற்று

சோகணி முதற் கால்பலன்.

உருளிதனில் முதற்கால்பெண் ருதுவே யாஞல்
வுரைத்திடுமெய் பொன்னிறமா முயர்ந்தவாடை
கருவெள்ளை மஞ்சள்நிறங் கலந்த தாகும்
கட்டடத்திற் குள்ருதுவாம் கண்டபேர்கள்
நிருதியமாந் தாய்தமக்கை அன்னிய மாது
செப்பிடுவாய் மூவர்களுஞ் சுமங்கலியாகும்
அரிவையிவள் ருதுகாலந் தன்னில் தந்தை
அலரிதிசைப் பொருள்மூலஞ் சென்றுனென்னே. (1)

அன்னைதன் சேலைக் கருப்புக் கிழிந்ததாகும்
அவள்விருத்தை புதியதுகில் செகப்பு மெய்யாள்
நன்னயமாய் தமக்கைதனைக் குரைக்கலாகு
நலமுடனே அன்னியப்பெண் குறியைக்கேளும்
தன்னினத்திற் குயர்ந்தவளா மஞ்சளாடை
தனமுள்ளாள் மத்திபமாங் கருத்த மெய்யாள்
உன்னியப்பெண் குணமுடையா ளதிகாமி
யுத்தமியாள் ருதுவிடத்தின குறியைக்கேளே. (2)

வேறு.

ருதுவிட மீனைக்குள் வாயுவின் மூலை
நுவலரு கினில்கிண றுளதாம்
பதிவடமுகப்பு கிழக்குமேல் வீதி
பானுவின் திசையி லாலயமாம்
மதிதன முயர்ந்தோன் மீனையெதிர் காணும்
மங்கைவாழ் பதிதந்தைப் பூர்வம்
நிதிமிக வுடையோன் றந்தையின் வர்க்கம்
நிலையிரண் டாணுபெண் மூன்றே. (3)

மூன்றதாம் பெண்ணின் சகோதரம் வினவில்
மூவிரண் டாணு பெண்ணைந்து
தோன்றதில் தீர்க்க மாணிரண் டாகும்
தோகையர் மூன்றதாம் பலன்கள்

ஈன்றமாதாவின் சகோதர மூன்றி
லிரண்டுபெண் ணுணதென்றுகும்
தான்றிய கனிட்டப் பெண்கெர்ப்ப மாறில்
தவரிடாள் மரணமென் றுரைக்கும். (4)


வேறு.

கன்னியாள் தனக்குப்புத்திராள் கருதிடும் பெண்பாலிரண்டு
உன்னிய வாண்பாலொன்று வுரைப்பர்காண் தீர்க்கமாகும்
நண்ணியப் பெண்களாலே நலமில்லை யேழையாகும்
சென்னியில் காயமுண்டாம் செல்வனுக் கென்றுகூறே. (5)

கூரிய ருதுபெண் ணுக்குக் குணமுடன் பதினேந்தாண்டில்
சீரதாய் மணமுண்டாகுஞ் சேய்திசைபுருடன்ரூபம்
மாருகண் செகப்புமெய்யன் வடிவினில் குள்ளனாகும்
தாரணி புகழவாழ்வன் றனமதில் குபேரனுமே. (6)

ஆகுமே இருபத்தேதழில் அம்மையால் கண்டமூப்பான்
சோகமொன் றில்லையிரேழ் சுரத்தினால் கண்டமொன்பான்
தோகையா ளரிட்டமாவள் சுமங்கலி யாகவேகாண்
பாகுடன் றேர்முதற்கால் பலனிது வாகும்பாரே. (7)

ரோகணி இரண்டாங் கால்பலன்.



பண்டியி லிரண்டாங்கால்பெண் பார்தனில் ருதுவேயானால்
அண்டையின் வீட்டுக்கார னணங்கவ ளோடுமேற்கு
அண்டர்மா முனிவர்போற்று மாலைய மீசன்றன்னை
தண்டமென் றுதிக்கச்சென்ற தலத்தினி லானதென்றே. (1)

ஆனபெண் செகப்பதாகு மதிகரூப வதியினுடை
கோனு வெள்ளையும்செகப்புக் கூடியதாகும்கோடி
தானதைக் கண்டகன்னித் தன்னுடன் வந்தமாதாம்
பானவள் செகப்புமெய்யாம் பக்கத்தில் மருவொன்றுண்டே. (2)

உண்டது கருப்புவெண்மை வுயர்ந்திடுந் துகிலுமாகும்
பண்டுவாலிபமா மங்கை பகர்ந்திடு வமங்கலியாகும்
கண்டவா லயத்தின்மேற்குக் கானகஞ் சிற்றாராகும்
வண்டனி ருதுவின்மங்கை மனுகுண மியம்பக்கேளே. (3)

மனையது தந்தைபூர்வ மத்தியில் பொய்கையுண்டாம்
கனமனை விர்த்தியுண்டாங் கட்டடம் பெலமதாகும்
தினகரன் றிசைமுகப்புத் தெற்குமால் வீதியென்பர்
வினவிய தெற்குகாலி விளம்பிடுங் குறியிதாமே. (4)

சுந்தரி சகோதரங்கள் சுக்கிரன் திசையில்பாதி
அந்தமாந் தீர்க்கமாண்க ளைந்துபெண்! மூன்றதாகும்
சூந்திடு மூடவனேகன் குணமில்லை வித்தையுள்ளன்
சந்ததம் பூஜையுள்ளோன் தருமண மில்லையென்றே (5)

சாற்றிடு மன்னவர்க்கம் சகோதர மிருவாகும்
ஆற்றினி லிருபத்தாறி லழிகுவான் வெள்ளத்தாலே
போற்றிய வன்னைக்காயுள் புகழ்பெருஞ் செல்வமுண்டாம்
தோற்றிடாள் சண்டைக்காரி சூட்சமா மறிந்துசொல்லே. (6)

நேசமாய் தந்தைவர்க்கம் நிலையேக னுகும்பெண்கள்
பாசமா யிரண்டதாகும் பழுதென்று வித்தியில்லை
காசினிப் புகழதந்தைக் கனபொரு ளுடையோனுகும்
வாசமாம் புருடன்றிக்கு மகரமாம் பின்னுங்கேளே. (7)

பின்னிடுங் கையனுகும் பெலமிலா ரோகிவீதி
உன்னிய கீழ்மேலாகும் உறுமனைக் கிழக்குவாசல்
மன்னவன் திசையினுண்டில் மணம்பெருஞ் செல்வமுள்ளான்
பின்னவ னேகனுகும் பேசுமிப் பலனுமென்றே. (8)

காரிகை தனக்குப்புத்திரா ளாலெரண் டாகும்பெண்பால்
வீரிய மில்லைகான்கு வித்தியி லொன்ற தாகும்
சூரன்மால் சனிபொன்னுண்டு தொகைருது மாதராயுள்
தேரிரண்டாங் காலுக்குச் செப்பிடும் பலனிதாமே. (9)

ரோகணி மூன்றுங்கால் பலன்.

வேறு.

வையக மூன்றுங் கால்ருது பலன் கேள்
வனிதை யின்நிறங் கருப்பாகும்
துய்யவெண் கருப்புப் பழுமையா மாடை
சூழ்மனை தனில்பசு நிலையில்
வெய்யவன் மூலத் தனிமையா யிருந்து
வேலைகள் புரிந்திடுங் காலம்
தையலாள்தாமே கண்டு வன்னிலையில்
தலைகுனிந் தகலிலாள் மடந்தை. (1)

மனமது கலங்கி நின்றிடுங் காலம்
மாதுருப் பொய்கையி லிருந்து

இனமுடன்கூடி சென்னியில் கங்கை
யெடுத்துக் கொண்டுபய மாதருடன்
மனைதனில் நுழையக் கண்டனலன்னை
மத்திப வயதுமெய் செகப்பு
கனமுளாள் கருப்புக் கிழிந்திடும் புடவைக்
கண்டிடுஞ் சுமங்கலி யாமே. (2)

வே று.

வீடதுப் பூர்வமாகும் விடந்தந்தை நிலையதாகும்
ஓடிடும் வீதிகிழமே லுருமனை முகப்பு தெற்கு
நாடியக் கெங்கை மேற்கு நலமில்லை யெதிரில்லம்பாழ்
கூடமுங் கிழக்கிலுண்டு குறிப்பிதா மொழிந்திடாமே. (3)

மொழிவது சகோதரங்கள் மூவிரண்டாணி லொன்று
இழிவதாம் பெண்பாலொன்று வேகுவா ளன்னியதேசம்
பழியில்லை மற்றோர்பெண்பால் பலனிலா விதவையாவள்
அழிவில்லை மற்றோர் மேன்மை யறைந்திடும் பலனிதாமே (4)

அன்னையின் பலனைக்கேளும் அறுவராஞ் சகோதரங்கள்
பன்னிய தெல்லாநாசம் பயின்றவள் மட்டுந்தீர்க்கம்
நன்னியதந்தை வற்கம் நலமில்லை யிருவராகும்
கன்னிய ரில்லைதந்தைக் கனதன முடையனுமே. (5)

நீலமாம் விழியாளுக்கு நிலைமண முடியுங் காலம்
கோலமா மதிசேயாண்டில் குணமுடன் மணமுண்டாகும்
சிலமாம் புருடன்றிக்குத் தெற்குமேல் முகப்புவீ தி
தாலமேல் வடக்குத்தெற்கு ச்சாற்றிடு மடவாருக்கே. (6)

புருடனை நிறங்கருப்புப் பொல்லாத துஷ்டனுகும்
கருவிழி செகப்பதாகுங் கன்னியொன் றீனமேகன்
தெரிவையுஞ் சரியாய்வாழாள் செல்வமு மிருதியில்லை
புருவத்தில் மச்சமொன்று பொருந்திடுங் கணவனுக்கே. (7)

கன்னியாள் தனக்குப்புத்திரா ளாலாந்திரத்திலுண்டாம்
முன்னமே யிரண்டுமூன்று பிறந்துடன் மரித்துப்போகும்
மன்னிய நாற்பத்தொன்பான் மாரகமெண்ட முண்டாம்
கென்னியப் பார்மூன்றுங்கால் கெணித்திடும் பலனிதாமே. (8)

ரோகணி நாலாங்கால் பலன்.

சகடதில் நாலாங்கால் ருதுபலன்கேள்
தையலின் துகில்முழு வெள்ளை
துகில்பழங் கிழிச்சல் நிறஞ்செகப்பாகும்
துணிந்து சொல்லிந்திரன் றிசையில்
அகமதுக்கேழா மனிதனில் நாரி
அமிர்தங்கொண் டேகிடுங்காலை
ஜெகமதிலந்த வீட்டினுக் குடையாள்
தெரிந்தனள் ருதுவெனத்தெரிவை. (1)

தெரிவையின் வீட்டிற் கெதிர்மனைப்பாழு
தென்வடல் வீதியாமுகப்பு
அரிதிசையாகுங் கீழ்புறங் கனத்த
ஆலயம் பொய்கையு முண்டாம்
கருதியவடக்கு வம்மிச நாஸ்தி
காரியின் றிசைசந் தொன்றுளதாம்
பிரியமாய்க்கண்ட நாரியர் தனக்குப்
பேதமாம்புத்திர னிலையே. (2)

கண்டபெண் விருத்தை மெய்செகப்பாகுங்
கருப்புடன் செகப்பதா மாடை
பண்டதாங் கிழிச்சல் ருதுவின் பெண்வர்க்கம்
பகருமெட்டா னுடனென்று
மிண்டிய தசமந் தீர்க்கமா மற்றோர்
விசையமா மிளமையி லென்க
தொண்டனு மேழாஞ் சோதர னொருவன்
றுலங்குவான் ஞானியாய் தானே. (3)

ஞானியாமன்னை பலன்சுக முள்ளாள்
நலமுள்ளாள் சோரமேயாகும்
ஈனமேயுள்ளாள் சகோதர வர்க்க
மியம்புவோம் பெண்ணிரண் டாணென்
றுயினுஞ் செல்வன் தீர்க்கமாமாயுள்
தரணியில் புகழ்பெற வாழ்வன்
வாயினில் மெய்யை நழுவிடான் பிறரை
வணங்கிடான் மொழிந்திடு மரசே. (4)

வேறு.

பாங்குள தந்தைவர்க்கம் பற்றிய நான்கதாகுந்
தீங்கதா மொருவன் றேசாந் திரத்தினில் திரிவனுகும்
வீங்கிடுந் தந்தைரோகன் மெய்யினி லிறணமுண்டாப்
ஆங்கன னீரெட்டாண்டி லரிட்டமா மொழிந்திடாயே. (5)

மொழிவது புருடன்றிக்கு முடவனுர் திசைமெய்சம்மை
தொழிலது சித்ரமூலம் தோகைய ருபயவர்க்கம்
பழியிலைக் கிழ்மேல்வீதிப் பற்றிய முகட்புமேற்கு
அழிவதொன் றில்லையீரெட் டாண்டினில் மணமாமோதே. (6)

ஓதிய புத்ரனென்று வுதவிடா மந்தியகால
நீதிபெண் ணிரண்டதாகு நிலையுள்ள செல்வமுண்டாஞ்
சேதியொன் றுரைக்கக்கேளும் செல்வியு மணமுமான
காதினுள் முதலாய்ச்செல்வங் கதித்திடு மெனச்சொல்வாயே.(7)

சொல்வது மங்கையார்க்குச் சுகமிலைப் பிணியால்துன்பம்
அல்லலும் பகலுமுண்டாம் ஆயுசு க்ஷீணமாகும்
கொல்லுமே யிருபத்தெட்டில் குணமில்லை யுலகின்மீது
நல்லதோர் காலநாலுக்கு ஈவின்றிடும் பலனிதாமே. (8)

ஆகநக்ஷத்திரம் 3க்கும் செய்யுள். 95.

மிருகசீரிட முதற்கால் பலன்.

இந்திரன் முதற்கால் ருதுநிறஞ் செப்பு
யிருநிறம் பழமையா மாடை
சுந்தரமுள்ளாள் மணக் கருகினில்மேல்
தோன்றிடு மாரலிஞரம்
விந்தையாய்க் கண்டோ ரன்னியமாது
வெருங்குடங் காத்தினி லேந்தி
அந்தமார்க் கமதாய் வந்தவ ளறிந்து
அறைந்தனள் தையல னீயர்க்கே. (1)

கண்டிடுமாது சுமங்கலிக் கருப்பு
கருத்திடு மாடையாம் பழமை
அண்டையில் வடபான் கொல்லையா மேற்கு
அழகுள்ள மணியிரு பிரிவாம்

விண்டிடுந் தெற்குப் பாழ்மனையாகும்
விளம்பிடுந் தந்தையி னிடங்காண்
கொண்டதென் கிழக்கி லாலயம் பொய்கை
குரித்திடும் பாகமோ ரைந்தே. (2)

வேறு.

பாகமாந் தந்தையில்லம் பெலயீனம் செல்வமில்லை
வேகமாம் பூர்வாதீனம் விரையுந்தென் மேற்கதாகும்
வாகுளத் தந்தையோடு வர்க்க நாலுந்து தீர்க்கம்
தாகமூன்றுகுமிரண்டு ஜாதியில் பேதமாமே. (3)

வெகுஜனப் பிரியமுள்ளாள் விர்த்திகேள் சகோதரங்கள்
பகையுளோ ராகுநான்கு பாவைய ரிருவராகும்
அகமதை யிழந்துயேக னன்னியதேசத்தை நாடி
சுகம்பொரு ளுடையோனுகச் சோதியைத் துதித்துவாழ்வன் ()

வாழ்வது அன்னைவர்க்கம் வளமையா மிருவராகுந்
தாழ்வ தொன் றில்லை மாதா தனமுடன் றீர்க்கமுள்ளாள்
பாழிலை யிருபத்தொன்றில் பற்றிடுங் கண்டமொன்றும்
ஆழிசூ லுலகின்மீது அன்னையர்க் குரைப்பதீதே. (5)


தந்தையின் வர்க்கங்கேளுந் தனித்திடு மூவராகும்
விந்தையாம் பெண்பாலொன்று விளங்கிடும் பின்னுல்கேடு
மந்திர வல்லனுகும் வகையுடன் மனைவிமூவர்
நொந்திருமூன்றுமாண்டில் நோயினுல் மாள்வன்றனே. (6)

மணமது மூன்னுன்காண்டில் மகிழுடன் முடிந்ததாகும்
குணமுளன் புருடன்திக்கு கூறுமிந் திரனேயாகும்
துணைவர்க ளாறில்மூன்று தோகைய ராகுமேமகம்
மணமுடிந் தீரெட்டாநாள் வமங்கலை யென்சொல்வாயே. (7)

சொல்லுவாய் ருதுபெண்ணுக்குச் சுகமுடன் தரிக்குங்கொற்பம்
நில்லிடா தழிவுகாட்டு நிலைமுப்ப தாண்டுக்கப்பால்
வல்லவ னேகப்புத்ரன் வரும்நிலை கன்னியொன்றும்
நல்லவன் பெற்றோர்தம்மை நலமுடன் சுகிப்பன்றனே. (8)

ருதுபெண்பால் தனக்குவாயுள் நுவலுவோ மெட்டிற்கண்டம்
மதிகுரு திசையினுண்டில் வருமொரு கண்டம் நாற்பான்
விதியது முடிவதாகும் மெல்லியாள் தனக்குப் பூவில்
மதியநாள் முதற்காலுக்கு வரும்பல னிதுவாமென்றே. (9)

மிருகசிர மிரண்டாங்கால்பலன்.



பாலியி லிரண்டாங் காற்பெண் பண்புடன் ருதுவதாலுல்
காலியில் படுக்கைவீட்டிற் கதிரவனுதித்தி டாமுன்
சீலமாம் தமையன்றேவிச் செல்வியைக் கண்டதாகுந்
தாலமீ தரசேயின்னுஞ் சாற்றிடும் பலனைக்கேளே. (1)

பலன்ருதுப் பெண்ணினுடை பசுமையாங் கந்தையாகுங்
கலைமதி வதனமுள்ளாள் கருத்தமெய் நெடியரூபம்
நலமதைக் கண்டநாரி நகப்பழ நிறமாமாடை
தலமதில் புதிதாஞ்செம்மை சாற்றும் வாலிபமாம்ரூபி
ரூபியாஞ் சுமங்கலியாகு நொடியதோர் மொழிகள்சொல்வள் (2)

பாபியாங் கொடியநீலிப் பகர்ந்திடும் ருதுவின்வீடு
சோபிதந் தந்தைபூர்வஞ் சுயார்ச்சித மில்லைசெல்வம்
கூடமேற் காகும்வீதிக் குறித்திடுங் கீழ்மே லென்னே. (3)

என்னுவை மீனயின்வாச லிந்திரன் திசையதாகும்
மன்னிய பாகமூன்று வழுத்திடுங் கன்னியொன்று
வின்னமொன் றில்லைதந்தை மிகுகல்வி யுடையோனாகு
நன்னிய செகப்பனுவன் நலந்தீர்க்க மைம்பதாமே. (4)

செஞ்சொலான் கணக்குவல்லன் செல்வியின் சகோதரங்கள்
வஞ்சிய ரிரண்டதாகும் வாண்சகோ தரங்கள் சூன்யம்
அஞ்சிடா ளெவர்க்கும்பாரில் அறிவுடன் வாழ்வதாகும்
பஞ்சையா மாமனேகன் பகர்ந்திடும் பிணியுள்ளானே. (5)

உள்ளதோ ரன்னைவர்க்க மொருனுன்குஞ் பெண்களாகும்
கள்ளியா மிருவர்வித்திக் கனத்திடா வாழ்வுகுன்றும்
பள்ளியில் கற்றமாதாப் பாதமொன் றீனங்காட்டும்
அள்ளிய கனத்தரோக மடிவயிற் றினி லுண்டென்னே. (6)

வயறது பெருத்திருக்கும் மாதுவின் கணவனுக்கு
தயவுளன் றிசைமேற்காகுஞ் சதாகரன் திசையினுண்டில்
நயமுடன் மணமுன்னுளே நடந்ததாம் வர்க்கமேகன்
கயறது தூக்கிட்டுள்ளங் கசப்படதா யிறப்பன்காணே. (7)

காணவே பெண்பாலுக்குக் கருதியப் புத்ரனென்றும்
தோணிடும் பெண்பாலிரண்டுத் துலக்கமாய் விர்த்தியாகும்
பூணும்வா பரணமில்லம் பொருந்திடு மூத்தாளுக்கு
ஆணது குறைவுண்டாகு மரிவைய ரிருவராமே. (8)

அறிவுரும் ருதுபெண்வீடு அழகு கட்டடமு மாகும்
நெறியுடன் புருடனோடு நேசமாய் வாழ்வதாகும்
குறையிலாள் ஐம்பத்தொன்றில் குளிர்ஜ்ர மரணகண்டம்
முறைமதி நாள்காலிரண்டின் மொழிந்திடும் பலனிதாமே. (9)

மிருகசிரிட மூன்றுங்கால்பலன்.

மார்கழி மூன்றுங்கால் ருதுபலன்கள்
மீனதனில் நிருதி மூலை
மாசுடை செகப்புடன் கருப்பு
பசுமையின் நிறம் புதிதாகும்
காரிகை தன்னைக் கண்டிடு மடந்தை
கருநிறம் சுமங்கலி விருத்தை
கூரியவாடை அழுக்கதாங் கந்தை
கொங்கை நீண்டிடுங் குறியாளே. (1)

மாதவள் ருதுகாலத்தினி லன்னை
வடதிசை யன்னிய நகரில்
போதவே பந்துள் சுபமெனச் சென்றுள்
பூவையர் ருதுமீனப் புதிதாம்
நீதியாமன்னைப் பதியது பூர்வம்
நிலைதந்தை யிளமையில் மரணம்
வீதிகேள் கிழக்கு மேற்கது முகப்பு
வேந்தனூர் திசையென விளம்பும். (2)

விளம்பிய பெண்ணின் சகோதர மூன்று
வித்தியி லொன்று மற்றிரண்டுந்
தளம்பிடு மன்னிய தேசத்தை நாடுந்
சஞ்சலம் பிணிரொணப் பீடை
கள்ம்பென வன்னை சகோதர மேழில்
கதித்திடும் வித்தியி லந்து
இளம் பிராயத்தில் துன்மரணத்தா
லிறந்திடு மற்றிரண் டென்னே. (3)

இன்பமா யிருப்ப ஞாணதி லிரண்டு
ஏந்திழை யார்கள் மூன்றுகும்
அன்பொ டம்மான்க ளரசர்கள்மூல
மதிக செல்வத்தினை யுடையார்

பொன்பொரு ளுடையா ளன்னை தீர்க்காயுள்
பூமிநாற் காலிக ளுடையாள்
துன்பமாந் தந்தைவர்க்க மூன்றுகும்
சுகமில்லை சஞ்சல முளரே. (4)

பெண்ணதி லொன்று பருவகாலத்தில்
பேசுவோம் சுபமது சமயம்
திண்ணமா நீச்ச னுடடுத் தன்னிய
தேசமா ரிடுவள்காண் கனிட்டன்
கண்ணிரண் டிழந்து மத்திப வயதில்
கங்கையில் வீழ்ந்துமே மரிப்பன்
புண்ணிய மற்றோன் சற்குண னற்பப்
பொருளுஞ்ய் வாழ்வனென் றென்னே. (5)

வேறு, காரிகை தனக்குவம்மான் கனிட்டனே புருடனுகும்
பாரினி லீரெட்டாண்டில் பெலமதாய் மணமுண்டாகும்
சீர்பெருஞ் செல்வமுள்ளாள் தீர்க்கம தாயுளுள்ளாள்
பேர்பெற வாழ்வளென்றுப் பேசிடுங் கோதையார்க்கே. (6)

கோதையர் தனக்குப்புத்திரர்கள் குணமுட னிரண்டதாகும்
பீதகன் ரவிசேய் சுங்கன் பெலன்மதி மதியின் புத்ரன்
ஓதிவர் திசையின்மொத்த முரைத்திடி மரணகெண்டம்
மாதமார் கழிமூன்றிற்கு வந்திடும் பலனிதாமே. (7)

மிருகசீரிடம் நாலாங்கால் பலன்.

பாழ்குநா லாங்கால் தனில்ருதுப் பெண்கள்
பழமையாந் துகிலிரு வர்ணம்
வாழினிதிடமாம் பசுமையும் செகப்பு
வனிதைமெய் நிறங் கருப்பாகும்
ஆழிசூ ழுலகின் மீதெ மன் றிசையி
லாற்றினில் னுன்குபெண் களுடன்
மூழ்கியே குளித்துத் திரும்பிடும் வழியில்
மொய்குழல் ருதுவெனப் படுமே. (1)

மங்கையர் னுன்கு பேர்களில் கண்ட
வனிதையின் நிறஞ்செகப் பாகுங்
கொங்கைகள் கனத்த வாலிப மாடைக்
குளிர்நிறம் புதியதா மழகு

பொங்கமா முயர்ந்த குலம்சுகங் மலியாம்
பொருந்திடு மற்றொரு பெண்பால்
துங்கமான் செகப்பு வமங்கலி முதிர்ந்தாள்
துகில்செம்மை பழயதா மென்றே. (2)

என்றமற் றிரண்டு கன்னிக ளிளமை
யியம்பிடு மணமிலா ரென்க
அன்றிடங் கிழக்கு மரங்கள் சூழ்வனமா
மரியவன் றிசையி லாலயமாங்
குன்றுமே மேற்கு திசைதனில் காணும்
கோதையின் மணிதந்தை பூர்வம்
வின்றுசெய் முகப்பு வடக்குத் தென்வீ தி
விளம்பிடுங் குறியிதுவாமே. (3)

ஆகுமே பெண்ணின் சகோதர மெவ்வா
றரிவது யேகமே யாகும்
பாகுடன் மூந்தி திருதியம் ஜெனித்துப்
பாழதா மாண்களு மில்லை
யேகமாந் தாய்க்கு வர்க்கமா ணிரண்டு
விளங்குவ தொன்றுமே யாகும்
நாகமே கடித்து வயது முப்பத்து
நான்கினி லரிட்டமா தாவே. (4)

வாதுகள் புரிவர் தந்தையின் வர்க்கம்
வகுக்கலா மாறதாம் விர்த்தி
சாதுகாண் தந்தை ஆணது விரண்டு
சாற்றியப் பெண்ணதில் மூன்று
சூதுவாம் பூர்வ சொத்துகள் மூலம்
தொடுப்பர்காண் அடிக்கடி வியாச்சியம்
காதலொன் றானங் கனிட்ட பெண்டனக்குக்
கருதிடு மின்னிலைப் பலனே. (5)

பலனதுப் புருடன் திசைவட கிழக்குப்
பகர்வது வயதுநாற் பதுவாங்
குலமதில் சிரேஷ்டன் வித்தை புத்தியுளான்
குறைவிலா பாக்கியமு முடையான்
நல்முடன்நாரி தனக்குவீ ரொன்பா
ணுண்டினில் மணம்வட முகப்பு

பெலமுடன் மிகுந்த சுகமது வடைவாள்
பெலத்திடும் புத்ர ஞலிங்தே. (6)
ஐந்துவீ ரொன்பா ஞண்டினில் ஞற்கா
லாலொரு கண்டமா மதன்மேல்
இந்துசே யிவர்கள் திசைதொகை யாண்டி
லிடுப்பினில் கன்றினத் தாலோர்
தொந்தமாங் கண்டஞ் சஞ்சல மதிகம்
சுகமில்லை தப்பிடாள் மரணம்
சுந்தரவுருளி பாதம்நான் கினுக்குச்
சொல்லிடும் பலனிது வாமே. (7)

கால் 4-க்கும் செய்யுள் 32.

மிருகசீரிட நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

திருவாதிரை முதற்கால்பலன்.

செங்கையின் முதற்கால்தன்னில் தெரிவைகள் ருதுவதானுல்
மங்கல மனையினுண்டா மங்கையின் றமையனுக்கு
பொங்கமா மனைக்குள்மேற்குப் பூவையும் கிணற்றினேரம்
சங்கையாம் பெண்களோடு சரசசல் லாபத்தோடு. (1)
மகிழுட னிருக்கும்வேளை மாமயில் ருதுவதாகும்
முகமது ரூபமாகு முடவன்சேய்க் கலந்தவர்ணம்
துகிலது கோடியாகுஞ் சுந்தரி நிறஞ்செகப்பு
நகமொன்று வலதுகையில் நவிலுவ தினமாமே. (2)

வேறு.

அங்கணம் பக்க மிருந்திடும் பெண்க
ளறுமூன்று பேர்களில் கண்ட
மங்கை வாலிபமாம் நிறஞ்செகப் பாகும்
வழகிலாள் சுமங்மலி யாகும்
தங்கம்போலுபய வர்ணபட்டாடை
தரித்திடு நாரிகாண் மேலும்
அங்கத்தி லிடது பாரிசந் தினக்கா
யங்களின் றளும்புவோன் றென்னே. (3)
மந்திரந் தந்தை சுயார்ச்சி தமாகும்
வடமுகப் பெதிரினில் போய்கை

சுந்தர மிகுந்த மனையதாந் தேற்கு
சூட்சமா மருகினில் சந்து
அந்தணன் றிசையி லுயர்ந்திடும் விருக்ஷம்
அரிவையின் சகோதரமொண்பான்
விந்தையாந் தீர்க்க மைந்துபெண் ணிரண்டாண்
விர்த்தியில் நான்கென விளம்பே. (4)

தடித்திடுந் திரேக மன்னையின் குணங்கள்
தயவுளாள் மெலினமா மொழிகள்
கடுத்திடப் பேசாள் வர்க்கமூ வைந்து
கலக்கமாம் விர்த்தியில் னுன்கு
நடுத்தர மானபருவ காலத்தில்
நாசமாம் வர்க்கங்கள் மரிப்பர்
அடுத்தவர் தம்மைநழுகிடாள் தீர்க்க
மறுபது வரையில் மெட்டென்னே. (5)

வேறு.

எட்டினிற் பகுதியாகு மீன்றதோர் தந்தைவர்க்கம்
திட்டமாந் தீர்க்கமூன்று சிறப்பதி லிரண்டதாகு
நட்டமொன் றில்லைப்பூவில் நலம்பெற வாழ்பவராகும்
கட்டடம் பெலமதாகுங் கருதிடு நந்திவாக்கே. (6)

நந்தியு மருள்வாரின்ன நாரியின் புருடன் றிக்கு
சந்திரன் திசையாந் தூஞ் சாற்றிய வயதீரேழில்
சுந்தரமணமுண்டாகுஞ் சுகம்பெற வாழ்வள்புத்ராள்
வந்திடும் பெண்பால்மூன்று வழகியதாண்பாலிரண்டே. (7)

இரண்டுநான் கைந்தேழெட்டில் நலக்கமாம் பிணிகளுண்டாம்
கொண்டநாற் பதினன்கோடு குருதிசை மொத்தங் கூட்ட
கண்டதோர் தொகையினுண்டில் கன்னிகை மரணம்தப்பாள்
நிண்டயாழ் முதற்காலுக்கு நிகழ்த்திடும் பலனிதாமே. (8)

திருவாதிரை யிரண்டாங்கால் பலன்.

ஈசனு லிரண்டாங்கால்பெண் ணின்பமாய் ருதுவேயாலல்
தேசமா மன்னியநாட்டில் திருவிழா வென்றுமங்கை
நேசமாம் பெண்களோடு நிருதியின் திசையாமங்கு
வாசமாய்த் திரும்புங்காலே வழியில்பெண் ருதுவென்றென்னே ()

ருதுவின்பெண் நிறங்கறப்பு நுவலுவோம் நெடியரூபம்
விதுகுஜன் காரிவர்ணம் மெல்லிய துகிலதாகும்
புதியதாங் கூடச்சென்ற பூவையர் நான்கதாகும்
சதிசெய்பு மாண்கள்ரண்டு சாற்றக்கே ளின்னந்தானே. (2)

வழிதனில் வருகும்போது மங்கையின் ருதுக்குறிகள்
பிழையிலா துரைப்போம்ஈரி பெரியதாங் கரையின்மீது
நெழியிலா வானதோங்கி நின்றிடு மரங்கள் பக்கம்
தழைபல விருகூழ்முண்டாஞ் சார்ந்தவன் னிலையிலென்னே. (3)

அன்னிலை கண்டசாது வமங்கலி மூர்க்க மூள்ளாள்
உன்னிய நிறங்கறப்பு வுடுத்திடு மாடைசெம்மை
கன்னியாள் மற்றிருருத்தி கறப்புமெய் புதியவாடை
நன்னிய வயதுமத்தியம் நாடிடுஞ் சுகங்களேயென்றே. (4)

நாடுமற் றிரண்டுகன்னி நவிலுவர் மணங்களில்லை
வீடது கிழக்குவாசல் மெல்லியாள் சகோதரங்கள்
வாடுமா ணிரண்டதாகும் வளமிலா கன்னியென்று
பாடதில் மேன்மையில்லை பலவிடந் திரிவர்தாமே. (5)

திரிவர்கா ணன்னைபெண்பால் ஜெனித்தவே ழாண்டில்கர்மம்
குருகிய சகோதரங்கள் குணமில்லை யிரண்டதாகும்
பெருகிய குடும்பமாகும் பயின்றவள் ஜெனனகாலம்
தரணிமீ தேதகனம்மான் றழைத்திடா னென்றுசொல்லே. (6)

தந்தையின் வர்க்கமேழில் சாற்றுவ ரைந்துதீர்க்கம்
முந்திய பூர்வமுண்டா முறையிலான் கனிட்டனேகன்
சுந்தரி யிரண்டிலொன்று சுகமிலா தலைவதாகும்
தந்தையே விர்த்திதீர்க்கஞ் சாற்றுவ தெழுபதாமே. (7)

வேறு. காரிகை தனக்கு வாயுவின் திசையில்
கணவன் மெய்செகப்பு வாலீபமாம்
தாரணி பூர்வா தீனங்க ளுடையான்
சனிபுதன் திசை மொத்தம் பகுதில்
சீரதால் மணமுண்டாங் கிரண்டாண்டில்
செல்வியின் கணவன் மாரகமாம்
தூரதாம் பொருள்க ளுள்ளதை யழித்துத்
தடருவா ளன்னியமால். (8)

வேறு.மாருவா ளன்னியர் தன்னை மருவியே பலதோசங்கள்
நாரியுந் திரிவளாகு நற்சுகம் பந்துவில்லாள்

கூறியபுத் திரனில்லாள் குலத்தினில் கீழ்மையாவள்
தூரமாந் தெற்குநாட்டில் தோகையோர் நீச்சனுக்கு. (9)

அடுமையா மனைவியாகி அனுதின மடிகள்பட்டு
நடுங்கியே மனதுநொந்து நாரியு மிருப்பளாயுள்
மடங்கதிர் சனிசேய்பொன்னன் மதிதிசை மொத்தமாகுங்
கொடுமையா மிரண்டினிற்குக் குறித்திடும் பலனிதாமே. (10)

திருவாதிரை மூன்றுங்கால் பலன்.



ஆதிரை மூன்றுங்கால் ருதுப்பலன்கள்
அரிவைமெய் சேகப்புதாமாடை
நீதியில்கருப்பு வெண்மையுங் கலந்த
நீடிரு நூடைதாம் பழமை
ஓதுவர்மனையி னருகினில் நிருதி
வுற்றிடும் பசுதொழு வத்தில்
சாதுவென் கொடியாள் சாணம தெடுக்கச்
சார்ந்தன ளவ்வவிடம் ருதுவே. (1)

அவ்விட மதுரப்பழந் தரும்விருக்ஷ
மமர்ந்திடும் பலமலர் செடியும்
திவ்வியக் கனியைக் கரம்பிடித் தனது
சிறுவனைத் தேடியோர்த் தெரிவை
அவ்வழியாக வரருமுப் பெண்பால்
அசைவிலா னிற்பதை யுணர்ந்து
இவ்விதக்குறியென் றியம்பிடப் பெண்ணி
னீன்றவடம்சென்றன ளென்றே. (12)

அறிந்திடும்மாது நிரங்கருப்பாகு
மழகியத் துகில்செகப் பாகும்
நிறைந்த செல்வங்க ளுடைய சுமங்லீ
நேர்வய தாகுங்நற் குணத்தாள்
குறைந்திடுங் கூந்த லிடையினில் மருவு
குறியிதாம் மேற்கினில் பொய்கை
சிறந்தபெண் ணில்லங் கட்டடம் பெலமாந்
தென்வடல் வீதிமால் முகப்பே. (3)

முகமதாம்வாசல் மனைதனில் பொய்கை
மொழிந்னிடும் பாகமதிரண்டாம்
ஜகம்புகழ்தந்தை வாழ்குவன் வர்க்கஞ்
செகப்பு மாணிரண்டு பெண்ணில்லை
சுகமுள்ள ருதுப்பெண் சகோதரவர்க்கஞ்
சுக்கிரன் றிசையினிற் பகுதி
மகிழுடன்றீர்க்க மூன்றுபெண் ணைந்தாண்
வழுத்திடும் வீர்த்தியில் மூன்றே. (4)

வேறு.

நாற்பதோ டொன்றில் கண்டம் நல்கிடு மாதாவுக்கு
பார்ப்பது வர்க்கமாறு பகைவராஞ் சகோதரங்கள்
தோப்பது வுண்டாமன்னைத் தோன்றிய மனைக்குத்தெற்கில்
தாப்பிலா மனையாமுன்னுல் சாற்றிடும் நந்திவாக்கிக. (5)

நந்தியு மொழிவரின்னம் நலமுடன் ருதுவதான
சுந்தரி யாள்தனக்குச் சுகர்திசைப் புருடனுகும்
விந்தையாஞ் செவந்தமெய்யன் வெகுதன முடையோனுகும்
சந்திரன் றிசையினுண்டிற் சார்ந்திடு மணமென்றென்னே. (6)

மங்கையர் தனக்குப்புத்திரர்ள் வலுவுடன் மூன்றதாகும்
சங்கை யொன்றில்லைதீர்க்கம் சாமகன் ராகுசெவ்வாய்
சுங்கனின் றிசைமொத்தாண்டில் சுருங்கிடு மாயுளென்பர்
செங்கை மூன்றுங்காலுக்குச்செப்பிடும் பலனிதாமே. (7)

திருவாதிரை நாலாங்கால் பலன்.

கச்சணி கொங்கை யாதிரைநாலில்
கண்டிடும் ருதுபலன் வினவில்
நிச்சய மனைக்குள் வாயுவின் மூலை
நீருள்ள விடமதி காலை
சச்சரவின்றி சயனம்விட் டெழும்பி
தனிமையாஞ் சிறுதுளி கழிக்க
உச்சரி நகா நின்றிட ருதுவா
முணர்ந்தவ ளன்னையென் றுரைக்கும். (1)

உரைத்திடும் ருதுபெண் ணிறைந்திடுங் கறப்பு
வுடுத்திடுந் துகில்முழு செகப்பு

பெருத்திடும் பழமை தடித்திடு மெய்யாள்
பிழைமொழி கடின வார்த்தையுளாள்
விரித்திடுங் கூந்தல் ஏந்திடுந் தனத்தாள்
விளம்பிடுங் குறியிது வாகும்
குரித்திடுங்கண்ட வன்னமெய் செகப்பு
குறிபல வுளதுகில் புதிதே. (2)

புதியதாம் ருதுவின் நிலைக்குமே லீசன்
புதன்றிசை சுதனிலா மனையாம்
விறிமுடன் றெற்கு மனையதுகாலி
வெள்ளியின் றிசைதனி லம்மன்
புதியகட்டடமாங் கீழ்புறம் பொய்கை
பூவைதன் றந்தையின் நிலையாம்
மதியுளன் தந்தை சுயார்ச்சித மாகுய்
வர்க்கமூ விரண்டென வரையும். (8)

மூவிரண் டதனில் யெண்ணது யிரண்டு
முன்னவன் புதல்வனு லலிவன்
தாவிய பெண்ணென் றீனமாம் வாழ்வில்
தையலின் சகோதர மேழாம்
நாலதுவீனங் கனிட்டவன் றனக்கு
நலமிலான் மணமிலா னெடியன்
பூவினில் மற்றோர் விர்த்தியாஞ் செல்வம்
பொருந்தியே வாழ்வரெள் றுரைப்பர். (4)

காலினி லனந் தாய்சுக மூள்ளாள்
கண்டமூ வொன்பதி லுண்டாம்
தாலியுந் தரியாமுன்னமே சோரம்
சகோதர மூன்றுபெண் ணென்றும்
வாலியைப்போல மிடுக்கனு மொருவன்
வல்லவ னதிபல சாலி
ஞாலமீதொருவன் பூமிபொன் னுளனுய்
நலமுடன் வாழ்வன் காணரசே. (6)

அரசனே கேளாய் ருதுவின்பெண் தனக்கு
ஆண்டு மும் மூன்றில்தானே
திருமண முண்டாஞ் செங்கதிர் திசையாஞ்
செழிப்பதாம் பெருந்தன மூள்ளான்

திருதியமாகு மவனிட வர்க்கந்
தெரிவையு மொன்றென லாகுங்
கருநிறமாகும் வீதிகீழ் மேலாம்
கனமீன முகப்பு மேலென்றே. (6)

வேறு.

சொல்லிடும் புத்திரபாகம் தோகையர் தனக்கு அய்யா
வலலவ ரிருவராகும் வனிதையர் பிறந்திடாது
மெல்லவே ஜெனித்தபோதும் விளங்கிடா மரித்துப்போகும்
பல்லது துலக்கமில்லை பகர்களிட் டனுக்கா மென்னே. (7)
என்னிய வாயுள்பாக மியம்புவ தரியக்கேளும்
மன்னவன் காரிராகு மதியிவர் திசையின் மொத்தம்
மின்னிடுஞ் சுமங்கலியாக விளம்பிடு மரிட்டமாவள்
நன்னியாழ் கால்நாலுக்கு நவிலும்நற் பலனிதாமே. (8)

கால் 4-க்கும் செய்யுள் 33-முன் நக்ஷத்திரம் 4-க்கு 12.

ஆகமொத்தம் 160 திருவாதிரை நக்ஷத்திரபலன் முற்றிற்று

புனர்பூச முதற்கால் பலன்.

எரியதுமுதற்கால் ருதுப்பலன் மங்கை
யினியபோ ஜனமருந் துகையில்
பிரியமாய் மீனக்குள் முகங்கிழக்காக
பேசுவர் கண்டது தமக்கை
குரிபக லிரண்டாஞ் சாமமேயாகும்
கோதைமெய் நிறஞ்செகட் பாகும்
பரிவுடனுடை மிகுந்திடும் வெள்ளை
பழமைகாண் நடுத்தர மென்றே. (1)
என்றுசொல் மங்கை கற்பினியாகும்
யினியசொல் மெலினமா யுரைப்பள்
கன்றுடன் நாற்கால் வாகனப் பிரியாள்
கணவன் சொற்றவரிடாள் காமி
நின்றிரு விழியால் கண்ட காரிகையின்
நிறங் கருப்பாகும் வாலிபமாம்
தன்றுக லில்லாள் சுமங்கலி யாடை
சுடர்சனி நிறங்கிழிந் ததுவே. (2)

வேறு.

காரிகை ருதுகாலத்தில் கதிரவன் றிசையிற் பந்துள்
சீரியோர் பெண்பால் நாகம் தீண்டியே மரித்தாளென்று
தூரமாய்ப் போனாளன்னை சொல்லிடு மனையிலில்லை
பாரினில் ருதுவினில்லம் பகராலாம் தந்தைக் கென்றே. (3)

மனையது கிழக்குவாசல் வடக்குடன் றெற்குவீதி
இனமூளன் பூர்வமுண்டா மிருப்பதுத் தென்கீழாகும்
கனமுடன் செல்வமுண்டாங் கணிதநூல் கற்கவல்லன்
தனியனு மெங்கும் போகான் சத்திய வந்தனுமே. (4)

வந்திடும் சந்தைவர்க்கம் வலுவில்லை யிரண்டதாகும்
விந்தையாம் பெண்பால்ரெண்டு விளங்கிடு மொன்றுதீர்க்கம்
பந்தமா மன்னைவர்க்கம் பகருவோம் தசமதாகும்
குந்தியில் ரோகமென்றுக் குரிக்கலா மாதாவுக்கே. (5)

இருமூன்று பேர்களம்மா னியவித்தை கனையுள்ளார்
பரவிய வைந்துபேர்கள் பதிதனில் நிலைக்கா ரன்னியம்
திரமதில் மூன்றதாகும் செல்வங்கள் மிகுதியுண்டாம்
மருவிய வொருவனுக்கு வம்மிஷ னுசமாமே. (6)

தையலின் சகோதரங்கள் தனித்திடும் விர்த்தி யில்லை
துய்யவெண் மதியின்பார்வை துலங்கிடி லிரண்டதாகும்
மெய்யதாம் பெண்பாலொன்று விளங்கிடும் தீர்க்கமுண்டாம்
கையதொன் றீனமாகும் கருத்தினி லறிந்துகூரே. (7)

நேசமாம் பெண்பாலுக்கு நிலையது புருடன்திக்கு
வாசமாங் கிழக்குவீடு வடமுகப் பெதிரி லாரல்
ஈசனுர்க் கோவில்மேற்கு யிவன்வர்க்க மேகமாகும்
தோஷமொன் றில்லைசெல்வன் சுகமுடன் வாழ்வனுமே, (8)

சுகமது யீரொன்பாண்டில் சொல்லுவர் மணமுண்டாகும்
அகமது மகிழ்சசி யுள்ளாள் அரிவையர் தனக்குப்புத்திராள்
வகையுட னுண்பாலொன்று வகுக்கலாம் பெண்பால்மூன்று
ஜகமதில் கனிட்டபெண்பால் சீரிலா வாழ்வளாமே. (6)

நாரியர் தனக்குப்பத்து நலமுட னிருபா னென்றில்
சீரியசர்ப்ப கெண்டந் தெளிவுகா ணதன்மே லொன்பான்
ஆரலின் திசையின்மொத்த மாண்டினி லரிட்டந் திண்ணம்
கூரெரி முதற்காலுக்குக் குரித்திடும் பலனிதாமே. (10)

புனர்பூசமி ரண்டாங்கால் பலன்.

பிண்டியி லிரண்டாங் கால்ருது பலன்கள்
பிரிதெரு வினிலிரு பெண்கள்
சண்டைகள் கனமாய்ப் பிடிக்கையில் ருதுப்பெண்
சத்தங்கேட் டதுதனைக் காண
அண்டையில் கனிட்ட தந்தைவாழ் மனையி
லரிவைகாண் சிலபெண்க ளோடு
நண்ட வம்மனையின் முகப்பினில் நின்று
நலமதாய் நோக்கிடும் வேளை. (1)

ருதுவென லாகுங் கண்டவ ரிருவர்
நுவலுமேவா மதன்பலன் களைக்கேள்
புதியதாமாடை செகப்புடன் மஞ்சள்
பொருந்திடும் பெண்ணிறஞ் செகப்பு
குதிதனில்ரோகம் வடிவினிற் குறியள்
கொங்கைகள் கனத்திடுங் காமி
பதிதனிற்கலகிக் கடுமொழி யுரைப்பள்
பார்த்தபெண் களின்பலன் றனைக்கேள். (2)

வெள்ளிபோல் நிற மாந்துகில் பழமைமெய்
விண்மணி சுதனிற மாகுங்
கள்ளமொன்றில்லா ளமங்கலி யாகுங்
கருதிய மற்றொரு பெண்பால்
துள்ளியசெகப்புச் சுமங்கலி யாடை
தூர்பலன் செகப்பதாங் கந்தை
உள்ளமதிரக்க மின்றிடாள் நெடியா
ளுரைத்திடும் வாலிப மென்றே. (3)

என்றபெண் ருதுவின் னிடமெதிர்ப்பாழு
இல்லமேல் முகப்பதாம் வீதி
நன்றுகீழ்மேற்கு வடக்கினிற் கோவில்
நாடிடும்பொய்கையு முளதாம்
வென்றிடுங்கொடியா ளுடன்சகோ தரங்கள்
மிகுதிவீ ரெட்டதாக் தீர்க்கம்
மின்றுடன் பெண்பா லுக்துமே ழாண்பால்
விளங்கிடு மெனவிளம் பிடுமே. (4)

வேறு.

பொங்கிய மாதாவர்க்கம் புகலுமேவா மிருமூன்றுகுந்
தங்கையாங் கனிட்டபெண்பால் தரைமிசை வித்தியாகா
பங்கமா மாண்பாலொன்று பலனிலாக் குருடனுகும்
மங்கிடா மற்றோர்வித்தி வாழ்குவார் நலமாய்க்காணே, (5)

நாலுபத் தீரொன்பாண்டில் நலக்கமா மன்னிகண்டஞ்
சீலமாந் தந்தைவர்க்கஞ் செப்புமீ ராறதாகுங்,
கோலமாந் தீர்க்கமில்லே குணமது மூன்றதாகும்
மூலமென்னும் வியாதி மூண்டிடுந் தந்தைக்கென்றே. (6)

தந்தையைம் பதின்மோலொன்றில் தப்பிடா னரிட்டமாவன்
விந்தையாங் கணவன்றிக்கு விளம்புவோம் ருதுபெண்ணுக்கு
புந்தியின் றிசையாஞ்செல்வன் புத்திவித் தைகளில்வல்லன்
சிந்தையில் பேதமில்லான் தீர்க்கமாம் வர்க்கமூன்றே. (7)

மணமது பொன்னனுண்டில் மங்கையர் தனக்குப்புத்திராள்
குணமதா னிரண்டதாகுந் கோதையர் நான்குதன்னில்
பிணியினு மழிந்துபோகும் பேதமொன் றில்லைமற்றோர்
துணையுடன் கூடிவாழ்வர் சொல்லிடு நலமாய்த்தானே. (8)

நலமதா மடவார்க்காயுள் நவினுமேவாம் பரிகூஷித்தேதகேள்.
கலைமதி ரவிசேய் பொன்னன் கலியிவர் திசையினுண்டில்
பெலமுடன் ஜுரத்தால்கண்டம் பிழைத்திடா ளரிட்டமாவள்
தலமதில் கழைரெண்டிற்குச் சாற்றிடும் பலனிதாமே. (9)

புனர்பூச மூன்றுங்கால்பலன்.

கரும்பினில் மூன்றுங்கால் ருதுப்பெண்கள்
கங்கையி னேரமாங் கண்டோர்
தரும்பதா மெலிந்த மாதவள் கரத்தில்
துணிகளைத் தாங்கிக்கொண் டவடம்
விரும்பியே குளிக்க வந்தவ ளறிவள்
மிதுனிலே ருதுபெண்மெய் செகப்புப்
பிரம்பதாம் புடவை யிருநிறம் பழமை
பிணியுளாள் கருப்புடன் செகப்பே. (1)

செகப்பதாங் கண்ட மங்கைவாலிபமாங்
திரேகநல் லுருதிமெய் கருப்பு

வகுப்பினிலீன மணிந்திடு மாடை
வழகிலாக் கிழிந்திடும் பழமை
நகைப்புடன் மொழிவா ளவள்கரந் துகில்கள்
நாலைந்து வருவுக ளுளதாம்
தூகையதி லிரண்டு புதியதா மூன்று
துகிலது பழமையாஞ் சொல்லும். (2)

வே று.

கெங்கையது நிருதிமூலையி லிடிந்துகாட்டும்
கீழ்புறத்தில் தெங்குமாபல விருக்ஷமுளதாம்
மங்கையவள் வாழுமனைக் கணவனதே யாகும்
வடபுரத்தில் நதிக்கோவில் வளமுடனே தோப்பாம்
பங்கமதொன் றில்லைமனை புராதனமேயாகும்
பான்முகப்பு வெதிர்சிறப்புக் கீழ்மேலாம்வீதி
சிங்கார மண்டபமொன்றுள தெமன்றிசையாம்
சிறுவன்நிறங் கருமைமொழி மதுர புருடனே. (3)

புருடனிட சகோதரங்க ளொந்துபெண் ணிரண்டு
புவியி லமங்கலியொருவள் புகல்வ னிலாள்பா வி
கெருவமுள ளொருவன்பல மாதர்களைக் கெடுப்பன்
கினர்கொல்லை வனமேடை யென்கினு மென்றுரும்
அரிவையரின் சகோதரங்க ளோரேழில் தீர்க்க
மைந்துபெண் ணுபயமாண் மூன்றில் விர்த்தியுபயம்
பருவமுள்ள வன்னைசுக மம்மான்க ளிரண்டில்
பகருமிள யவன்ஞானிமுத்தி யடைகுவனே. (4)

அடைகுவன் ருதுபெண்ணின் மாதாவர்க்க
மமைவரதில் பெண்ணொன்று வாண்பா னுன்கு
திடமுடனே விர்த்தியொரு மூன்றதாகும்
செல்வனொரு வன்றனக்குத் தாரமூன்றும்
தொடையின்கிழ் கனரணக் காயங்களிரண்டு
தோன்றிடுங்காண் பெருங்கண்டங் கனிட்டனுக்கு
படையுள்ளான் ருதுப்பெண்ணின் றந்தையேகன்
பாவையர்கள் வர்க்கமிரண் டாமென்றோதே. (5)

ஓதிடுவாய் தந்தைபெருஞ் செல்வனுகு
முயர்மாடி கோவில்திருப் பணியுஞ்செல்வன்
பாதகமுள் ளவளாகும் ருதுவின் பெண்பால்
பகர்ந்திடுவாய் நாளுக்குநாளாய் செல்வம்

இரண்டாம்பாகம்.

சூதகத்தா லழிந்துவிடும் குடும்பம் பாழாஞ்
சோரமூளாள் புத்திரர்கள் நான்கதாகுங்
கோதையர்க ளிரண்டாகு மதிலொன்றீனம்
குலம்விட்டுப் பிரிந்திடுவாள் குணமிவ்வாறே. (6)

வேறு.

கண்டமுப் பதுவோரைந்தில் கங்கையில் குணமாமாயுள்
துண்டமா மதின்மேலொன்பான் தொடர்ந்தமூன்ஞன்கதாண்டில்
எண்டிசை காணத்தூக்கிட் டிறப்பள்காண் வருத்தமாக
பிண்டியின் கால்மூன்றிற்குப் பேசிடும் பலனிதாமே. (7)

புனர்பூசம் நாலாங்கால் பலன்.

பாலையில் நாலாங்கால் ருதுப்பலன்கள்
பால்மதி திசைகொல்லை தன்னில்
வேலிகள் புரிந்துகொண் டிருக்கையில்பெண்
விளம்பிடும் ருதுவதாங் கிழக்கு
ஆலியமுண்டாந் தெற்கினி லோடை
அந்தணன் திசையிலால் விருக்ஷம்
கோலமா மேற்குக் கனலினு லெரிந்தக்
குறையென விளம்பவு மாமே. (1)

வேறு.

சென்னிமீ தொருமாது யெருக்கூடைதாங்கி
சென்றனள் வழியாகக் கண்டனளெனக்காணும்
கன்னியவள் நிறங்கறப்புத் துகில்செகப்பு மஞ்சள்
கலந்தகிறம் பழமையவள் சுமங்கலி மத்திமையாங்
கென்னிய மிலாள்ருதுவின் பெண்ணிறமெய் கறப்பு
கிழந்தாடைப் புதிதாகு நிறந்துய்ய வெள்ளை
சொன்னமொழி செவிக்கேரு துர்புத்தி யுள்ளாள்
தோன்றுமுக மருவிரண்டு சொல்லிடுங் குள்ளாரனே. (2)

குள்ளவடி வாகுமிவள் சகோதரங்கள் வினவில்
குணமில்லைப் பெண்ணுபய மாணென்றதாகுங்
கள்ளமில்லை பெண்ணென்று கனவிர்த்தி யடையுங்
காளையிரு மனைவியுடன் கருத்துளுப்வாழ்வன்
உள்ளமதிற் கருணையுளன் ருதுமடந்தைவாழு
முற்றபதி தந்தைதனக் காதினமாகுங்

தெள்ளுமவ னுடன்பிறப்புப் பெண்ணிரண்டாமெனன்
றேழாகு மதில்விர்த்தி செப்புமிரு மூன்றே. (3)

இருமூன்றி லொருபெண்ணுக் காஜானமாகு
மிரவிசுதன் றிசையாண்டி லிறந்திடுவன் றந்தை
திருதியமாம் ருதுபெண்ணின் மாதாவின் லர்க்கஞ்
திரமொன்று மற்றிரண்டு செல்வமிலா ரென்க
ஒருநேத்திரம் பின்னமாங்கனிட்டன் றனக்கு
வுயர்ச்சியுளன் நிறங்கருப்பா மவன்மிகுந்த தனவான்
மருவிசுக மடையும்ருதுப் பெண்புருடன் றிக்கு
வழுத்திடுவோங் கேளுமினி வன்மையுட னரசே. (4)

வேறு.

மணமது முடியுங்காலம் மாலவன் றிசையி னுண்டில்
குணமதாய் நடக்கும்வர்க்கம் கூறுவோம் புருடனுடு
துணைவர்நான் காகும்விர்த்தி சுமமில்லை தீர்க்கமுண்டாம்
பிணியிலான் றிடத்தமெய்யன் பேசலாம் புருடனுக்கே. (5)

மங்கையாள் புருடனுடு வாழ்வது குறைவதாகும்
சங்கையாம் பலபேரோடு சரசமாய் சோரம்போவாள்
பங்கமாம் புத்ரவர்க்கம் பலனில்லை ஜனித்தபோதும்
அங்கம தினங்காட்டு மதுவுமே நிலைக்காதென்றே. (6)

நிலைத்திடா மங்கைக்காயுள் நிகழ்த்துவோம் பதினேழாண்டில்
குலைத்திடு நாயால்கண்டம் கூறிடும் தன்மேல்முப்பான்
கலைத்திடு மெய்கள்தானும் கண்டமாம் தப்பிடாது
பெலத்தபிண் டீரிரண்டின் பேசிடும் பலனிதாமே. (7)

ஆகமொத்தம் 193.

புனர்பூச நக்ஷத்திரபலன் முற்றிற்று.

பூசமுதற்கால் பலன்.

(*)

பூசமுதற் கால்ருதுபெண் துகில்வெண்ணீ மஞ்சள்
புதிதாகு மணியிலினத் தார்களுடன்கூடி
நேசமுடன் குலதெய்வங் கொண்டாடுஞ் சமய
நேரிழையாள் ருதுவென்று நிகழ்த்திடவுமாகும்
பாசமுடன் மங்கைவளர் பதிதந்தைக் காகும்
பானுதிசை முகப்புதென் வடக்கான்வீதி

ஈசனுர்க் கோவில்தென் கிழக்கதனில் விளங்கும்
இல்லத்தில் ஜலம்நிறைந்த கெங்கையென விளம்புமம். (1)

கண்டிடும் பெண்தன்னினமா மன்னியம் தென்கிழக்கு
கருத்திடுமெய் சுமங்கலி மத்திபவயது நெடியாள்
கொண்டதுகில் பழமை திருதியவர்ணை மாகுங்
குணமுள்ள பதிவிரத்தைக் குடும்பவளர்ச் சியுளாள்
தண்டைசிலம் பணிந்திருப்ப ளிவள்தந்தை தனக்கு
சாற்றிடுவாய் கனிட்டசகோ தரியர் மச்சயம்
பண்டுமலர் கரம்பற்றி வடக்குமுகமாகப்
பாவையவள் தணைக் கண்டமெனப் பகருவாரே. (2)

பக்கும்ருது பெண்சகோ தரமைந்தி லொன்று
பலனில்லா மெய்ரோகன் மத்திபத்தில் பாழாம்
அகமிருந்தும் பொருளிருந்து மணவிசுத னிருந்து
மன்னியத்தில் பலதேசம் சுற்றியலைந் திடுவன்
பகையுள்ளா ரம்மான்கள் ஜனித்த பதிவாழார்
பானுதிசை நாடிவெகு பாக்கியமுளராவர்
சுகமுளா லொருபெண்பால் சுதனில்லா தலிவன்
சுரநோயா லிருபதில்தாய் சொல்லுவர் மாரகமே. (3)

சொல்லுவர்காண் தந்தைசுயார்ச் சிதமூலங் கனத்த
சுகமுள்ளன் சோதரங்கள் சுரன்றிசையாண் டாகும்
அல்லல்பகல் வியாதியினுல் மெலிந்திடுவ லொருபெண்
ணதிலொருவன் மணவியைக்கொன் றகன்றிடுவானன்யம்.
கல்லினைசொல் லுடையொருவன் முன்றேடும் பொருளை
காசினிமேல் பலர்தமக்குங் கடன்கொடுத்து விகழ்வன்
வல்லவன்காண் தந்தைபல சத்ருகளை ஜெயித்து
மானிலத்தி லிசையாயெண் பதில்மரிப்பன்முனே. (4)

ஆகும்ருதுப் பெண்றனக்கு மணமுடியுங்கால
மாசான்றன் றிசைபுருட னக்கினியின்றிசையாம்
போகமுளான் பூர்வாதீ னங்கள்மிக வுடையான்
பூவையர்மேல் பகூழமுளன் பூமிமிக வுண்டாம்
தாகமுடன் சகோதரங்கள் வீரைந்தாம் விர்த்தி
சாற்றிடுவ ராணைந்துப் பெண்ணிரண்ட தாகும்
வேகமுட னதிலிருவர் தென்திசையை நாடி
விர்த்திசுகம் பொன்பூமி யுடன்விளங்கு வாரே. (5)

வேறு.

மெசசிடும் ருதுவின்பெண்பால் வித்தைக ளுடையளாகும்
பச்சமாம் புவியோர்மீது பால்பசு பாக்கிய மூள்ளாள்
மச்சமாந் தொடையின்மீது மக்கள் நான்கிரண்ட தாகும்
நிச்சய மொருவனுக்கு நீர்விழி யிரண்டும்போமே. (6)

இரண்டுமுன் னுங்கீரெட்டி லிடுக்கனும் ருதுபெண் ணுக்கு
திரண்ட சுக்கிரன் பொன்மந்தன் சேயிவர் திசையிலுண்டில்
பெரண்டிடும் வயிற்று நோயால் பிழைத்திடா ளரிட்டமாவள்
உருண்டகாற் குளமுற்காலுக் குரைத்திடும் பலனிதாமே. (7)

பூசமிரண்டாங்கால் பலன்.

குருவினு னிரண்டாங் கால் ருதுப் பலன்கள்
குரியுயர் மேடையின்மீது
பருவமங்கையரும் சிலதுபெண்க ளுடன்
பகடையா டிடும்சம யங்காண்
அருமையா மந்தவேளைதன் றமைய
னுக்கினை திசைதனைநாடி
மருவியோர் மாதை யணைந்திடச் சென்றுள்
மனைதனி லன்றவ ணிலையே. (1)

மனைமங்கை வாழும் பதிதந்தைப் பூர்வம்
மானிறங் குள்ளமாம் ரூபி
கனமுட னணிந்த துகிலது வெள்ளை
கண்டுரைப் புதியதா மழுக்கு
மனமதுநல்லா ளதிகமா மியளாம்
வாக்கிலக்கண மொழியுரைப்பள்
இனமதில் நல்லாள் கற்புளா ளென்று
மிடர்பிணித் துயரிலா ளென்றே. (2)

துயர மொன்றில்லை கண்டிடு மடந்தை
சொகுசுள சுமங்கலி யாகும்
உயரமீ தருகி லிருந்தவளாகு
முடித்திடுஞ் சேலைபட் டாடை
நயமுடன் மிகுந்த வாலிபமாகு
நாரிமெய் செகப்புகண் பெருத்தாள்

தயவுளாள் மிகுந்த கூந்தல் நீளமூளாள்
சற்குணள் சிசுவிரண் டுளதே. (3)
இரண்டதாம் ருதுபெண் தந்தையின் வர்க்க
மிரண்டதி லீனமா மொன்று
திரண்டிடுஞ் செல்வன் றந்தைவா லிபத்தில்
திருடரால் மரணமே யாவன்
மிரண்டிடார் பெண்ணின் சமோதரவர்க்கம்
விளம்பிடுங் திருதியமாகும்
மொரண்டுக ளில்லார் பொருள்மிக வுடைத்தாய்
மூயர்மையாய் வாழ்வரென்று ரைக்கும். (4)
வாழ்வது ருதுபெண் ணன்னையின் வர்க்கம்
வளமில்லை வுபையபெண் களுண்டாம்
தாழ்வதா மம்மான் வர்க்க மொன்றில்லை
தழைத்திடா வன்னைநற் சுகத்தாள்
பாழில்லை முற்றும் மேன்மையாய் வாழ்வள்
பார்க்கவன் மால்சனி திசையாண்
டாழிசூழுலகு மீதினி லரிட்டந்
தப்பிடா தாரல்வீழ்ந் தென்றே. (5)
கொஞ்சிய ருதுபெண் றனக்குமே புருடன்
குடதிசைத் தென்வடல் வீதி
குஞ்சர முள்ளோன் மெத்தைமே டையுமாங்
குணமுளன் புவிதனக் கரசன்
வஞ்சிய ரிருவர் சமோதர மூன்முண்
வழித்திடு மிவ்வித னிலையில்
தஞ்சமாய் ருதுமூன் மணமென வுரைக்கும்
சாற்றிடும் நந்நிநற் றேவே. (6)
நந்தியு மின்ன மொழிந்திடும் பலன்கேள்
நாரியர் தனக்குப் புத்திரர்கள்
சுந்தர முள்ளொரு நான்குவாண் பெண்கள்
தொடர்ச்சியாய் ஜெனிப்பது வாரும்
விந்தையா மதுகள் நிலைத்திடா தீர்க்கம்
விரும்புமூன் முண்கதில் கனிட்டன்
கந்தமூலங்க ளருந்தியே வனத்தில்
கடவுளைத துதிக்கும் ஞானியென்றே. (7)

ஞானியா மும்மூர்த் திகளுங் கண்டணையும்
நாரியர் தமைகண்டி டான்காண்
தானவன் மதிசே யாண்டினில் ருதுபெண்
றனக் கொருகண்ட மப்பாலொன்
பாலெடு விருபத் திரண்டினி லரிட்டம்
பகர் புருடனுக்கு முன்னுக
தேனமிர்தம் மெனப்பூச மிரண்டினுக்குச்
செப்பிடும் பலனிது வாமே. (8)

பூசமூன்றுங்கால் பலன்.

(*)

வண்டது மூன்றுங் கால் ருதுப் பலன்கள்
மீனபக்கம் வடபுர மீனயில்
கண்டிடு மணங்க ளதுதனைக் காணக்
கருதியே போகமவ் விடத்தில்
வண்டனிமாது ருதுவுமே யாகி
வந்தனள் மீனமுகப் பெதிரில்
கண்டனள் மாதாருது வெனத் தெரிந்தாள்
கதிர்திசை பக்கம திருக்தே. (1)
விருந்துமே வுண்டா மீனயில்மேற் கிருந்து
மேன்மையா யிருவரிம் மாதை
பொருந்தவே மணங்கள் முடிப்ப தற்காக
புகழுட வந்தன ரன்று
தெரிந்திட வுரையும் ருதுமடைந்தை யின்மெய்
செகப்பதாம் வடிவினிற் நெடியாள்
மருந்தவ ளன்று வுண்டன ளாடை
மதிநிறம் பழமையா மோதே. (2)
ஓதிவர்கண்ட வன்னமெய் கறப்பு
வுடுத்திடு மாடைபொன் னிறமாம்
நீதியில் செகப்பு மிருநிறம் பழமை
நிகலுயர் நடுசுமங் கலியாம்
மேதினி ருதுப்பெண் மீனதந்தை சுயார்ச்சியம்
விர்த்தியுண் டாமிரு பொய்கை
ஆதியில்வேத பிராமணர் நிலையா
மரிந்திடும் வீதிதென் வடக்தே. (3)

வடக்கினி லிருக்கு மனையதுப் பாழு
வனிதையின் சகோதர ரிருவர்
திடமில்லை யொன்று யேழையாங் குடும்பம்
தென்திசை நாடியே நிலைப்பன்
மூடவனு மொருவ னன்னவர்க் கத்தில்
மொழிந்திடுஞ் சகோதர மைவர்
அடவுட னுபயப் பெண்களாண் மூன்று
வைந்துனு லொன்பதி லெட்டில் (4)

கண்ட மொன்றுண்டா மன்னியர் தனக்குக்
கதிரவன் றிசைதொகைப் பாதி
கண்டபெண் தந்தை சகோதர மாகும்
கன்னிவொன் றதில்கன வாழ்வு
துண்டனுங் கனிட்டன் பகைஞரை வதைப்பன்
சுக்கிரன் றிசைபற்றி வாழ்வன்
எண்டிசை புகழுஞ் சிறந்த சோதிடனு
மீன்ற தந்தையென் றுரைத் திடுமே. (5)

நாற்பத்தி யெட்டில் மரணமாந் தந்தை
நல்கிய ருதுவின்பெண் புருடன்
மேற்கது திசையாங் கனபொரு ளுள்ளான்
வித்தைநற் புத்தியு முள்ளான்
வாற்பெரு மூவைந் தாண்டினில் மணமா
வர்க்கமூன் பின்னிலை யேகன்
ஏற்பெரு மனைக்கு விருபுறம் பாழா
மெதிரில்வா ழாலய மென்றே. (6)

வேறு.

சீர்பெரும் ருதுபெண் ணுக்குச் சிறந்திடுஞ் செல்வமெத்த
பாரினில் புத்திரவர்க்கம் பகருவோம் தசமதாகும்
தேர்வது வாண்பாலந்துத் தெரிவைய ரிரண்டதாகுங்
கூரதி லொருவனுக்குக் கொடுமையாம் பிணியா லென்றே. (7)

கன்னியாள் தனக்கீரெட்டில் கண்டமொன் றுண்டாம் பின்னும்
மன்னிய விருபத்தேழில் வருவது சுரமாமாயுள்
உன்னிய நாற்பத்தெட்டி லுருதியா மரிட்ட மாவள்
பன்னிய தைமூன்றிற்குப் பகர்ந்திடும் பலனிதாமே. (8)

பூசம் நாலாங்கால் பலன்.



கொடிறு நாலாங்கால் ருதுபலன் றன்னை
குறிப்பது மீனக்குப்பின் புறத்தில்
செடியரு கினில்பெண் ருதுவதாஞ் சேலை
செகப்புடன் கருப்பிரு வர்ணம்
பொடியெனுங் கந்தை மெய்கறப்பாகும்
பொய்சொலாள் வடிவினிற் குள்ளம்
இடமதற் கருகில் குப்பையு முருங்கை
யிந்திரன் திசைதனி லாரல். (1)

வேறு ஆரலா மதற்குத்தெற்கி லாலைய மொன்று காணும்
காரிகை வாழுமில்லங் கணவனின் பதியாம் பூர்வம்
தார்பெரு முகப்புத்தெற்குத் தனித்திடு மனையதாகும்
பார்தனில் கீழ்மேல்வீ திப் பகரிடு நிருதிகெங்கை. (2)

கெங்கையி னருகில்கோவில் கேடதாம் விளங்கிடாது
மங்கையைக் கண்டமாது வாலிபம் குலத்தி னீனம்
பங்கமில் லணிந்தவாடைப் பழமையாஞ் செகப்பதாகும்
துங்கமெய் செவந்தவர்ணஞ் சுமங்கலி யாகுங்கூரே. (3)

கூரிய ருதுபெண்ணுக்குக் குணமுட னீரைந் தாண்டில்
சீருடன் மணமுன் னுண்டாஞ் செப்பிய புருடன்ரூபம்
பாரினில் நிறங்கருப்புப் பற்களி லானமூண்டாம்
நேர்பட செய்யவல்லான் நிகழ்த்திடும் விருத்தனுமே. (4)

விருத்தனு நெடியரூபன் விளம்பிடுஞ் சகோதரங்கள்
பெருத்திடும் பதினேழாகும் பெலமில்லை விர்த்தியில்லை
கருத்தமே னியனுமேகன் கத்தியா லருத்து சாவான்
பொருத்த மொன்றில்லைவர்க்கம் பிழைப்பது பலதிக்காமே. (5)

திக்கென ருதுபெண்வர்க்கஞ் செப்புவா யிரண்டதாகும்
தக்கிடா தொன்றுனசம் ஜலத்தினுல் மரணமாகும்
பக்குவ மன்னைவர்க்கம் பகருவோ மிருமூன் றாகும்
அக்கறையில்லைசெல்வ மணுகியே வாழ்வர்தாமே. (6)

வாழ்வது மாதாதீர்க்கம் வருஞ்சுக மெத்தவுண்டாம்
தாழ்வதொன் றில்லைதந்தை தனம்பொருள் தேடவல்லான்
பாழதொன் றில்லைவர்க்கம் பால்மதி திசையிற் பார்தி
சூழ்ந்திடுஞ் செல்வமேலாந் துணைவர்கள் விர்த்தியாமே. (7)

கண்டிடு மடவாருக்குக் கருதியப் பெண்பாலிரண்டு
விண்டிடு மாண்களில்லை விளங்கிய நாற்பதோடு
பண்டிதன் றிசையிலுண்டில் பாவையு மரிட்டமாவள்
வண்டுகால் நான்கினுக்கு வழுத்திடும் பலனிதாமே. (8)

ஆகமொத்தம் 224-

பூசநக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

ஆயிலியம் முதற்கால் பலன்

அரவினின் முதற்கால் ருதுபல னணங்கு
அன்னையி னிடஞ்சினங் கொண்டு
கிருதியின் திசையில் பெண்களோ டடுத்து
நிகழ்த்திம் நெற்புலந் தன்னில்
கருதியே வேலை புரிந்திடுஞ் சமயம்
கன்னிகை ருதுவெனுங் குரியாம்
குருதியின் நிறமெய் வடிவிலாள் காமிக்
குணமிலா துரோகியென் பதுவே. (1)

புதியதாமாடை செகப்பினில் மஞ்சள்
போலிரு வர்ண மன் னிலைக்கு
மதியவன் றிசையில் மாபுளி விருக்ஷம்
மங்கலன் றிசையில் நீரோடை
உதயனூர் மைந்தன் திசைதனிற் பொய்கை
வுற்றிடுங் கோவிலு முளதாம்
பதியது வீசா னியந்தனிற் காணும்
பக்கமுன் பின்மூட்கள் நிலையே. (2)

நிலையதாய்க் கண்ட மடந்தையின் குரிகள்
நிறமது கருத்த மெய்த் துகில்கள்
கலைநிறம் பழமை வமங்கலி நெடியாள்
கண்டிடு மத்திம வயதாம்
தலைமயிர் பகுதி நரைத்திடும் ருதுவின்
தையல்வாழ் பதிதந்தைப் பூர்வம்
நலமதாங் கிழக்கு முகட்பு தென்வடக்கு
நாடிடும் வீதிமுப் பிரிவே. (3)

பிரிவது தந்தை சகோதர மிருவர்
பெலமில்லை கனிட்டவன் றனக்குத்
திருதியமனவி சந்ததி யற்பஞ்
செல்வியு மில்லையென் றுணரும்
அருமையாந் தந்தை சுயார்ச்சித மதனு
லதிக செல்வந் தனையுடையன்
பெருமைக ளில்லான் சாந்தனற் குணத்தன்
பிசகிலான் றீர்க்கமெண் பதுவே. (4)

வேறு.

நாரியின் சகோதரங்கள் நலமில்லை தீர்க்க மூன்று
பாரினி லாண்பாலொன்று பலனிலா ரோகியாவன்
சீரிய மாதாவர்க்குஞ் செழிப்பில்லை வர்க்கமாருங்
கூரியப் பெண்கள் நாலு குணமிலா வாண்பாலிரண்டே. (5)

இரண்டதில் விர்த்தியொன்று நீடிய மாதாவுக்குத்
தொண்டையிலரோகமுண்டாந் தொகையொரு பதினேழாண்டில்
மிண்டிய விருபத்தேழில் மிகுத்திடும் ஜ்வரரோ கங்கள்
கண்ட நாற்பத்தொன்பானில் கடினமா மரிட்டந்தானே (6)

தானவன் றிசையிரொன்ப தாண்டினில் மணமதுண்டாம்
ஈனனும் புருடன்றரு மிருநிலை யுண்டாம் பூர்வம்
மானமில் லாதான்வர்க்கம் வகையுட னேந்ததாகும்
பானுவின் றிசையைநாடிப் பற்றுவ ரிருவரென்றே. (7)

பற்றிய ருதுபெண் ணுக்குப் பத்துட னீரொன் பாண்டிற்
பத்தினிற் பகுதிகர்ப்பம் பங்கமா மூப்பத் தொன்றில்
புத்திர னேகன்விர்த்திப் புகழ்பெருஞ் செல்வமுண்டாம்
அற்றிடும் பெண்பாலில்லை அரிவையர் சோரந் தானே. (8)

சோரமாம் புருடன்றன்னைத்துதித்திடாள் மதித்தி டாள்கள்
வீரமாங் கள்ளியாகும் விதமிலா மொழிகள் சொல்வாள்
ஈரமொன் றில்லாள் நாற்பா னிடியினுல் மரணமாவாள்
தாரணி யாயில்முற்கால் சாற்றிடும் பலனிதாமே. (9)

ஆயிலியரண்டாங்கால் பலன்.

பாம்பினி லிரண்டாங்கால் ருதுப் பலன்கள்,
பானுவின் றிசைநடுத் தெருவில்

வேம்பெனு மரத்தின் கீழருகிருக்கும்
வினயக ராலயத் தருகில்
பாம்புடன் மிந்திர ஜாலமா டிடதைப்
பார்க்கையில் ருதுவதாந் தெரிந்து
சோம்பியே மனையை நாடினள் நாரி
சொல்லெதிர் கண்டனள் தாயே. (1)

கண்டிடும் ருதுப்பெண் ணிறங்கறப் பாகுங்
கைதலை விரலதொன் றீனம்
பண்டித னிறமாமு டித்திடு மாடைப்
பழையதா மிரண்டிடங் கிழிசல்
கண்டமவ் விடத்தின் குறிகளை வினவில்
கனலினு லெரிந்திடு மனைகீழ்
சண்டனுர் பக்கங் கனத்திடும் பாரைத்
தரைசுதன் றிசைபொய்கை யுளதே. (2)

உள்ளியவடபா லாலைய விருகூ
முற்றிடும் ருதுபெண்வாழ் மனைகாண்
தெள்ளிய வன்னிய மனையது வாகுஞ்
சிறப்பில்லை தென்புற மனைபாழ்
வெள்ளியின் றிசையி லீசனுர்க் கோவில்
விளங்கிடு மருகினி லோடை
ஒள்ளிய மனைகீழ் முகப்பது மேற்கு
வரைத்திடு மெதிரிலார லென்றே. (3)

என்றதந்தை யருக் காதினம் வடக்கு
இடரதாய்ப் பொருள்களை யிழந்து
அன்றுமின் நிலையை நாடியே மெத்த
வபமிருத்தி கள்ரொணத் தாலும்
இன்றது வரையும் பலவித துன்ப
மிவன் சகோதரங்களோ ரைந்தாம்
நன்றது நாற்பத் திரண்டின்மேல் சுகமாம்
நவின்றிடு மாயுள் தீர்க்க மென்றே. (4)

ஓதிடும் ருதுப்பெண் சகோதர மேழீ
லுபயம் பெண்மற்றது வாணும்
நீதியில் விர்த்தித் திருதிய மற்றோர்
நிலையிலாப் பலவிடங் திரிவர்

ஜாதியிலொருவன் பேருமாங் கீனத்
தையலோ டடுத்துமே திரிவன்
மேதினில் ஜேஷ்டன் கனிட்ட புத்திரனுல்
வெகுதனம் படைப்பனென் றுரைக்கும். (5)

வேறு.

உரைத்தமுன் னுன்காரெட்டி லுற்றிடுந் தாய்க்குக் கண்டம்
கருத்தமே னியளாம்பூர்ண கெற்பத்தா லரிட்ட மாவள்
பெருத்திடுந் தனங்களுள்ளாள் பேதமாஞ் செல்வமற்பம்
வருத்தமொன் றில்லைவர்க்கம் வாழ்வது யிரண்டதாமே. (6)

தாமெனும் புருடன்திக்கு சாற்றுவோ மேற்கதாகும்
காமனும் பெண்கள்மீது கருணையாய்த் திரிவனுஞ்
சோமனுர் திசையோ ராண்டினின் மணமது சொல்லலாகும்
பூமனுர்த் திசையில் பூர்வப் பூமியும் வீடுண்டென்னை. (7)

கன்னியாள் சோரமாகுங் கணவனைக் கருதிப் பாராள்
உன்னிய குடும்பந்தன்னி லுதாரியாங் கலகியாகும்
நன்னிய புத்திரவர்க்கம் நலமில்லை யேகமாகும்
மின்னியப் பெண்பாலில்லை மிகுநஷ்டங் கெர்ப்பமேழை. (8)

சேயவன் பொன்னனுண்டில் சிலந்தியால் துன்பமுண்டாம்
தேய்மதி சனிபான்பானு செப்புமிவ் வாண்டு தன்னில்
வாய்தனி லிரத்தங்கண்டு மடிவது திண்ணம் பெண்பால்
ஆயில்யங் காலிரண்டிற் கறைந்திடும் பலனிதாமே. (9)

ஆயிலிய மூன்றுங்கால் பலன்.

வந்தர வினில்மூன்றுங்கால் வனிதையும் ருதுவதானுல்
அந்தமா மனுமுகப்பி னருகினி லாரலோரம்
விந்தையாய் ருதுவாங் கண்டோர் விளம்பிடும் குலத்திலீன
மங்கைகோல் கரத்திலேந்தி வந்தவ ளறிந்ததென்றே. (1)

அறிந்தபெண் ணிறங்கறப்பு வழகிலா வமங்கலி யாகும்
நிறைந்தநல் லாயுளாகு நிலநிறந் துகில்கா லாந்தரம்
சிறந்திடுங் கோவிலுத்தரஞ் சேய்நிறம் ருதுவின் பெண்பால்
மறைந்திடும் சேலைவர்ண மால்நிறங் கந்தையாமே. (2)

கந்தையா மெய்யில்நாற்றங் கற்பிலாள் நெடியரூபம்
சிந்தையில் கபடமுள்ளாள் செவிதனில் சோகமுண்டாம்

விந்தையாய் வாழுமில்லம் விளம்பிடுந் தந்தைக்காதி
சுந்தரி யுமையாள் கோவில் சுடர்திசை விளங்கும்பாரே. (3)
பார்தனில் முகப்புத்தெற்குப் பகர்வது கீழ்மேல்வீதி
சீரதாந் தந்தைவர்க்கந் தெரிவைமூன் முண்களேந்து
தேர்வது நான்கதாகுஞ் சிறந்திடுஞ் செல்வமிக்க
தாரணி தந்தைக்காயுள் சாற்றுவ தெழுபதாமே. (4)
சாற்றிய ருதுப்பெண்வர்க்கந் தசமதி லாறுபாழாம்
போற்றிய பெண்பால் மூன்று புகழ்பெரு மாண்பா லொன்று
நாற்றிசை புகழ்பெற்றோங்க நதிவளமுண்டு செய்வன்
நூற்றிரண் டாண்டுபூவில் நொடியிலா வசிப்பன்றானே. (5)
வசிப்பன்கா ணம்மானேகன் வகையிலாப் பெண்களோடு
புசிப்பன்பொன் மணிகள்பூமி பொருளெலா மழிப்ப னன்னே
வசப்படா ளெவர்க்கும் பூவிலழகுளா ளுரைக்கொணாது
நிசப்பட வர்க்கமூன்றில் நீலிப்பது விரண்டள தென்னே. (6)
என்னவே யொன்பானுண்டி லிந்திரன் றிக்குதன்னில்
முன்னமே மணமதுண்டா மூர்க்கனுங் கணவன்றானும்
மன்னரை யடித்துவாழ்வன் வகையுடன் வர்க்கமூன்றும்
தன்னினம் சேரவொட்டான் தனமுளக் கனிட்டன்றானே. (7)
அட்டம கேர்ப்பமுண்டா மரிவையாள் தனக்குவிர்த்தி
திட்டமாய் நான்குதன்னில் தெரிவைய ரிரண்டதாகுங்
கட்டுடன் மணிகள் விர்த்திக் கனத்திடும் பொருள்கள்மேலா
நட்டமொன் றில்லாவாழ்வர் நாரியின் புதல்வரென்றே. (8)
நாரிக்கீ ரேழெட்டாண்டில் நாகமென் விஷத்தால் கெண்டம்
பாரினில் குணமாம்பின்னும் பகருமீ ரெட்டில் தீதாம்
சீரிய ரணரோகத்தால் சிதரிடு மீண்டிடாது
பூருக ளவைமூன்றிற்குப் புகன்றிடும் பலனிதாமே. (9)

ஆயிலியம் நாலாங்கால்பலன்.

நாடு மரவினில் பாத நான்கினிற் பெண்கள்
நலமுடனே ருதுவாகு மிடமன்னிய நகரில்
கூடுமினந் தனில்மணங்க ளதற் கன்னியோடு
குணமுடனே போகும்வழிக் குளக் கரையின்மீது

சேடியது வேளிருது காணுமடவார் கேள்
செப்புவர்தன் னுடன்வந்தத் தெரிவையரி லொன்றும்
பாடுமவள் நிறங்கருப்பு நீண்டவடி வுள்ளாள்
பசுமைநிற முயர்ந்தபுது பட்டாடையாமே. (1)

வே று.

ஆகுமே ருதுபெண் மெத்த வழகுளாள் கொங்கையில்லாள்
தோகை நீண்டிடு மெய்செம்மை துகிலது பழமைவர்ணம்
வாகுசேய் நிறமால் திரேகம் வலுவுள்ளா ளறிந்தமாது
நீகைவாலிபமாம் சோரி நிலையிதாம் விருத்தையாமே. (2)

ருதுநிலைக் கருகில்தெற்கு நுணுவெனு மரமும் பொய்கை
மதிதிசைக் குளமாமிந்திரன் வளர்ந்திடும் புற்றுகோவில்
பதமிலாப் பெண்கள்மூன்று பழமெனுங் கிழவனேகம்
விதம்ருதுப் பெண்பால்பக்கம் விளங்குவ ரன்னுள்காணே. (3)

வேறு.

காணுவாய் ருதுப்பெண் வாழ்மனை தந்தைக்
காதினம் பிரிவது மூன்றும்
வீணதா மொருவன் பொருள்களை யிழந்து
விரிச்சிகன் திசைபற்றி யிலவன்
தோணும் பெண்ணைந்து விர்த்தியி லுபயம்
துலங்கும் பொன்பொருள் மிகவுளதாய்
ஆணுவ மில்லான் றந்தைநற் சுகவா
னறுபது வாயுள்மட் டென்னே. (4)

எட்டினிற் பகுதி ருதுவின்பெண் வர்க்க
மிதில்விர்த்திப் பெண்ணதி லிரண்டு
கட்டையா மேகன் மணமிலான் வித்தை
கதித்திடும் பண்டித னுவன்
நெட்டையாம் ஜேஷ்டன் பொருளுளான் மனைவி
நெருப்பினைப் போல்மொழி யுடையாள்
திட்டமாய் புத்திர விர்த்தியொன் றில்லை
தெரிவையொன் றிரண்டென மொழியும். (5)

வே று.

மொழிவது புருடன் றிக்கு முயற்றிசை யாகும் வீதி
பிழையிலைக் கீழ்மேலாகும் பெருந்தன முடையோனாகும்
அழகிலான் வர்க்கமேழி லழிவது நான்காதாகும்
பழியிலை மற்றோர்செல்வம் பண்புடன் வாழ்வராமே. (6)

இருபீதா டேழாமாண்டில் இரணத்தினுல் புருடன்மாள்வன்
கருவது நாலேந்துண்டாய் கலேந்தது போகமீன்ற
திருவனி தையர்க ளாணென் றியம்பலாம் விர்த்தியுண்டாம்
அரிவைபின் மோகந்தன்னு லலீகுவாள் நிலேநில்லாளே. (7)

நிலேயிலாள் கற்பழிப்பாள் நேத்திரந் தனக்கிசைந்த
பெலமுள கணவரோடுப் பேசிநற் சுகத்தைக் கொள்வாள்
நிலமுளோர் பழிக்கவாழ்வள் நிகர்வய தைம்பதாகும்
குலமா பினிற்கால் ந ன்கிற் குரித்திடும் பலனிதாமே. (8)

கால் 4-க்கும் செய்யுள் 35-முன் நகூத்திரம் 7-க்கு 224.
ஆகமொத்தம் 259.

ஆயிலிய நகூத்திரப்பலன் முற்றிற்று.

மகமுதற் கால்பலன்.

மாசியில் முதற்கால்பெண்கள் வலுவுடன் ருதுவதானுல்
காசினி மீதூர்ப்பொய்கைக் கருகினில் மேட்டின்மீது
ஈசனூர் மூலதன்னி லிருதுவாம் தனிமையாகப்
பாசமாய் ஜலம்கொண்டேகப் பரிவுடன் சென்றளாமே. (1)

சிரசினில் சாதம்தாங்கித் திரமுட னந்தமார்க்கம்
விரைவதாய்ச் சென்றேர்மாது மெல்லியைக் கண்டதாகும்
குருகிய வடிவம் திரேகங் குஜனிறம் புதியவாடை
காமதி லானமத்தியங் கண்டிடிஞ் சுமங்கலியாமே. (2)

ஆகுமே ருதுவின் பெண்பா லழகுளாள் கருப்பதாகும்
பாகுட னணிந்தசேலைப் பழமையாஞ் செகப்பு மஞ்சள்
மோகம துள்ளாள் சொற்கண் மொழிவது நயனமாகும்
பாகமைந் தாகும்பெண்வாழ் பதிதந்தைக் காதியாமே. (3)

ஆதியாம் பூர்வமாகு மதற்குமே லீசன்கோவில்
நீதியா மீனமுகப்பு நிலமகன் றிசையாம் வீதி
பூதல மீதுகிழ்மேல் பொருந்திடு மீனயிற் பொய்கை
சாதிவிட் டொருவ னன்னிய தலமதில் தனிமையாவன். (4)

தந்தையின் வர்க்கம் பெண்கள் சாற்றுவர் விர்த்தியில்லை
பந்தமா மாதாவர்க்கம் பகர்ந்திடு மீரைந் தாகும்
விந்தையாய்ப் பெண்கள்மூன்று விளங்குவ தாண்பால்நான்குஞ்
சிந்தையி லறிவாய் மற்றேர் செழித்திடார் மரணமாமே. (5)

மங்கையின் சகோதரங்கள் வலுவில்லை யிரண்டதாகுந்
தங்கம்போல் மேனியாகுஞ் சாற்றிய கனிட்டன் ருணும்
பங்கமில் யோகனுவான் பகர்வது ஆயுள்மட்டாம்
எங்கினும் புகழ்பெற்றேங்க விருப்பன்பூ பதியாயென்றே. (6)

நின்றுசொல் புருடன்றிக்கு நிருதியா முகப்புத் தெற்கு
நன்றதாம் வடக்குத்தெற்கு நாடிய வீதியாகும்
ஒன்றுவைக் தொன்பானுண்டி லுயர்மண மூண்டாஞ்செல்வங்
கன்று காலிகள் பொன்வீடு கதிக்கவே வாழ்வனென்றே. (7)

வாழ்வது மெத்தவுண்டா மங்கையர் தனக்குப் புத்திராள்
பாழதாங் கெர்ப்பமொன்றில் பாரறி மரணமாவள்
தாழ்வதா மாயுளற்பம் தரணியில் பதினெட் டாகும்
ஆழ்பிதுர் நாளொன்றிற்கு வரைந்திடும் பலனிதாமே. (8)

மக மிரண்டாங் கால்பலன்.

வேட்டுவ னிரண்டாங் காலில் மேதினில் ருதுவதானால்
வீட்டினில் சமையல்செய்யு மிடத்தினில் ருதுவாங்கண்டோர்
நாட்டுவோம் புருடனுகு நலமில்லை நிலவாயுவாகும்
தாட்டிக மாகவின்னஞ் சாற்றுவோம் பலனைக்கேளே. (1)

பலனது ருதுபெண்ணுடைப் பார்க்கவன் செவ்வாய் காரி
தலமதி லிவர்கள்வர்ணம் சாற்றிடும் புதியதாகும்
நிலையிதா நூனியிலக்கினி நெருங்கிய குறிமூன்றாகும்
மிலகிய நெடியரூபம் விளங்கு பல்லான மென்றே. (2)

ஊனமில் கணவனன்று வுயர்பெரு நாற்கா லொன்றை
தானமாய் வாங்கிவந்த தாகுமன் னிலப்பூர் வீகம்
பானுவின் முகப்புவீதிப் பண்டிதன் றெற்க தாகும்
மான்வளர் மனையெதிர்க்கா மழகியக் கூபமொன்றே. (3)

கூபமா மனைக்குமேற்குக் குடிபோன வீடதாகுஞ்
சோபித மில்லைவர்க்கஞ் சுகமில்லை புருடனேகம்
சாபம தாகுமுன்னுள் தனமற்பம் வித்தை யுண்டாம்
பாபமா மூன்பின்வர்க்கம் பலனில்லை நாசமாமே. (4)

சொல்லிய ருதுபெண்வர்க்கஞ் சுக்கிரன் றிசையிற்காலம்
புல்லிய பெண்பால்மூன்று புகழிலா தாண்பாலிரண்டில்

கல்லினுங் கொடியநெஞ்சன் களவுகள் செய்வன் கைகால்
சல்லியன் குஜன்பாலுண்டில் தரிப்பட்டு மரிப்பன்காணே. (5)

மரிப்பது கனிட்டனுகும் வனிதையர் மூன்றி லேகம்.
கரைப்பது மத்தியகாலங் கணவனே விட்டு அன்னியம்
இரப்பது நிசமதாகு மினியவன்னியின் வர்க்கங்கேள்
குரைப்படா தாண்களிரண்டு கோதையர் மூவாமே. (6)

மூவரும விர்த்திதீர்க்க மொழிவது திண்ணமாகும்
தாவதை விட்டுநீங்கார் தனமுள மாமன் மார்கள்
நாவது யிடரிவார்த்தை நயமிலா துரைப்பன் ஜேஷ்டன்
பூவினில் மாதாதீர்க்கம் பொருந்துவ தெழுபத்தைந்தே. (7)

பொருந்திய தந்தைசெல்வன் பூமிமூலத்தி லென்க
வருந்திய தனக்குமுன்பின் வளர்ச்சகோ தரங்களில்லை
தெரிந்தொரு தொழில்கள் செய்யத் திரமுளன் கல்வியுள்ளன்
அரிந்திடு மாயுள்தீர்க்க மதியூக சாலியாமே. (8)

தலமதில் ருதுபெண்ணுக்குச் சாற்றுவோம் புத்திரவிர்த்தி
கலமதிப் போலபெண்கள் கதிப்பது மூன்றதாகும்
நலமுடன் மைந்தனென்று நற்சுகந் தீர்க்கமுண்டாங்
குலமதில் மேன்மையாகக் குறைவிலா வாழ்வதாமே. (9)

நாளெனு மாயுள்பாவ நலமுடன் ருதுபெண்ணுக்குத்
தேள்தனக் குடையோன்காரி செங்கதிர் பொன்மா னேந்தி
கேளிவர் திசைமொத்தாண்டில் கிணற்றில் வீழ்ந்தரிட்டமாவள்
வேள்விக ளிரண்டினிற்கு விளம்பிடும் பலனிதாமே. (10)

மக மூன்றுங்கால் பலன்.

மகமூன்றில் பருதிதிசைக் கைத்தொழில் புரிய
மாதர்சில ரோடுமிக நாடவழி மடுவில்
செகமதனி லதுநீரி லாதவிடம் வெளியாம்
தெரிவைருது வாமந்த நிலையதனைத் தெரிந்தோர்
அகமதிலா தவன்னியர் நிலைபற்று வாழு
மரிவைவயதி னில்விருத்தை யமங்கலி வெள்ளாடை
முகம்பார்க்க பயமுறுத்து நிற்ங் கருப்பதாகு
முலைநிகளங் தலைநரைத்த மொய்குழலா மொழியே. (1)

வேறு.

மொழிவது கேளு மற்றொரு மாது
மூன்றாமதி ரூபமாஞ் சேகப்பு
தழையின விருகூ மடிதனில் தளித்தள்
சாற்றிடுந் துகில் சேகப்பாகும்
இழிவிலாப் புதிய தாகுமப் பாலைவ
யியம்பிடுஞ் சுவங்கலியாகும்
அழிவிலா விர்த்தி யுடையவள் மொழிக
ளறைவது கடினமா மென்றே. (2)

ஒதுவர் பின்னு மிரண்டுபெண் ணுளதா
மொன்றதில் மணமிலா தென்க
மேதினில் தன்னில் ருகுவின் பெண்வாழும்
வீடு தந்தையின் சுயார்ச் சியமாம்
நீதியில் முகப்பு வடக்குதென் வடக்கு
நிகழ்த்திய வீதிய தாகும்
ஆதவன் றிசையில் ஈசனுர்க் கோவி
லமர்ந்திடு மெதிர்கெங்கை யாமே. (3)

கெங்கை யொன்றுளது பக்கமூன் மனைகள்
கேடதாம் விர்த்தி யொன்றில்லை
சங்கை யொன்றில்லை தந்தையின் வர்க்கந்
தனிமையாம் பெண்ண தொன்றுகும்
திங்களின் றிசையில் [illegible]ர்ச்சித பூமி
செழித்திடும் மனைமது வுண்டாம்
மங்கையும் விர்த்தி கனத்திடுஞ் செல்வம்
வாழ்வுநா லேழின்மே லென்னை. (4)

வேறு.

என்னியதோர் ருதுவின்பெண் சகோதரங்க
ளினியதமம் திசையாண்டில் மூன்றிலொன்றும்
நன்னயமாந் தீர்க்கமது வைந்திற் பெண்கள்
நவிலுபயம் விர்த்திசுகஞ் செல்வமுண்டாம்
முன்னவனும் ஜேஷ்டனுக்குப் புதல்வனில்லை
முகங்கருத்த மேனியவன் வித்தையுள்ளான்
கன்னியரு மில்லைபொரு ளுண்டாம் தத்துக்
கருதியே சகோதரத்தி லெடுப்பன்காணே. (5)

காணுவாய் மாதாவுக் கிடுப்பில் மச்சம்
கருணையிலா சிரப்பவர்க் கொன்றியாள் தேகந்
தோணுவது நிறங்கறப்புக் கொடிய ரோகம்
சுகமில்லை பெருந்துன்ப மடைவாள் வர்க்கம்
ஆணில்லைப் பெண்கள் காலந்தி லொன்று
அபவித்தி வாலிபத்தில் விதவையாவாள்
பேணுவாய் மற்றவர்க ளெல்லாம் விர்த்திப்
பெலமில்லை சுகமற்பம் பேசுவாயே. (6)

வேறு.

பேசிய பெண்பாலுக்குப் பெலமுடன் புருடன் றிக்கு
வாசமாய் வருணனுகு மணமது யிரெட் டாண்டில்
நேசமா யுண்டாம்வீதி நிலைப்பதுக் கீழ்மேலாகும்
தாசியின் மனையாமுன்னுள் சாற்றிடும் பூர்வமாமே. (7)

சாற்றிடு புருடனுக்குத் தனமிக வுண்டாம் பூமி
நாற்றிடு மணங்களான நால்முதல் குறைவாஞ் செல்வம்
மாற்றியப் பெண்பால்சோரம் வணங்கிடாள் புருடனுக்கு
தோற்றிய குடும்பந் தன்னில் துயரமுங் கலகமாமே.
துயரமாம் புத்திரவர்க்கஞ் சுகமில்லை பிறந்து நஷ்டம்
பயனிலா னிலைப்பதொன்றும் பாவையர் தனக்குவாயுள்
நியமரு பத்தியொன்றில் நீள்சுமங் கலியாய் மாள்வள்
நயமகங் கால்முன்றிற்கு நவின்றிடும் பலனிதாமே. (9)

மகம் நாலாங்கால் பலன்.

கொடுதுகந் தனில்நாலாங்கால் கோதையர் ருதுவதானால்
இடமது மனைக்குப்பக்க மிமகரன் மூலைசெல்வன்
திடமுளக் கனத்தமாடி யருகினில் தெரிவையன்னுள்
தடமதில் ருதுவாநாரி தரித்திடு மாடைகேளே. (1)

செகப்புடன் கருப்புவர்ணந் திரமில்லை யழுக்கதாகும்
நகைத்திடு முகமாமென்னு நகப்பழம் நிறமாந் திரேகம்
அகத்தினி லிருந்துமங்கை அழகதோர் கன்றைத்தேடி
பகைப்புடன் சென்றதாகும் பகருமன் னிலைக்குத் தெற்கில். (2)

கெங்கையுங் கோவிலுண்டாந் கீழ்புறம் பாகமேழாந்
துங்கமாம் வடபால்வீடு சுதனில்லா மனையாம் பக்கம்

மங்கல முண்டாமன்று மங்கையைக் கண்டமாது
பங்கமொன் றில்லைகைகால் பருத்தநல் லுருதிமெய்யாள். (3)

கன்னியாள் நிறங்கருப்புக் கதிரவன் சனிமால்சுங்கன்
பொன்னவ னிவர்கள்வர்ணம் பொருந்திடு மணிந்தசேலை
அன்னிய மடந்தையாகு மிவது வயதுபால்யம்
நன்னடக்கை யுளாள்சோர நல்கிடாள் சுமங்கிலியாமே. (4)

காரிகை வாழுமில்லங் கனமனை புருடனுக்குப்
பாரினில் பூர்வமாகும் பலமனைப் பெய்கை யுண்டாம்
சீருடன் வீரைந்தாண்டிற் செப்புவாய் மணமுன்னுண்டாம்
வீராம் புருடன்வர்க்கம் விளம்புவீவா மைவராமே. (5)

ஐந்தினில் பெண்பாலொன்று வமங்கலியாக வாழ்வாள்
பந்தமாம் ருதுபெண்வர்க்கம் பகர்வது நான்கதாகும்
விந்தையாய்ப் பெண்பால்மூன்று விளங்குவ தாண்பாலொன்று
சுந்தரங் கனிட்டபெண்பால் சுகமிலா தலிவதாமே. (6)

அலிகுவார் தந்தைவர்க்க மகமிலா தன்னியதேசம்
நலமதாந் தந்தைசெல்வன் நவில்சமோ தரங்களேழில்
பெலமிலை நான்குவன்னியம் பேதமாம் பெண்பாவொன்று
கலிதனில் வல்லோன்றந்தைக் கருதிடான் பொருளீத்தானே. ()

பொருள்களீத் தேடான்றந்தைப் புவியில்பின் ஞானியாவான்
கருவில்லை யம்மான்வர்க்கம் கனமில்லை மாதாயேகம்
கருமியாம் பிறர்க்கொன்றீயாள் கண்டமா றைந்திலுண்டாம்
பெருகிய வியாதியாகும் பேசுவாய் மாதாவுக்கே. (8)

பேசிய ருதுபெண்ணுக்குப் பெலமில்லை புத்திரவிர்த்தி
காசினி மீதாணென்றுக் கன்னியிரண் டாகுமாயுள்
வீசிய நாற்பத்தேழில் மிகுத்திடு மரணகெண்டம்
மாசி நாலாங் காலுக்கு வரைந்திடும் பலனிதாமே. (9)

கால் 4-க்கும் செய்யுள் 36 மூன் நக்ஷத்திரம் 8-க்கு 259.
ஆக மொத்தம் 295.

மக நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

பூரமுதற்கால் பலன்.

நாவிதன் முதற்கால் தன்னில் நலமுடன் ருதுவதானால்
பூவினில் தீர்த்தமாடும் புகழ்பெருங் கால்வாயோரம்

பூவையர் ருதுவதாகும் புழுதியாந் துகில்கள்தன்னை
மேவியே சுத்திசெய்ய மெல்லியாள் சென்றதாமே. (1)

மருவுமன் னிலைக்குமேற்கு வழகியக் கோவிலாகு
நிருதியின் திசையில்தோப்பு நிலமகன் திசையில் பொய்கை
அருகினில் கீழ்பான்கொல்லை அழகிய மலர்கள் காணும்
பெருகுமன் னிலையில்மிக்கப் பலதெய்வ பிம்பமாமே. (2)

தெய்வபிம் பங்களுண்டாந் தெரிவையின் நிறங்கறப்பு
பெய்கவே யணிந்தவாடை பெலமில்லைக் கிழிந்ததாகும்
உய்கவே வுபயவர்ண முடையதா மேந்துங் கொங்கை
கைவிரல் களிலொன்றீனம் கட்டையாம் கூந்தலில்லாள். (3)

கண்டிடு மடந்தைசேலைக் கருப்புடன் செகப்பதாகுங்
கொண்டொரு திங்களாகுங் குலாவிடும் பருவமாகும்
செண்டுபோல் கொங்கையுள்ளாள் செப்புவள் பிரட்டுவார்த்தை
உண்டியை சிரமேல்கொண்டு வுணரெதிர் வந்தளாமே. (4)

வந்தவள் சுமங்கலியாகும் மங்கைவாழ் பதிமாதாவுக்
கந்தமாய் தந்தையாலே வழித்தது வாகும்பூர்வம்
புந்தியின் திசைமுகப்பாம் புகலுங்கீழ் மேலாம்வீதி
சுந்தரி வர்க்கமேழில் சுகமில்லை யுபயம்பாழ. (5)

சுகமுண்டா மாதாவுக்குத் தொடுக்குமுவ் வெட்டில்கண்டம்
ஜெகமதி லாண்பால்மூன்று தீர்க்கமாம் பெண்களிரண்டு
மிகுதிபொன் பூஷணங்கள் மேன்மையாய் வாழ்வராகும்
மகவினுல் ஜேஷ்டனுக்கு வருந்துய ரதிகமாமே. (6)

அதிகமாந் தந்தைவர்க்க மழிந்திடுந் தொகைமீரெட்டாம்
நதிதனிலந்துசை நாகமென் விஷத்தா லொன்று
சதிவயிற் போக்கால்நான்கு சாற்றுமக் கினியால் மூன்று
விதியிவ்வாறு ஜெனித்துப்பாழா மீந்தவெண் தீர்க்கமாமே. (7)

தீர்க்கமா மற்பவாழ்வு சிறந்திடா செல்வங்காணும்
பார்க்கவன் திசைமுக்காலில் பகல்திசை மணமதுண்டாம்
மார்க்கமாம் புருடன்றனும் வரும்தெத்து புத்ரனுகும்
ஆர்க்கமாஞ் செல்வன்வர்க்க மறிந்திடு மிருமூன்றுமே. (8)

ஊமையாய் ஜேஷ்டபுத்திர னுதிப்பன் பின் னுதிப்ப தைந்து
தீமையா மதிலொன்றீனந் தீர்க்கம்நல் விர்த்தியாயும்
பூமியின் மீதுவாழ்வோர் புகல்வது மூன்றதாகும்
காமியா மொருவன்றீச்ச கண்ணியால் சிதருவானே. (9)

சதருவா னினத்தில்சேரான் றிரிகுவான் தேசமெங்கும்
விதமுடன் ருதுபெண் ணுக்கு விளங்கிடு மாயுள்நாற்பான்
மதிகுரு திசையிரண்டும் வந்தவெண் ணுண்டிற் மாள்வள்
புதகணை முற்காலுக்குப் புகன்றிடும் பலனிதாமே. (10)

பூரமிரண்டாங் கால்பலன்

(*)

எலிதனி லிரண்டாங்கால் ருதுபலன்க
ளியம்புவர் மணிதனி லரிவை
கலியெனு மதிகப் பசியுட னிருக்குங்
காலிமேல் ஜாமம திரண்டில்
நிலமதி மூல ருதுவெனுங் குறியாம்
நிறங் கருப்பாகுமெய் யிளைப்பு
தலமதிலாடை செகப்புடன் மஞ்சள்
சாற்றுவர் நிறம்புதி தாமே. (1)

புதியதா மழுக்கு நிறைந்திடுங் குள்ளான்
புஜபல பராக்ரம முடையாள்
அதிமதிசாலி நிறைந்திடும் ரூபி
அகமதில் செல்வமாய் வாழ்வள்
விதமதை யறிந்த தன்னையா நெடிநாள்
விளம்பிடும் நடுவய தாகும்
பதமுடன் செவந்த மோனியாம் துகில்
பழமைமால் பொன்னிவர் நிறமே. (2)

நிறமிரு வர்ணம் ருதுவின்பெண் வாழும்
நிலபிதா சுயார்ச்சித மாகும்
அறமிலான் றந்தை மணமுகப் பிந்திர
னுகுமேல் கீழதாம் வீதி
குறைவிலா செல்வங் கட்டடம் பெலமாம்
குழியொன்று வடபுற முளதாம்
நெறியுளோன் மணிதன் மேற்கினி லுண்டாம்
நீரிலாப் பொய்கை வாயுவென வே. (3)

வேறு.

எனதந்தைப் பூமிமூல மெழுதிடுங் கல்விமூலங்
கனபொருள் சேர்க்கவல்லான் மருதிடி செவந்தகண்ணன்

மனமது விரக்கமுள்ளன் மனைகளே மெழட்டதாகும்
வனமதில் வேட்டையாடும் வல்லவ னுருமோதே. (4)

ஓதிய வர்க்கஞ்செல்வ முரைப்பது நலமதாகும்
ஆதியா மன்னைவர்க்க மழிந்திடு மத்திய காலம்
மேதினில் நிலைப்பதாண்கள் விதமிலா திரண்டாம் பெண்கள்
நீதியில் மூன்றுமன்னை நிறைசெல்வம் தீர்க்கமாமே. (5)

செல்வமாங் கனிட்டனுக்குத் திரமிலா மனைவி மூன்றுங்
கல்வியாம் ருதுபெண் வர்க்கங் கருதுசோ தரங்கள்நான்காம்
வல்லவ ராண்கள் மூன்றும் வழுத்திடுந் தீர்க்கமாகும்
தொல்லுல கத்தில்வேந்தர் சூழ்ந்திட வாழ்குவாரே. (6)

பார்மகன் றிசையிலீரொன் பாண்டினில் மணமாம் வீதி
தாரணில் கீழ்மேலாகுஞ் சாற்றிடு முகப்பு மேற்கு
தீரனும் புருடன்மிக்க செல்வனும் நெடியரூபம்
மாரனின் மோகமெத்த வனந்தம் பெண்களே போகிப்பன். (7)

போகியா நிறஞ்செகப்புப் புகழ்சோ தரங்களேந்தாம்
பாகுடன் குடும்பமொன்றுய் பண்புடன் வாழ்வராகும்
சோகமென் பதுவொன்றில்லை சுகமது மெத்த வுண்டாம்
வேகமிவ் வாறுநிலையில் விளங்குவள் ருதுபெண் காணே. (8)

புத்திர வித்தினுசம் புவிதனில் தரிக்குங் கெர்ப்பம்
சித்தியொன் றில்லைமீரி னெனிக்கினு மரித்துப்போகும்
பத்தியா யதற்குமோமம் பரமனுர் தமக்கும் செய்யில்
வித்தியாசங்கள்நேரா விளங்குங் காலாந்தர மேகம். (9)

அந்தியம் புத்திரனுற்ப தாண்டின்மே லேகன்வித்தி
சுந்தர முளனுந்தீர்க்கஞ் சுகமுளன் ருதுபெண்ணையுள்
வந்திடு மறுபத்தேழில் மடிவது திண்ணமாகுங்
குந்தமில் கணிகாலிரண்டிற் குரைத்திடும் பலனிதாமே. (10)

பூரமூன்றுங்கால் பலன்.



பகவதி நாள்கால் மூன்றில் பண்டபுடன் ருதுவதானுல்
அகமதில் கொல்லைதன்னி லணங்கவள் குளிக்குங் காலம்
தகாது மூலையோரம் சாற்றுமின் னிலையாமாடை
புகாது நிறமழுக்குப் பொருந்திடும் புதியதாமே. (1)

புதியதாம் நிறஞ்செகப்புப் பொருத்திடாள் மொழிகள்சொன்னல்
சதிசெய்யு மனமதுள்ளாள் தனமொன்று பெருத்துநிற்குந்
துதிசெய்யாள் பெரியோர்தம்மைதுடைதன்னில்மருவதொன்றுங்
குதிதனில் ரணக்காயத்தின் குறிகளு மிரண்டுண்டாமே. (2)

நாரியைக் கண்டமாது நலமுட னன்னையாகும்
வீரிய முடையாள் செல்வ மிகுத்திடு மணிந்தவாடை
காரிபொன் னிறமாந்திரேகங் கருத்திடுங் குள்ளமாவாள்
தரணில் வயதுமத்தியஞ் சாற்றிடும் செவிகேளாதே. (3)

செவிதனில் ரோகமுண்டாஞ் செப்பிடும் பெண்வா ழில்லம்
புவிதனில் தந்தைக்காதிப் புராதன நிதிபொன் னுண்டாங்
கவிதனில் வல்லோனுகுங் கடனுளான் வர்க்கமுன்று
நவில்சகோ தரமேயேகன் நாடெல்லா மலைவன்றானே. (4)

அலைகுவன வன்றனக்கு ஆண்மைகள் மெத்தவுண்டாம்
கலைமதிவளர்ச்சிபோலக்கன்னியிண் சகோதரங்கள்
தலமதி லீராருண்டாந் தையலின் ஜேஸ்ட ரொன்பான்
மலைவரா தேபின் மூன்றும் வருஞ்சுகம் விர்த்தியுண்டே. (5)

சுகமில்லை யன்னைவர்க்குஞ் சொல்வது மூன்றதாகும்
பகையதாய் நிலைவிட்டேகிப் பசுதிசைத் திரிவராகும்
வகையுடனன்னைகாணும் வருஞ்செல்வ மெத்தவுண்டாய்
மிகசுக மாகவாழ்வள் விதியது காற்பதாமே. (6)

பாலகா ருதுபெண்ணுக்குப் பண்புடன் புருடன்றிக்கு
சீலமா மேற்கதாகுஞ் சிறந்திடுஞ் செல்வனுகும்
தாலமீ தீரேழாண்டில் தகுமண முடிவதாகும்
மாலவ னுதயம்நின்றால் வகுக்கலாம் விருத்தனுமே. (7)

விருத்தனும் சகோதரங்கள் விளம்புவ தொருமூன்றுகுஞ்
சிருத்த நேத்திரனு மேகன் சிறக்கவே மணமோராறு
வருத்தமில் செய்தும் புத்திர வகையிலா தலைவனுகும்
பெருத்திடும் வாதரோகம் பிழைத்திடான் மரணந்தானே. (8)

தரணிமேல் மடவாருக்குச் சாற்றுவோம் புத்திராள்விர்த்தி
நிர்ணய மாண்கள்மூன்றில் நிலைப்பது வுபயமாகுங்
கருணையொன் றில்லப்பெண்கள் கருதுவ தொன்றுப்விர்த்தி
தருணத்தில் யோகம்பெற்று சௌக்யமாய் வாழுவாரே
வாழ்வது மெத்தவுண்டா மணிபொன்னு பாணமுண்டாம்
தாழ்வில்லை ருதுபெண்ணுயுள் சாற்றுவோ மிரவிபொன்னன்

கீழ்மக னருணன்பானு கெணிதமெண் ணைரிட்டமாவள்
சூழ்கணை கால்மூன்றிற்குத் தொகுத்திடும் பலனிதாமே. (10)

பூரம் நாலாங்கால் பலன்.

பூமதில் நாலாங்கால் ருதுவ தாலுல்
புகலுவாய் கானகத்தி னருகிலாகுந்
தாணியில் மனைக்குத்தென் கிழக்கு மூலை
தையல்நிறங் கருப்புதுகில் கிழந்ததாகும்
நாதுவா யிருவர்ணம் பழமை யாகும்
நாசிகுறு கிடுங் கனத்த மெய்ய ளாகும்
தூரான மொழியுரைக்கும் கபடியாகும்
தூர்க்குணத்தாள் குடும்பத்தில் கலகியாமே. (1)

வேறு.

கலகமன் னிலைக்குமேற்குக் கங்கையும் விருகூமுண்டாம்
விலகிய வக்னிதோப்பு மிகுத்திடுங் கிழக்கிற்காலி
தலமதில் கண்டநாரி சாதியி லீனமாகும்
நலமிலாள் நிறஞ்செகப்பு நடுவய தமங்கலியாமே. (2)
ஆகுமேயணிந்தசேலை அழகிலாதபயவர்ணம்
நோவதா மெடுத்தநாளாய் நொடிபல தீங்குமுண்டாம்
பாகிலா ருதுபெண்வாழும் பதிபுரு டனுக்குப்பூர்வம்
கோவது மனையில்ரெண்டுக் குணமிலா திருக்குஞ் சொல்லே. (3)
சொல்லிய மனைமுகப்புச் சுடர்திசை கீழ்மேல்வீதி
அல்லலும் பகலுந்துன்ப மதிகமா மணம் நாளாக
புல்லிய சகோதரங்கள் புலமதிற் வசிப்பர்நான்கு
மெல்லியா ளதிலொன்றுகும் விளங்குவள் கனமாய்த்தானே. (4)
கனமில்லை ருதுப்பெண் வர்க்கங் கருதிய சகோதரங்கள்
இனமதில் சேராமேக னிருப்பது வன்னியமாகுந்
தனமுளா ளன்னைதீர்க்கஞ் சகோதர மைந்திலாண்கள்
மனமுளோ ரறிவராகு மற்றது பெண்பாலாமே. (5)
பத்துட னீரைந்தாண்டில் பதைக்கவே தந்தைமாள்வன்
சித்துக ளாடவல்லான் திரஞ்சகோ தரங்களேழாம்
வித்துக ளிருவர்க் கீன மிருசெல்வம் பூமியுண்டாம்
பத்தினிப் பெண்களிரண்டிற் பகருமொன் றமங்கலியாமே. (6)

பருவென்ப ருதுபெண் ணுக்குப் பார்க்கவன் றிசையிற்பாதி
வருடத்தில் சுபமுமுண்டாம் வலுவில்லை புத்திரவிர்த்தி
கருமத்திற் கேகபுத்திரன் கனமிலான் பெண்கள்மூன்றில்
இருமடந் தையர்கள்பூவி லிருந்திடா ரிட்டமாமே. (7)

இருந்திடா ரிளமைகால மிறப்பதக் கினியாலாகும்
பொருந்திடா ருதுபெண் ணுக்குப் புகலிரு பதின்மேலீரெட்
டிருந்திடாள் புவியின்மீது யிறப்பது வுருதியாகும்
வருந்தெலி கால்நான்கிற்கு வரும்பல னிதுவாமோதே. (8)

ஆகமொத்தம் 333.

பூரநக்ஷத்திரப் பலன் முற்றிற்று.

உத்தர முதற்கால் பலன்.

(*)

உத்திர முதற்கால் ருதுபலன் வினவி
லுயர்கனி வாழையென் மரங்கீழ்
சித்திர மீனயுள் பிழக்கடை மீனம்
செப்பு மன்னிலை ருதுகுறியாம்
முத்துமேல் புள்ளி யணிந்திடுஞ் சேலை
முதுமையா மிருநிற மூளதாம்
நத்துமூக்குத்தி யமையுமெய் செகப்பு
நயமொழி யழகுளாள் நாரி. (1)

நாரியைக்கண்ட மாதுபொன் னிறமாம்
நகப்பழ நிறந்துகில் பழமை
வீரியமுடையா ளழகிலித்தி ராணி
விளங்குவள் சுமங்கலி சுகமாய்
தரணில் மிகுந்தக் காமி வாலிபமாம்
தையலர் தமக்கிவ ளினமாம்
பூரணசெல்வ மீனதந்தை தனக்குப்
பூர்வமாம் பொய்கை யொன்றுளதே. (2)

தந்தையின் வர்க்கஞ் சகோதரர் லாபம்
தையல ரதிலொரு நான்காம்
விந்தையா மரசர் மூலம்பொன் னுளராய்
விர்த்தியாம் பெண்ணதி லொன்று

சுந்தர முள்ளாள் மணமது காலம்
துயரமாய்க் கணவனே யிழப்பள்
பந்தமா மற்றோர் விர்த்திதீர்க் கமுமாய்ப்
பாரில் வாழ்வர்க ளெனப்பகரும். (3)

பகர்ந்திடும் ருதுப்பெண் சகோதரமூவர்
பார்க்கவன் றிசைதனில் கனிட்டன்
தகர்ந்த பெண்மூலம் பற்றியன் னிலையில்
தனம்பொரு ளுடன்மிகச் சிறப்பன்
மலர்ந்திடு மல்லி னிறமதாம் பற்கள்
மாதுரு தனக்குசோ தரத்தில்
தலர்ந்திடு மொருவன் ரொணத்தினல் குடும்பந்
தழைத்திடான் வர்க்கமூன் றென்னே. (4)

என்னவே மூவெட் டாண்டினி லன்னை
யேகுவாள் மாலியூர் தனக்கு
நன்னய மற்றோர் தீர்க்கமாம் விர்த்தி
நலமுண்டாம் ருதுவின்பெண் கனவன்
கன்னியின் றிசையாந் தனத்தினி லுயர்ந்தோன்
கதிர்மதி திசைதொகை யாண்டில்
உன்னியமாக மணமது வுண்டா
முரைத்திடுஞ் சோதர மைந்தே. (5)

ஐந்தினில் மூன்று ணிரண்டு பெண்ணென்று
வமங்கலி விர்த்திய துண்டாம்
சிந்தையில் பேத மெண்ணிடான் புருடன்
செழிப்புடன் வாழ்வன் நாரியர்க்குச்
சந்ததி யிரண்டாண பெண்ணதோ ரைந்து
தழைத்திடுங் கனிட்டவன் றனக்கு
விந்தையாம் வலது கால்கரந் தன்னில்
விளங்கிடும் விரல்களா றென்றே. (6)

விரலது ஆறு முகம்வசி கரணும்
விண்மணித் திசைமுரல் தாரம்
தாணிமீ திடுக்க ணுகது விரவில்
ஜலத்தில்வீழ்ந் திறந்திடும் ருதுவின்
தொரிவையர்க்காயு ளேம்பதோ டேழில்
திரசுமங் கலியதாய் மரணம்

பெருகுஞ் செங்கதிர்நாள் கால்முதல் தனக்குப்
பேசிடும் பலனிதுவாமே. (7)

உத்திரமிரண்டாங்கால்பலன்.



செங்கதிர் பிறந்த நாளிரு காலில்
தெரிவையர் ருதுப்பலன் வினவில்
பங்கமில்தனது மித்துரு வானப்
பாவையர் மீனக்கவ ளன்பாய்
மங்கையர் சென்று யிருவரும் பல்வாய்
வார்த்தைக ளாடிடுஞ் சமயம்
அங்கவள் ருதுவாந் திசைகுட மாகும்
அகமதுக் கருகாம்வம் மீனமே. (1)

அம்மீனமாது கண்டுபின் ருதுப்பெண்
ணன்னையர்க் குரைத்தன ளிவள்மெய்
செம்மையின் நிறம்வா லிபஞ்சுமங் கலியாம்
சேயிரண் டாமவள் தனக்குக்
கம்மியாம் ரூபந் துகில்கந்தை கருப்புக்
கணவன்சொற் றவரிடாள் கழுத்தில்
அம்மியின் குழவி போலொரு வடிவு
அமர்ந்திடு மெனப்புகழ் வாமே. (2)

புகழ்மிக வுண்டாம் ருதுமட்டங் தையர்க்குப்
புருவத்தில் மருவுமெய் செகப்பு
பகையிலா தெவர்க்கு முடித்திடு மாடைப்
பசுமை பொன்னிறம் புதிதாகும்
அகமகிழ்ச்சி யுளாள் குருகியவடிவ
மாகுமன் னீலக்குமேல் கெங்கை
ஜெகம்புகழீசன் வடக்கு மீசான்யம்
செழிப்புள மீனயிரண் டென்னே. (3)

மீனயிரண்டாகு மங்கைவா ழிடத்தில்
மால்வன் திசைமுகப் பெதிரில்
இனமுளோர் மீனயாம் வீதிகீழ்மேலா
மிருபுறஞ் சிறுத்திடுஞ் சந்தாம்

கனமணியாகும் பூர்வமாந் தந்தைக்
கதிகசெல் வீகனும் வர்க்கம்
வினவிடும் பெண்ணொன் முண்கள்நான் கதிலொன்று
வித்தியி லற்பமென் றுரைக்கும். (4)

உரைத்திடும் ருதுப்பெண்சகோதர வர்க்க
மூணர்வது பேதமா ணென்றும்
நிரைத்த செல்வீகன் மணவிக ளிருவர்
நீடிய வாழ்வினை யுடையன்
கரைத்திடு மம்மான் வர்க்கமொன் றில்லை
கன்னிகள் தாயுட னிரண்டாம்
சிரித்திடு முகமா மன்னை தீர்க்காயுள்
செகத்தினில் வயது நாருமே. (5)

செகத்தினில் புருடன் திக்கது மேற்குச்
செகப்புமெய் நடுவய தாகும்
முகத்தினில் மருவாம் பத்துட ணென்றில்
முன்னமே மணமது வுண்டாம்
அகத்தினில் பொய்கை முகப்பது வடக்கு
அறிந்திடுங் கிழக்குமேல் வீதி
சுகத்தினில் மேலாம் நிறைந்திடுஞ் செல்வம்
துஷ்டரை வதைத்திடும் சூரன். (6)

வேறு.

காரிகை தனக்குப்புத்திரிள் கதித்திடு மிளமைதன்னில்
வீரரா மாண்கள்மூன்று விளங்கிடும் பெண்கள் நான்கு
பாரினில் வித்தைபுத்திப் பகர்சுயக் கவிகள் பாடல்
தேர்வது கனிட்டனுகும் ஜெகமெலாங் கீர்த்தியாமே. (7)

சிறந்திடும் ருதுபெண் ணுக்குச் செப்புவோ மாயுள்தன்னை
குறைந்திடு மூவெட்டாண்டில் கொடுப்பிணி யாலோர்கண்டம்
நிறைந்திடு மருபத்தொன்பான் நிலையது வரையில் தீர்க்கம்
அறைந்தபங் குனிகால் மூன்றி னரும்பல னிதுவாமோதே. (8)

உத்திர மூன்றுங்கால் பலன்.

பங்குனி மூன்றுங்கால் ருதுப் பலன்கள்
பால்மதி திசைப்பெருந் தோப்பில்

அங்கவள் கந்தமூலங் கொண்டேக
வகன்றன ளதுநீலை ருதுவாம்
சங்கையாந் துணிகள் மூட்டையைச்சிரசில்
தாங்கிக் கொண்டது வழிவந்த
மங்கையா ளொருத்திக் கண்டனள் ருதுப்பெண்
மயங்கி நின்றிடுங் குறிதனையே. (1)

அன்னிலை மேற்குப் பலமலர்ப் பொய்கை
ஆதவன் றிசையில் நீரோடை
கன்னியின் றிசையில் பருவதம் ருதுவின்
காரிகை நிலைமுழுப் பாரை
பொன்னவன் காரி மாலிவர் நிறங்கள்
பொருந்தியதாந் துகில் பழமை
நன்னியக் கருப்பு மெலிந்திடுந் தீரேகம்
நலமில்லை மலடியா மெனவே. (2)

ரூபமாந் தெரிவை தக்கன மொழிகள்
நுவல்பல புருடரைப் புணர்வள்
தாபமாப்க் கண்ட மடந்தைதகா ணீன
ஜாதியா நிறங்கருப் பாகும்
நேர்பெருந் தடித்தத் தீரேகமாம் விதவை
நிறங் கருப்பாடையா மணிதல்
பாபமா மிளமைக்கணவனை யிகழ்ந்த
பைங்கொடி முதிர்ந்தவ ளென்றே. (3)

வடிவுள்ள ருதுபெண் வாழ்மனைப் பூர்வம்
மகிழ்ச்சியாந் தந்தையர் தனக்குத்
திடமுள தாகும் முகப்பது கிழக்கு
சிறந்திடில் வீதிதென் வடக்காம்
அடவுடன் தந்தை யேகமா மூன்பின்
னழிந்திடுங் வர்க்கம திலைகாண்
நடைதனைக் கஞ்சான் பூமியின் மூலம்
நற்சுகந் தீர்க்கமென் றோதே. (4)

ஓதியநாரி சகோதர மிருவன்
கொன்றதில் விர்த்திமூ விரண்டாம்
சேதிகேள் பெண்ணைந் தாகுமா ணென்றில்
சிறப்பில்லை பெண்ணதி லிரண்டு

வாதனை யில்லை அன்னையின் வர்க்கம்
வலுவுண்டாம் திருதிய மாகும்
நீதியா மம்மா னைகளு மிக்க
நிதியுடன் வாழ்வனென் றுரைக்கும். (5)

வேறு.

பதமுட னன்னை தீர்க்கம் பகிதனைப் பொருக்காள் காமி
விதமுட னீலனுண்டில் மிகுத்திடு மரிட்ட கண்டம்
இதமுறும் ருதுபெண் ணுக்கு யிறையவன் றிசையினுண்டில்
மதிமகன் திசையிலன்பாய் மணமதுண் டாமென்றோதே. (6)

மணமுடன் புருடன்வர்க்கம் வழுத்துவே மிருமூன்றுகுங்
குணமதில் நான்காமிரண்டுக் குறையதாய் வாழ்வராகும்
பிணியுளன் புருடன்மெத்த பெருந்துய ருடையோனுகும்
உணவிலா சிலதுகால மூலர்ந்திடுங் திரேகமென்றே. (7)

கருதிடும் ருதுப்பெண் ணுக்குக் கருவது தரித்திடாது
மருவிடுங் கணவனுக்கு வஞ்சக முடையோளாகும்
நெருகிடு மணங்களான நாள்முதல் குடும்பந் தன்னில்
பெருகிடும் பிணிசோரங்கள் பேதமாங் குடும்பம்பாழே. (8)

மங்கவன் திசையினுண்டில் வரும்ஜ ரகண்டமூண்டாம்
பொங்கமாய் முப்பதாடு புகர்மதி திசையினுண்டும்
சங்கையா மொத்தமாண்டில் தங்கிடா ளரிட்டமாவள்
பங்குனிக் கால்மூன் றிற்குப் பற்றிடும் பலனிதாமே. (9)

உத்தரம் நாலாங்கால் பலன்.

கற்கநல் பிரீதியுத்தரம் காலதுநான்கி னுக்குப்
பொற்கொடி யாரணங்கு பூவையர் சிலர்களோடு
தெற்கதி பக்கஞ்சிற்றார் செழித்திடும் புலங்கள் தன்னில்
நெற்கதிர் கொய்யுமேலோ நிகழ்த்துவர் ருதுவாமாது. (1)

ருதுபெண்ணின் நிறங்கருப்பு நோய்முக னிறைவன் செவ்வாய்
மதியிவர் நிறங்களொற்ற வாடையாம் பழமையாகும்
அதிகமோ ஜனமுண்பாள்பா ரதிர்ச்சியாய் நடக்குங்கள்ளி
சதிசெய்யுங் குணங்களுள்ளாள் தடித்திடுந் திரேகமாமே. (2)

தடித்திடு மெய்யதாகுந் தையலைக் கண்டமாது
நடுத்தரம் செகப்பதாகு நாடுமுன் பற்களுனம்

உடுத்திடுஞ் சேலைவெண்மை புரைப்பதுவழுக்கதாகும்
கொடுத்தது வாங்கமாட்டாள் கொங்கைகள் நீண்டதாமே. (3)

நீண்டிடுங் கூந்தலாகும் நெற்றியு முயர்ந்துகாட்டும்
ஆண்டுவொன் றுரைக்கமாட்டா ளமங்கலி தனைமணந்தோன்
நாண்டுமே யிறந்ததாகும் நாரியாள் தனக்குப் புத்திராள்
மாண்டது போகவிர்த்தி மடந்தையொன் றிரண்டாணுமே. (4)

இரண்டதாம் ருதுப்பெண்வாழு மிலந் தந்தையர்க்குப் பூர்வம்
மிரண்டிடு மனத்தன்றந்தை மிகுதியொன் றில்லைசெல்வம்
திரண்டிடும் வர்க்கமேழு செழித்திடா தீர்க்கமாகும்
பிரண்டிடும் பிணியாலொன்று பேசும்பெண் ணுன்காண்மூன்றே.

மூன்றதாம் ருதுப்பெண்வர்க்க மொழிந்திடு மாண்களில்லை
தோன்றிடுஞ் சேஷ்டபெண்ணுள் சுகமில்லை தேசமாரும்
ஈன்றமா தாவின்வர்க்க மியம்புவ திரண்டதாகும்
ஆன்றுமே வுரைத்ததாகு மாணில்லை யெனசொல்வாரே. (6)

சொல்லிய மாதாவுக்குச் சுகமது வற்பமாகும்
தொல்லையா முப்பதோடுத் தொடர்ந்தமுன் னுன்கிற்கண்டம்
சல்லியர்க் குச்சதிக்கு தனில்மணம் புருடன்செம்மை
வல்லிய மூவாருண்டில் மணமதுண் டாமென்றென்னே. (7)

என்னவே புருடன்வர்க்க மியம்புவ தைந்ததாகும்
முன்னவ னொருவன்ரூனு மூடவனு மணங்களில்லை
கன்னியாள் தனக்குப்புத்திராள் கருதிடு மாண்களிரண்டு
மின்னிடும் பெண்களிரண்டு விளம்பிடுந் தீர்க்கமாமே. (8)

மடமயில் சாயலான மங்கையர் தனக்குவாயுள்
திடமுட னுரைக்கக்கேளுஞ் சேய்குரு சனியா தித்தன்
தொடரிவர் திசையிலுண்டின் றெகைதனி லரிட்டந்திண்ணம்
கடைபெழுஞ் சனிகால் நான்கிற் கதித்திடும் பதனிதாமே. (9)

கால் 4-க்கும் செய்புள் 33. முன்நக்ஷத்திரம் 10-க்கு 333.

ஆக மொத்தம் 366.

உத்தர நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

அஸ்த முதற்கால் பலன்.

அங்கிநாள் முதற்கால் தனில்ருதுப் பலன்க
ளகத்தினி லுபயபெண் களுடன்
பங்கமில் மதுரம் பொருந்திய வுணவு
பகூமா யருந்திடுஞ் சமயம்
மங்கையர் ருதுவாம் நடுநிலை திரேகம்
மானிறம் துகில்பஞ்ச வர்ணம்
திங்களின் வடிவ மிரண்டிடங் கிழிசல்
தெரிவது முகப்பினி லெனமே. (1)

தெரிவதி ரூபம் விம்மிடுங் கொங்கை
செழித்திடுங் கற்பினை யுடையாள்
குருஜிய வடிவை முருதிவாக் குடையாள்
முணமுளாள் கண்டிடு மடந்தை
பெருகிய வன்னை நிறத்தினில் கருமை
பிரைசுத னிறந்துகில் புதுமை
மருவிடுங் காலஞ் சுமங்கலி முதுகில்
மருவிழி சிறுத்திடுங் குறியே. (2)

குறிருதுப் பெண்பால் தனக்கிடை யுண்டாங்
குணமுடன் வாழ்பதித் தந்தை
நெறிசுயார்ச் சிதமாம் பூர்வமங் கில்லை
நிலமகன் றிசைமனை முகப்பாம்,
அறிவது தென்கீ ழாலாங் கெங்கை
யருந்திடா ரதன்ஜல மெவரும்
நிறைநிதி மனையக் கினிதிசை வீதி
நீண்டிடும் தென்வட வென்றே. (3)

தென்புற மனைபாழ் தந்தையோ டைவர்
செப்பிடும் பெண்ணதி லிரண்டு
அன்புடன் வாழ்வர் பூமியின்மூல
மதில்களிட் டவன்பிரை யாண்டில்
இன்பமாய் தெத்துப் புத்திரனுகு
மிசைந்திடு மன்னையின் பலன்கள்
பொன்பதி யுடையார் வர்க்கமு விரண்டு
பொருந்திடு மெனப்புகழ் வாரே. (4)

வருவது ருதுபெண் சகோதர மைந்து
வலுவதி லிரண்டதா மென்க
தெரிவைய ரிருவர்விர்த்தியி லுள்ளார்
செல்வமட் டென்பர்காண் கனிட்டன்
குருதிமெய் யாசர்நட் பினையுடையன்
குலமதில் தத்து புத்திரனும்
பெருமை யொன்றில்லான் றிகமோகமூளன்
பிணியிலான் சுகமூள னென்றே. (5)

சுகமூள ருதுப்பெண் றனக்குமே புருடன்
துலதிசைக் கருத்தமே னியனும்
அகமது மேடை பெருந்தன முள்ள
னதிகார முடையனேர் நகர்க்கு
பகையிலா னெவர்க்குஞ் சகோதரம் நான்கு
பத்திரு நான்கினில் மணமாம்
ஜெகம்புகழ் மாலாலையங் கிழக்கமருஞ்
சேய்திசை மனமுகப் பாமே. (6)

மனதனில் பொய்கை ருதுவின்பெண் தனக்கு
வருங்கொப்ப மொருபதி னென்றில்
தினகரன் திசையாண் டத்தனை விர்த்தித்
தீர்க்கமாம் பெண்ணதி லிரண்டு
வினவிய ருதுப்பெண் றனக்குவா ழாயுள்
விளம்பிடு மைம்பதா டிரண்டாம்
கனமூளக் கன்னிக் கால்முதல் தனக்குக்
கருதிடும் பலனிது வாமே. (7)

அஸ்த மிரண்டாங்கால் பலன்.

வல்லமைக் களிறு தனிலீரண் டாங்கால்
வரும் ருதுமாதர்க ளோடு
கொல்லியில் விறகு பொருக்கிடும் வேளை
கோதையர் ருதுவெனுங் குறியாம்
மெல்லிவாழ் பதிக்கு அந்தணன் றிசைகாண்
விளங்கு மன்னிலை கிணறு கிழக்காம்
சல்லியன்மூல மரங்கள்சூ முடவி
சவுரியின் திசையில் முப்பிரிவே. (1)

பிரிவது மூன்றுங் கிழக்குமேல் வடக்குப்
பேசிய ருதுவின்பெண் ணேழு
அரிவையர்மூன்று மதில்கண்ட மாது
அமங்கலி வாலிபம் கறப்பாம்
கரமதில் மருவா மணிந்திடு மாடை
கருப்பினில் செகப்பதாம் பழமை
மருவுமற் றிருவர் மணமிலாப் பெண்கள்
வயதுமீ ரேழுபத் தெனவே. (2)

புத்தி சற்றில்லாள் ருதுவின் பெண்ணை
புதியதாம் நிறங்கறப் பழுக்கு
மத்திப வாழ்வாஞ் சிவந்திடுமேனி
வழகிலாள் சரிந்திடுங் கொங்கை
மித்திரபேத முடையவள் காமி
மிகுத்திடுஞ் சென்னியில் கூந்தல்
புத்திர ருடையாள் வாழ்பதி தந்தைப்
பூர்வமாஞ் சுகமிலா னென்றே. (3)

சுகமிலா னென்றீ ரெவ்விதஞ் சொல்லும்
சூட்சமமாய் அடியனேந் தனுக்கு
அகம்பொருள் பூமிஆஸ்தி மெத்தவுண்டு
அலைவது பிணியினு லென்க.
தகமையாங் கல்வி யரசர்கள் நட்புத்
தயங்கிடான் சத்துரு ஜெயமாம்
ஜெகமதில் வர்க்க மிரண்டுவா ணென்று
செல்வியென் றுரைத்திடு மரசே. (4)

அரசேகேள் ருதுவின்பெண் சகோதரங்க
ளறுவரில் பெண்கள் நாலிரண்டாண்
திரமதில் மூன்று வித்தியொன் றன்னியம்
ஜெஷ்டன் மன்னவர்களால் முறிவன்
அருமையா மன்னீ சுகமுளாள் கருமி
யழகிலாள் சோரமே யாகும்
தெரிவது துணைவ ராணிரண் டதிலொன்
றீனமா மனைவியா லென்றே. (5)

ஈனமாம் ருதுபெண் றனக்கு மூவைந்தி
லிடரதாய் மான்றிசை மணமாம்

கானதி லிரண்டு பிரிவுபெண் ணுன்று
தக்கபொன் பூமிக ளுண்டாம்
வானுர வோங்கு மாடியாம் புருடன்
மதியிலான் மூடயநே த்திரமும்
ஊனமாம் பெண்பால் கணவனைக் கருதா
ளுரைத்திடு மனுதினம் பகையே. (6)

பகையுடன் குடும்பக் கலகமென் மேலும்
பற்றிடும் வாழ்வது குன்றும்
நகைபொருள் சோரம் புத்திர லிர்த்தி
நலமில்லை கெர்ப்பமூன் னுண்டாய்
ஜகமதில் சிதரும் நிலைத்திடா திருபத்
திரண்டினில் தரித்திடுங் கெர்ப்பம்
சுகமுறு மூபைய சிசுக்களாந் தீர்க்கந்
துணைவர்பின் னிலையென சொல்லும் (7)

வேறு.

சொல்லுமீ ரெட்டிற்கண்டம் சூழ்வது பிணியாலாகும்
வல்லசெய் கதிரோண்மைந்தன் வருமிவர் திசையிலுண்டில்
நில்லிடா திரணத்தினுலே நிசமிது வரிட்டமாவள்
நல்லகா மாங்காலிரண்டின் நவிலுநற் பலனிதாமே. (8)

அஸ்த மூன்றுங்கால் பலன்.

கன்னியில் மூன்றுங்கால் ருதுபலன்கள்
கருதிடுமால் ரதத் தருகில்
மின்னிடுங் கொடியாள் ருதுவென வாகும்
விளம்பிடு மனைக்குத்தென் றிசையாம்
அன்னிலை நகர்க்கு மத்தியி லரிவை
ஆன்றசுர் நாளின் காலிருபலமி
தாகுமென் றரியுமா தவமே. (6)

மூல மூன்றாங்கால் பலன்.

சிலையொரு மூன்றுங் கால்ருது பலன்கள்
தெய்வ ஆலயத்தினுள் பதிக்குத்
துலைதிசை யந்தி ஜாமம்நான் கரிவைத்
துலங்கநெய் தீபமேற் றிரண்டு
மூலதமும் பெண்க ளுடன்றிலத மிட்டு
முகமதை மினிக்கிசென் றனளவ்

நிலகிழக்கேரி நிருதியில் பொய்கை
நீலனுர் திசைகன மணியே. (1)
கனமணக் கருகில் கனிதரு மரங்கள்
கணக்கிலா வடக்கினில் நகரம்
மனமுளாள் ருதுப்பெண் ணணிந்திடு மாடை
மழமழப் புளதுயர் சரிகை
தினமிருவேளை குளிக்குநற் சுகிர்தாள்
செல்வியாம் லீலையி லினியாள்
வனமதைக் காணுள் மணையைவிட் டகலாள்
மானிற மிகுத்திடு மழகே. (2)

அழகுளாள் கற்பு நழுகிடாள் மருவு
அடிவயிற் றினீலிருப் புவியி
லிழிவிலா ளென்னும் கண்டிடு மடந்தை
யினஞ் சுமங்கலி நிறங் கருப்பு
பழமையா மாடை வழுக்கிலா வெள்ளை
பருவம் வாலிபமற்ற நாரி
விழுதினை கூந்தல் மணமிலாச் சிறுமி
மெய்செகப் பணிதுகில் புதிதே. (3)

புதியதாம் ருதுப்பெண் வாழ்ந்திடு மில்லம்
பூர்வமாம் பிதாவினுக் கருகில்
நதிவடக்காரு முகப்புத்தென் வீதி
நாட்டமாங் கிழக்குமேல் பொய்கை
பதிதனில்காணு மெதிர்மணக் கனலால்
பாழதிற் காதியொன் றில்லை
விதியுளன் தந்தை வர்க்கமா ணிரண்டு
வித்தியாம் பெண்ணிலைக் கனிட்டன். (4)

சந்ததியிலான் றெத்து புத்திரனுந்
தையலர் சகோதர மீரெட்
டந்தர வாழ்வா மூபயபர் மற்றீரு
ரகம்பொரு ளுடையவர்ப் பெண்கள்
இந்திரி திசையிற் பகுதியில் பகுதி
யியம்புமற் றவர்களாண் பெண்ணென்
றுந்திபில் ரணங்கண் டிருபதோ டொன்பான்
உயரமாங் கெர்ப்பமா டரிட்டம் (5)

வேறு.

அன்னையின் வர்க்கமூவ ராண்களாம் பெண்களில்லை
பொன்னவன் நிறமார்திரேகம் பொருமையாந் தீர்க்கமுள்ளாள்
வன்னமாங் கனிட்டனுக்கு வளர்வது பெண்களொன்பான்
பின்னையு மாண்களில்லைப் பிறந்திடா கசப்பதாமே. (6)

திக்குமிந் திணீராறில் ஜைகம்புகழ் மணமு ணுண்டாம்
தக்கமன் னவனும்வர்க்கந் தனிமையாம் புருடன்பெண்கள்
சுக்கிரன் றிசையிற்காலாந் துலங்கிடுந் தீர்க்கமுண்டாம்
பக்குவ வயதாந்தீரன் பதிகன மேடையாமே. (7)

மேடையாங் கிழக்குவாசல் வீதிதென் வடல்சீர் தூர்க்கை.
கூடமொன் றெதிரில்காணுங் குடமதில் குன்றுதோப்பு
சேடியர் தனக்குகர்ப்பஞ் சேய்திசை தொகையில் விர்த்தி
நாட்டி லாண்கண்மூன்று நலமிலாப் பெண்ணென்றுமே. (8)

நலமில்லை யென்றீரெவ்வாறு நவிலுவீ ரடியனுக்குத்
தலமதில் பெண்பாலுக்குச் சாற்றுவோ மணங்க ளானக்
கலிமதி திசைமாதத்தில் கணவனை யிழப்புள் பின்புப்
பலருடன் சேர்வளாகும் பாரெலாம் நகைக்கத்தானே. (9)

காரிகை தனக்குவாயுள் கருதுவோம் பரிகூஷித்தேகேள்
ஆரல்பொன் னசுரமந்திரி யருக்கனை டுடுவின் வேந்தன்
சீருட னிவர்மொத்தாண்டில் சேதமா மரிட்ட கெண்டம்
வார்சிலை கால்மூன்றிற்கு வழுத்திடும் பலனிதாமே. (10)

மூலம் நாலாங்கால் பலன்.

ஆனியில் நாலாங்கால் ருதுபலன்க
ளறிவது நகர்க்கு வெளியில்
பானுவின் றிசையாம் பலனிலாக் கொல்லை
பகலவ னுதித்திடும் வேளை
நானிலமீது தனிமையாய் மடந்தை
நாடிபுல் கொய்கையில் ருதுவாய்த்
தானதுசாய லறிந்துவன் னிலைவிட்
டகன்றனள் மீனதனக் கென்றே. (1)

கட்டையாங் கூந்தல் வாழ்விலாள் வேசை
கனத்தமெய் வலுவுள்ளாள் கருப்பி

நெட்டையாங் கபடி மூலைசரிந் திடும்பல்
நிறைவழுக் குறுந்துகில் பழுமை
குட்டையாஞ் சிகப்பில் பசுமைகூர் மொழிகள்
குலரும்வாழ் மனபிதா சுயார்ச்சியம்
வட்டமாம் பாயையருகுதென் முகப்பு
வழங்கிடும் வீதிதென் வடக்கே. (2)

மேவறு.

வடக்கினில் பூர்வாதினம் வழக்கினு லழிவாமேற்கு
திடமுள்ள மன்னர்வீடு தெற்கினில் வஞ்ச நாஸ்தி.
படிதனில் தந்தைவர்க்கம் பலமில்லை யொருமூன் றுண்கள்
மடமயில் பெண்பாலொன்று வளர்பிரை செல்வமாமே. (3)

பிரைதிசைத் தொகையில்மூன்றெண் பிரியமாய்க் கழித்தமீதி
அரிவையின் சகோதரங்க ளாகுமத் தொகையில் விர்த்தி
கருதிடு மாண்பாலொன்று கன்னிரெண் டாகுமற்றோர்
பெருகிடார் மரணந்தினைம் பேசிடும் புவியினோர்க்கே. (4)

புவிதனி லன்னதீர்க்கம் பொருளிலாள் சுகங்க ளற்பம்
குவியலாம் பிணிகள்மூப்பான் குறைத்திடுங் காலொன்றானம்
செவிதனில் ரோகங்கொஞ்சந் தேருவாள் பலகண்டங்கள்
நவில்வது சகோதரங்கள் நலமில்லை யிருவராமே. (5)

இருவொன்ப தாண்டிற்மாதக் கிசைவிலா மணமாந்திக்கு
குருதனக் குச்சராசிக் கொண்டவன் நிறங்கறப்பு
கருவது மறையோனுக்குக் கண்டிடும் ஜெனித்தோருகும்
பெருகிடான் செல்வமற்பம் பிரபல வித்துவானே. (6)

வித்துவான் கணிதநூலில் விருப்புவன் மதுபானங்கள்
சத்துரு வின்றேனுக்குத் தாரங்கள் நிலைத்திடாது
மத்திப வாழ்வுவர்க்கப் வழுத்திடி லேகமாகும்
புத்திர னில்லாள்தத்துப் புதல்வனு மரிதாமோதே. (7)

ஓதிய ருதுபெண்ணுக்கு வுரைத்திட வேண்டாங்கர்ப்பம்
சேதியொன் றுரைப்போம் பாலா தேரிய விஷரோகத்தால்
மாதவள் மணமதான மருதின மரிட்டம் பாரின்
மீதுவில் காற்றான்கிற்கு விளம்பிடும் பலனிதாமே. (8)

மூல நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

பூரட்ட முதற்கால் பலன்.

கருதுநீர் நாள்முற்கால்பெண் கனருதுப் பொதுநிலத்தில்
பருதியு மேற்குசாயல் பதிக்குதென் கிழக்குமூலை
குருதிமால் நிறமாஞ்சீலைக் குணமிலாக் கந்தைபுள்ளி
உருதிமெய் யேந்துங்கொங்கை யுயர்ச்சியாங் கறப்பதாமே. (1)

கருப்பதாய்த் தொடையில்மச்சங் காணுமன் னிலைக்குமேற்கு
நெருப்பினு லழிந்தவில்ல நிருதியின் மூலைசெக்கு
விருப்பமாய்த் தொழுகுமீசன் வெய்யவன் றிக்குசாபம்
சிருப்புகள் வருகக்கூறுஞ் சிறப்பிலான் மணியாஞ்சொல்லே. (2)

சொல்லுவர் கண்டநாரி சுகமிலாள் பதிகள்தோறும்
அல்லலுநற் பகலுங்கெஞ்சி ஐயம்பெற் றுண்பாளாகும்
மெல்லியர்க் கெருமைமாடு மேய்த்திடுந் தொழிலாங் குள்ளம்
வல்லவள் கருத்தமேனி வாலிபம் நீங்குங் காலம். (3)

நீங்கினு லினத்தைவிட்டு நின்றிடக் குடிசையில்லை
பாங்கிலாள் விதவையாடைப் பகரொணாப் பெண்கள்வாசம்
ஓங்கிய திரேகம்நாற்ற முறும்பெண்பால் கூடைகொண்டு
ஆங்கு சாணத்திற்கேக வன்புட னறிந்தளாமே. (4)

அகம்பிதுர்ப் பூர்வம்தெற்கு வரையுமோர் தினத்திலேழு
ஜெகமதில் மரணந்துர்க்கை செய்கையா முகப்புமேற்கு
மகவதுக் காகவேண்டி மளவிலாத் தவங்கள்செய்வார்
பகையுளா ரவ்வீட்டோர்கள் பாகமூன் றென்னலாமே. (5)

அன்னவ னொருவன்மாரல் அரிவையின் தந்தைவர்க்கம்
பின்னவ ரிருவர்தீர்க்கம் பெலமுள்ளக் கன்னியொன்று
முன்னவ னேகலுகும் மொழிவது வாசர்மூலம்
பொன்பொருள் வித்திதீர்க்கம் பொருந்தும்வா கனமுமாமே.

மாதவ முதித்தமாதா வர்க்கமொன் றில்லையேகம்
சோதிட னுகுந்தந்தை சுகமுள்ளன் பொருள்க ளுண்டாம்
காதலுள் ளவனுமிக்குக் காசினி மாந்தர்மீது
சாதியில் மேன்மையான தையலர் வசமுள்ளானே. (7)

உள்ளபொன் பொருள்களந்திய மூற்றபங் காளியேகன்
கள்ள மூலங்களெல்லாங் கவருவான் ருதுபெண்வர்க்கம்
வெள்ளியின் திசையின்காலில் விளங்குவ தறிந்மேலொன்று
தள்ளுவ தறில்மூன்றுகுஞ் சஞ்சலப் பிணியால் கண்டம் (8

கொண்டவன் றனக்குவஞ்சாள் குணமிலா வாழ்வாமங்கை
மண்டல மீதிலொன்பான் மறிதிசை மணங்கீழ்வாசல்
திண்டிமெத் துண்பாள்செல்வஞ் சிதரிடும் வறிமைகாட்டும்
பண்டுள வாயுள்மட்டும் பாவியாஞ் சுகமில்லாளே. (9)

சுகமிலா மடவாருக்குச் சுதன்விர்த்தி யேகம்பெண்கள்
வகையிலா திரண்டாமுன்னேன் மருவுவான் றங்கைதன்னே
அகமிலா ருதுபெண்ணுக்கு வாயுள்நாற் பதின்மேலீரேழ்
முகமது வீங்கிச்சாவள் முற்குளம் காலொன்றிற்கே. (10)

பூராட மிரண்டாங்கால் பலன்.

(*)

முற்குள மிருகால்பெண்கள் மொழிவது மனைக்குள்ளீன்ற
கற்புள மாதாவோடு கனியருந் திடுகைநின்மேரு
ரற்புத மொழிகளன்பா யறைகையில் ருதுவாமஃதை
சொற்பொரு ளன்னைகண்டு சொல்லொணு மகிழ்வானுளே. (1)

குளித்திடு மிடத்தில்பள்ளங் குணதிசை வோடைருத்திரன்
உளித்தன்னுல் மரணமேகன் உலகமேநத் திரஞட்சில்லம்
வெளித்தலம் வித்தைமூலம் விளங்குவ னில்லப்பூணி
துளித்தன்னுல் மரணமுத்தரஞ் சொல்வ தைந்தாம்வீட்டானே.

வேறு.

வீடதுமுகப்பு மேற்குதென் வடக்கு
வீதியாம் ருதுபெண்ணி னுடை
மாடதுக் குடையோன் நிறம்புதிதாகு
மங்கைபொன் னிறமதி ரூபம்
பாடுவள் சுயமாய் கவியிரு கொங்கை
பளப்பளப் பெனுமினுங் கூந்தல்
வாடிடா செழிப்பு அரசது புரிவாள்
வளமைபாங் கண்டிடு மடந்தை. (3)

மாதுருவாகு மவள்நிறங் கருப்பு
வாலிபம் சுமங்கலிக் கருமி
நீதியைக்கவர்வ ளாலிந்திடு மாடை
நீலனுர் நிறம்புதி தோரம்
வாதனைநாற்கால் மிதித்திடுங் குறியாம்
வழுத்திடு முயர்ந்ததாம் தொகைகளர்

பூதலமீது வன்னிய ருடையப்
பொருளதாந் தாய்மிகக் காமி. (4)

காமியாம் ருதுபெண் சகோதரி யொருவள்
கருதிடு மணமிலாச் சோரம்
நேமியில் வர்க்க மானிரண் டரிவை
நிலைப்பது திருதியந் தீர்க்கம்
மாமியார்தனக்கு நயமிலாள் ருதுபெண்
மாதுரு சகோதர மொருநான்
காமதி லொருவன் வானர ரூபங். (5)

கருமைபாய்ப் பலவிட மலிவன்
அலிவதுதந்தை வர்க்கத்தி லொருவ
னன்னிய மாம்வள நாடு
கலிமதி திசையின் பகுதியி லிரண்டுங்
கதித்தவெண் தந்தைசோ தரமாம்
நிலையுள்ளப் பூர்வா தினங்க ளுடையன்
நெறிதவ ரான்மிகு சமர்த்தன்
தலிதனிலிடது பாரிச மிரண்டுத்
தளிம்பென சாற்றவு மாமே. (6)

சாற்றிடு மங்கைப் புருடன்தென் றிசையாம்
ஜனித்தமுன் ஞன்கினில் மணமாம்
நாற்றமெய் புழுத்து சகோதர மொருவன்
நலமிலா வயதினில் மரிப்பன்
ஊற்றுகள் பெருகு நதிதனக்கருகி
லுபர்மனே மேமடையாம் வர்க்கம்
தோற்றுவ தாண்கள் மூன்றுபெண் ணொன்று
துலங்கிடுங் தீர்க்கமென் பதுவே. (7)

எனருது மங்கைப் புருடனே டினிமை
யிந்திர போகமாஞ் சுகங்கள்
கனநகை யணிதல் மனமிக மகிழ்ச்சிக்
காசினி துதித்திட வாழ்வாம்
தனமதை நாவா லுரைத்திட லாமோ
தரித்திடுங் கர்ப்பமீ ரைந்தேதான்
றினமதுக் கிசைந்த சிறந்தபோர்வீரர்
செல்வராண பெண்களோ ரைந்தே. (8)

ஐந்தினில் விர்த்தி திருதிய மாண்க
ளம்புலி திசைதனில் பகுதி
சந்தியில் ஜெனித்த வேழவன் றனக்குச்
சலித்திட கர்ப்பமாம் ருதுவின்
சுந்தரி தனக்குப் புவியில்வா ழாயுள்
சொல்வது வறுபதோ டொருமூன்
றந்தமா நீர்நாள் காலிரண் டினுக்கு
வறைந்திடிம் பலனிது வாமே. (9)

பூராட மூன்றுங்கால் பலன்.

பலமுடன் நீர்நாள் காலொரு மூன்றில்
பகவர்வது தாசிவீ டருகில்
தலமதிற் கோதை மூலையாம் பக்கஞ்
சார்ந்தவன் னிலிருது குறியாங்
குலமதிற்கின முடையவ ளாடைக்
குஜனிறம் பழமையாம் பின்னம்
சிலையெதிரி லுண்டாங் குறிகியரூபம்
செப்புமெய் சரிந்திடிங் தனங்கள். (1)

தனமுளாள் சுகங்க ளற்பமா மந்தத்
தலமதிற் கருகுதென் புரத்தில்
சினமுளோன் பதியாம் விளங்கிடா தாரல்
செங்கதிர் சுதன்றிசை யடவி
மனமதி லிரக்க மொடுக்கமும் வாழ்வோன்
பனிகுண திசையிரு பாகம்
கனமின யோங்கு மவ்விட மில்லை
கண்டது தாசியாங் கருதே. (2)

கருதுவோங் கண்ட நாரிமெய் செகப்புக்
கலிமதி நிறமுயர்ந் தாடை
பெருகியக் கூந்தல் வாலிப மிரண்டுப்
பெண்களா முகமழ குள்ளாள்
பருகிடும் பொய்கை யருகினி லுண்டாம்
பாவைவாழ் பதிசுயார்ச் சியமாம்
அருகினில் வடபான் ஆலய மிருதி
யகமழல் முகப்பெதிர் மரமே. (3)

மர்மெதி ருண்டாந் தந்தையின் வர்க்கம்
வலுவில்லை யேகமாம் பெண்கள்
திரிதிய மாகும் அற்பமாம் வாழ்வு
செழித்திடா ருதுப்பெண் சோதரங்கள்
அருமையா மேக மாகுமாண் மூன்றி
லறிவுளன் கனிட்டனுந் தனக்கு
இருபதே டிருநான் காண்டின்மேல் யோக
மிசைப்பது வாயுள் மட்டென்னே. (4)

எட்டினி லுபய நீக்கின வெண்க
ளிசைப்பது வன்னைசோ தரங்கள்
மட்டதில் பெண்க ளருமைதா யேகம்
வளர்வ தம்மான்கள் நல்விர்த்தி
விட்டநாள் ராசிக் கதிபதி திசையில்
விளங்குவ ரிருவர்மற் றொருவன்
அட்டம ராசிக் கதிபன் திக்கிருவ
ரமர்வது ஜெனித்திடும் பதியே (5)

வேறு.

பதிபுருடன் வாழ்திக்குப் பார்க்கவ னீரெட்டாண்டில்
விதமுடன் மணமதுண்டாம் வீதிகிழ் மேன்மைவாசல்
மதிமகன் நிசையில்தோப்பு மாதுவின் மூலப்பொய்கை
எதிர்மீன நாஸ்திப்பாக மிரண்டதில் நிலையொன்றில்லை. (6)

நீலக்குசா பத்தின்மூல நிலைத்திடும் பூர்வபூமி
தலைமகன் புருடனுகுஞ் சகோதர முன்பெண் ணொன்று
பலமுடன் கனிட்டர்விர்த்திப் பேசுவ தொருமூன்றாகும்
குலமதில் மேன்மையோங்கக் குறைவற வாழ்வர்தாமே. (7)

வாழ்ந்திடும் ருதுப்பெண் ணுக்கு வலுத்திடும் பிணிகள்மெத்த
காழ்வதா மிவளால்துன்பம் தனவிரையங்கள் புத்திராள்
பாழதா நிலைப்பதொன்று பாவைய ருபயமாகும்
ஆழிசூ ழுலகின்மீது வழிந்திடுங் கெர்ப்ப மைக்தே. (8)

திடமுடன் ருதுபெண் ணுக்குச் செப்பிடு மாயுள்கேளும்
முடலவன்சேய சுரமந்திரி முழுமதி யண்டயோனி
படிதனி லிவர்மொத்தாண்டில் பாவையர்க் கரிட்டந்திண்ணங்
உடைகுளம் கால்மூன்றிற்கு வுரைத்திடும் பலனிதாமே. (9)

பூராட நாலாங்கால் பலன்.

(*)

காசினியில் நீர்நாள் நாலாங் கால்ருது வேரியோரம்
வாசம்செய் திடுநிலைக்கு மாலவன் றிசையெவ்வ திதம்
ஆசனன் நிறமாஞ்சீலை யழுக்குறும் புதியதாகும்
பேசிடுங் கருத்தமெய்யாள் பெலமுள்ளாள் சினமில்லாளே. (1)

சினமிலா ளன்னிலைக்குத் தினகரன் றிசையில் குன்று
பனிமிகுத் திடும்வனங்கள் பச்சைதிக் கதில்நீர்சூழும்
வினவிடுஞ் சிற்றூர்மேற்கு விளங்கிடு நீசராகும்
தினமதி லீசன்கோவில் செழித்திடா துலையில்தானே. (2)

தானது நிலையில் கண்டத் தையலர்க் குலத்திலீனம்
பானுவின் மைந்தன்வர்ணம் பழமையா மாடைசெம்மை.
மானிறங் கூந்தலில்லாள் வடிவிலாள் சுமங்கலி யாடை
கூனுமெய் கரத்தில்மச்சங் குறியிது வாஞ்சொல்வாயே. (3)

சொல்ருதுப் பெண்வாழில்லந் சுயார்ச்சியம் தந்தைக்காகும்
கல்மதில் மனைக்குத்தெற்குக் கதிர்திசை முகப்புவீதி
எல்துலை யாகும்வாயுவி லிருநதிமிகுந்த கோவில்
புல்நிறை வளர்ச்சிமெத்தப் பொய்கையொன் றற்பரீரே. (4)

நீரணி மதமாந்தந்தை நிலைசகோ தரங்கள் மூன்று
பாரதனில் திருஷ்டிமூலம் பாக்கியன் ரோகமுள்ளான்
மார்பினில் மச்சமொன்று வயிற்றினில் வலிமுப்பானே
டீரிரு மூன்றுமாண்டி லிறப்பது நிலையாங்கோதே. (5)

மங்கையின் சகோதரங்கள் வளமையா மிருமூன்றுகும்
பங்கமொன் றில்லையாண்கள் பருதியின் றிசையில்பாதி
திங்கள்மூ விரண்டில்ஜெஷ்டன் தீர்த்தயாத் திரைகள்செய்வன்
கங்கையி லிலையோனுக்குக் கண்டமுள்ளவட்டிலாமே. (6)

கண்டம துடனேநீங்குங் கலக்கமொன் றில்லைமூப்பான்
வண்டனல் பூமிமூலம் வழக்குகள் மெத்தவுண்டாம்
பண்டித னேகனம்மான் பார்வையி லானமாதா
கொண்டநாற் பதின்மேலொன்றில் கொலையினல் மரிப்பள்கூறே.
கூரிய மடவாருக்குக் குளிர்மதி திசைமே லொன்றில்
பாரினில் மணமுன்னுண்டாம் பசுதிசைப் புருடன்வர்க்கம்
நாரிய ரிருனன்காண்கள் நலமில்லை யிரண்டில் ஜெஷ்டன்
போரினல் மரிப்பன்தூரம் புத்திதிக் காண்டாறைந்தே. (8)

ஐந்து கெர்ப்பங்களுண்டா மதில்வீர்த்தி மூன்றில்பெண்ணென்
றந்தமாம் ருதுபெண்ணுக்கு அற்பமா மாயுள்மூவே
ழிந்துவின் றிசைமொத்தாண்டி லிறப்பது கெர்ப்பமூலம்
நந்துடை குளம்நாள் பாதம் நான்கினுக் குரைப்பதீதே. (9)

பூராட நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

உத்திராட முதற்கால் பலன்.

கடைகுள முதற்கால் ருதுபலன் வினவில்
காசினி லரிவைமை திரளில்
குடியிருக்கும் மந்திரந் தனக்கருகாங்
கோதையின் ருதுநிலை யணியும்
புடவைபால் வர்ணம் பழமையாந் திரேகம்
பூமகன் நிறஞ்சம ரூபம்
தடமதன் னிலையில் மூப்பிரிவாகும்
சமர்த்தியா மேந்திடுந் தனமே. (1)

சாந்தமா மங்கைப் பிறர்க்குப காரித்
தனவதி யறிந்தமா துழுகம்
சோர்ந்தொரு கரத்தில் பாத்திரஞ் சிரசில்
தூக்கொணு விறகுகட் டெடுத்து
ஆந்தவ ளெதிரி லரிவையைக் காணை
வறிந்தனளவுடன் ருதுப்பெண்
சேர்ந்துவாழ் பதியில் விட்டவள் சென்றுள்
செப்பிடுந் திரமையு மீதே. (2)

தீநிலை யம்மா துடித்திடு ஊடை
செகப்பினில் தேன்நி னிறம்பழமை
வாதையா மனையில் புருடனுல் தனக்கு
மதுவிரும் புவன்பொரு ளில்லான்
சாதியி லினமாக வாழ்ந்திடும் பருவம்
சாவகன் நிறஞ்சுமங் கலியாய்
பாதிபுண் பகுதிக் குணந்தொடை மருவு
பருத்தகண் மலடியாம் பகரே. (3)

பகர்வது ருதுபெண் வாழ்மனை யன்னியம்
பயின்ற தந்தையின் றனக்காதி

தகர்திசைக் கதிபன் றிசைபொருள் பூமி
சகலமு மிழந்துவன் னிலையில்
சுகமிலா தலைவ னுகுந்தன் வர்க்கஞ்
சொல்வதுத் திரிதிய பெண்கள்
அகமதில் வாழா ரன்னியமாவா
ரறைவது வுபையமு மாமே. (4)

மங்கைசோ தரமோ ரைந்துட னிரண்டு
வயுவதில் சதுர்த்த கேந்திரமாம்
கொங்கைக ளில்லாப் பெண்ணதி வொன்று
குறைவெகு நாள்ருது வின்றி
தங்கையின் றனக்கு மணமது காலஞ்
சபைதனில் ருதுவா மவ்வேளை
சந்திர நாகந் திசையில்வா ழம்மான
றனக்குமா ரகமென சாற்றும். (5)

மாரக மன்னை வருடமூ வொன்பான்
மறையவன் றனைப்புணர் நாரி
நார்மணி கொண்ட நாரணன் மதமாந்
நலமுள ராம்வர்க்க மிருவர்
தாரணில் பெண்பா லந்தினி லிரண்டு
தழைத்திடா மலடுடன் மரணம்
பார்வையில் மேலாங் கனிட்டவன் மனைவி
பலர்தமைப் புணர்படும் பாவி. (6)

வேறு.

பாவையர் தனக்கீராறுப் பகருவ தொருமூன் றுண்டில்
கோவது ராசிதிக்கில் குணமுடன் மணமாம்வீதி
பூவினில் கிழக்குமேற்குப் புதுமனை வடக்குவாசல்
தாவதை விட்டுப்பேரான் றனமுள்ள புருடன்றானே. (7)

புருடனுத் தபனுமன்னர்ப் பொருந்திடுஞ் செல்வனுகும்
கருடனைத் தொழுவரித்தங் கருத்திடு மெய்யனுகும்
குருடனுஞ் சிறியதந்தைக் குணமிலான் மணமதில்லை
திருடனு மனைக்கேழில்லன் செல்வமு முண்டாந் தெற்கே. (8)

செல்வமாய் வாழ்வள்மங்கை சிறந்திடும் புத்திராள் சொல்வோம்
நல்குண முடையோராகு நான்குவா னிரண்டு பெண்கள்
கல்வியில் தேர்ச்சிசெல்வம் கதித்திட வாழ்வராயுள்
சொல்வது தீர்க்கமற்ப சுகமிலா ரெவருங்காணே. (9)

படிதனில் மடவாருக்குப் பகர்வதுக் கேளுமாயுள்
நடுமுத லந்தமட்டு நலக்கமொன் றில்லா ளெண்பான்
தொடருவா ரக்காலேம துதர்க ளறியக்காணுங்
கடைகுள மூற்காலுக்குக் கதித்திடும் பலனிதாமே. (10)

உத்திராட மிரண்டாங்கால் பலன்.

ஆடியி லிருகால் ருதுபலன் மணிக்கு
அருகினில் தென்வடல் சந்தில்
நாடதில் வருண னுதித்திரு கடிகை
நாரியன் னிலேருது கடையில்
பாடிடு மணிந்தத் துகில்முழு செகப்புப்
பழமையாங் கருத்திடு மேனி
கோடைகா லங்கள் வந்திடில் மிகுந்த
கொடுமையாம் பிணியினு லென்றே. (1)

பிணிசுகஞ் சிலநாள் பெருக்கும் வாழ்வில்லை
பிசகிலாள் சோரமாந் தனங்கள்
குணமில்லை மெலிந்த திரேகமாம் பெண்பால்
குறித்திடு மன்னிலைக் கலையில்
உணவது புசிக்கும் வேளையி லரிட்ட
முரைத்திடு நலியதொன் றில்லான்
துணைவர்க ளெண்மர வன்றனக் குரைப்பர்
தொல்புவி லிவன்தெத்து சுதனே. (2)

சுதனிலா மடந்தைக் கண்டனள் ருதுவைத்
துணிவுளாள் பாக்கிய வதிகாண்
முதுமகன் நிறமெய் யணிந்திடு மாடை
முதிர்ந்ததாம் வர்ணமோரைந்து
கதைபல மொழிவள் சுருண்டிடுங் கூந்தல்
கணவனைப் பிரிந்திடாள் கருமி
விதமுடன் ருதுப்பெண் வாழ்மனைப் பூர்வம்
விளம்பிடுந் தந்தையின் றனக்கே. (3)

தந்தையின் வர்க்கந் தனித்திடும் பெருக்கா
தரணியில் வாழ்பவ ரொருமூன்
றந்தமாம் பெண்பா லேகமாந் தொலகி
லழிந்திடும் வாழ்ந்திடா ரிரண்டோன்

சிந்தையில் கவலை யுளன்ருது மாது
தீர்க்கநற் குணத்தி வித்தை யுள்ளாள்
முந்தி யாணென்று தனக்கும்பின் கனிட்டர்
மூளத்திடா ரேகமாங் காணே. (4)

இத்தகை பெண்ணின் சோதர வர்க்க
மியம்புவ தொருபதி னொன்று
அத்தனை நிலையா நிலைப்பது புவியி
லாண்கள் மூன்றரிவை நான்கதனில்
புத்தியாய் வாழ்வோ ரைந்திலா ணிரண்டுப்
பூவையர் களிலொரு வுபயம்
தெத்துவா மொருவன் றந்தைவர்க் கத்தில்
தீரனேழ் கர்ப்பசோ தரனே. (5)

மே வு று.

சோதியின் றிசையிரெட்டில் சுகமண முகப்புத் தெற்கு
வீதிதென் வடக்குபக்கம் விளங்கிடா வம்சனஸ்தி
ஆதவன் றிசையில்கூபம் அழகுள்ளப் புருடனுகும்
வாதனை பிணியொன்றில்லான் வளமுளான் வர்க்கங்கேட்கில் (6)

திருதிய மதில்பெண்ணென்று தியக்கமொன் றில்லைதீர்க்கம்
பெருகிய காமனித்தம் பெண்களைப் புனர்வனுகும்
மருவதொன் றிடப்பில்காணும் வழகியக் கூந்தலுள்ளான்
கருமிவன் றனக்குப்பூவில் கன்னியர்க் கனேகமாமே. (7)

கன்னியர் தொகைகளெண்பான் கழறுமத் தொகையோடைம்
மன்னனு மிகுந்தமோகன் மங்கையர் தனக்கு புத்திராள் [பான்
வன்னமாம் பெண்களைந்து வளர்வதாண் பாலர்மூன்று
இன்னில மீதுவிர்த்தி யியம்பிடுந் தீர்க்கமாமே. (8)

வசமுள்ள ருதுபெண்பூவில் வாழ்ந்திடு மாயுள்சொல்வோம்
அசைவுள ரவிபொன்சுங்க னம்புலி செந்தி வண்ணன்
நிசமிவர் திசைமொத்தாண்டில் நிகழ்சுமங்கலியாய்மாய்வள்
விசுவநா லிருகாலிற்கு விளம்பிடும் பலனிதாமே. (9)

உத்திரூட மூன்றுங்கால் பலன்.



ஆனியில் மூன்றுங்கால் ருதுபலன்க
ளறிவது சுபகையாஞ் சாதம்

தேன்மொழி யருந்தும் வேளையி லிருது
திசைமனை யுள்வட மூகமாம்
கோன்சனி செவ்வா யிவர்நிற மாடைக்
குணமுள தாங்கருமேனி
வானுரவோங்கு மாயுள்சௌ பாக்கிய
வதிசுக மிகுந்த போகவதி. (1)

கண்டபெண் புருடன் தங்கையாஞ் செகப்பிக்
கணவனுள் ளவள்நடு வயதாம்
சண்டையில் வல்லாள் வடிவத்தில் நெடியாள்
தரித்திடுந் துகிம்மிளங் கருப்பு
கொண்டையில் மலரா மன்றவள் மிகுந்தக்
கோபமா மின்னவ ளோடு
சுண்டிய வாழ்வாங் கணவனைக் கருதாள்
சோரம்வாய் துடிப்பு வுள்ளாளே. (2)

உள்ளம திரக்க முளருதுப் பெண்வா
ழுயர்மனைக் கணவனின் பூர்வம்
கள்ளமென் றெண்ணுள் வீதிகீழ் மேற்குக்
கதிரவன் றிசைமுகப் பெதிரில்
பள்ளமேல் புறத்தில் விளங்கிடான் பதிபாழ்
பண்டிதன் திசையிற் மைதானம்
சுள்ளியே யொருவன் கொலையினல் மரிப்பன்
சொல்வதென் திசைமனைக் கதிபன். (3)

மூலநாள் ராசிக் கதிபதி திசையில்
மூவரு மூழ்கிடு நதியாம்
ஞாலமீதினிமை யுளன்மனை வியின்மேல்
நாலிரண் டாண்களாங் கனிட்டர்
காலிலா மூடவ னந்திரு தியத்தோன்
கன்னியர் மணமிலா தொருவன்
வாலிபகாலம் பதியைவிட் டன்னிய
மாரலாய் தவசியா குவனே. (4)

த்வமதி லுதித்த ருதுபெண்ணின் வர்க்கம்
சாற்றுவோம் குந்திதன் பேரா
கவனமாய்க்கேளு முன்பின்னன் றில்லைக்
கருதரித் தழிந்தது மில்லை
அவனியில் தாய்க்கு முப்பாதோரைந்தா

மாண்டினி லுதித்தவ ளாகும்
சிவமத மன்னீ சுகமுளா ளாயுள்
செழுமதி திசைதொகை யைந்தே. (5)

ஐந்துவெண் வர்க்கம் பெண்ணதி லிரண்டு
வழகுளார்ப் பொருளது வற்பம்
பிந்திய தொருவன் சோதிட முரைப்பன்
பிள்ளைகள் பிறந்துடன் மரிக்கும்
கந்தைபூர்வாதீ னங்களால் சுகிப்பன்
சகோதர மேகனும் பெண்கள்
சுந்தரமில்லா ருபயமாம் வாழ்வு
சுகமிலார் தீர்க்கமா மென்றே. (6)

வேறு.

காரிகை தனக்குப்புத்திரா ள் கருதுவதொரு மூன்றுகும்
நாரிய ருபயந்தீர்க்க நலமிலார் வாழ்விலற்பம்
தேரிய கனிட்டபுத்திரன் செல்வனு மாயுள்மட்டும்
பாரினக் கரசன்மிக்கப் படைகளுள் ளவனுஞ்சொல்லே. (7)

பல்லது மலர்போல்காணும் பாவையர் தனக்குவாயுள்
சல்லிய னுடுவின்வேந்தன் சகத்திரா மீசன்காரி
நல்குரு யிவர்மோதாண்டில் நலக்கமா யிரட்டம்பாரில்
சொல்வதி தாகுமாடி சோர்விலா காலமூன்றிற்கே. (8)

உத்திராடம் நாலாங்கால் பலன்.

சுகம்பெரு மாடிநாற்கால் சுந்தரி புருஷனில்லில்
பகலவ னுதிக்குங்காலம் படுக்கையில் ருதுவதாகும்
மிகவழ குள்ளாள்காம மிகுத்திடுங் குத்துகொங்கை
நகையுள முகமாமென்னும் நற்புக முடையுநாரி. (1)

மங்கைமெய் மெலினம்பாரில் மலர்தனைப் பிடித்தாப்போலாள்
தங்கம தொளிமழுங்கும் தையலின் நிறத்தைக்காண
புங்கவன் நிறமோடைந்துப் புதுத்துகி லுயர்ந்ததஃது
திங்களொன் றுகும் பெற்றுத் தென்றிசைத்தூரமென்னே. (2)

தூரமாங்கண்டமாதுத் துலக்கமா முலையொன் றீனம்
கூர்மொழி திருத்தமாகுங் குணமுளாள் நிறைந்தகெர்ப்பம்

பார்தனில் புருடன்மாத பகரிடுங் கருத்தமேனி
ஆரலின் நிறமாமாடை அழுக்குறும் பழமையாமே. (3)

புதியதா மனையேழெட்டுப் பொருந்திடும் பொய்கையுண்டாம்
பதிதலே வாசல்தெற்குப் பகரிரு புறமுஞ்சந்து
அதிபனும் நகர்க்குமேற்கு அம்பிகைஸ் தலமீன்மூலை
விதியது நாறுண்டேழு விளங்குவ னெதிரில்காணே. (4)

காணுவாய்ப் புருடன்வர்க்கங் கன்னிமூன் றைந்துவான்கள்
தோணுவ திரண்டில்லுசந் துயரமாம் பிணியால்சாகும்
ஆணதி லொருவன்ஞானி அதிகார முடையார்வர்க்கம்
பூணும்வா பரணமெத்தப் பொருந்தியே வாழ்வராமே. (5)

வாழ்வது ருதுபெண்வர்க்கம் வளமில்லைப் பெண்ணிரண்டு
பாழதா மாண்களில்லைப் பயின்றமா தாவின்வர்க்கஞ்
சூழ்வதேழ்ப் பெண்கள்மூன்றுத் தொகைமற்ற தாண்களாகும்
மூழ்குவ தொன்றுமில்லை முற்றிலுஞ் சுகவாழ்வாமே. (6)

தந்தையின் வர்க்கமூன்றில் தையலர் வீர்த்தியில்லை
புந்தியின் றிசையைநாடிப் பூமிகள் மிகவுள்ளோனுய்
சிந்தையு மகிழவாழ்வன் றேவிமார் மூன்றுள்ளோனும்
இந்தநற் பலன்கள்சொல்வ திரண்டவன் றனக்காமென்றே. (7)

இளங்கொடி மடவாருக்கிங் கிளமையில் மணமுன்னுண்டாம்
விளங்கிடும் புத்திராள்மூன்று வீர்த்தியாம் பெண்களில்லை
உளங்குளிர் மரணம்பெண்பா லுருதியா மெழுபத்தேழு
அளங்கடை குளங்கால் நான்கிற் கறைந்திடும் பலனிதாமே. (8)

உத்திராட நட்சத்திரப்பலன் முற்றிற்று.

திருவோணமுதற்கால் பலன்.

முக்கோலில் முதற்கால்தன்னில்மொழிகுவோம்பரிகஷித்தேகேள்
செக்காடும் ஜாதியான சிறுமிக ளிருவரோடு
கொக்கோக லீலையாகக் குளத்தினில் குளிக்குங்காலம்
அக்காளென் முறைமைகொண்ட வணங்கவ ளறிந்ததாமே. (1)

குளமது பதிக்குத்தெற்குக் குறைந்திடும் ஜலமதற்கு
வளமையாங் கிழக்குத்தோப்பு வணிகன்றிக் கதனிலம்மன்
அளகுகாள் ராசிநாத னமர்ந்திடுந் திசையில் சிற்றூர்
இளமையாம் ருதுவின்நாரிக் கியம்பிடும் பலனைக்கேளே. (2)

பலனது செவந்தமேனிப் பழமையா மாடைவெள்ளீ
குலமதில் மேன்மையாவள் குளிர்ந்திடு மொழியாம் வித்தை
தலமதில் விர்த்திசெல்வந் தழைத்திடு நீண்டகாலங்
கதிமதி போலமச்சங் கனத்திடும் வயிற்றிலோதே. (3)

ஓதிய கண்டமாது வுயர்ச்சியெவ் வர்ணகாலம்
தூதுவன் நிறமாஞ்சேலை சுமங்கலி செவந்தமெய்யாள்
சூதுவொன் றில்லாள்போக சுகத்தினி லினிமையுள்ளாள்
காதுவொன் றினங்கொஞ்சங் கழறிடு மற்றோர் பெண்பால். (4)

மணமது முடிந்தீரார்னி மாதமாஞ் சுமங்கலி யாடை
அணிலநாள் கால்நால்ராசிக் கதிபதி நிறமாநாதன்
குணமிலான் மூர்க்கனுகுங் கோதைமெய் கருப்புவர்க்கம் [பாரே.
தூணைவர்முன் னிரண்டாண் பெண்ணேழ் சொல்வர் பின்னில்லை

பாரினில் ருதுபெண்வாழும் பதிபிதாப் பூர்வம் வாசல்
ஆரலின் றிசைகீழ்மேல்பா னறைவது வீதிவர்க்கங்
காரிகை யிரண்டாணென்று கதித்திடுங் குறையொன்றில்லை
சீரது மென்மேல்பூவில் செழுமதி வளர்ச்சியாமே. (6)

செழுமதி திசையிற்பாதி சேர்க்கைமூன் றெண்கள்மொத்தம்
கழிவதில் நான்குபெண்கள் கண்டபெண் மாதாவர்க்கம்
அழிவதொன் றில்லைகர்ப்ப மானதம் மொத்தமாகும்
பழியிலை மிகுந்தசெல்வம் பாவையெண் ணதிலொன்றுமே. (7)

சொல்லுமுன் கண்டமொத்தத் துகைதளி லொன்றுநீக்க
நில்லுமத் தொகையினெண்கள் நேரிழை சகோதரங்கள்
கல்லிணை நெஞ்சமுள்ளக் காரியொன் றுகுமற்றோர்
மெல்லிய ராகுஞ்செல்வ மிகுத்திடா வற்பந்தானே. (8)

தானவன் மூலமுன்னம் தகுமணை மீரைந்தொன்றில்
பானுவின் றிசைமொத் தெண்கள் பகரலாம் புருடன்வர்க்கம்
மானுறும் பெண்களிரண்டு மற்றதான் மிகுந்தசெல்வம்
ஊனமில் முகப்புத்தெற்கு வரைப்பனுக் கிழ்மேல்வீதி. (9)

நீலவேல் விழியாளுக்கு நேமியில் புத்திராளிழில்
காலனுக் கிறைமூன்றேறக் கண்டவெண் களிலாணென்று
ஞாலமீ தாயுள்நாற்பான் நாலுவைந் தேழினிற்பெண்
பாலரிட் டம்சோணமுற் பாதத்தின் பலனிதாமே. (10)

திருவோண மிரண்டாங்கால் பலன்.

ஓணந் திருகால் ருதுபலன் வினவி
லுயர்ச்சியாம் பாக்கிய மென்மேலாய்
தோணிடு மிடந்தென் றிசைநகர்க் கருகில்
துலங்கிடும் புண்ணியஸ் தலத்துள்
வீணையின்மூலே பகல்முதற் ஜாமம்
விளம்பு மன்னீலருது குறிபின்
காணுவதரிவை வாழ்கிர கத்துள்
கதிர்நடு வேளையாங் கருதே. (1)

கருதிடும் பாலா ருதுகுறி நிலைக்குக்
கன்னியின் மூலையிற் சூலை
பெருகிடுந திகி ழக்கினி யருகில்
பெலத்தகோ புரமிரண் டுளதாம்
முருகனுலையமேல் திசையதற் கருகில்
முப்பிரிப் புவிதனில் பலரை
மருவிநற் சுகங்க ளகமகிழ்புரியு
மாதர்கள் தெருவென வழுத்தும். (2)

வழுத்திடும் ருதுப்பெண் செகப்பதிரூப
மலர்கணை தனக்கிசைந் தவளாம்
கழுத்தொரு பிடிசொல் வழுதமாம் பொரு மி
கண்கனஞ் சுருட்டையாங் கூந்தல்
செழித்திடு மிடப்பி லணிந்திடும் புடவை
தெய்வமந்திரி நிறஞ் சரிகை
விழுத்திடுந் தூக்க முபயபாரி சத்தில்
விளம்பிடு மருவதொன் றுமே. (3)

வேறு.

பச்சமாய்க் கண்டபெண்பால் பரஸ்தல மிருந்தக்காமி
கச்சணித் தனங்கள்வாலே கருநிறச் சுமங்லியாடை
கிச்சிலி பழுத்தின்வர்ணம் கிழிச்சலாங் கடையில் வம்பாய்
நிச்சய முகத்திலம்மை நிறைகுறி யுண்டாமோதே. (4)

உண்டவள் நகரின்றிக்கு வுதயனுக் குச்சராசி
அண்டைமேல் மூவீட்டானுக் கண்ணனூர் மைந்தன் தேவி

மண்டிய ருதுபெண்வாழு மனைபிதாப் பூர்வம்வாசல்
தண்டதற் குடையோன்றிக்கு சார்ந்திடும் வீதிக்கீழ்மேல். (5)

கீழ்புரங் கனத்தமாடிக் கேணிரண்டதிலொன் றாமை
வாழ்மனை யெதிரில்மூன்று வாயுவின் மூலத்தீதாப்பு
பாழ்மனை நிருதிதிக்கில் பலத்தகட் டடமாமஃது
சூழ்பிணி யுடையன்றந்தை சுகமிலான் பொருள்மெத்துண்டே (6)

செகமதில் தந்தைவர்க்கஞ் செழித்திடும் வர்க்கம்னன்கில்
மகவிலா தொருவனுக்கும் வனிதையர்க் கருவேயில்லை
அகமதை விட்டுவர்க்கம் அகன்றிடா ரன்னியதேசம்
சுகமது பூர்வபூமித் துகைபெரு நிதியாலென்றே. (7)

நிதியது மெத்தவுண்டா நேரிழை சகோதரங்கள்
மதிதிசைத் தொகைமேமேலழில் மாண்டது போகவாழ்வோர்
தொகையதி லாண்பாலைந்து தோகையர் நான்கில்வீர்த்தி
விதியதும் பொருந்திவாழ்வோர் மீன்பதி திசைநாலொன்றே. (8)

அரிவையி னன்னைசோர மறிந்திடா ரெவரும்பாரில்
கருமியாஞ் சகோதரங்கள் கன்னிமூன் றுண்களில்லை
தரணியில் கனிட்டபெண்பால் தரித்திர மடைவதோடுங்
கருவிலாள் புருடனோடு கலந்திடாள் புணர்ச்சியென்னல். (9)

கசப்பதா மோகமில்லாள் கணவனுக் கவளென்னலும்
வசப்படாள் மூவொன்பாண்டில் மரணமாங் கிணற்றில்வீழ்ந்து
நிசப்படு மொழியிதாகு நிலமதில் ருதுபெண்ணுக்கு
திசைப்புக ரீரைந்தாண்டில் செல்வமாய் மணமுன்னென்றே. (10)

முன்னவன் புருடன்வர்க்க மொழிவதுக் குருடனாகும்
பின்னவ ரொருமூன்றாகும் பெண்கள்நான் கதிலொன்றீனம்
மன்னனும் புருடன்மெத்த வளமுள்ள நகரத்திற்கு
வன்னமா மில்லந்தீதாப்பு மாகமு கருகிலுண்டே. (11)

அருமலர் சூடுமாதர்க் கழிந்திடுங் கர்ப்பமூன்று
தரணியில் விர்த்தியைந்தில் தையலரிருவர்தீர்க்கம்
திருதிய மிருபத்தைந்தில் சிதருவள் தவறாதுண்மை
வரும்பல னிதுவதாகும் வயிரங்கா லிரண்டினுக்கே. (12)

திருவோண மூன்றுங்கால் பலன்.

(*)

நீர்மிகுங் கிணற்றினோ நிலவயி ரங்கால் மூன்றில்
பார்தனி லீன்றோன்கொல்லை பதிக்குமீ னத்தின்மூலை

சூரிய னுதித்தார்கன்னல் தூதிபசு பால்கொண்டோட
நாரியன் னிலைக்குமிக்க நலமுடன்சென்றதாமே. (1)

சென்றவன் னிலைக்குமேற்குச் செழித்திடு மீசன்கோவில்
குன்றதாப் வடக்கில்தோப்புக் குணதிசை விளங்கும்பக்கம்
என்றுமே வடிபாப்பொய்கை யேர்நிழை யருகில்தெற்கு
நின்றிடும் விருக்ஷமூன்று நிலையதன் கனிவேம்பாமே. (2)

கனமுறும் ருதுப்பெண்ணைடைக் கழறுவோ மழுக்குவெள்ளை
சினமது முன்பின்னில்லாள் செல்வியாங் கருத்தமேனி
மனதினி லிரக்கமுள்ளாள் வடிவினில் சமனுங் கொங்கை
மினுமினுப் பழகுகுத்தும் மெய்மெலிர் மைக்கண்ணாளே. (3)

மைவிழி மோகமுள்ளாள் மச்சமொன் றிடையிற்காணும்
கைவிரல் மிகுந்தோளாங் கருத்துடன் ருதுவைக் கண்டத்
தையலர் புருடன்மாதா சாற்றுவ துள்ளூர்வாடை
வெய்யவன் நிறமாம்பெற்று விளம்பிடு மதிமூன்றாமே. (4)

மத்தியில் புள்ளிமூன்று மரக்கிளைப் பட்டதாகும்
புத்தியி லற்பமாகும் புகழிலாள் கருத்தமேனி
முத்தமிட் டணைபுங்காலம் மூரிய தாகும்பற்கள்
சுத்தமாங் கற்புவுள்ளாள் சுமங்கலி யாகுங்காணே. (5)

ஆகுமே ருதுபெண்வாழு மகப்பிதா பூர்வம்வாசல்
சோகமில் கிழக்குவீதி சொல்வதுக் கீழ்மேல்தெற்கு
பாகமதோரேழாகும் பலமிலாத் தேசமாரல்
ஏகமாய்த் தழைத்துவாழும் வீடது வாயுவில்கூறே. (6)

கூரிய தந்தைவர்க்கங் குணமுட னுண்பால் நான்குத்
தேரிய பெண்கள்மூன்று செழித்திடுங் குறைவொன்றில்லை
பாரினில் பூமிமூலம் பலமுடன் வாழ்வதாகும்
ஏரிநீர் பாயுநஞ்சை யெனவுரைத் திடுவர்தாமே. (7)

வஞ்சியின் சகோதரங்கள் வலுவில்லை யேகமாகும்
பஞ்சுபோ லுதித்தோர் நாசம் பகர்வதற் கிடமொன்றில்லை
கொஞ்சிடு மன்னவர்க்கங் குணமுடன் தீர்க்கமாண்க
ளஞ்சுபெண் மூன்றுவிர்த்தி யகமகிழ் வாழ்வர்தாமே. (8)

சுகமுள்ள ருதுப்பெண்ணுக்கு சுயநக சொன்பாணெண்டில்
மகிழுடன் மணமுண்ணுண்டாம் வழுத்திடில் புருடன்வர்க்கம்
புகர்திசை நாலிலொன்று பூவைய ரதிலிரண்டாகும்
அகமது பழமைமேடை யறைவது சித்திரமாமே. (9)

பத்தின்மே லிரண்டுகர்ப்பம் பழுததில் மூன்றுமற்ற
தத்தணீ ரீர்க்கமாண்கள் ஐந்துட னிரண்டு பெண்ணில்
சித்தினி ஜாதியானத் தெரிவையு மொன்றுங் காமி
இத்தரை மீதினிவ்வா றிசைத்திட வண்மையாமே. (10)

அன்புடன் ருதுப்பெண்ணுயு ளறைகுவோம் பரிகூத்தேகள்
தன்புள மதிசேய்பொன்னன் சனிரவி யிவர்மொத் தாண்டில்
பன்புடன் சுமங்கலியாகப் படியைவிட் டகழ்வாள்முத்தி
நன்புளப் பலனிதாகு நள்ளுநாள் கால்மூன்றிற்கே. (11)

திருவோண நாலாங்கால் பலன்.

நள்ளுநாள் பாதம்நான்கில் நவிலுவோம் ருதுவின்தன்மை
வெள்ளியா மன்றுவாரம் விளங்கிடுஞ் சந்தைக்கூட்டத்
துள்ளவள் மாதாவோடு துணிவிலைப் பேசுங்காலம்
கள்ளியும் ருதுவதென்றுக் கருதிடும் பலபேர்காணல். (1)

வேறு.

கருதிடும் பதிக்குத் திசைவடக் கிரண்டுக்
கன்னலின் தூரமன் னிலைக்குப்
பருதியின் திசையிற் பெருகிய வேரிப்
பால்மதி சுதன்நிலை சிகரம்
தெரிவதுமேற்கி லீசனுர்க் கோவில்
செலிப்பிளா திடிந்துமே காட்டும்
குருதியின் றிசையி லரசர்கள் மேடைக்
குளம்பரி பசுநிலைக் குறிப்பே. (2)

குளமதி லன்று பெருகிய நீரோம்
கோதையின் நிறங்கறப் புயர்ந்தாள்
வளமிலாள் பலரைப் புணர்ந்திடும் வேசி
மால்நிறம் பழமையாம் புடவை
உளமது கரையா மறமிலாள் கால்க
ளுதறிய நடைமறு முகத்தில்
மிளகுபோல் காணும் பஞ்சையாங் குடும்பம்
விளக்குவ தற்பமா மரமீச. (3)

கண்டவர்ப் பலரி லண்ணியர்க் குரைத்த
காரிகை சுமங்கலி வாலை

கொண்டையில் மலர்சூட் டுவள்மிக சோரம்
குஜனிறம் புதியதா மாடை
தொண்டுகள் புரிவா ளிவளிடக் கணவன்
சுகமிலான் மனைவியைக் கண்டால்
தெண்டமந் திடுவன் பொருளெலாம் விரையஞ்
செய்தவ னுமொழி ஜெகமேல். (4)

வேறு.

படிதனில் ருதுப்பெண்வாழும் பதிபிதாப் பூர்வம்வர்க்கங்
கடனுளா ரிருவர்பெண்கள் கதிரவன் றிசையிற்பாதி
குடமூலை மடவாரீன்ற குளிர்மதி திசையினுண்டில்
வடதிசை வெகுதூரத்தில் மரணமென் றுரைக்கலாமே. (5)

மடந்தையின் சகோதரங்கள் வலுவில்லை யேகங்காலே
விடந்தனில் நிலைக்காணன்னியம் விதித்திடு மாதாவர்க்கம்
அடந்திடு மீரைந்தொன்றி லழிந்தது போகமீன்றோர்
திடந்தரை மீதுவாண்கள் செப்புமைந் தரிவைநான்கே. (6)

நிருதியின் மூலையொன்பா னெழினில் ருதுப்பெண்ணுக்குக்
கருதிடும் விவாகமுண்டாங் கணவனின் சகோதரங்கள்
திருதிய மதில்பெண்ணென்று செழிப்பிலார் பூமிமூலம்
குருகிய செல்வமாகுங் குணமுள்ளப் புருடனுமே. (7)

மனையியாள் புருடன்மிக்க வாதைகள் படுவனுகும்
வினவிடும் புத்திரான்விர்த்தி விளங்குவ தொருமூன்றெண்கள்
தனமுளோ ராகவாழ்வர் தையலர் நான்கிலொன்று
இனமதை விட்டுநீங்கு மிசைப்பதாண் டிருபதாமே. (8)

இருபதில் ஜுரத்தால்கண்ட மிசைந்திடு மதின்மேலெழில்
பெருகிடும் நதியிற்கண்டம் பிழைவரா ததின்மேல்முப்பான்
தரணியில் வருத்தமாகத் தன்னுயர் மாய்ப்பளாகும்
தெரிவதிப் பலனும்பூவில் சிரவணங் கால்நான்கிற்கே. (9)

திருவோண நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

அவிட்ட முதற்கால் பலன்.

கொடிதனில் முதற்கால் ருதுபலன் நகரின்
குளத்தரு கினில்கீழ் புரத்தில்
வடவிருக்ஷம்போல் தழைமலர் செழித்த
மரத்தடி ருதுநிலைத் தெரிவை

புடவையைத் துவைத்துத் தரைமிசை யுணரப்
போட்டு வங்கமர்ந்தது வாகும்
சுடருதித் திருநான் கடிகையா மன்னுள்
சூழ்ந்திடு மேகமித் திரனே (1)

மித்திரன் திசையில் மரங்கள் சூழடவி
மேற்கினில் ஜலமிரு மீனையாம்
வித்துகள் பலதும் விளைநிலந் தெற்கு
மிதுனத்தின் மூலைமுப் பிரிவு
அத்தியால் புன்னை மடந்திருப் பணிக
ளமர்ந்திடு நைருதி வாயுவில்
சத்தியின் கோவில் விளங்கிடா தருகில்
ஜலமிலாப் பொய்கையிரண் டளதே. (2)

இரண்டள தாடை மங்கையி னிடத்தில்
நிலையதில் புகலுமேவாம் விந்துக்
கண்டது மொழிவோம் பழமையாஞ் செகப்பில்
கருப்பதா மற்றிருப் புடவை
நண்டினுக் குடையோன் நிறம்புதி தாகும்
நாரிமெய் செகப்பதி ரூபம்
செண்டுபோல் தனங்கள் விளங்கிடுங் காமி
தீர்க்கமாம் பாக்ய முள்ளவளே. (3)

உள்ளபெண் தன்னை கண்டிடு மடவார்மெய்
உடுப்பகை நிறந்துகில் பழமை
வெள்ளியின் நிறமாங் கிழிந்திரா தழுக்கு
விளங்கிடுஞ் சுமங்கலி நடுவாழ்
குள்ளமாம் வடிவில் கணவனைப் பிரியாள்
குலமதிற் குயர்ந்தவள் வழியில்
தெள்ளிய ஜலங்கொண் டேகிட வரிவை
சென்றன ளெதிர்வர வறிந்தாள். (4)

அரிவைவாழ் பதிபூர் வம்பிதா தனக்கு
வஞ்சிடன் முகப்பெதி ராரல்
தெரிவது வீதித் தென்வடல் பொய்கைச்
சிறந்திடு மருகினில் கிருதி
கருவது தரியா வடபுர மீனயில்
கலங்குவான் குரமதி ரண்டாம்
தருவதைக் கெடுக்கும் லோபிவா ழில்லம்
சவுரியின் நிலையெனச் சாற்றே. (5)

தந்தையின் வர்க்கஞ் சேய்திசைத்தோகையெண்
தரணியில் தனியனு யிருப்பன்
சிந்தையில்பேத மாய்ப்பல தேசஞ்
சிதருவா ராண்கள் நான்கேந்திரம்
சுந்தரி மூன்றி லொன்றுபார் நிலைமை
தோகையின் சோதர மைந்தில்
தந்திர மனத்த னேகனுன் கிரண்டுத்
தையலர் திருதியமாமே. (6)

வேறு.

மூன்றதா மன்னவர்க்க முன்னவ ரில்லைபின்னோர்த்
தோன்றுவ ததிலாணென்றுத் தொகைபெருஞ் செல்வமுண்டாம்
ஈன்றமா தாவுக்கின்ப மிருக்கினும் வயிற்றில்ரோகம்
மான்றுயர்ப் படுவதாகும் வயதுமுப் பதின்மேலொன்றே (7)

கலிதிசை பனிரண்டாண்டில் காரிகை தனக்குமுன்னம்
தலமதில் விவாகமுண்டாந் தனமுளன் புருடன்வித்தை
பெலமுடை யவன் மூன்கோபி பிசகிலான் சத்யவாக்கன்
குலமதில் மேன்மைவர்க்கங் குறிப்பது நான்கதாமே. (8)

ஏந்திழை தனக்குக்கர்ப்ப மிசைப்பதோ ரெட்டுதன்னில்
மீந்துவ தாண்கள்மூன்று மெல்லிய ருபயந்தீர்க்கம்
சோந்துமே போவானேகன் சுகமிலான் மற்றோர்செல்வம்
காந்துள மேகமாதர்க் காலைக்கரு வற்பமாமே. (9)

அற்பமாம் பெண்கள்வித்தி லைந்தினி லொன்றதாகும்
நற்புகழ் ருதுபெண்ணுயுள் நாற்பதின் மேலிரோன்பான்
சொற்பிச காதுநீராள் துடிக்கவே மரணமாவள்
தற்கொடி முதற்காலுக்குச் சாற்றிடும் பலனிதாமே. (10)

அவிட்ட மிரண்டாங்கால் பலன்.

மனைதனில் கிணற்றினோ மங்கையர் ருதுகா கப்புள்
ளினையிரு காலினுக்கு விசைப்பது மத்தியானம்
வினைதைகள் மூவர்பக்க மருகதென் முகமாம் ஸ்தானம்
கனமுடன் செய்யும்வேளைக் கண்டதாம் ருதுவின்விந்தே. (1)

விந்தையா மருகில்பூக்கள் மிகுத்திடுஞ் செடிகளுண்டாம்
சந்துமேல் முகப்புத்திதற்குச் சதிருடன் கீழ்மேல்வீதி

தந்தைவாழ் பதியதாகுஞ் சனிதிசை ருத்திரபூதி
சுந்தர மடவார்க்கொங்கை சொலுமெழு மிச்சம்பண்மே. (2)

கெண்டையின் விழியார்திரேகங் கிழ்மகன் றந்தைவர்ணம்
கொண்டையில் மலரன்றுண்டாங் குலைந்துமே யெரிந்தளாகும்
உண்டது வாகுங்காலே வுயர்ச்சியாம் வித்தையுள்ளாள்
கொண்டவன் றனக்கிசைந்துக் குடும்பத்தைக் கார்க்குஞ்செல்வி.

புடவைமே ளழுக்குவெள்ளைப் புதிதருங் கற்புவள்ளாள்
திடமுடன் கண்டமாதுத் திருதிய மதிலொன்றந்த
மடமயில் சுமங்லியாமெவ் வர்ணமெய் செகப்புவாடை
வடிவுள சரிகைமஞ்சள் மன்னவன் றேவியாமே. (4)

தேவியின் முகத்தில்மச்சஞ் செப்புமற் றிரண்டுகன்னி
பூவினில் சுமங்கலியேயாம் புகழ்பெரு மடவார்வாலே
நாலிலக் கணசொல்லாகு நற்சுகம் புருடன்மார்கள்
மேவுவார் கடல்மார்க்கங்கள் வியாபார மூலமென்றே. (5)

கன்னியின் றந்தைவர்க்கங் காலைமூன் றரிவையொன்பான்
மின்னியே வாழ்வதேழு மீந்தது வீர்த்திஞசம்
கன்னிய முடையன் றந்தை கணிதவித் தைகளில் வல்லன்
மன்னர்கள் நேசமுண்டா மறிவினிற் சிறந்தோனுமே. (6)

சிறந்திடா ருதுப்பெண்வர்க்கந் தெரிவையிரண் டாண்களொன்று
குறைந்திடா செல்வம்பூமிக் குவலய மதில்மெத் துண்டாம்
அறிந்திடா யன்னைவர்க்க மரிவையே ழாகுமாண்பால்
பிறந்திடா வஞ்சனஸ்திப் பேசுவா யுறுதியாமே. (7)

உருதியாம் ருதுப்பெண் ணுக்கு வுடுப்பகை திசையீரைந்தில்
பெருமைபாய் மணமுன்னுண்டாம் பெலத்திடும் வீதிக்கீழ்மேல்
பரிவுளன் புருடன்வர்க்கம் பரவிடு மீரேழ்தீர்க்கஞ்
சரிவர வாழ்வராகும் தையல ரதில்மூன்றுமே. (8)

மூன்றுடன் பின்மூன்றெண்கள் மொழிவது புத்திரளாகும்
ஈன்றவர் கலைமுன்வந்தோ னிகழ்ச்சிகள் செய்வான்பின்னும்
தோன்றுவ தாயுள்மட்டுந் துணைவரைப் பிரிந்துவாழ்வன்
மான்றலை முதற்கால்ராசியின் மதிபதி திசையில்காணே. (9)

மகிதல மீதுப்பெண்பால் வாழ்ந்திடு மாயுள்கேளும்
சுகர்மதி முடவன்செவ்வாய் சுரகுரு யிவர்மொத் தாண்டில்
ஜகமதில் தீர்த்தயாத்திரை சென்றிட மரணமென்பர்
அகமகிழ் புள்காலிரண்டிற் கறைந்திடும் பலனிதாமே. (10)

அவிட்ட மூன்றுங்கால் பலன்.



விசுவநாள் மூன்றில்மனைக்குப் பின்புரத்தில்
விளங்கிடுங் கொல்லியின் மடந்தை
பசுநீலை யருகில் குதுகுறி காலைப்
பங்கய னுதித்திரு கடிகை
அசுவமன் னீலையி னருகினி லிரண்டு
வன்றுநாள் புகர்மனை முழுக
விசையுட னிடபஞ் சானங்கொண்டேக
மெல்லியாள் நகர்ந்தது வாமே. (1)

நகர்ந்த பெண்ணுடைப் பழமையாங் கறப்பு
நாளுமோ ராண்டதா மெடுத்து
முகமதி ரூபஞ் செகப்புமெய் குள்ளம்
மூர்க்கமா தர்களுட னினைங்காள்
பகர்ந்திடு மொழிக ளமுதமாங் கொங்கைப்
பருத்திடு நீளமாங் கூந்தல்
சுகமிகப் பெருவள் கற்புளாள் வறிந்தத்
தோகையின் நிறங்குறிக் கேளீர். (2)

நிறமது கருப்பு சுடங்கலி விருத்தை
நிறைந்திடுஞ் செல்வியாம் புடவை
மறிதனக் கதிபன் நிறமீபுதி தாகும்
வழுத்திடு மன்னையின் றமக்கை
அறமிலாள் கருமி வாலிப காலம்
அரசரைப் புணர்ந்தவ ளாகும்
மறவுளாள் பொருளை வைத்திட நினைக்காள்
மனதினில் கவலையென் றுளதே. (3)

மனைபிதாப் பூர்வம் பெலத்தகட் டடமாம்
மாடியொன் றெதிர்பிரி விரண்டு
இனமுமீளா ராகும் மிப்பதி முகப்பு
விருள்விழிக் காக்ஷியி னிலையாம்
கனமுள தாகும் தந்தையின் வர்க்கங்
கழறிடி லொருபதி னேழு
மனதினிற் பகையாய் வர்க்கம்நான் கிடமாய்
மாலா மறிந்திடும் விதியே. (4

வித்தியதில் மூவர்க் கிசைப்பது வயுமை
மீண்டிடார் மத்தியில் மரணம்
பதிதனி லிருப்போர் நால்வராம் பெண்கள்
பானுவின் றிசைதனிற் பகுதி
துதிபெரும் ருதுபெண் சகோதர மைவர்
தோகைய ரதிலொரு மூன்றும்
முதிர்வய தளவும் மணமிலான் கனிட்டன்
மூர்க்கனும் வளமிலா னென்மேற. (5)

மே வ று.

வையகமீதிலன்னை வாழ்வது மெத்தவுண்டாம்
வெய்யவன் றிசைமேமலொன்று விளங்கிடுஞ் சகோதரங்கள்
தையலர் மூன்றதாகுஞ் சாற்றிடு மற்றோர்காளே
கையதொன் றானமூண்டாங் கனிட்டவன் றனக்குகாணே. (6)

கனிமொழி மடவாருக்குக் கவிதிசைத் தொகைமேமலொன்றில்
இனமதில் மனைமுன்னுண்டா மிருள்விழிப் புதல்வன்றிக்கில்
தனமுட னதிகாரங்கள் சாற்றிடுங் கீர்த்திமெத்த
மனமுளோன் புருடன்வர்க்கம் வளர்வதோ ராரொன்றுமே. (7)

கறவைமா டதிகமுண்டாங் காரிழை தனக்குப்புத்திரர்கள்
அறிவுள ராண்கள்மூன்று வரிவையி ரெண்டாம் விர்த்தி
நெறிவுள ருதுப்பெண்ணுயுள் நிகழ்த்துவ தெழுபதாகும்
பறவையின் கால்மூன்றிற்குப் பகர்ந்திடும் பலனிதாமே. (8)

அவிட்ட நாலாங்கால் பலன்.

மதிமிக வளரும் பறவையில் நாற்கால்
வருமருது நிலைதனை வினவில்
நிதிதரும் பரிமே லன்னியகாடு
நேசமாய்ச் செல்கையில் ருதுவாம்
பதிதனக் கிந்தரன் றிசையொரு காதம்
பாவையர்ப் பலருட னழகாய்
துதிபெரு மினத்துள் மணமெனச் செல்லல்
சுடர்முனைத் தைந்துவெழ் கடிகை. (1)

கன்னல் மூன்றளவு செல்கையில் வழியிற்
கண்டுபின் மனைதனக் கேகல்

பொன்னுவா பரணம் பொருந்திடு மலர்கள்
பூவைமெய் செகப்பணி யாடை
மின்னிடு மூயர்ந்தப் பட்டிரு வர்ண
மிகுந்த சுந்தர மூளாள் பாக்யம்
பன்னரும்புகழு மதிவளர்போலாம்
பாவைதன் னுயுள்கா லளவும். (2)

வேறு.

அரிவையைக் கண்டமாது அத்தையென் முறைமைகொண்டாள்
பெருகியக் குடும்பியாம்சேய்ப் பெற்றிடும் பருவம்செம்மை
மருதொடை யிரண்டிற்காணும் வளமுளாள் சுமங்கலியாடை
பரணிநா ளதிபன்வர்ணம் பழமையில் திடமாங்காணை. (3)

பாடுவோம் ருதுப்பெண்வாழும் பதிபிதாப் பூர்வம்தெற்கில்
வாடிடு மணியாம்வாசல் வடக்குகீழ் மேலாம்வீதி
கூடுமுச் சந்துமேற்குக் குளங்கிண ருகில்தோற்றும்
மாடுமூன் றிரண்டுகன்று மனைதனில் வாழும்சொல்லே. (4)

சொல்லிய ருதுப்பெண்வர்க்கம் தொகையிரு வாண்பால்ஞன்கில்
அல்லலா மிரண்டோன்மூப்பத் தைந்தினி லரிட்டந்தூக்கால்
நல்லவர் மற்றோர்தீர்க்க நலமுடன் வாழ்வாரைந்தோன்
மெல்லிய ளாறுமூன்றெண் விவாகமுஞ் செய்வனுமே. (5)

நொந்திடு மன்னைவர்க்கம் நுவல்வதற் கிடமொன்றில்லை
எந்தையே யேகமாகு மிவட்குமுன் னுதித்தோர்நாசம்
பிந்தியு முதித்தோர்நாசம் பிரபல னன்னைதந்தை
சிந்தையுங் கலங்கிநிற்பன் சேயிலாக் குறையினுலே. (6)

காரிகை தந்தைவர்க்கங் கருதிடிலேக்து தீர்க்கம்
வீரிய வாண்கள்மூன்று மிருத்தவெண் பெண்களாகும்
பாரினில் புத்திராள்விர்த்தி பலமுடன் செல்வமுண்டாம்
கூரிய விரண்டோன் மெத்தக் கொடியனு மரவங்காணை. (7)

கண்டிடு மடவாருக்குக் கனமுடன் மணமுன் னுண்டாம்
கொண்டவன் புவிக்குவேந்தன் குறைவிலா செல்வனுகும்
தண்டரை யடக்குவீரன் தோகையர் தனக்குப்புத்திராள்
இரண்டுவா னைந்துபெண்கள் நிலைப்பது வுறுதியாமே. (8)

நிலைருது சுரிகையாயுள் நீலனுதித் தனிந்து
புலவனுண் டளப்பாலுடு புகரிவர் திசைமொத்தாண்டில்
தலமதில் வாழுமில்லில் சலித்திட மரணமாவாள்
பலங்கொடி காற்நான்கிற்குப் பேசிடும் பலனிதாமே (9)

அவிட்ட நக்ஷத்திரபலன் முற்றிற்று.

சதைய முதற்கால் பலன்.



போர்முதற் காலின் ருதுபலன் வினவில்
பூத்திடும் பருத்திக் கொல்லைதனில்
காரிகை ருதுவாம் பதிக்குத்தென் மேற்குக்
கணவனுக் கன்னம தெடுத்துச்
சீருட னுபயச் சிறுமிகளோடு
சென்றன ளன்னிலைக் கருகில்
நார்மிகுஞ் செடியோர்ப் பொய்கைரெண் டிச்சி
காகம்புற் ருளியிற்கழுமே. (1)

உற்றுமே பார்க்கும் பகுதிவாழ் மரங்க
ளுமையவள் கோவிலு மேற்காம்
சிற்றகரங் கிழ்ருது மடவார்மெய்
செகப்புமால் நிறம்பழம் புடவை
வற்றிடுந் தனங்கள் பருத்திடா விரல்கள்
மட்டமாம் வழகிலா ளுடம்பு
கற்றழை நாற்றஞ் சுகமிலாள் கண்டோர்க்
கணவனு மன்னிலைக் கருமே. (2)

கணவன்மெய் கறப்பு வடிவினிற் குள்ளன்
காதினில் கடுக்கனிரண் டுளதாம்
குணமுளன் காலில் வெள்ளியா பரணம்
கொடியைபோல் வளைந்திடும் வலதில்
அணிந்திடு மாடை வெண்மையி லழுக்கு
வழகிலாப் புள்ளியா மற்றோர்
துணிமிகவுறுதி குணன்மதி வர்ணம்
தொகையிலான் கடனுளனுமே. (3)

கடனுளா னென்னும் பூமிபொன் னுண்டாங்
கனமுள மூனியிரண் டுளதென்
றிடமிலைக் கீழ்மேல் வீதிதென் முகப்பு
செழித்திடு மெதிர்மனைப் பொய்கை
வடபுறங் கொல்லை நிருதிநீ ரோடை
மைந்தனில் லாமனைத் தலையில்
செடிபல வுண்டா மெதிர்மனை முகப்பில்
செஞ்சுடர் நிலையன் மனையே. (4)

வேறு.

எட்டினில் பகுதியாகு மிசைப்பது புருடன் வர்க்கம்
பட்டென மரிக்குமொன்று பருவத்தில் மற்றோர் தீர்க்கம்
துட்டியாங் கனிட்ட பெண்ணுள் சோரமாம் பதியில்வாழாள்
அட்டம நான்குகாண்ட வாண்டினில் புருடன்போரல். (5)

மடிவது திண்ணமாகு மங்கையின் சகோதரங்கள்
திடமில்லை பெண்பாலிரண்டு செழிப்பது வாண்பாலொன்று
குடமுலை மாதாதீர்க்கங் குணமுளாள் வர்க்கமேழு
படிதனில் விர்த்தியைந்தில் பாவையிரண் டாகுமாமே. (6)

இரண்டிட னைந்தின்மொத்த மேந்திழை தந்தைவர்ககம்
கண்டிடு மதிலொன்றீனங் கங்கையி லரிட்டமற்றோர்
பண்டுள காலமட்டும் பலமுளோர் விர்த்தியுண்டாம்
பெண்டதிலிரண்டுமற்றோர் பிரபல வாண்களாமே. (7)

சஞ்சல மாயுள்மட்டுஞ் சார்ந்திடும் ருதுபெண்ணுக்கு
அஞ்சுட னேழுமாண்டி லழகுடன் மணமுண்டாம்
வஞ்சியர் தனக்குப்புத்ரள் வலிவிரா தாண்பாலொன்று
கொஞ்சிடும் பெண்கள்மூன்று குறிப்பது வுசிதமாமே. (8)

கருணையுள் ளவனுமேகன் கர்ப்பத்தி லீன்றோனுக்குக்
கிரணவன் றிசையில்பூமி கிடைத்திடும் ருதுபெண்ணுக்குத்
தரணியில் வாழுமாயுள் சாற்றுவ தறுபதாகும்
வருணநாள் முதற்காலுக்கு வழுத்திடும் பலனிதாமே. (9)

சதைய மிரண்டாங்கால் பலன்.

(*)

குன்றினி லிருகால்வீட்டிற் குள்ளறை வாசல்தன்னில்
நின்றுமே மாதாவோடு நெறியிலா மொழிகள்பேசிக்
கன்றினைப் பிடித்துக்கட்டுங் கருத்துபோல் சுவற்றினோரம்
ஒன்றுமே கேட்கும்போது வுரைத்திடும் ருதுவதாமே. (1)

ருதுப்பெண்ணி னுடைசெம்மை நோயுளாள் கருத்தவர்ணம்
விதியது மெத்தவுண்டு மிகுத்திடுங் கோபியாகும்
பதிதனில் பொருந்திவாழ்வள் பார்வைமே லாகுங்கொங்கை
எதிர்விழி பெருக்குங்கூந்த லிடரிலா நீளமாமே. (2)

கண்டது வன்னியாகுங் கருத்திலுல் வித்தையுள்ளாள்
சண்டைகள் பிடிக்கவல்லாள் தூலியது நரைத்துக் காட்டும்

அண்டிடினுர் தம்மைக்காப்பா ளணிந்திடு மாடைவெள்ளை
பண்டுள வயதுகாட்டும் பகர்வது நடுவதாமே. (3)

நடுவய தாகும்செல்வ நல்கிடும் சுமங்கலியாகும்
திடமன துடையாள்நாரி செழிக்குநல் ருதுபெண்வாழு
மிடமது தந்தைப்பூர்வம் விளங்கிடுங் கெங்கையுண்டாம்
கடனிலா னிரண்டுமூன்றுங் கட்டட மெனச்சொல்வாயே. (4)

வாசலுத் திரமாம்வீதி வலுத்திடுங் கீழ்மேல் தெற்கு
நீசனுங் குலத்தில்சேரான் நிலையுளன் றந்தைவர்க்கம்
பேசுவ திருமூன்றெண்கள் பெறுகுவ தகிலா னிரண்டு
நேசமாம் பெண்களிரண்டு நிறைந்திடு செல்வமாமே. (5)

செல்வமாம் ருதுபெண்வர்க்கஞ் செழிப்பது வைந்துதீர்க்கம்
கல்விகளுடையோராகுங் காளைமூன் றிரண்டுகன்னி
நல்கிய குணமாம்ஜஷ்டன் நான்குதா ரத்தையுள்ளோன்
அல்குலில் குறியொன்றுண்டா மறிந்துநீ வரைத்திடாயே. (6)

அன்னையின் சகோதரங்க ளாணிரண் டேழுபெண்கள்
கன்னியில் மூன்றுபின்னம் சாசினி லன்னியமாரல்
நன்னய வாழ்க்கைமற்றோர் நற்சுக தீர்க்க மாகும்
மின்னிய ருதுப்பெண்ணுக்கு விளம்புமுன் தசமதாண்டில். (7)

மணமது வைந்தாந்திக்கில் மனங்கசப் பாகவுண்டாம்
குணமுளன் சிறந்தவித்தைக் குடும்பவாழ்க் கையுளன்வர்க்கம்
மணிதிசை தன்னிற்பாதி மங்கைய ரதிலொன்றுகும்
பிணியுளப் புருடனுக்கும் பெருமையாய் மனைவியாமே. (8)

புத்திராள் மடவாருக்குப் பொருந்துவ துரைப்போமேழில்
சத்துரு மதலையொன்று சற்குண முள்ளோர் மூன்று
மற்றதரு பெண்களாகும் வறுமையை யடைய மாட்டார்
முற்றிலுஞ் சுகமாங்கீர்த்தி மொழிந்திடு முறையதாமே. (9)

மிக்கதார் மடவாருக்கு மேதினிதன்னில் ஆயுள்
சுக்கிரன் பருதிசெவ்வாய் சோமனுர் புதல்வன்காரி
துக்கமா யிவர்மொத்தாண்டில் சுமங்கலி யாகமாள்வள்
செக்குகா ரிரண்டினிற்குச் செப்பிடும் பலனிதாமே. (10)

(*)

சதைய மூன்றுங்கால் பலன்.

குந்திதன் போ கேட்டிடு முலகில்
குன்றுரு மூன்றதாங் காலில்

நந்தியா வட்டை முதல்பல மலர்கள்
நல்கிடும் வனத்தினில் விழவாய்ச்
சந்தன விருக்ஷத் தடிருது மடவார்
சம்புதித் திருபதாங் கடிகை
மந்திரந் தனக்கு நிருதிவன் னிலைக்கே
வழுத்துமீவா மின்னமுங் கேளீள. (1)

மின்னலி னிடிவீழ்ந் திடங்கிழக் கள்வன்
மேருவுபோல் பருவதமதன்மேல்
கன்னியர் துதிக்கு நாகம்வாழ் புற்றுக்
கலியரு கினிலிரு பொய்கை
மன்னர்கள் மனையொன் றுளதிருகதவு
வளமுளத தற்குப்பின் புறத்தில்
தன்னின மல்லான் சாதிபி லுபர்ந்தோன்
தனியனுங் குடிசையொன் றுளதே (2)

குடிப்பழுதில்லாள் ருதுப்பெண் மெய்கறப்பு
குணமுளாள் பாக்கிய வதிகாண்
படிப்பது வுபய முடித்திடு மாடைப்
பார்க்கவன் நிறமழுக் குளதாம்
துடிப்பிலாள் பொருமை வடிவினில் சுமங்கை
தொடைமரு சாய்ந்திடுங் கொங்கை
தடிப்பிலாள் மெலிந்த திரேகமா மனதில்
சஞ்சல முளள்ஜெகத் தரசே. (3)

மையுள கண்ணுங் கண்டிடு மட்ந்தை
வயிற்றினில் திங்களாற் கர்ப்பம்
தையல்சேய் நிறங்கா லுதறியே நடப்பள்
தரித்திடுந் துகில்முழு கறப்பு
வெய்யவன் நிறமாஞ் சுற்றிலும் கரைகள்
மினுமினுப் புறமுக மழகு
நெய்விழுங் குறிமூன் றிடத்தினில் காணும்
நிலையுளாள் சுமங்கலி யாமே. (4)

நிலையது ருதுப்பெண் வாழ்மனைப் பூர்வம்
நீடிய தந்தையின் றனக்குத்
தலைமுகப் பருதிதிசையெதி ராரல்
தரைமிசை வலுத்தகட் டடமாம்
கலைமதிபோல வளர்ச்சியாஞ் செல்வம்
கரிபுற மிருமனை காலி

வீலைமடந் தையர்வாழ் மனைகுஜன் திசைபொன்
மிகுத்திடும் பதிசீலக் கருதே. (5)

கருதிடும் தந்தை வர்க்கமூ விரண்டில்
கதிப்பது விரண்டுமற் றவர்கள்
பருதிசேய் சோம னிவர் திசையாண்டில்
படிதனி லம்மையால் மரணம்
குருவினுக் குறைக்கும் வித்தையில் நிபுணன்
குவலயம் புகழும்பின் னுதித்தாள்
மருவிடுங் கணவன் நந்தைதை வசமாய்
வதைசெய்வன் காதலன் றனையே. (6)

ஆதவன் றிசைமொத் தெண்கள் மேலிந்து
வாம்ருது மடந்தைசோ தரங்கள்
நீதியாய்ப்புவிமீ துளவுவோ ரெட்டில்
நிலவுமொத் தாண்டறைப் பெண்கள்
நாதனைக் கருதுமன்னையின் வர்க்க
நலமில்லை யேகுமா ணிரண்டு
வேதனைநாற்பத் திரண்டினில் ரணத்தால்
மீண்டிடா ளீன்றமா தாவே. (7)

மாதுவின் ராசிதிக்கதி தூரம்
மனைமதீ ரைந்தில் முன்னுண்டாங்
கோதையர்க் கிசைந்தோன் தவரிடான் சொற்கள்
குண்முளப் புருடனு மனைக
ளாதியாம் பெருத்தக் கட்டட முகப்பு
வம்புலி சுதன்நிலை யருகில்
வீதிபாம் வடகீ ழிருதிசையாக
விளங்கும்பின் வேலனு லயமே. (8)

வேலனு லயமேல் துலங்கிடு மனைமூன்
வெற்துபின் கட்டிய தாகும்
நீலம்போல் விழிகொண் டரிவையர் தனக்கு
நிலைத்திடும் புத்ரன் மூன்றரிவை
நாலின்மே லிரண்டெண் ணைமதில் மூன்று
நழுகிடு மத்திப வயதில்
தாலமீ திரண்டோன் மனைமுடிந் தீரைந்
தாண்டினில் மனையைவிட் டன்யம். (9)

மாரலாம் புவியெங் கினுமிகப் புகழாய்
மாதவர் முதல்தொழும் ஞானிப்
பாரதி லந்தியங் கண்டிடார் ருதுப்பெண்
பழுத்திடும் வயதுளா ளாண்டுத்
தாரையின்ம ணைளன் கவிபுதன் சனிசேய்த்
தரணிகே திவர்திசை மொத்தாண்
டரிவையர் வயதாங் குன்றுகால் மூன்றிற்
கறிந்திடும் பலனிது வாமே. (10)

சதைய நாலாங்கால் பலன்.

சதைய நாற்காலின் ருதுபலன் வினவில்
தரைமிசை பதிக்குமதன் புறத்தில்
விதமிலா மணையி னேரமெல் லுதித்து
விளங்குமத் யானகா வளவில்
பதமுலை மடவார் ருதுகுறி யதற்குப்
பக்கமுன் பின்னுமே பாழாம்
சுதனிலா தொன்று மன்னிய மற்றொன்று
தூரமா நிருதிநீ ரோடை. (1)

மேடையாங் கிழக்கு ருதுபெண்ணி னுடை
வெய்யவன் நிறம்புதி தாகும்
ஓடினுள் சிறியோர் மூலிகைத் தேடி
வுணர்ந்திடும் பார்வையி ழைகாஞ்
சூடிரு கரத்தில் தளிம்பது வுண்டாம்
சுகமிலாள் நிறங்கருப் பாகும்
பாடதில் சமர்த்தி யற்பமாம் பொருள்கள்
படிமிசை யறிந்திடா வேசி. (2)

வேசியாங் காமிலீலையி லினிமை
வெருத்திடாள் வலியமா யழைப்பாள்
பாசம துடையா ளறிந்திடி மடந்தை
பருவம்வா லிபமது வகன்றுள்
வாசலி னருகேயிருந்தவ ளறிதல்
வளமுளாள் சுமங்கலிப் புட்வை
நாசமாங் கந்தை யன்றவள்| தூரம்
நலமிலா னிவள்கண வனுமே. (3)

கண்வனுற் பதுவான் டணைக்கவன் றனக்குக்
கழருரும்பின் மணவியா மூன்னுள்
பிணியினுல் பொய்கை வீழ்ந்துடன் மரணம்
பிசகிடா கெர்ப்பமொன் றில்லாள்
துணைவரொன் றில்லார் ருதுபெண்வர ழில்லம்
சுகமிரா துபயமாம் பூர்வம்
குணமுளன் தந்தை வர்க்கம தேகம்
கோதைய ருபயமாங் குறியே. (4)

செப்பியருதுப்பெண் சோதர் வர்க்கஞ்
செங்கதிர் திசைதோகை யாண்டெண்
தப்புவதிலாண் மூன்றுபெண் ணிரண்டு
தனமுள ராமதில் கனிட்டன்
இப்புவிமீது மணவியின் தாயை
யிடரதா யிறவினில் புணர்வன்
சொற்பிழை யுரைப்பன் தரணியோர் மதிக்கார்
துஷ்டனென் றுரைத்திடத் தகுமே. (5)

வேறு.

அண்ணையின் சோதரங்க ளாணிரண் டரிவை நான்கு
முன்னவ ளொருத்திதீர்க்கம் முதுமைகா லளவுஞ்செல்வம்
பின்னிரு பெண்ணிலொன்று பேதமாம் புத்திதானும்
சின்னவ னரசர்மூலம் செல்வனு மணமூன்றுமே. (6)

மங்கையர் தனக்கீரெட்டில் மணமது வண்டாந்திக்கு
திங்களுக் குச்சராசி செப்புவர்க் கீழ்மேல்வீதி
பங்கமில் கெட்டியில்லம் பான்முகப் பெதிரிலாரல்
சிங்கமென் ராசியாதித் திசைதோகை புருடன்வர்க்கம். (7)

வர்க்கமோ ராறில்டெண்கள் வலுத்திடாக் காலநான்கு
தர்க்கிடா மாதரில்லத் தனம்பொருள் பெருத்திடாது
தெற்கினில் பூர்வபூமிச் சிறந்திடாக் கடனுல்மாரும்
துர்க்கையின் கோவில்மேற்குத் துலங்கிடா தெனசொல்வாரே.

சொல்லுவோ மடவாருக்குச் சுதன்விர்த்தி யைந்துபெண்கள்
அல்லவொன் றில்லேயேழு ஆயுசு தீர்க்கமுண்டாம்
வல்லவனெட் டோன்நாற்பான் மடிவது விடியாலாகும்
மெல்லியா ளொருத்திசார மிகுதியாம் படியோர்க்காண. (9)

படியுளோர்க் காணவேசைப் பாவையாள் மானமில்லாள்
கொடியவ ளாகுமென்றுக் கூறுவர் ருதுபெண்ணுயுள்

முடிவுநாற் பத்தியொன்பான் மூர்க்கமாய் கிணற்றில்மாள்வள்
வடிவுபோர் கால்நான்கிற்கு வகுத்திடும் பலனிதாமே. (10)

சதைய நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

பூரட்டாதி முதற்கால் பலன்.

நாழியில் முதற்கால் நுதுபலன் வினவில்
நலமிலாக் கொல்லையி லிருந்து
வாழிடநாடி வருநடு வழியில்
மங்கையர் நுதுமனை தனக்குத்
தாழிநாள் ராசித்திசைகுறி நீலபாழ்
சாற்றிடு மூட்கள்புல் பூண்டாம்
பாழ்கிணர் வடக்குப் பட்டிடு மாமூன்
படர்விரு கூஷங்கள்தென் பணையே. (1)

தனித்துமே வருத லணிந்திடும் புடவைச்
சயிந்தவன் நிறம்புதி தழுக்கு
மனத்துயர முளாள் முதுகினில் மருவாம்
வடிவினில் சமம்நிறங் கருப்பாம்
வனத்தினில் தனியாய்ச் சஞ்சரித் திடுவள்
வளமிலாள் தைரிமெய் நாற்றம்
சினத்தினில் கொடியாள் கணவனைப் பிரியாள்
செழித்திடாள் பிணியுள ளாமே. (2)

பிணியினுல்காய முள்ளவுந் துயரம்
பெருமையொன் றில்லிரு தனங்கள்
குணமிரா நெடுநாள் மணமிலா ளறிந்த
கோதைதன் னினத்தினில் சிறியாள்
அணிபழங் கந்தை வர்ணமூன் றங்கம்
சுரோத்தமன் சேய்நிறம் விதலை
கணியமர் வீட்டிற் கதிபதி மதிசெய்க்
கழறிவர்த் திசையினெண் வயதே. (3)

வயதுளாள் சுதனினுன் றரிவையொன் றிவள்வாழ்
மனையது வன்னியர்க் காகும்
துயரமாய்க் கணவன் பகைஞரால் மரணம்
துலதிசை மிரவினி லடியால்

பயமிலா னெவர்க்கு மிறந்ததோர்ப் பெண்ணுல்
பகரிடும் தவரிடா ருதுபெண்
நயமுடன் வாழும் பதிபிதாப் பூர்வம்
நடையது கிழக்கிரு மூனீயே. (4)

மற்றெறுமூனதென் முகப்புறும் வடக்கில்
வாழ்ந்திடா ரதற்குவுத் திரத்தில்
கற்றறி மூடவன் கிழக்கிலா லேயம்தென்
கங்கையா லரசுவேம் புளதாம்
புற்றுமேல் புறத்தின் மூனக்குவீ சானம்
பொருந்திடுந் தந்தையின் வர்க்கம்
முற்றிலும் செழிக்கா ராணிரண்டேக
மொய்குழ லெனப்படு மாமே. (5)

படிதனில் ருதுப்பெண் சோதர வர்க்கம்
பானுவின் திசையின்மே லிரண்டாம்
வடிவினில் மிகுத்தப் பெண்களுமூ விரண்டில்
வளமிரா திரண்டமங் கலேயாம்
துடிபொருள் மேன்மை மற்றவ ராணில்
சுகமிரான் கனிட்டன்மிக் கேழை
கொடியைபோல் வளர்ச்சி யுடைய ளாமன்னீ.
குணமிலாள் சோரமாங் குரையே. (6)

சோரமா மறையோன் றனீமிகப் புணர்வள்
சோதர மூன்றிலா ணெனன்று
தாரணி லதுவும் விர்த்தியி லபமாந்
தையலில் மூன்றவள் செல்வி
நாரணிக் கிருபை யுடையவள் புருடன்
நானிலம் புகழ்நகர்க் கதிபன்
சூரனு மிவன்சோ தரமிரு வாண்கள்
தோகையர்க் கருவிலா துரையே. (7)

கதிர்மதி திசையாண் டளவின்மேல் மூன்றெண்
கண்டநாள் மணஞ்சில மூல
மதியுளன் கிருஷித் தொழிலுளன் வாழு
மூனமுகப் பிந்திரன் வீதிப்
பதிதனக் கீழ்மேல் வடமூனப் பாழு
பழங்கினார்த் தூந்ததொன் றுளதாம்
விதியது யெழுப துளன் சகோதரங்கள்
விர்த்தியில் திருதிய மாமே. (8)

வேறு.

திருதியப் புத்ராள் பெண்கள் செழிப்பது விரண்டதாகும்
கருதிய ருதுபெண்ணுயுள் கலிமதி குருசேய்க்காரி
பருதிவர் திசைமொத்தாண்டில் பற்றியப் பிணியால்மாள்வாள்
உருதிமுற் கொழுங்கோல்பாத மொன்றினுக் குரைப்பதீதே. (9)

பூரட்டாதி மிரண்டாங்கால் பலன்.

செவிதனைக் கொடுத்துக்கேளும் நாழிருகால்
செடிபல நிறைந்திடு மிடமாங்
குவியலா மருகில் விரகுடன் குப்பைக்
கோதைவன் னிலேருது மனைக்குள்
கவிதிசை முயர்ந்த வாரலா மருகில்
கனஜல நிறைமரம் பலவாம்
தவசியாய் மறைந்தோன் மனைநிரு தியமாம்
சகந்தொழு மீசன் மைத்திசையே. (1)

இசையுடன் ருதுப்பெண் ணனைந்திடு மாடை
யிறையவன் கரிநிறம் பழமை
வசமிரா தங்களுஞ் செகப்பது ரூபம்
வயிற்றிட மருதன நிகளும்
நிசமொழி யுரைப்பள் தலரிடாச் சொற்கள்
நீடியவாழ்வுகற் புள்ளாள்
புசபலங் கூந்தல் சுருண்டிடும் வித்தைப்
பூரண மிருவித மாமே. (2)

இருபெண்கள் ருதுவை யறிந்ததுவாகு
மியம்புவோ மமங்கலி வாலை
கருநிறம் புடவைப் புதியது செகப்புக்
கருத்திலாள் வேசைமற் றொருத்தி
தெருவினில் தயிர்பால் விற்றிடுந் தொழிலாள்
செகப்பணி துகில்பழங் கருப்பு
வருங்கவி முகம்போல் சாயலாம் பருவம்
வாலிபம் சுமங்கலி யாமே. (3)

வாலிப ருதுப்பெண் வாழ்மனைப் பூர்வம்
வளமுளத் தந்தையின் றனக்கு

தூலமாம் திரேகம் தனமுளோன் வர்க்கம்
தொகையொரு வொன்பதி லாண்கள்
நாலுமற் றோர்க ளரிவையில் விர்த்தி
நலமில்லை யிரண்டதா மாணில்
காலிலா மூடவன் பெண்ணதி லொன்றுக்
கணவன் வாழ் பிரிந்திடுங் கள்ளி. (4)

வேறு.

தரைமிசை ருதுப்பெண்வர்க்கஞ் சாற்றுவ தேதகமாகும்
அரிவையர் தனக்குமுன்பின் னலந்திடுங் கெர்ப்பமில்லை
பெருகிய மாதாவர்க்கம் பெருத்திடுங் குடும்பமாகும்
பருதியின் றிசையெண்ணுண்கள் பாவைய ரொருமூன்றுமே (5)
மூன்றுட னொருருவன்கெண்கள் மொழிந்திடும் கண்டமொத்தம்
ஈன்றமா தாவின்வர்க்க மிதில்பெண்கள் மூவராகும்
மீண்டிடா னொருவனீரெட் டாண்டினில் விஷத்தால் மாள்வன்
தூண்டினி லொருவன்முப்பான் துயரமா மற்றோர்தீர்க்கம். (6)
சொல்லுமுவ் வாருமாண்டில் தோகையர் தனக்குமீனில்
அல்லலாம் விவாககாலம் அடிபிடி சண்டையுண்டாம்
வல்லவன் புருடன்வர்க்கம் வலுத்திடா தேகமாகும்
நல்லவன் தரணியோர்க்கு நற்சுக மில்லாளுமே. (7)
புத்திய வர்க்கந்தன்னைப் புகலுவோம் பாலாகேளும்
வித்திலா தாண்பாலொன்று மெல்லிய ரிருவர்தீர்க்கம்
மித்திரப் புதல்வனுகும் விளங்கிடுங் கனிட்ட மாதர்க்
கித்தரை மீதாண்பெண்ணில் லாசுத னியம்புங்கோவே. (8)
திட்டமுவ் வேழிரொன்பான் செப்புமிவ் வாண்டில்மங்கை
பட்டனு மரணம்வீட்டில் பகலொரு ஜாமமேவீழ
மட்டையா லுரைக்கலாகும் வயிற்றிலக் காலம்நோவாம்
ஒட்டிடும் பலனிதாமுற் கொழுங்கொல் காலிரண்டினிற்கே. (9)

பூரட்டாதி மூன்றுங்கால் பலன்.

கொல்லியில் துலங்காக் கோவிலி னருகாம்
குணமிராப் புரட்டைகால் மூன்றில்
தொல்லையாம் பதிக்கு மேற்கரை நாழி
தூர மன்னிலை பணிபுரிகா

இரண்டாம்பாகம்.

லெல்லையு முதித்து விருபதுகடிகை
யிரண்டமங் கலியுடன் கலர்தல்
மெல்லியக் கால்வா யருகிலாங் கீழ்மேல்
விளங்குமன் னிலைசில குறிகேள். (1)

குறிகிழக் கேரி நிருதியில் குன்றுக்
குஜதிசை மிகுத்திடும் பணைகள்
நெறியிலான் கொல்லை வடக்குவில் மூலை
நிறைஜல மூளக்கிண ரிரண்டு
மறிதிரள் மீனம் வதற்குநேர் வடக்கு
வாழைமா கமுகுளம் தோப்பு
முறைமையி லம்மா னருகில்மா வடியில்
மொழிந்திடும் நித்ரை யாமெனவே. (2)

வேறு.

படிதனில் ருதுபெண்ணுடைப் பழமைசேய் வர்ணமூன்று
விடமதில் கிழிதல்கொங்கை வேந்திடும் கருத்தமேனி
தொடைதனில் றிணத்தின்காயம் தோன்றுவ திரண்டு மெய்கள்
திடமுளதாகுங் குள்ளம் திருட்டினில் சமர்த்தியாமே. (3)

ஆகுமே கண்டபெண்ணி னுடைமால் நிறமாங் கந்தை
சோகமாய்ப் புணர்ச்சிநோவாம் சுகமிலா ளமங்கலிவாலே
பாகுடன் மற்றோர்ப்பெண்பால் பார்வையி லழகாம்செம்மை
நாகமா ளனுமுன்பேராம் நலமிலாள் விதவையாமே. (4)

ஆடைமா லசுரமந்திரி அழலிவர் நிறங்களாகும்
மேடையி லிவள்மணுளன் விஷத்தினுல் மரித்ததாகும்
நாடுவோம் ருதுபெண்வாழும் நல்மனைப் பூர்வம் தன்னைக்
கூடிடும் புருடனுக்குக் குறித்திடும் புவியின்மீதே. (5)

புவியின்மீ திரவிவாசல் புகழ்பெருங் கீழ்மேல்வீதி
மவியது தனக்குக் கொள்ளி போலிவள் லங்தோளாகும்
தவமதி லுதித்தோனுகும் தையலின் புருடன் வர்க்கம்
நவமதி லிவணுனேகம் நவிலுமற் றோர்பெண் காணே. (6)

பெண்ணதோ ரெட்டில்வீர்த்திப் பெலனதி லோங்து மற்றோர்
மண்ணினில் வாழமாட்டார் மாரகம் ருதுபெண் வர்க்கம்
திண்ணமா னிரண்டுபெண்கள் செழிப்பது விருமூன்றுகும்
கண்ணினில் வலதுயினம் கண்டிடு மிவையோனுக்கே. (7)

கண்டிடு மாதாவர்க்கம் கவிதிசைத் தொகைநா லொன்று
பெண்டுக ளதில்மூன்றுண்கள் பெலத்திடார் குடும்பம்தாழ்வு

தண்டனு மதனிலேகன் சுகமிலான் கொலைகள் செய்வன்
எண்டிசை நடுங்கும் கண்டா ளெனவுரைத் திடுவீர்தாமே. (8)

தந்தையின் வர்க்கமூன்று தரணியில் விர்த்தி யொன்று
சுந்தரி மார்களில்லே தோகையர் தனக்கே சைந்தில்
விந்தையாய் மணமுன்காணும் விளங்கிடும் புத்திராள் கேட்க்கில்
சிந்தையில் மகிழ்வாணேகம் தெரிவையில் விர்த்திரண்டே. (9)

ரெண்டுமூ வைந்தில்கண்டம் நீரிலுல் நிவர்த்தியாயுள்
குண்டையின் ராசிக்காதிக் குருசனி யிவர்மொத் தாண்டில்
கண்டமாம் தவராநாழிக் காலொரு மூன்றினுக்கு
மண்டல மீதுபாலா வழுத்திடும் பலனிதாமே. (10)

பூரட்டாதி நாலாங்கால் பலன்.

(*)

புரட்டையில் நாற்கால்பெண்கள் புவியின்மேல் ருதுவதானுல்
இருட்டுபான் மறைந்தேதழ்கன்னல் யில்லமுள் புசிக்குங்காலம்
மூரட்டுவேலேக ளில்வல்லாள் மொழிவது நித்ரைகாலம்
கெரட்டைக ளுடையாள்பக்கம் கிழவியொன் ரெருமூன்மாதே.

பெண்ணிவள் திரேகம்செம்மை பிசகிடாள் சொற்களாடை
தண்ணவ னிறையோன்புள்ளி சனிநிறம் பழமைரெண்டு
கண்ணிலு மச்சங்காணும் கருத்திலாள் சாயுங்கொங்கை
மண்ணின்மீ தூளநாள்மட்டும் வளமிலாள் வறுமையாமே. (2)

கண்டது மறுநாள்காலே கனிட்டதாய்ப் புதல்வியாகும்
கொண்டையும் பெருத்தசெல்வி குணமுளாள் கருத்தமேனி
செண்டுபோல் தனங்களுள்ளாள் சேலைமால் வர்ணம்பட்டு
அண்டினோர் தம்மைக்காப்பா ளறிவுளாள் சுமங்கிலியாமே. (3)

மங்கையெவ் வர்ணமிரண்டு மதலையாங் கொர்ப்பங்காணும்
சங்கையா மிவளின்வர்க்கம் சாற்றிடில் பதினெட்டாகும்
பங்கமா மதிலனேகம் படிமிசை ருதுபெண்வாழும்
இங்கிடம் தந்தைப்பூர்வ மிரண்டுமூன் றகமதாமே. (4)

ருதுமனை முகப்புத்தெற்கு நொடியெதிர்க் கீழ்மேல்வீதி
புதுமனை யொன்றுமேல்பான் பொய்கையொன் றிடர்நீரற்பம்
பதிதனில் செடிகள்மெத்தப் பார்க்கவன் மூலையம்மன்
நிதியுளான் புதல்வனில்லே நிகழ்த்துவ ருருதியாமே. (5)

தந்தையின் வர்க்கமூன்றுத் தலமதி லொருவ னன்னியம்
முந்திய தேகனுகும் மொழிந்திடா னூமைப்பெண்கள்
பிந்திய தாகுமிரண்டில் பெலமில்லை யொன்றுபாழு
உந்தியில் ரோகங்காட்டு முருதியாம் பிதாவினுக்கே. (6)

அரிவையின் சகோதரங்க ளாணிரண் டரிவையற்பம்
பெருகிடுஞ் செல்வமாகும் பேதமொன் றில்லையன்னை
திரமுளாள் வித்தையுண்டாம் செழிப்புளாள் காமிவர்க்கம்
பருதியின் திசைமேலொன்றுப் பலமது லெந்ததாமே. (7)

பலனது மூவ்வெட்டாண்டில் பழிமிக வுண்டாந் தாய்க்கு
தலமதி லதின்மேலொன்றில் சண்டனுக் கிரையாம் தப்பாள்
துலைதிசை யொன்பான்றெண்டில் சுபமது வுண்டாமுன்னம்
கலைதிசைப் பகுதிவர்க்கங் கணவன்வா லிபமுள்ளாளே. (8)

உள்ளம திரக்கமில்லா னுறுமனை முகப்புத் தெற்கு
வெள்ளியின் மூலைதன்னில் மிகுத்திடும் பூர்வபூமி
அள்ளுவா னெருமுப்பாண்டில் துயரமாம் றிணத்தால் மாள்வன்
முள்ளுகள் தைக்கும்பாதை மூளும்பின் ருதுபெண்ணுக்கே. ()

கடன்மிக வுண்டாம்புத்திரா ளருதிடி லாண்கள் மூன்று
வடிவுளப் பெண்கள்ரெண்டு வளமையாம் ருதுபெண்ணையுள்
திடமுறு மெழுபதோடுச் சிறப்பது விருமூன்றுகும்
படிமிசைப் பலனும் நாழிப் பாதம்நான் கினுக்குச் சாற்றே. (10)

பூரட்டாதி நட்சத்திரப்பலன் முற்றிற்று.

உத்திரட்டாதி முதற்கால் பலன்.

மன்னன் முற்காலில் பெண்கள் மகிழுடன் ருதுவதாலுல்
தன்னின முள்ளுர்ஜேஷ்ட தாய்மனை தனில்மிக் கன்பாய்
அன்னம தருந்தும்வேளை யணங்கவள் ருதுசீர்மூலை
கன்னமில முருக்கன்வந்துக் கழறுவோ மின்னங்கேளே. (1)

வேறு.

அப்பதிப் புதிய தாமுகப் பதங்க
னமர்ந்திடும் கிழக்குமேல் வீதி
முப்பதி யடிப்புப் போலழிந் திடுமேல்
முருகனு லையங்குள மூன்று
செப்பதி லொன்று மறையுமற் றொன்று
செழிக்கும்பின் னொன்றுநீ ரற்பம்

தப்பிதில்நேரா மன்னிலைக் கிணறு
ஜலமுறும் குணப்படா தாமே. (2)

படிதனில் ருதுப்பெண் ணுடைசேய் வர்ணம்
பழமையி லழுக்குறும் கிழிசல்
கடைவிர லானம் குருகிய வடிவம்
கருத்திடு மேனிநீள் கூந்தல்
பிடிகழுத்திரு கொங்கைக ளெனும் சரியா
பிசகிடாள் மொழியும் சொல்போகி
நடைமெது கணவன் றனக்கிசை நாரி
நற்சுகம் சுற்புள ளாமே. (3)

சுற்புளாள் வித்தைப் பலனிலாள் தன்னைக்
கண்டிடு மடந்தைமெய் செகப்பு
அற்பமாம் சுகங்க ளனிந்திடு மாடை
யழுக்குறும் புதியதாம் வெள்ளை
சொற்பிழை யுரைக்கா ளடினவாக் குள்ளாள்
சுதனுளாள் ருதுபெண்வா ழில்லம்
நற்றவப் பிதுரின் பூர்வமாங் கிழக்கு
நடையெதி ராரலா மென்றே. (4)

வீதிதென் வடலாம் வடபுறம் நாஸ்தி
விளங்கிடா ரன்னிய மாரல்
சோதியில் பூர்வப் பூமிக ளீன்றோன்
சோதர மேகம்பெண் மூன்றும்
சாதிவிட் டன்னிய மாரலாங் கனிட்டாள்
தலமதில் மணமிலா முன்னம்
பேதியான் தந்தை சுகமுளன் தீர்க்கம்
பெருந்தன முளனெனப் பேசே. (5)

பேசிய ருதுபெண் சோதர வர்க்கம்
பெருகுவ தேழுதாம் விர்த்தி
தோசமொன் றில்லை காசுமூன் றிரண்டுத்
தோகைய ராழகினில் மிகுத்தோர்
காசினிமீது வன்னைநற் சுகத்தாள்
கனமுளாள் கண்டம்நாற் பதின்மேல்
ஈசனுள் தொகை யாண்டினில்திரு தியமொன்
றியம்பிடும் சோதரத் தொகையே. (6)

தொகையதி லிரண்டு கழித்தமீ தெண்ணின்
தொகைக்கண வனின்சகோ தரமாம்
புகர்திசை வீரைந் தாண்டினில் மணமுன்
போற்றிடும் வடிவினி லழகன்
அகம்புரா தனமேல் வாசல்கே ணிரண்டு
ஐந்தவ ஞகும்வித்தை யுளன்
பகையிலா னெவர்க்கும் சத்திய வசனன்
படிபுகழ் வாழ்வனென் றுரையே. (7)

வேறு.

வாழும் புத்திரரைச்சொல்வீவாம் வையக மீதுபாலா
தாழ்விரா தாண்கள்மூன்று தைபல நிருவர் தீர்க்கம்
பாழிலே மிகுந்தபூமிப் பாக்கிய மென்மே லுண்டாம்
தோழினி லிரண்டோனுக்குத் தோன்றிடும் நிணத்தின்காயம்.
காயமூ வெட்டி லுண்டாம் கருதிடும் ருதுவின் பெண்ணு
ளாயுளின் விபரங்களும் அருபதில் சுமங்கலியாக
மாயமா யிரிட்டம்பூவில் வந்திடு மனவோர் மெச்ச
தியமில் முற்சுமுற்கால் செழித்திடும் பலனிதாமே. (9)

உத்திரட்டாதி யிரண்டாங்கால் பலன்.

(*)

தீபரா ளிருகால்தன்னில் தெரிவையர் ருதுவதானுல்
பூபதி யில்லின் பக்கம் புளித்திடு மரத்தின்கீழாம்
சாபமென் ராசிமூலத் தையலர் மனைக்கீ சானங்
கோபதி மூளைத்தாற்கன்னல் குறிருதன் னிலைபாங்கோதை. (1)
கோதையன் னிலைக்கென் சென்றுள் குறித்திடு மடியனுக்கு
ஓதுவோம் கேளும்பாலா வுயர்பெருங் கன்றைத்தீதடி.
மாதவள் சென்றதாகும் வறிந்திடும் செவந்தமேனி
சாதுவாம் வடிவில்குள்ளம் சாய்ந்திடுங் கொங்கையாமே. (2)
கொங்கைதன்பார்வை மேன்மைக்குணமுளாள் சுருண்டக்கூந்தல்
மங்கல னேடுபுந்தி வர்ணம தழுக்குப்பெற்று
திங்களோ ரேழதாகும் தீக்குறிப் புள்ளியொன்று
பங்கமில் லாயுள்தீர்க்கம் பாக்கிய வதியாஞ் சொல்லே. (3)
சொல்லுவாய் பாக்கியமேனும் சோரமாம் பலர்களோடு
அல்லுடன் பகலும்போக மதில்மிக நினைவாங்காமி

மெல்லெனக் கண்டமாது விதவையா மாடைவெள்ளை
பல்லழ குள்ளாள்திரேகம் பார்மகன் நிறமாங் காணே. (4)

காணுவாய் மத்யவயதுக் கருவிலாள் மணமதாகித்
தோணுவ தீரேழ்மாதம் சுகமிலாள் கணவன்ரூனும்
ஊனமாம் வயிற்றநோயா லுயிர்தனை மாய்த்தோணுகும்
பூணியின் திங்கள்வாரம் புகர்நிசி வேளையோதே. (5)

வழுத்திடும் ருதுபெண்வாழு மனைபிதா சுயார்ச்சியம் தெற்கில்
கழுத்தினில் கயிர்போட்டுள்ளம் கலங்கவே மாண்டோ னில்லம்
பழுத்திடும் வயதாம்தந்தைப் பகல்முகப் பெதிரில் கெங்கை
செழித்திடு மனைமேற்பக்கஞ் சிவசுதன் கோவிலாமே. (6)

கோவிலா லயங்கள்தென்னைக் குளம்புண்ய நதியதாகும்
பூவினில் தந்தைவர்க்கம் பொருந்திடா தேகம் பெண்கள்
தாவினில் நிலைக்கா லேகம் தழைத்திடாள் பின்னொன்றில்லை
நாவதுக் கொலறிபேசும் நங்கையா மெனசொல்வாயே. (7)

சொல்வது ருதுப்பெண்வர்க்கந் தொகைதிரு தியமாமைன்று
கல்வியில் தேர்ச்சியுள்ளன் காசினி யுளநாள்கீர்த்தி
நல்மொழி யுடையன்தேவி நலமிலாள் விகாரரூபி
செல்வம தழிப்பள்மிக்கச் சினமுளா ளெனசொல்வாயே. (8)

மங்கையி னன்னைவர்க்க மாணில்லைப் பெண்கள்மூன்று
பங்கமொன் றமங்கலிவாலைப் பகருமற் றிருவர்தீர்க்கந் [த
திங்களின் திசைமொத்தாண்டுஞ் சேர்க்கைமேவா சைந்தின்மொத்
சங்கையில் விவாகமூண்டாஞ் சவுரியின் திக்கிலொன்றே. (9)

திக்கதில் மணமதாகிச் சேய்த்தொகை திசையின் பாதில்
குக்கலின் கடியினுலேக் கொண்டவ னிறப்பன் கொற்பம்
பக்குவ மில்லைப்பெண்பால் பகருவ தொன்றதாகும்
துக்கமில் ருதுப்பெண்பின்பு சோரநா யகனைக்கொள்வாள். (10)

கன்னியொன் றதுப்பின்வீர்த்திக் கருதிடும் ருதுபெண்ணுயுள்
பொன்னவன் குருதிப்புந்திப் பொழுதிலர் திசைமொத்தாண்டில்
அன்னிய தலத்தில்மாள்வ ளறிந்திடும் புவியின்மீது
மன்னனி லிருகாலிற்கு வழுத்திடும் பலனிதாமே. (11)

உத்திரட்டாதிமுன்றுங்கால் பலன்.

பார்தனில் மன்னன் திருதியப்பாதப்
பலன்றனை யுரைத்திடில் மனையுள்
நீர்மிகுங் கதலி மரமரு கினில்பெண்
நிலைருது வாயுவின் மூலை

சீரம துதித்துப் பன்னிரு கடிகைத்
தெரிவையின் தந்தையவ் வேளை
ஆர்மதி ராசித் திசைதனை நாடி
யகன்றன னரசர்மூல மென்றே. (1)

துகில்நிறம் வெள்ளை யழுக்குறும் பழமை
சுகமுளாள் வடிவினில் நெடியாள்
புகழுளாள் கருத்த மேனிவித்தை யுளாள்
புண்ணிய வதியழ குள்ளாள்
ஜெகமதி லறிந்த மடந்தையின் புடவை
செகப்பினில் பசுமையாம் பழமை
முகமதில் மருவொன் றுளதுதன் னினத்தாள்
மொழிகுவா மின்னமுங் கேளை. (2)

நிறங் கருப்பாகும் சுமங்கலி பருவம்
நிகழ்த்திடில் நடுவய துயரம்
அறமுளத் தந்தைத் தமையன்றன் புதல்வி
யகமெதிர் மனையில்வாழ் செல்வி
நெறியுள ருதுபெண் வாழ் மனைப்பூர்வம்
நிலைத்திடு மீன்றவன் தனக்கு
குறைவதொன் றில்லைமுகப்பு தென்வீதிக்
குணதிசை மேலதா மென்றே. (3)

தந்தையின் வர்க்க மைவரா மதிலாண்
தாணியில் நால்வர் பெண்ணென்று
பந்திபோல் குடும்பம் பிரிந்திடார் வெகுநாள்
பெலமுளோர் பூமிமூல மென்க
புந்தியின் திசையிற் சுயார்ச்சிதப் பூமிப்
பொருந் துவதொன் றதிற்பெலமாம்
விந்தையாய் ருதுபெண் சோதரா னிரண்டு
விளங்கிடும் பெண்களோ ராறை. (1)

ஆறினில் தீர்க்க மூன்றுவாம் ருதுப்பெண்
ணன்னையின் சகோதர மூரைக்கில்
ஏறிடா தொருமூன் றுண்கள் பெண்ணிரண்டு
யேழையாங் குடும்பம் நாஸ்தியதாம்
கூறிடுமிரு ணன்கினில் மணமுன்னம்
குணதிசை தூரமா முகப்பு

சோறுநாள் ராசிக் கதிபதி திசைமேல்
சுடர்நிலை வீதியென் றுரையே. (5)

வேறு.

காரிகைப் புருடன் வர்க்கம் கலைமதி திசைமே லொன்றில்
தேருவ தாண்களிரண்டுத் தெரிவைய ரொருமூன்றுகும்
வீரனும் புருடன்வித்தை மேன்மைக ளுடையன் செல்வம்
தாரணி புகழுவாழ்வன் சாற்றிடும் நந்திவாக்கே. (6)

கன்னியி லொருத்தியீனம் கணவனை டடுத்துவாழாள்
மின்னிய ருதுபெண்ணுக்கு மிகுத்திடும் பொருள்கள்மெத்த
பொன்னெடி பூஷணங்கள் பொருந்துவ ததிகமாகும்
நன்னயம் பலபேர் நாடல் நற்புக ழுடையளாமே. (7)

புகழ்மிக வுண்டாங் கர்ப்பம் புவிமிசை யிரெட்டாகும்
மகிழுடன் தீர்க்கமீரேழ் வளம்பெரு மாண்களெட்டு
சுகமது மெத்த வுண்டாம் தோகையர் தன்னிலேகம்
மகவிலா தாலையங்கள் மகிதலம் விளங்கச் செய்வள். (8)

கருதிய ருதுப்பெண்ணுயுள் கதிரவ னசுரமந்திரி
குருகிமன் னவன்தேர்பாகன் குரங்கிவர் திசைமொத்தாண்டில்
பருகிடும் நீரால்கண்டம் பற்றிடும் தவரிடாது
அரிபநாள் கால்மூன்றிற்கு வறிந்திடும் பலனிதாமே. (9)

உத்திரட்டாதி நாலாங்கால் பலன்.

சுகமிராள் முறசுநாற்கால் சொல்லுவோம் கேளும்பாலா
அகமதில் புருடனுக்கு அறுசுவை யோடுவன்னம்
மகிழுடன் பரிமாருங் கால்மனையினுள் ருதுவாமங்கை
ககனுதித் தீரைந்தொன்றுக் கடிகையாம் வுரைத்திடாயே. (1)

கண்டது புருடனுகும் கன்னியின் நிறங்கருப்பு
துண்டெனுங் கடினவாக்குத் துகில்நிறம் செகப்பில் வெண்மை
பண்டுள காலமட்டும் பற்கள்மிக் குருதியாகும்
பெண்டுக ளோடுசேராள் பெருத்திடும் தனங்களாமே. (2)

தனம்பொரு ளற்பமாகும் தையலர் வடிவில் குள்ளம்
கனம்பெல மெய்யதாகும் கருத்துளாள் புனுத்தில் மச்சம்
சினமது முன்னம் பின்னுல் தெளிவுளாள் பார்வை பக்கம்
மனதினில் துக்கமென்னும் வனிதையர்க் குரைப்பதீதே. (3)

தீதில்லைப் புருடன் வித்தைத் தேர்ச்சியன் னகர்க்குவேந்தன்
ஆதியா மனையிற் பொய்கை யமர்ந்திடும் நிருதிமூலை
வீதிகிழ் மேலாம் வாசல் மேற்கெதி ராலையங்கள்
வேதனைப் படுவன் தென்கீழ் வீட்டதிபதி யாரோனே. (4)

வீட்டினில் புருடன் வர்க்கம் விளங்கிடு மாண்கள் மூன்று
போட்டியா மன்னியநாட்டில் புகழ்பெர வாழ்வதேகம்
நாட்டினில் பெண்களிரண்டு நயம்படாதொன்று மத்தியம்
பாட்டினில் சமர்த்தன் மூன்றோன் பாரெலா மகிழுத்தானே. (5)

பாரினில் ருதுபெண்வர்க்கம் பாவையே யேகமாண்கள்
சூரியன் திசையில்பாதி துலங்குவ திரண்டு மற்றோன்
சீரதுகெட்டு நீசத்தெரிவையோ டன்னியமாரல்
தேருவாளன்னே தீர்க்கம் செல்வியாம் வர்க்கமூன்றே. (6)

தந்தையின் வர்க்கந்தன்னைத் தலத்தின்மீ தெடுத்துப்பேசில்
ஐந்திலொன் றிகழ்ந்த மொத்த மாகும்பெண் ணதி லொன்றுகும்
சிந்தையில் கவலையுள்ளோர் செழித்திடார் வர்க்கம் ஞஸ்தி
விந்தையாய் பிதாவேவிர்த்தி விளம்பிடும் நந்திவாக்கே. (7)

மாதுவின் றனக்குப்புத்ராள் வளர்ச்சிரெண் டாகும்பெண்கள்
சோதியின் திசைமேலொன்றுத் தோன்றிடு மதனில் பின்னம்
சூதிலை மூன்று மற்றோர்த் தொகைபெரும் வாழ்வாம் ஜேஷ்டன்
காதினில் ரோகமுண்டாம் காயமதுள நாள்மட்டும். (8)

நீலம்போல் விழியைகொண்ட நேரிழை தனக்கதாயுள்
சீலமாயுரைப்போம் நாற்பான் சேர்க்கையொன் திசைமொத்தா
ஞாலமீதரிட் டம்தப்பா னவின்றிடும்பிற் கொழுங்கோல் [ண்டில்
காலது நான்கினுக்குக் கருதிடும் பலனிதாமே. (9)

உத்திரட்டாதி நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

ரேவதி முதற்கால் பலன்.

குலமுதற் காலின்ருது பலன்வினவில்
கோதைவாழ் பதிக்குத்தென் வடக்கில்
சலசர மிகுந்த கெங்கையி னோரம்
சாற்றிடும் ருதுவதன் னிலைக்கு
கலிதிசை மிகுந்த மரங்கள் சூழ்வனமாம்
சுதிர்பதி சிறந்த வாலையங்கள்

புலம்துலையருகில் வியாழ்ஜ்ஜிய மிருவர்ப்
புகர்நிலை யரசுபுற் றுரையே. (1)

அரசுபுற் றருகில்துர்க்கை யாலயம்கீ
ழுத்திமாமுக னதற்கும் கீழ்
விரிவுள பாட்டை நாற்றிசையாகும்
விரும்பிடும் ருதுபெண்ணி னுடை
குருதிகா ரிவர்கள் வர்ணம் நாளதிகம்
கொண்டு மெய்செகப் பதிரூபம்
பெருகிடுஞ் செல்வம் வித்தையி லினியாள்
பிசகிடாள் மொழிந்த சொல்புகலே. (2)

அகமகிழ் சுகமாங் காமிபோகத்தி
லணைகுவாள் புருடனைத் தழுவி
நகைமுக மிரக்க மனதுளா ளென்னும்
நலியிலாள் புகழ்பதி விரதை
செகமதில் கனத்தக் குடும்பியா மறிந்தத்
தெரிவைமெய் கருப்பணிப் புடலை
புகர்நிறம் புதிதாமமுக் கிராசுமங்லி
புண்ணியவதி நடுவயதே. (3)

நடுவயதகத்தில் வடுவுறும் தனமொன்
றழகிரா சருங்கிடும் நதியின்
மடுவினில் மூவெட்டாண்டி லோர்கண்டம்
வந்துடன் நிவர்த்திவள் புருடன்
கொடியரை வதைப்பன் நகர்தனக் கதிபன்
குணமுளன் கனதன வித்தைப்
படிமிசைக் கீர்த்தி யரசர் சன்மானன்
பால்மதித் திசைபுத்தி ராமே. (4)

புத்தியில் சிறந்த ருதுபெண் வாழில்லம்
பூர்வமாம் தந்தையின் றனக்கு
அத்தனர்ப் புதல்வன் கோவில் தென்முகப்பு
அனுவழி திசையெதிர்க் கெங்கை
சித்திர மணிமீன் மூலைகாண்வீ தி
செப்பிடில் இழக்குமேல் மிதுனம்
ருத்திர பூமியதற்கு தென்பாகம்
கொடியிலா பாட்டை மூப்பிரிவே. (5)

பிரிவுமூன் றாகும் தந்தையின் வர்க்கம்
பெண்கள் மூவிரண்டதி லொன்று
பருவநாள் விதவை மூதுபெண் சோதரம்தேர்ப்
பாசனீச் சகத்திலென் திசையி
லரைதொகை யதிலா னிரண்டரி வைமூன்
றழிந்திடு மற்றது தழைக்கா
மருகுவர் ஜெனித்த நகர்தனி லன்னிய
மாரிடார் சுகமுள ராமே. (6)

கன்னியி னன்னோ சோரமாம் தீர்க்கம்
கடுஞ்சொலாள் சகோதர மருவா
மன்னவன் திசையாம் நடைகிழக் கெதிரில்
வளமிலார் வீதிதென் வடக்காம்
அன்னிய மதிலா னைகன்மற் றோர்க
ளகம்பொருள் பாக்கிய முளராம்
மின்னிடும் பெண்க ளிரண்டுமற் றவராண்
விதமிலா போகன் ஜேஷ்ட னென்றே. (7)

போகனு மீனவி யிரண்டிலொன் றன்னியம்
புவிமிசை மூதுவின்பெண் றனக்கு
பாகுடனீரைந் தரையிலாண் டினில்முன்
பார்க்கவன் திக்கதில் மனைமாம்
யூகவான் புருடன் கல்வியில் நிபுணன்
னுரைகன மேடைபாக் கியனும்
தோகையர் சேர்க்கை மிகுதியாம் புணர்ச்சித்
தொகைபல நூறெனச் சொல்லும். (8)

வேறு.

சொல்லுவோம் மூதுபெண் ணுக்குச் சுதன்விர்த்தி யிரண்டுபெண் [கள்
சல்லியன் திசையின்மொத்த சங்கையில் நாலிலொன்று
அல்லலா மிரண்டுமற்றோர்க் காயிசு தீர்க்கமாகும்
வல்லமை யுடையாரவர் வளம்பெறப் புவிமீதென்றே. (9)

கருதிய மடவாராயுள் கதிரவன் செந்தீ வண்ணன்
பிருகுடன் தெய்வமந்திரிப் பிரையிவர் திசைமொத்தாண்டில்
மரணமாம் ஜுரத்தால்பெற்ற மைந்தர்க ளருகில்சூழ
இரவிநாள் முதல்பாகத்திற் கியம்பிடும் பலனிதாமே. (10)

ரேவதி யிரண்டாங்கால் பலன்.

சூலம திரண்டாங்காலில் தோகையர் ருதுவதானுல்
ஞாலமீ தகத்திற்கீழ்பான் நாரணன் கோவில்பக்கம்
ஆலமென் விருக்ஷத்தின்கீ ழரிகிளம் பிரண்டொன்றின்மேல்
நாலுநா ழிகைநேரங்கு நடக்கையில் ருதுவாமோதை. (1)

ஓதுமன் னிலைக்குத்தெற்கு ஓடைமா கமுகு தென்னை
வீதிகீழ் மேலாமுத்தரம் வேந்தர்கட் டடமாமீனம்
வேதியன் மனையாமேடம் வெய்யவ னீச்சனில்லில்
சாதியில் தாழ்ந்தோன்போல்லான் தனமிலான் குடியனுமே. (2)

படிதனில் ருதுபெண்குள்ளம் பார்வைகீழ் விரிந்தநெற்றி
புடவைசேய் வர்ணம்கந்தைப் புகழிலாள் சுகங்க ளற்பம்
கடினசொல் வித்தையில்லாள் கருத்திடு மேனிகொங்கை
திடமுறும் காமமுள்ளாள் சீரிலா வாழ்வதாமே. (3)

சீரிலாள் புருடன்கண்டால் தியங்கியே பயந்துநிற்பன்
காரிகை பலபேரோடுக் கலந்துமே சுகிப்பளாகும்
போர்தனக் கஞ்சாள்மச்சம் புருவத்தின் கீழேதாணும்
பார்மிசைக் கண்டமாதுப் பலமிலா ரோகியாமே. (4)

பலமிலாள் கருத்தவர்ணம் பழமையா மாடைவெள்ளை
குலமதி லீனமாகும் குணமிலாள் புதல்வி யொன்று
நலமிலாள் சுபங்லிபருவம் நடுவய தின்றேறன் மாண்டுத்
தலமதில் மாதமொன்று சாற்றிடு மொழிதப்பாதே. (5)

கணவனுக் காதியாகும் காரிகை வாழுமில்லம்
குணதிசை முகப்புத்திதற்குக் குடியிலா மனையாம்வீதி
கணையினு ளதிபர்க் குச்சோன் கலைமதிப் புதல்வன்திக்காம்
தூணவனைக் கொன்றோன் வீடு சுரகுரு மூலைசொல்லே. (6)

சொல்லுவாய்ப் புருடன்வர்க்கம் சுகமில்லை யேகமாகும்
மெல்லியா லிரண்டிலொன்று விதவையாம் ருதுவாகாமுன்
வல்லவன் பூமிமூலம் வளமுளான் மனைவியாலே
தொல்லைகள் மிகவுண்டாகி சுகமற்ப மாகுந்தானே. (7)

சுகம்பெரும் ருதுபெண்வர்க்கம் சோமனுர்த் திசையிற்பாதி
செகமதி லாண்கள்மூன்று செழித்திடும் பெண்கள்ரெண்டு
வகையிரா தன்னைவர்க்கம் வனிதைரெண் டாண்களில்லை
பகையதாம் பிதுர்மாதுர்க்குப் மடிமிசை மனைவெவ்வேறே. (8)

மங்கையின் றந்தைவர்க்கம் மாலியின் திசைமேலொன்றில்
திங்களின் திசையிற்பாதித் தேருவ தாகுமாண்கள்
செங்கதிர் திசையிற்பாதி தெரிவையர் மற்றோர்ப்பூவில்
பங்கமில் கிருஷ்மூலம் பாக்கிய மூளராவாறே. (9)

வேறு.

ஆகுமே ருதுபெண் றனக்குமுன் மதிசே
யாண்டினில் மணங்கெர்ப்ப மறிகில்
வேகமாய் வளர்ந்தீ ராறினி லரிட்டம்
வேதனைப் பிணியினு லிரண்டு
சோகமாம் பின்னும் திருதியக் கெர்ப்பம்
தோன்றியே பிறந்துடன் மரணம்
பாகுடன் காலாந் திரத்தினி லொருபெண்
பரஸ்தலம் பிறப்பது நிலையே. (10)

நிலையது தீர்க்க வயதுள தாகும்
நேமியில் மிகுந்தசுந் தரமாம்
தலமதில் கனவான் றனக்கிவள் மனைவி
சாற்றிடும் ருதுவின்பெண் ணுயுள்
கலைமதி யசுர மந்திரிப் புலவன்
கதிரிவர் திசையின்மொத் தாண்டில்
புலமதி லரிட்ட முரைத்திடும் புவிமேல்
புருடநாள் காலிரண் டினுக்கே (11)

ரேவதி மூன்றாங்கால் பலன்.

இரவிநாள் மூன்றாங் கால்ருது பலமே.
ரியம்பூவோ மனைக்குள் பின்புறத்தில்
கருவிழிமாது அணிந்திடும் துகிலைக்
கலந்துநிர் வாணமா யமர்ந்துப்
பொருதிடுங் குளிக்கும் வேளையில் ருதுவாம்
பொழுதுதித் தாறுவேழ் கடிகை
அருமையாய் வளர்க்கும் தாயதுசமய
மறிந்தன னெனவுரைத் திடுமே. (1)

ருதுபெண்ணி னுடைத் திருதிய வர்ணம்
நோய்முகன் குருதியந் தனன்காண்

பதிவிரதை மெய்சேய் நிறமழ குள்ளாள்
பாக்கிய வதியடக்க முளாள்
மதிநிலை மருசொல் லமுதமாங் கூந்தல்
வளர்ச்சியாம் தனமெதிர் காணும்
விதிமிக வுண்டாம் புத்திர பாகம்
விளங்கிடா தெத்து புத்திரனே. (2)

புத்தியில் சிறந்த குணவதி யறிந்தப்
பூவையின் நிறம்செகப் பாரும்
மத்திப வயதில் காலது வூனம்
வடிவுளாள் சுமங்கலி யாடை
முத்துபோல் முழுதும் புள்ளிகள் நிறையும்
முதுமைநல் லுயர்ந்தபட் டுலகில்
உத்தமி யெனப்பேர் மேலதாம் பதவி
யுறுமிகப் புண்ணிய வதியே. (3)

காரிகைவாழும் பதிபிதாப் பூர்வம்
கனமூன யாம்கிண றுளதாம்
பார்மகன் முகப்பு வீதிதென் வடக்குப்
பாழெதிர் மூனவன வாசம்
ஆரலாங் கிழக்கு சந்துவீ சான்ய
மாலையங் கிணறுடன் ரதமாம்
சீர்திசைக் குளமோர் பொய்கைபாழ் வாயுவு
தென்னை மாசுடலை வோடையென்றே. (4)

ஓடையின் கீழ்பா னேரியாம் வடக்கி
லோர்மூன தள்ளியப் பாலோர்
மேலடையாம்பாக மிருவரி லொருவன்
வேந்தனு மூனவிகள் மூவர்
நாடிடும் ருதுபெண் தந்தையின் வர்க்கம்
நாலிரண் டெண்பெண்க ளுந்தில்
வாடிடுங் கனிட்ட பெண்பிணி தன்னுல்
வளமுளார் வர்க்கமென் பதுவே. (5)

வேதனையில்லை மங்கையின் வர்க்கம்
வெய்யவன் திசையின்மே லிரண்டெண்
மாதர்க ளதில்மூன் றவனியின் மீது
மாதுரு சமோதா முரைக்கில்

சூதனுமொருவன் மணமிலான் துஷ்டன்
சுகமிலான் பலவிடம் திரிவன்
ஓதும்பின் னொருவன் நிலைதனில் நலமா
முயர்பெருங் கல்விபொன் னுளனே. (6)

பொன்னுளன் பெண்கள் திருதியம் விர்த்திப்
புவிமிசை ருதுவின்பெண் றனக்கு
மன்னவன் திசையாண் டினிலரை யிரண்டில்
மணம்பசு திசையில்முன் னுளதாம்
தன்னுடன் மூன்று சகோதரம் புருடன்
தனமுளான் கருத்திடு மேனி
கென்னிய முடையன் வீதிகீழ் மேலாம்
கீர்த்தியன் நடைவடக் கென்றே. (7)

வேறு.

காரிகை தனக்குக் கெர்ப்பம் கலைமதி திசைமே லொன்றில்
கூரிடும் விர்த்திரெண்டுக் கோதைய ராகுமாண்பால்
தேரிடா விர்த்தியில்லை செல்வனில் லாததுக்கம்
பாரினில் தெத்துபுத்திரன் பண்புட னெடுப்பதாமே. (8)

தலமதில் மடவாருக்குச் சாற்றுவோ மாயுள்பாகம்
கலைமதி யருக்கன்புந்திக் கதிர்மக னெடுபெளமன்
சொலுமிவர் திசைமொத் தாண்டில் ஜாரத்தினு லரிட்டமாவள்
குலமதின் கால்மூன்றிற்குக் குறித்திடும் பலனிதாமே. (9)

ரேவதி நாலாங்கால் பலன்.

கனமுளக் கடைநாள் பாதம்நான் கினுக்குக்
கன்னியின் ருதுநிலை யறிகில்
மனையுள்மான் திக்கில் பசுத்தொழு வோரம்
மங்கையர்ப் பலரரு கிருக்க
இனன்முளைத்திரு நாழிகை யளவினிலா
மியம்பிடும் பிதுர்ப்பதிப் பூர்வம்
தனமுளன் கீழ்மேல் வீதிதென் முகப்புத்
தரைமிசைப் பெருத்த கட்டடமே. (1)

மங்கையின் வடிவம் சமமழ குள்ளாள்
மானிறம் துகில்முழு வெள்ளை

பங்கமில் லழுக்குப் புதியதாம் கண்கள்
பருத்திடும் சுசிகர முடையாள்
கொங்கைக ளேந்தும் நீண்டிடுங் கூந்தல்
குணமுளாள் மிகுந்த பாக்கியமாம்
சங்கையில் போக வதிவித்தை யுள்ளாள்
ஜகப்புகழ் கறபுளத் தையல். (2)

தையலைக்கண்ட நாரிமெய் செகப்புத்
தரித்திடும் புடவைமால் வர்ணம்
வெய்யவன் நிறமுங் கலந்திடும் பழமை
விளங்கிடும் வயதுகாம மூளாள்
பொய்யிலாள் முகத்தில் மருசுமங் கிலிதன்
புருடன் வாலிபம்பெரும் தனவான்
மெய்யுளான் ஞான சாஸ்திர மறிவன்
வெகுஜனப் பிரியனும் விளம்பே (3)

பிரியமா யுரைப்போம் தரைமிசைப் பாலா
பிதுர் சகோதரமரு வரிலாண்
இருவர்பெண் ணதிலொன் றீனமற்றோர்க
ளிசைப்பது சுகமுள ராகும்
கருதுமெல் லோர்க்குங் கனிட்ட பெண்சோரம்
கள்ளமாம் தெரிந்திடா தெவர்க்கும்
துரிதமாய் நடப்பள் சுருண்டிடுங் கூந்தல்
சுதனிலா ளறிகுவை தாமே. (4)

ஏகமாம் ருதுப்பெண் முன்னிலார் பின்ன
ரியம்புமா ணிரண்டதில் கனிட்டன்
பாகுடன் மடவா ரனேகரைப் புணர்வன்
பகையுளன் களத்திரமீ தது
வேகமா யிருபத் தாறினி லிரண்டாம்
விவாகமாம் தாரம திருக்க
யூகமாமதுகா லமுதல்சற் குணமெய்
யுதிரன் வர்ணம தழகாமே. (5)

அழகுளா ளன்னை மிகுத்திடும் சுகங்க
ளாயுசு தீர்க்கம தெழுபான்
விழுதினைக் கூந்தல் கற்புளாள் வர்க்கம்
வெய்யவன் திசையின்மே லிரண்டில்
பழுதொரு மூன்றும் படிமிசை மற்றோர்
பாக்கிய முளர்திரு தியத்தோன்

விழிவய திருபத் திரண்டிலொன் றானம்
விளம்பிவன் புவிக்கதி பதியே. (6)

அதிபனு மூன்று மணமதுப் புரிந்து
மற்பமாம் புதல்வர்கள் வீர்த்தி
மதியுள ருதுபெண் றனக்குமுன் னுன்கா
மாண்டிற்பொன் திக்கில்முன் மணமாம்
புதைபொருள் தன்னுல் பெரும்த்தங் கீர்த்திப்
பூர்வசொத் தொன்றிலான் புருடன்
நிதிவளர் மதிபோல் வளர்ச்சியா மென்மேல்
நிகழ்த்திடும் சுகமுள னுமே. (7)

சுகமுறும் புருடன் மெய்செகப் புயர்ந்தோன்
துஷ்டரோ டனுகிடான் ருதுபெண்
ணகமகி முதிக்கும் புத்திரர்ப் பலன்க
ளறைந்திடில் வீர்த்தியாண் மூன்று
ஜெகமதில் பெண்பா லொன்றுபின் புவியில்
ஜெனிக்கினும் நிலைத்திடா தரிட்டம்
பகலவன் திசைமூன் றெட்டிலோர்க் கண்டம்
பாவையர்க் குரைத்திடத் தகுமே. (8)

சுந்தர முள்ள ருதுவின்பெண் றனக்குச்
சுகர்திசைத் தொகையிலோர்க் கண்டம்
வந்துடன் நிவர்த்தி யையம்பதே ரழில்
மாரகம் சுமங்கலி யாசு
விந்தையாய் மோக்ஷ மடைகுவள் தோணின்
விளங்கும் கால் நான்கதின் பலனும்
சிந்தையு மகிழப் புவிமிசைப் பெண்கள்
சிறப்புறும் ருதுபல னிதுவே. (9)

ஆகமொத்தம் 931.

ரேவதி நக்ஷத்திரப்பலன் முற்றிற்று.

விவாஹ பொருத்த வியல்பு.

(அசுவனி.)

கூரிய வசுபதிக்குக்
குதிரையாம் விருகூமெட்டி
வீரியகணமோ தேவ
மிகுந்த ராசாளி பட்சி
சீரிய அடியநூலாஞ்
சிறந்த தோரி ராசிமேடம்
பாரியசெவ்வாய் சென்மம்
பகர்ந்தனர் கிழக்குவாசல்.

(இ-ள்.) அசுவனி நக்ஷத்திரத்திற்கு யோனி, ஆண் குதிரை, விருகூம்,வய ரம் எட்டி, கணம், தேவம், பட்சி, ராசாளி, நூல், பாதம், ராசி, மேடம், சென்ம வாரம், செவ்வாய், திசை, கிழக்குவாசல் பொருந்து மென்பதாம். (எ-று.) (1)

(பரணி.)

பரணி நாற்காலி யாணை
பறவைநீர் காக்கை நெல்லி
வாமிகு வாசஞ் செவ்வாய்
வடவுடன் குரங்கு நூலாம்
விரவிய கணமோ மக்கள்
மேவிய கிழக்கு வாசல்
திரணிய மேஷ ராசி
தெரிந்துநீ யறிந்து கொள்ளே.

(இ-ள்.) பரணி நக்ஷத்திரத்திற்கு யோனி ஆண்யானை, பட்சி, காக்கை,விரு கூம் வயிரம் நெல்லி, சென்மவாரம் செவ்வாய், நூல் தொடை, கணம் மானு ஷம், திசை கிழக்குவாசல், இராசி மேடம், என்பதாம். (எ-று.) (2)

(கார்த்திகை.)

கார்த்திகை மயில் வெள்ளாடு
காசினி விருகூ மத்தி
நேத்தியாங் கண மரக்கன்
நீசநாள் வாரஞ் செவ்வாய்
சாத்திய வயிற்று நூலாஞ்
சதிருடன் கிழக்கு வாசல்
சூத்திர மறிந்து பார்த்து
சொல்லுமிப் படிக்குக் காணே.

(இ-ள்.) கார்த்திகை நக்ஷத்திரத்திற்கு, பட்சி மயில், யோனி பெண், வெள்ளாடு, விருக்ஷம், பால் அத்திமரம், கணம் ராக்ஷஸம், சென்மவாரம் செவ்வாய், சுக்கிரன், நூல் வயிறு, திசை, கிழக்கு வாசல், முதல்பாதமானுல் இராசி மேடம் என்பதாம் (எ-று.) (3)

(ரோகணி.)

ரோகணி பாம்பு பக்ஷி
யாங்தையோர் விருக்ஷம் நாவல்
பார்குண மாலே வெள்ளி
பகையிலாக் கழுத்து நூலாம்
பேர்கணி யிடப ராசி
பேசுவார் கிழக்கு வாசல்
ஏர்கணி கணமா மக்க
ளென்றனர் தமிழ்வல் லோரே.

(இ-ள்.) ரோகணி நக்ஷத்திரத்திற்கு யோனி, ஆண் நாகம், பட்சி ஆந்தை விருக்ஷம் பால் நாவல் மரம், சென்மவாரம் புதன், வெள்ளி, நூல் கழுத்து. இராசி இடபம், திசைகிழக்கு, வாசல் கணம் மானுஷம் என்பதாம் (எ-று.) (4)

(மிருகசீருடம்.)

நேசமா மிருக சீரம்
நிலைபெருஞ் சாரை கோழி
மாசிலாக் கணமுந் தேவ
மாங்கருங் காலி வெள்ளி
தேசமாம் புகழ்வை காசி
சிரத்தூநூல் கிழக்கு வாசல்
நேசமாம் ரிஷப ராசி
நியமித்தோர் பெரியோர் தாமே.

(இ-ள்.) மிருகசீரிடம் நக்ஷத்திரத்திற்கு, யோனி அலிசாரை, பட்சி கோழி கணம் தேவம், விருக்ஷம், வயிரம், கருங்காலி, சென்மவாரம். புதன் சுக்கிரன் நூல் சிரசு, திசைகிழக்கு, வாசல், இராசி ரிஷபம் என்பதாம். (எ-று.) (5)

(திருவாதிரை.)

ஆதிரை தனக்கு நாற்கா
லணங்குநாய் பக்ஷி அன்றில்
சோதிநூல் கழுத்தில் நிற்குஞ்
சுயகண மனித ராகுந்
தீதிலாத் தென்கீழ் வாசல்
செங்கருங் காலி யென்பர்

போதகம் புதனுள்ளீசம்
புகழ்ந்தனர் மிதுனந்தானே.

(இ-ள்.) திருவாதிரை நக்ஷத்திரத்திற்கு யோனி பெண்நாய்.பட்சி அன்றில் நூல் கழுத்து, கணம் மானுஷம், திசைதென்கீழ் வாசல், விருக்ஷம் வயிரம். செங் கருங்காலி. சென்மவாரம் புதன், இராசி மிதுனம் என்பதாம் (எ-று.) (6)

(புணர் பூசம்.)

புணர்தம் நாள்நாற் காலம்பெண்
பூனையே அன்னம் பக்ஷி
உணர்வது தென் கிழக்கு
வுயர்கண மனித ராகும்
மணமது மார்பு நூலாம்
வயிரமாம் மூங்கி லாகும்
குணமது மிதுன ராசி
கொடும்புத ஞாளை நீசம்.

(இ-ள்.) புணர் பூச நக்ஷத்திரத்திற்கு, யோனி, பெண் பூனை, பட்சி, அன் னம், திசை தென் கிழக்குவாசல், கணம் மானுஷம், நூல் மார்பு, விருக்ஷம் வயி ரம் மூங்கில், இராசி மிதுனம், சென்மவாரம் புதன் என்பதாம் (எ-று.) (7)

(பூசம்.)

நாடிய பூசம் நாற்கால்
நற்புலிக் கிடாய்நீர்க் காகம்
ஓடிய அச்சு நல்ல
விருக்ஷமாங் கனைமுக் தேவர்
சூடிய குறங்கு நூலாம்
சொல்லுதன் கிழக்கு வாசல்
தேடிய கடக ராசி
தீதுநாள் வாரந் திங்கள்.

(இ-ள்.) பூச நக்ஷத்திரத்திற்கு யோனி, ஆண், யாடு, பட்சி, நீர்க்காக்கை விருக்ஷம் பால், அரசு, கணம் தேவம், நூல் தொடை, திசைகிழக்கு வாசல் இராசி கடகம், சென்மவாரம் திங்கள், என்பதாம் (எ-று.) (8)

(ஆயிலியம்.)

கருது மாயிலியம் நாற்கால்
கடுவமாண் பூனை யாகும்
விருதுவிச் சுளியாம் பக்ஷி
விளங்குநா லடியி னீற்கும்

பொருந்திய தெற்கு வாசல்
போற்றிய விருக்ஷம் புன்னை
திருந்திய கண மரக்கன்
திங்களாங் கடக ராசி.

(இ-ள்.) ஆயிலிய நக்ஷத்திரத்திற்கு யோனி ஆண்பூனை, பக்ஷி சிற்சிலி நூல் பாதம், திசைதெற்கு வாசல், விருக்ஷம் பால்புன்னை, கணம் ராட்சசம், சென் மவாரம், திங்கள், இராசி, கடகம், என்பர் (எ-று.) (9)

(ம க ம்.)

மகந்தனக் கெலியாண் பக்ஷி
வன்கழு கண மரக்கன்
சுகந்தரும் விருக்ஷ மாலாம்
சொல்லுவாய் தெற்கு வாசல்
நகங்கயி றடிய தாகும்
காற்காலி ராசி சிங்கம்
பகர்ந்தது பானு வாரம்
பாரினி லறிந்து கொள்ளே.

(இ-ள்.) மகம் நக்ஷத்திரத்திற்கு யோனி, ஆண், எலி, பட்சி கழுகு, கணம் ராட்சசம் விருக்ஷம் பால் ஆல், திசை தெற்கு வாசல், நூல் பாதம், இராசி சிங் கம் சென்மவாரம் ஞாயிறு என்பதாம் (எ-று.) (10)

(பூ ர ம்.)

பூர நக்ஷத்திர நாற்கால்
பெண்மெலி கழுகு போந்த
வாரநாள் கதிர் விருக்ஷம்
மருமரம் ராசி சிங்கம்
கோடக் கணமேம மக்கள்
குறங்கினிற் கயிறு நிற்கும்
நேர்பெருந் தெற்கு வாசல்
நெடியமா லுரைத்த வாமே.

(இ-ள்.) பூரம் நக்ஷத்திரத்திற்கு யோனி பெண் எலி, பட்சி கழுகு, சென்ம வாரம் சூரியன், விருக்ஷம், பால்மரா, இராசி சிங்கம், கணம் மானுஷம், நூல் இ டைய, திசை தெற்குவாசல் என்பர் (எ-று.) (11)

(உ த் தி ர ம்.)

உத்திர மெருது பக்ஷி
மரங்கொத்தி வயிற்று நூலோர்
சித்திரக் கணமேம மக்கள்

சிறந்தது தெற்கு வாசல்
பத்தியாங் கன்னி ராசி
பால்மரம் அரளி யாகும்
வித்தையாம் புதனுள் நீசம்
வேதநூல் விபரந் தானே.

(இ-ள்.) உத்திர நக்ஷத்திரத்திற்கு, யோனி, ஆண் எருது, பட்சி மரங் கொத்தி, நூல் வயிறு, கணம் மானுஷம், திசை தெற்குவாசல் இராசி கன்னி விருக்ஷம் பால் அரளி, சென்மவாரம் புதன் என்பதாம் (எ-று.) (12)

(அ ஸ் த ம்.)

நிலைபெரும் அஸ்தம் கன்னி
நின்றபெண் ணெருமை பட்சி
தலைமைசெம் பிராந்து தெய்வ
கணமது தானே யாகும்
விலகிய விருக்ஷ மாந்தி
வீடது தென்மேற் காகும்
பலகலை கழுத்து நூலாம்
பகருவாய் புதனுள் நீசம்.

(இ-ள்) அஸ்த நக்ஷத்திரத்திற்கு இராசி கன்னி, யோனி, பெண்ணெருமை பட்சி பருந்து, கணம் தேவம், விருக்ஷம் பால், அத்தி, திசை தென்மேற்கு வாசல் நூல் கழுத்து சென்மவாரம் புதன் என்பதாம் (எ-று.) (13)

(சி த் தி ரை.)

சித்திரை புலியாணருஞ்
சிறந்தமே தார் விருக்ஷம் வில்வம்
வெற்றியாங் கருடன் பட்சி
விலங்கிய புதனுள் நீசம்
மத்தியங் கணமரக்கன்
மனைகள் தென்மேற்குவாசல்
அத்துடன் துலாமி ராசி
அறைந்தனர் சிரசில் நூலே.

(இ-ள்) சித்திரை நக்ஷத்திரத்திற்கு யோனி ஆண்புலி, விருக்ஷம் வயிரம் வில்வம், பட்சி, கருடன், சென்மவாரம் புதன், கணம் ராட்சசம், திசை தென்மேற் குவாசல், இராசி, துலாம், நூல் சிரசு, என்பதாம் (எ-று.) (14)

(சு வ ா தி.)

சோதி நாளொருமை யாணாய்
சொல்லலாந் தேனீயாகும்

நீதிசேர் மருதமாகும்
நிறைகணந் தேவராகும்
ஆதிநூல் கழுத்தில் நிற்கும்
ஆதிக்கந் துலாமே வெள்ளி
கோதிலா மேற்குவாசல்
கோருமைப் பசியே நீசம்.

(இ-ள்) சுவாதி நக்ஷத்திரத்திற்கு யோனி ஆண்எருமை, பட்சி தேனீ, விருக்ஷம் வயிரம் மருதம், கணம், தேவம், நூல் கழுத்து, இராசி துலாம், சென்ம வாரம் வெள்ளி, திசை மேற்கு வாசல் என்பதாம் (எ-று) (15)

(விசாகம்.)

சீர்பெரும் விசாக நாற்கால்
சிறந்த பெண் புலியேயாகும்
நேர்பெரும் விளாவிருக்ஷம்
நிலைசெவ்வால் குருவிபட்சி
பேர்கண மரக்கராகும்
பெருகுநூல் கொற்பமாகுஞ்
சேர்விலா துலாமே மேற்கு
சொந்தமாம் வெள்ளிநீசம்.

(இ-ள்) விசாகம் நக்ஷத்திரத்திற்கு யோனி பெண்புலி, விருக்ஷம் வயிரம் விளா, பட்சி செவ்வால் குருவி, கணம் ராட்சசம், நூல் வயிறு, இராசி துலாம், திசை மேற்குவாசல், ஜென்மவாரம் வெள்ளி என்பதாம் (எ-று.) (16)

(அனுடம்.)

உன்னிய அனுஷம் பெண்மான்
ஒங்கிய மகிழ விருக்ஷம்
பன்னிய சக்கிரவாளப்
பட்சியாங் கணமுந்தேவர்
முன்னிய குறங்கு நூலாம்
மொழிவது செவ்வாய் நீசம்
பொன்னிறமான மேற்கு
புகழ்ந்திடும் பெரியோர் முன்னே.

(இ-ள்) அனுஷ நக்ஷத்திரத்திற்கு யோனி பெண்மான், விருக்ஷம், வயிரம், மகிழ், பட்சி, சாதகம், கணம், தேவம், நூல் இடை, சென்மவாரம் செவ்வாய், திசை மேற்கு வாசல், இராசி விருக்ஷகம் என்பதாம் (எ-று.) (17)

(கேட்டை.)

கேட்டையோ கலைமாஞற்கால்
கேடிலாச் சாதகப்புள்

நீட்டிய பிராய் விருகூம்
நிலை கணமரக் கராகும்
சூட்டு வர்காலி நூலாம்
சுற்றக மேற்குவாசல்
நாட்டிய செவ்வாய் நீச
நலந்தரும் ராசிதமேள.

(இ-ள்) கேட்டை நக்ஷத்திரத்திற்கு யோனி, ஆண்மான், பட்சிசாதகப் புள், விருகூம் வயிரம் பிராய், கணம் ராட்சசம், நூல் பாதம், திசைமேற்குவாசல் சென்மவாரம் செவ்வாயாய், இராசி விருகூக மென்பதாம் (எ-று.) (18)

(மூ ல ம்.)

மூலமே மூங்கில் பெண்ணாய்
மொழி புள்ளு செம்போத்தாகும்
சாலவே கணமரக்கன்
தறித்த நூல்காலிலாகும்
கோலிய மனைக்குவாசல்
குறித்தது வடமேற்காகும்
தேதலிய குருவே நீசம்
தெளிந்த வில்லிராசியாமே.

(இ-ள்) மூலம் நக்ஷத்திரத்திற்கு விருகூம் வயிரம் மூங்கில், யோனி பெண் நாய், பட்சி செம்போத்து, கணம் ராட்சசம். நூல் பாதம், திசை வடமேற்கு, வாசல் சென்மவாரம், வியாழம், இராசி தனசுவென்பதாம் (எ-று.) (19)

பூ ரா ட ம்

பூராட மாண்குரங்கு
பொழி வஞ்சி வானின்கோழி
தேரான கணமோமக்கள்
தீது நாள் வியாழ நீசம்
பாரான குரங்கு நூலாம்
பார்மனை வடமேற்காகும்
நேரான தனுராசி
நிச்சய முனிவர் சொன்னார்.

(இ-ள்) பூராட நக்ஷத்திரத்திற்கு யோனி ஆண்குரங்கு, விருகூம் பால் வஞ்சி, பட்சி போண்டம், கணம் மானுஷம், சென்மவாரம் வியாழம், நூல் இடை. திசை வடமேற்குவாசல் இராசி, தனுசு, வென்பதாம் (எ-று.) (20)

(உ த் தி ர ா ட ம்.)

திருந்திய வுத்திராடந்
திணி பசுமலடாகும்

பொருந்திய பலாவிருக்ஷம்
புகழ்பட்சி வலியனுகும்
வருந்திய கணமோமாந்தர்
வடக்கது மகர நீசம்
அருந்திய வயிற்று நாலாம்
அமரர்க ளுரைத்த வாறே.

(இ-ள்) உத்திராடநக்ஷத்திரத்திற்கு யோனி மலட்டுப்பசு, விருக்ஷம் பால் பலா, பட்சி வலியன், கணம் மானுஷம், திசை வடக்குவாசல், சென்மவாரம் சனி வியாழம், தூல் வயிறு, என்பதாம் (எ-று.) (21)

(திருவோணம்.)

திருவோணம் பெண்குரங்கு
திருந்திய மரமெருக்கு
மருவிய கணமூன்தேவர்
மகிழ்மரை வடக்குவாசல்
உருவம் வான்கோழிபட்சி
உற்றது கழுத்து நாலாம்
அருஞ்சனி மகரஞ் சென்மம்
அருந்தவருரைத்த வாறே.

(இ:ள்) திருவோண நக்ஷத்திரத்திற்கு யோனிபெண்குரங்கு, பால் எருக்கு, கணம் தேவம், திசைவடக்குவாசல், பட்சி வான்கோழி, த்து, சென்ம வாரம் சனி, இராசி மகரம் என்பதாம் (எ-று) (22)

(அவிட்டம்.)

அவிட்டம் பெண்சிங்கம் பட்சி
யாம் வண்டு மரமோ வன்னி
தெவிட்டமாங் கணமரக்கன்
சிரசினிற் கயிறதாகும்
நிவிட்டமா மகரகும்பம்
நிச்சயஞ் சனிநாள் நீசம்
சவிட்டு மண்வடக்குவாசல்
சாஸ்திர மறிந்து சொல்லே.

(இ-ள்) அவிட்ட நக்ஷத்திரத்திற்கு யோனி பெண்சிங்கம், பட்சி பொன்வண்டு, விருக்ஷம் வயிரம் வன்னி, கணம் ராட்சசம், நூல் சிரசு, இராசி மகரம் கும்பம் சென்மவாரம் சனி, திசை வடக்குவாசல் என்பதாம் (எ-று.) (23)

(சதையம்.)

சதையம் பெண்குதிரைபட்சி
சாற்றிய அண்டங்காகம்

விதை மாங்கடம்பு நூலோ
விளங்கிய மார்பிலாகுங்
கதைகண மரக்கன்ராசி
கருதியகும்ப மாகுஞ்
சிதைவிலாவடக்கு வாசல்
செப்புவர் சனிநாள் நீசம்

(இ-ள்.) சதைய நக்ஷத்திரத்திற்கு யோனி பெண் குதிரை, பட்சி அண்ட ங்காக்கை, விருக்ஷம் வயிரம்கடம்பு, நூல் கழுத்து, கணம் ராட்சசம், இராசி கும்பம், திசை வடக்குவாசல், சென்மவாரம், சனி, என்பதா (எ-று.) (24)

(பூரட்டாதி.)

புரட்டையாண் மனிதன் தேமா
விருக்ஷமாம் புள்ளேயுள்ளான்
சிருட்டிய கணமே மாந்தர்
செப்புவர் வயிற்று நூலாம்
மருட்டிய கும்பராசி
வாசலும் வடக்கதாகுந்
திரட்டிய சனியன் வாரஞ்
செப்பினர் காலந்தேர்ந்தோர்.

(இ-ள்.) பூரட்டாதி நக்ஷத்திரத்திற்கு, யோனி ஆண்மனிதன், விருக்ஷம் பால் தேமா, கணம் மானுஷம். நூல், வயிறு, இராசி கும்பம், திசைவடக்குவாசல் பட்சி, உள்ளான், சென்மவாரம் சனி, என்பதாம் (எ-று.) (25)

உத்திரட்டாதி.

உத்திரட்டாதி நாற்கால்
பாற்பசு விருக்ஷம் வேம்பு
மத்தியாங் கணமே மாந்தர்
பறவை சேரட்டான் முனுகும்
மித்திரங் குறங்கு நூலாம்
வியாழந்தான் வாரமாகும்
சித்திர மீனராசி
சிரகம் வடகிழக்கே.

(இ-ள்.) உத்திரட்டாதி நக்ஷத்திரத்திற்கு, யோனிபெண் பசு, விருக்ஷம் பால்வேம்பு, கணம் மானுஷம், பட்சி கோட்டான், நூல் தொடை, சென்ம வாரம் விழாம். இராசி மீனம். திசை வடகிழக்கு வாசல். என்பதாம் (எ-று.) (26)

(ரேவதி.)

ரேவதி பெட்டை யாணை நிகழ்பட்சி வல்லூராகும்
தூபதி கணமுந்தேவன் துளிர்மர மிலுப்பை பாலாம்
பூபதி காலில் நூலாம் பொருள் மீனம் வியாழம்வாரம்
மாபதிவட கிழக்கு வாசலாம் வழுத்து நூலே.

(இ-ள்.) ரேவதி நக்ஷத்திரத்திற்கு யோனி பெண் யானை, பட்சி வல்லூர் கணம் தேவம், விருக்ஷம் பால் இலுப்பை, நூல் பாதம், இராசி மீனம், சென்ம வாரம் வியாழன், திசைவடகிழக்கு, என்பதாம் (எ-று.) (27)

பெண்கள் ருது பலன்.

மேடம்—ரிடபம்.

வலுத்தபெண்கள் ருதுகாலந் தனிலேமேடம்
வலுமாகி லாரலோ ரத்தில் சந்தாம்
பெலத்தமனை தனைவிட்டு வெந்த மண்ணில்
பெலனென்க நிலைகண்ட பேர்விதவை யாகும்
தலந்தனிலே ரிடபமெனில் செங்கையோரம்
தரும்புளி விருக்ஷகத்தி னேரமாகும்
சலித்தமனை யருகினிலே முதிர்ந்தவய துடையாள்
தன்மைசுமங் கலிபார்வை சாற்றுவர்நற் பலனே. (1)

மிதுனம்.

வருமிதுன மாகிலிவை ஆலயத்தி னேரம்
வலுவுடைய விருக்ஷகங்கள் வருஞ்சாயல் தனிலுந்
தருமூன்று பெண்களுடன் கூடியே செல்லல்
தனிக்கரத்தில் தாதுவர்க்கந் தன்னையே பிடித்தல்
பெரும்வயதா யுள்ளபெண்கள் சிரந்தொட்டே யிருப்பள்
பேருமந்த காலத்தில் பேதைகுறி யாகும்
திருதியம்பெண் ணதிலிருவர் சமவயதா மென்று
திருஞ்சொல்வ ரிப்பலன்கள் திரமையென்றே. (2)

கடகம்.

திரமாய்க் கடகந் தன்னிலே யிருது
சிறந்திடு நிலைநதிக் கரையாம்
பாரமாய் நிறைநீர் குடமதை யெடுத்து
பற்றியே கிழ்திசை செல்லல்
கூரிய சுமங்கலி வாலிப மூள்ளாள்
சுபமதாய் காணல் காணிதுவே
தேரியே யின மோஜனஞ் செய்தாள்
திரமிது நிலையெனப் படுமே. (3)

சிம்மம்—கன்னி.

அரிதனில் நிலமை ஆலயமத்திய
மடர்செடி யோரமா மதனிற்
பிரிவது தன்னுல் கண்டிபின் னுரைத்தல்
பேதையோ வமங்கலி யுடனே
நெரியதா யுரைத்தல் கன்னியே யாகில்
நிலைகிளை நதியினு ரத்தில்
குரியதாம் பெண்ணை சுமங்கலி காணல்
கொடியமோய் துன்பம்வந் தகலும். (4)

துலாம்—விருச்சிகம்.

துலைதனில் மேட்டினேரம்
சொல்வது மனையின் சந்து

குலமணி மாடு கன்று
கூடிய நிலையிலென்க
விலையதாம் பெண்ணை கண்டாள்
மிக்கதேள் தன்னில் தோப்பாம்
ஜலமது மூழ்கச் செல்லல்
தையலர்க் கூடு நட்டே. (5)

தனுசு.

சிறந்த தனுசு வருமாகில்
சிரிய மனையாங் கட்டடத்தில்
பிறந்தமனைக்குத் தென்பக்கம்
பேதை சுமங்கலிதான் காணல்
இறந்தோர்துக்கந் தணைக்கேட்டல்
இடராம் பசியாய்த் தானிருக்கல்
குறைந்தரூப முள்ளவளே
கூடிப் பார்வை யெனச்சொல்லே. (6)

மகரம்.

சொல்வது மகர மாகில்
சூழ்மனை [illegible]
வெல்வது நாற்கால் நிற்கும
விடமதி லமங்கலி காணல்
தொல்லியாம் பிணியுள் ளோர்கள்
துடர்ந்துபின் காணவிவ்வாறு
கல்லலாந் திரேக ரோகங்
கதித்திடு மென்று கூறே. (7)

கும்பம்.

குடமதி லிருது காலம்
கூருவாம் குளத்தி னோரந்
திடமது விருபெண் ணோடு
சேர்ந்துடன் போங்கா லத்தில்
தடமதி லோரந் தன்னில்
சாற்றிய குறியி தாகும்
இடமதில் தன்னுல் கண்டு
வினியபெண் ணுடன் கலந்தாள். (8)

மீனம்.—படலெனு மீனமாகில்
பகர்கெங்கை மூழ்குங்காலம்
உடையீர மதனில் தோற்ற
உற்றன்னிய விதவைக் காணல்
நடைதன்னி லிவ்வாராக
நாட்டினில் கண்டு ரைத்தாள்
பிடவையும் நுபமின்னும்
பேசுவோ நிலமைக்கேலே (9)

சரசிர உடய ராசிகளுக்கு பொதுபலன்

சராசியாகில் வெண்மை
சாற்றிடுந் திரமேயாகில்
தரமது சிகப்பு வெண்மை
சாற்றிடு மாடையென்க
உரமது வுபைய மாகில்
உற்றிடு நிறமேமூன்றும்
பரவியே புள்ளிநிற்கும்
பலவிதக் கலையாமென்னே. (10)

பொது.

விருப்பமாய் பெண்கள் பூப்புநா ளதனில்
வெய்யவன் நீலனும் மதியை
குரிப்புடன் பார்வை கூடியே யிருக்கில்
குணமுடன் கரமதில் தானே
வெருப்பமாய் கரத்தில் சீப்பினை யெடுத்தல்
விரும்பிய வெண்ணைகாண் கிரசில்
தரிப்பது துக்கக் கேள்வியைக் கேட்டலியருபிள
தையலர்க் கிவ்வித மொழிந்தி பாடு (11)

கண்டிடன் மரவு மதியுமே கூடிக்
கடினமாய் லக்கினம் பார்வை
மிண்டியே யிருக்கில் விதவையை க்கூடி
விறகு கட்டதனையே யெடுத்தல்
முண்டியக்கேது வுடன்மதிக் கூடில்
முடிவுட னுரூட மதனில்
தொண்டர்கள்கூடி மாலையமருகில்
சொல்வது கூடையை யெடுத்து. (12)

துண்டதா மரசே அள்ளியே வருதல்
சொல்வது மின்னிலைக் குறியே.
கொண்டமன் னவனுங் குளிர்மதியோடு
கூடியே பார்வைய தாகில்
உண்டெனுஞ் சுபங்கள் செயுங்கால மதனில்
உற்றிடு மதலைகாண் கையில்
கெண்டைபோல் விழியாள் வெள்ளியைக் கூடில்
கெங்கைகாண் கரத்தினி லென்னே. (13)

இருதுகாலத்தில் உதய வாரூட
மேழினில் பாவிகள் பார்க்க
கருதுவன் புருடன் றன்னையே விட்டு
கவனிப்பா ளன்னியர் நட்பாய்
செருதுசே யேழில் நின்றிட விதவை
சேர்ந்திடு மனமது பேதம்

குருகியபாம்பு நீலனும் மேழில்
கூடிடில் கலகியா மென்னை. (14)

புந்தியே யேழி லிருந்திடில் புருடன்
புகழ்வது வித்தையே யுளனஞ்
சந்ததிபேதங் காலாந்திர புத்திரபுத்திராள்
தலமதில் செல்வமே மிகுதி
மூந்தியே மன்ன னேழினி லிருக்கில்
மூழுவதி காரஞ்ட் புளனும்
விந்தையாஞ் செல்வ ட வ்து கீர்த்தி
மிகுமணம் புரிவதிப் பலனை. (15)

சத்தமந் தன்னில் சனிராகு யிருக்கில்
தையலர்க் காடவன் வரியன்
உத்தம மில்லை மெய்யில்லோ கத்தாள்
வருந்தில மகனேழி லிருக்கில்
குத்தமாம் வார்த்தை தன்னையே கொள்வாள்
குடும்பத்தில் கலகியா யிருப்பாள்
சித்தமும் பொல்லாச் சிந்தையே யுள்ளாள்
சேயுடன் பகையுள்ளா ளென்னை. (16)

கலகியா மிசவி யேழினி லிருக்கில்
கணவனைக் கசந்துமேபிருப்பாள்
விலகியசிந்தை யுள்ளவள் புத்திரன்
மேன்மையே யில்லையென் றுறைப்பாள்
பலன்மதி பிருகு யிருந்திடில் புருடன்
பற்றிய நட்பிலா னென்க
தலமதைவிட்டு நீங்கியே யிருப்பான்
தையலாள் தயங்குவா ளென்னை. (17)

பற்றிய வொன்பா னுதிப னுஷி
பலமொடு யிருப்பமோ யாகில்
வெற்றியாம் புருடன் ஆயுளுந் தீர்க்க
மிகுத்திடுஞ் செல்வமே யுளனுங்
சத்திய வசனன் மன்னர்க்கு நட்பஞ்
தழைத்திடும் பூமியும் பொருளும்
முத்தியைத் தேடும் வல்லவ னென்று
மொழிகுவ ரிப்பலன் நிலையே. (18)

வேறு.

மனமுடன் பாக்யாதி மந்திரி கூடி பார்க்கில்
குணமுள்ள புருடனுக்கே கூட்டிட மணமு டிப்பாள்
துணையொடு பாக்கியாதி சுக்கிரன் கூடி பார்க்கில்
இணையில்லா புருடன் தன்னை யிடர்செய்து திரிந்து நிற்பள்.

விலகிய வெய்யோ னென்பான் விருப்பமாய்க் கூடிப் பார்கில்
கலகியாம் குடும்பந் தன்னிற் கள்ளியாம் புருடனுக்கு
தலமதில் பகை யுண்டாகி தனித்திடுங் கபடி யாகும்
பலராலும் பழிக்கத் துன்பம்பற்றியே யிருப்பா ளென்றே. (20)

புகலுவர் புந்தி காரி பெலமுடன் லக்கினத்தில்
ஜகமதில் பெண்களுக்குத் தழைத்தசெல் வீகமுண்டாம்
பகலவன் தனித்து நிற்கில் பற்றிய ரோகமுண்டாம்
அகமதில் தலகப் புத்திரா ளபவிர்த்தி யென்றுகூறே. (21)

சந்திரன் மூடவன் பார்த்து தருஞ்செவ்வா யிவர்கள் பார்வை
பிந்தியே புத்திரஞ்சம் பிணியுடன் சஞ்சலங்கள்
முந்திய தலத்தை விட்டு முற்றிலு மன்னிய தேசம்
உந்தியில் ரோக முண்டாய் இற்றிடும் பலனிவ்வா றே. (22)

வேறு. வரும்நிலே கேள் பெண்களுக்கு எழுவோன்பான்
வலுவுடைய புருஷனிட மகிழ்ச்சி சொல்வோம்
பெருகியமன் னவன்பிருகு வளர்ந்தேர்ப் பாகன்
பேதகமில் லாமலிவர் பெருமையோடு
தருமாஷி நட்புச்ச மாகிநிற்கில்
தையலற்கு வரும்புருடன் தனமுள் ளோனும்
பருவமுள்ள வாலிபனும் வித்தை புத்தி
பாக்கியமுள் ளவனென்று பகரலா மே. (23)

தீரமோடு விரையாதி ஆறெட்டாதி
சிறந்த பாக்கியத் ததிபர் கூடிநிற்கில்
பாரமான செல்வீக மெல்லாம் பாழாம்
பலராலும் விரையமெனப் படிந்தே கூறும்
சேரும்பாக் கியத்ததிபர் பாவியோடு
சேர்ந்துநிற்கில் சஞ்சலமாம் புருடர்க் கோது
நேருசுபர் பார்வையதில் நேரு மாகில்
நிலையுளனும் புருடர்சுக நிலைமையென்றே. (24)

வேறு. வலுவொடு பத்தாமாதி பாக்கி யாதி
மன்னவன் பார்வையே யாகில்
பெலமதாம் புருடன் தனக்குமேபூமி
பெலமொடு சுயார்ச்சிதச் செல்வம்
தலமதிலரசே தனமதுமேலாய்
தழைத்திடும் செல்வமே மிகுதி
சூலமதில் சிரேஷ்டன் குணமது நல்லன்
குறிப்புட னிப்பலன் சொல்லே. (25)

பெண்கள் ருதுலக்கினபலன்கள் முற்றிற்று
